# மதுராந்தகியின் காதல்

## மாயாவி

## முன்னுரை

தெனாலி ராமன் கதையில் வரும் நிகழ்ச்சி இது. ஒரு சமயம், மன்னர் கிருஷ்ணதேவராயரின் தவறு ஒன்றை எடுத்துக் காட்டுவதற்காக, தான் தீட்டிய ஓவியங்களைக் காட்சிக்கு வைத்திருப்பதாகவும், மன்னர் அவற்றைக் கண்டருள வேண்டுமென்றும் தெனாலிராமன் கேட்டார். அங்கே பல ஓவியங்கள் இருந்தன. ஆனால் ஒன்று கூட முழுமையாக இல்லை. ஓர் ஓவியத்தில் ஓர் ஆணின் கை; மற்றொன்றில் ஒரு பெண்ணின் கால்; இன்னொன்றில் ஒரு மாட்டின் கொம்பு; வேறொன்றில் ஒரு குதிரையில் வால்; இப்படி எல்லாமே குறை ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருந்தன.

வியப்படைந்த கிருஷ்ண தேவராயர் ஓர் ஓவியத்தைச் சுட்டிக் காட்டி, “ராமா! இது என்ன, குதிரையின் வாலை மட்டுமே தீட்டியிருக்கிறாய்? அதன் உறுப்புக்கள் எங்கே?” என்று கேட்டார்.

தெனாலிராமன் சிரித்துக் கொண்டே, “மன்னர் மன்னவா! இது குதிரையின் பின்பக்கம் ஆதலால் வால் மட்டுமே தெரிகிறது. இதன் இதர உறுப்புக்கள் ஓவியச் சீலைக்கு அப்பால் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ள வேண்டும். நீங்கள் கூட முன்பு ஒரு தடவை என்னிடம், ‘ஓவியங்களைக் கற்பனைக் கண் கொண்டுதான் பார்க்க வேண்டும்!’ என்று கூறியிருக்கவில்லையா?” என்றானாம்...!

சரித்திரப் புதினம் எழுதுவதற்குக் குறிப்புகளைச் சேகரிக்க முனைந்தபோது, எனக்கு இந்தக் கதை நினைவுக்கு வந்தது. சரித்திர நிகழ்ச்சிகளுக்கு ஆதாரமாக விளங்கும் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், பழம் பாடல்கள், சரித்திர ஆராய்ச்சி நூல்கள் ஆகியவை அளிக்கும் குறிப்புக்கள் கிட்டதட்ட தெனாலிராமனின் ஓவியங்களைப் போலவே இருப்பதைக் கண்டேன்.

குறிப்பிட்ட மன்னர் ஒருவரின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டால், அதில் நமக்கு அங்கொன்றும் இங்கொன்றுமான குறிப்புக்களே கிட்டுகின்றன. அவற்றையும் ஒவ்வொன்று ஒவ்வொரு விதமாகக் கூறுகின்றன. ஒரு தனிப்பட்ட ஆதார நூலையோ,



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஏட்டையோ எடுத்துக்கொண்டால், சில சமயம் அது ஒரே நபரைப் பற்றி முன்பின் முரணான தகவல்களைக் கொடுக்கிறது.

இவை போதாவென்று, நமது வேந்தர்களின் பெயர்கள் வேறு நம்மைக் குழப்புகின்றன. ஒரே பரம்பரையில் ஒரே பெயருடன் பல மன்னர்கள். அவர்கள் தங்களது முன்னோர்கள் சூடிக்கொண்ட சிறப்புப் பெயர்களையும் அப்படி அப்படியே சூடிக்கொண்டு விடுகிறார்கள்.

கல்வெட்டுகளிலும் பட்டயங்களிலும் அவர்கள் இத்தகைய சிறப்புப் பெயர்களாலேயே குறிப்பிடப் படுகிறார்கள். தவிர, சோழ நாட்டில் அதே பெயருடன் ஒரு வேந்தன் இருந்தால், வேங்கி நாட்டில் அதே பெயருடன், கிட்டத்தட்ட அதே காலத்தில் மற்றோரு வேந்தன் அரசனாயிருக்கிறான். இப்படிப்பட்ட குழப்பம் வேறு.

இத்தனைக்கும் இடையே தெளிவு கண்டு, சம்பவங்களைக் கோவையாக்கி, துண்டு துண்டாக நிற்கும் அந்தச் சம்பவங்களை முன்பின் முரணின்றி, கற்பனைக் கயிற்றால் இணைத்து, சுவையாகவும், உண்மைக்குப் புறம்பில்லாமலும் ஒரு புதினத்தை எழுதுவதென்றால், அது எத்துணை கடினமான பணி என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம்.

ஓர் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், இப்படி உண்மைக்குப் புறம்பில்லாதபடி கற்பனையாக ஒரு புதினத்தை எழுதவேண்டும் என்று கேட்டிருந்தால் எந்த எழுத்தாளனும் சிறிது மலைத்தே இருப்பான். ஆனால் இன்றைக்கு நம் தமிழ் நாட்டில் சரித்திரப் புதினம் புனையாத எழுத்தாளன் ஓர் எழுத்தாளனாகக் கருதப்படாத நிலை வெகு விரைவாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதாவது, கற்பனையை உண்மையுடன் இணைக்குமளவு எழுத்துத் திறன் நம் தமிழகத்தில் உயர்ந்து வந்திருக்கிறது. இது நாம் எல்லோரும் பெருமைப்பட வேண்டிய ஒன்றுதான்; எனினும், அந்தப் பெருமைக்கு விதை விதைத்துக் கொடுத்தவர் ஒருவரே - பேராசிரியர் கல்கி அவர்கள். பேச்சு நடையிலும் கதை எழுத முடியும் என்பதைத் தமிழ் நாட்டுக்குக் காட்டிக் கொடுத்த பெரியார்களில் ஒருவரான அவரே சரித்திரப் புதினம் எழுதும் துறையிலும் தமிழ் எழுத்தாளர்களுக்கு வழி காட்டினார்.

‘கல்கி’ அவர்களின் ‘பார்த்திபன் கனவு’, ‘சிவகாமியின் சபதம்’, ‘பொன்னியின் செல்வன்’ ஆகிய சரித்திரப் புதினங்கள் தமிழ் வாசக அன்பர்களிடையே வளர்த்துள்ள சுவை, இன்று சரித்திரப் புதினம் ஒன்றைத் தாங்கி வராத பத்திரிக்கையைச் சற்று ஏளனமாக நினைக்கும் அளவுக்கு ஓங்கி நிற்கிறது. தமிழ் இலக்கியத்துக்கு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அத்தகையதொரு மறுமலர்ச்சியைத் தந்த அந்த எழுத்துலகப் பிரமனின் நூல்களை வழிகாட்டிகளாகக் கொண்டு என் கன்னி முயற்சியைத் தொடங்குகிறேன்.

நம் கதை மதுராந்தகியைப் பற்றியது. மதுராந்தகி என்றதும், சரித்திரத்தை ஆராய்ந்துள்ள வாசகர்களிடையே, 'எந்த மதுராந்தகி?' என்ற கேள்வி எழக்கூடும். "இரண்டாம் இராசேந்திர தேவரின் மகள் மதுராந்தகியா? அல்லது அவருடைய சகோதரி அம்மங்கை தேவியின் மகள் மதுராந்தகியா?"

அதை முதலில் தெளிவு செய்து விடுகிறேன். இக்கதை இரண்டாம் இராசேந்திர தேவரின் புதல்வி மதுராந்தகியைப் பற்றியதுதான். இவள் தன் அத்தை அம்மங்கை தேவியின் மகனும், பிற்காலத்தில் முதலாம் குலோத்துங்கன் என்ற பெயருடன் சோழ, வேங்கி நாடுகளை ஆண்ட கீழைச் சளுக்கிய மரபினனுமான இரண்டாம் இராசேந்திரனை காதலித்து மணந்து கொண்டாள். (மதுராந்தகியின் தந்தை பெயரும் இரண்டாம் இராசேந்திரனே. ஆதலால் வசகர்களுக்குக் குழப்பமேற்படுவதைத் தவிர்க்க, கீழைச் சளுக்கிய இரண்டாம் இராசேந்திரனைக் குலோத்துங்கன் என்றே குறிப்பிட்டு வருவேன். குலோத்துங்கனுக்கு விஷ்ணுவர்த்தனன் என்ற அபிடேகப் பெயரும் உண்டு.)

மதுராந்தகி குலோத்துங்கனை மணந்தது மட்டுமின்றி, அவனைச் சோழ நாட்டுக்கும், கீழைச் சளுக்கிய நாட்டுக்கும் வேந்தனாக்க மறைமுகமாக அடிகோலினாள். இவர்களின் காதல், திருமணம், இல்லறம் மற்றும் அரசியல் வாழ்க்கை ஆகியவற்றைச் சுற்றியே நம் கதை படருகிறது.

நேயர்களின் கவனத்தைக் கதையின் மீது திருப்புமுன், நம் கதையுடன் தொடர்புடைய சோழநாடு, கீழைச் சளுக்கிய நாடு, மேலைச் சளுக்கிய நாடு ஆகியவற்றின் அன்றைய அரசியல் நிலையையும். அரச குடும்பத்தினர் நிலையையும் சிறிது அறிமுகப்படுத்த விரும்புகிறேன்.

நம் கதை கி.பி.1059-60ல் தொடங்குகிறது. அன்று கங்கை கொண்ட சோழபுரம் சோழ நாட்டின் தலைநகராக இருந்தது. (இவ்வூர் இப்பொழுது கும்பகோணத்துக்கு வடகிழக்கில் சுமார் பன்னிரண்டு மைல் தூரத்தில் ஒரு சிற்றூராக விளங்குகிறது.) சோழ நாட்டை அப்பொழுது மதுராந்தகியின் தந்தை இரண்டாம் இராசேந்திர தேவர் ஆண்டு வந்தார். இவர் கங்கை கொண்ட சோழன் எனப் புகழ்பெற்ற முதலாம் இராசேந்திர சோழனின் புதல்வர்.

கங்கை கொண்ட சோழனின் புதல்வர் மூவர் சோழ அரியணை ஏறினர். அவர்கள் முறையே இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திர தேவன், வீர ராசேந்திரன் ஆவார்கள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

முதலாம் இராசேந்திரனுக்கு இரு புதல்விகளும் இருந்தனர். அவர்கள் அருள்மொழி நங்கை என்றும், அம்மங்கை தேவி என்றும் பெயருடையவர்கள். இந்த அம்மங்கை தேவியே குலோத்துங்கனின் தாய். குலோத்துங்கனின் தந்தை கீழைச் சளுக்கிய வேந்தனாகிய இராசராச நரேந்திரன்.

தஞ்சைப் பெரிய கோயிலை நிர்மாணித்த முதலாம் இராசராச சோழன் காலத்திலிருந்தே சோழ அரச குடும்பதினருக்கும் கீழைச் சளுக்கிய அரச குடும்பதினருக்கும் இடையே திருமணத் தொடர்பு ஏற்பட்டிருந்தது. முதலாம் இராசராச சோழனின் மகள் இரண்டாம் குந்தவையைக் கீழைச் சளுக்கிய வேந்தன் விமலாதித்தன் மணந்தான். இத்தம்பதிகளின் மகனே குலோத்துங்கனின் தந்தையான இராசராச நரேந்திரன்.

குலோத்துங்கன் கீழைச் சளுக்கிய மரபினனேயாயினும், அவன் தாய் வழிப் பாட்டனாகிய கங்கை கொண்ட சோழனின் அரண்மனையிலேயே பிறந்து, அங்கேயே வளர்ந்து வந்தான். தவிர, அவன் தமிழ் மொழியைத் தாய்மொழியாகப் பயின்று, தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களையே மேற்கொண்டதோடு, தன்னை ஒரு சோழ அரச குமாரனாகவே கருதியிருந்தான்.

இனி, கீழைச் சளுக்கிய மரபைப் பார்க்கலாம். கீழைச் சளுக்கிய மன்னர்கள் வேங்கியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தி வந்தனர். அதனால் இந்நாடு வேங்கி நாடு என்று குறிப்பிடப்படும். நமது கதையின் தொடக்க காலத்தில், கீழைச் சளுக்கிய மன்னனாக இருந்தவன் குலோத்துங்கனின் தந்தையான இராசராச நரேந்திரன். இராசராச நரேந்திரனுக்கு ஏழாம் விசயாதித்தன் என்றோர் இளைய சகோதரன் இருந்தான். ஆனால், இவர்கள் ஒரு தாய் வயிற்றுச் சேய்கள் அல்லர்.

இவர்கள் தந்தை விமலாதித்தனுக்குச் சோழ இளவரசி இரண்டாம் குந்தவையைத் தவிர, இன்னும் சில மனைவியர் உண்டு. அவர்களுள் ஒருத்திக்குப் பிறந்தவனே ஏழாம் விசயாதித்தன். மன்னர்குல மரபுப்படி பட்டமகிஷியான இரண்டாம் குந்தவையின் மகன் இராசராச நரேந்திரனுக்கே விமலாதித்தன் இளவரசுப் பட்டம் சூட்டியிருந்தான். ஆனால், அந்நாள் முதல் ஏழாம் விசயாதித்தன் வேங்கி அரியணையை எப்படியாவது தானே கைப்பற்றிக் கொள்ளவேண்டுமென்று முயன்று கொண்டிருந்தான்.

இப்பொழுது மேலைச் சளுக்கியர் பரம்பரையை காண்போம். மேலைச் சளுக்கியர்களின் தலைநகர் கல்யாணி. இது கல்யாணபுரம் என்றும் குறிப்பிடப்படும். மேலைச் சளுக்கிய நாட்டுக்குக் குந்தள நாடு என்ற பெயரும் உண்டு. நம் கதையின்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

துவக்க காலத்தில் மேலைச் சளுக்கிய வேந்தனாக இருந்தவன் ஆகவமல்லன். இவன் முதலாம் சோமேசுவரன் என்றும் அழைக்கப்படுவான்.

முதலாம் இராசராச சோழன் காலத்திலிருந்து சோழ நாட்டுக்கும் கீழைச் சளுக்கிய நாட்டுக்கும் திருமணத் தொடர்பு இருந்து வந்தமையால், அவ்விரு நாடுகளும் ஏறக்குறைய ஒரே சாம்ராஜ்யம் போல் இயங்கி வந்தன. சோழ மன்னர்கள் யார் மீது போர் தொடுத்தாலும், கீழைச் சளுக்கியர்கள் சோழர்களுக்கு உதவினர். சோழ நாடு இவ்வாறு வலுப்பெற்று இருந்ததை மேலைச் சளுக்கியர்கள் விரும்பவில்லை. கீழைச் சளுக்கிய நாடு அவர்களது அண்டை நாடு. ஆதலால், அதனை எப்படியாவது சோழர்களின் சேர்க்கையிலிருந்து பிரித்துவிட வேண்டுமென்று அவர்கள் பெரு முயற்சி செய்து வந்தனர்.

கீழைச் சளுக்கிய மன்னனாக இருந்த இராசராச நரேந்திரனை விரட்டிவிட்டு அரியணை ஏற முயன்று வந்த ஏழாம் விசயாதித்தனுக்கு மேலைச் சளுக்கியர்கள் உதவி புரிந்து வந்தனர். இவ்வாறு வேங்கி நாடு காரணமாக மேலைச் சளுக்கியர்களுக்கும் சோழர்களுக்கும் நடந்த போர்கள் பல. அவற்றில் குறிப்பிட்டுச் சொல்ல தக்கது, நம் கதை தொடங்குவதற்குச் சிறிது காலத்திற்கு முன் கிருஷ்ணா நதிக்கரையில் கொப்பம் என்ற இடத்தில் நடந்த பெரும் போர். இப்போரில் இரண்டாம் இராசேந்திர தேவரின் மூத்த சகோதரரான இராசாதிராசன் உயிரிழந்தார். பின்னர் இரண்டாம் இராசேந்திர தேவர் அப்போர்க் களத்திலேயே சோழ வேந்தராக முடிசூடிக் கொண்டு, போரைத் தொடர்ந்து நடத்தி வெற்றிக் கொடி நாட்டினார்; மேலைச் சளுக்கியப் படைத் தலைவர்கள் பலரை வெட்டி வீழ்த்தி, அவர்களது யானை, குதிரை, ஒட்டகப் படைகளைக் கைப்பற்றி, அரச குடும்பத்தினர் உட்பட பல பெண்டிரையும் கைது செய்து கொண்டு கங்கை கொண்ட சோழபுரம் திரும்பினார்.

கொப்பம் போரில் தனக்கு ஏற்படுத்திய அவமானத்துக்குச் சோழர்களைப் பழி வாங்க மேலைச் சளுக்கிய மன்னன் ஆகவமல்லன் 1059-ல் ஒரு பெரும் படையுடன் புறப்பட்டு கிருஷ்ணா நதிக்கரையில் மீண்டும் சோழர்களைச் சந்தித்து கடும் போர் புரிந்தான். இதை முடக்காற்றுப் போர் என்று கூறுவர். இப்போரில் இரண்டாம் இராசேந்திர தேவருடன் அவரது இளைய சகோதரர்களான இராச மகேந்திரனும், வீரராசேந்திரனும் கலந்து கொண்டனர்; இப்போரிலும் சோழர்களே வெற்றி பெற்றனர்.

இந்த முடக்காற்றுப் போர் முடிந்த சூட்டுடன்தான் நம் கதை ஆரம்பமாகிறது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

# மதுராந்தகியின் காதல்

## மாயாவி

## முதல் பாகம்

## அத்தியாயம் – 1. வெற்றி வீரர்களுக்கு வரவேற்பு

அன்று கங்கை கொண்ட சோழபுரம் அல்லோல கல்லோலப்பட்டது. அதன் பல்வேறு பகுதிகளான *உட்கோட்டை, மளிகை மேடு, ஆயிரக்கலம், வாணதரையன் குப்பம், கொல்லாபுரம், வீரசோழ நல்லூர், சுண்ணாம்புக்குழி, குருகை பாலப்பன் கோவில் ஆகியவை தனி அலங்காரத்துடன் விளங்கின. இப்பகுதியிலுள்ள ஒவ்வொரு வீதியும் மாவிலைகளாலும், மகா தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு கடை-கண்ணியிலும், சுத்தமாக வாசல் மெழுகப் பட்டு, மாக்கோலம் போடப்பட்டிருந்தது.

(*இவை இன்றும் தனித் தனிச் சிற்றூர்களாக இலங்குகின்றன.)

அன்று அம்மாநகரின் வாணிப நிலையங்களுக்கும், அரசாங்க அலுவல் சாலைகளுக்கும், கல்விக் கேந்திரங்களுக்கும் விடுமுறை. எனவே, பகலில் இத்தலங்களில் அடைப்பட்டிருப்போர் பலரும், அன்று விடுதலை பெற்றவர்களாக மகிழ்ச்சி ததும்பும் முகத்துடன் காணப்பட்டனர்.

நகரத்து ஆண்களும் பெண்களும், சிறியோரும் பெரியோரும், புத்தாடைகள் புனைந்து, பல்வேறு ஆபரணங்களை அணிந்து, எங்கோ திருவிழாவுக்குப் புறப்பட்டிருப்பவர்கள் போல காணப்பட்டனர்.

வீட்டுப் பெண்டிர் அதிகாலையிலேயே வீட்டைச் சுத்தம் செய்து, அலங்கரித்து, காலை உணவு ஆக்கி வீட்டில் உள்ளோருக்கு அளித்துத் தாங்களும் உண்டுவிட்டு, குழந்தைகளும் தங்களும் நல்ல ஆடை-ஆபரணங்களை அணிந்து கொண்டு, ஆவலுடன் வீட்டுத் திண்ணைகளிலோ, அல்லது உட்கோட்டைக்குச் செல்லும் இராசவீதி முடங்குகளிலோ கூடி நின்றனர்.

நகரின் வெளிக்கோட்டைக் கிழக்கு வாயிலிலிருந்து உட்கோட்டைக்குச் செல்லும் இராசவீதியின் இரு மருங்கிலும் ஒரே ஜனத்திரள். அனைவரின் கண்களும் கிழக்குக்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கோட்டை வாயிலிலிருந்து வரும் வழியிலே பதிந்திருந்தன. அந்தப் பல்லாயிரக் கணக்கான கண்களிலேதான் எத்தனை மகிழ்ச்சி! எத்தனை பெருமிதம்! எத்தனை ஆர்வம்!

ஆம், அவர்கள் மகிழ்ச்சிக்குக் காரணம் இருந்தது; பெருமிதத்துக்குக் காரணம் இருந்தது; ஆர்வத்துக்கும் காரணம் இருந்தது. சோழநாட்டுடன் பலகாலமாகத் திருமணத் தொடர்பாலும், அரசியல் தொடர்பாலும் இணைந்து, அதை ஒரு பேரரசாக இயங்கச் செய்து வந்த வேங்கி நாட்டைக் கைப்பற்ற முயன்றான் மேலைச் சளுக்கிய மன்னன் ஆகவமல்லன். அவனையும் அவனது படையையும் முடக்காற்றுப் போரில் புறமுதுகிட்டு ஓடச் செய்து வெற்றி வாகை சூடிய சோழப் படையும், அதனை நடத்திச் சென்ற மாமன்னர் இரண்டாம் இராசேந்திரதேவர், பட்டத்து இளவரசர் இராசமகேந்திரர், அவர்களது இளைய சகோதரர் வீரராசேந்திரர் ஆகியோரும் மற்றும், மிலாடுடையான் நரசிங்கவர்மன் போன்ற பல குறுநில மன்னர்களும், ஜயமுரி நாடாழ்வான், அணிமுரி நாடாழ்வான், சயங்கொண்ட சோழ பிரமாதிராசன் போன்ற படைத் தலைவர்களும், தண்டநாயகர் தலைவரான மதுராந்தகத் தமிழ் பேரரையன் ஆகியோரும் அன்று தலைநகர் திரும்பிக் கொண்டிருந்தனர்.

பல காலமாகச் சோழப் பேரரசிலிருந்து வேங்கி நாட்டைப் பிரித்து விட முயன்று வருபவர்கள் மேலைச் சளுக்கியர்கள் என்பதும், அதற்காக அவர்கள் தொடுக்கும் ஒவ்வொரு போரிலும் அவர்களை முறியடித்து வரும் வலிமை வாய்ந்த படையே தங்கள் நாட்டுப்படை என்பதும் சோழப் பெருமக்களுக்குத் தெரியும். ஆதலால் ஒவ்வொரு போரும் முடிந்து வெற்றி வாகைசூடித் திரும்பும் தங்கள் வீரப்படைக்கு நகரே திரண்டு வந்து வரவேற்பு அளிப்பது வழக்கம். இதை விட மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சி அவர்களுக்கு வேறு என்ன இருக்கிறது? சோழ நாட்டின் வீரம் ஒவ்வொரு தடவையும் முன்னிலும் அதிகமாக நிலைநாட்டப் படும்போது, அந்நாட்டு மக்களிடம் பெருமிதம் எழாமல் இருக்க முடியுமா?

ஆனால் அவர்கள் கண்களிலே ததும்பி நின்ற ஆவல்? அது தனிப்பட்டது. ஒவ்வொருவரிடம் ஒவ்வொரு விதமாக எழுந்து நின்றது. சோழ வேந்தரின் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலட்படை ஆகிய நால்வகைப் படைகளிலும் சோழ நாட்டின் ஒவ்வொரு வீர மகனும் பணி செய்து வந்தான். நாட்டின் பெருமையை நிலைநாட்ட, அதன் வீரத்திறனைப் பகைவருக்கு எடுத்துக்காட்ட, வீடு-வாசல், பெண்டு-பிள்ளை, பெற்றார்-சுற்றம் யாவற்றையும் மறந்து, உயிரைத் துரும்பாக மதித்துப்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

போர்க்களம் சென்ற அந்த இளங்காளைகளின் நிலை என்ன ஆயிற்று என்பதைப் போர் முடிந்து படை ஊர் திரும்பிய பின்னரே அவர்களைச் சார்ந்தோர் அறிய முடியும்.

அன்று அங்கு-அந்த இராசவீதி நெடுகக் கூடிநின்ற மக்களில் தங்கள் பிள்ளைகளைப் போருக்கு அனுப்பியிருந்த பெற்றோர்கள் இருந்தனர்; ஆத்தி மாலை சூட்டி, செந்நீர்த் திலகமிட்டுக் கணவன்மார்களை வழியனுப்பியிருந்த மனைவிமார் இருந்தனர்; அண்ணன்-தம்பியரை அனுப்பியிருந்த சகோதர-சகோதரியர் இருந்தனர்; தந்தையரை அனுப்பியிருந்த இளஞ்சேய்கள் இருந்தன. இவ்வாறு தங்களது உயிருக்கு உயிரானவர்களைப் போர்க் களத்துக்கு அனுப்பிவிட்டு மாதக் கணக்கில் அவர்களைப் பற்றிய செய்தியின்றி இருப்பவர்கள், பொருது கொண்டு சென்ற படை திரும்பி வருகிறது என்ற செய்தியை அறிந்தபோது ஆவல் கொள்வது இயற்கைதானே? தங்களைச் சார்ந்தோர் வெற்றி வாகை சூடித் திரும்பி வருகிறார்களா, அல்லது போர்களத்தில் வீரத்துடன் போரிட்டு, பட்டு விழுந்து விட்டார்களா என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டாமா?

இங்கே இவ்வாறு இராசவீதி நெடுக நகர மாந்தர் ஆவலுடன் காத்திருக்க, உட்கோட்டையில் அரச குடும்பத்துப் பெண்டிர் இவர்களைவிடப் பேராவலுடன் காத்திருந்தனர். உட்கோட்டையில் அமைந்திருந்த சோழகேரளன், முடிகொண்ட சோழன் எனும் பெயருடைய இரண்டு அரண்மனைகளிலுந்தாம் அரச குடும்பதினர் வசித்து வந்தனர். மேன்மாடங்களில் வானளாவும் கம்பங்களில் பெரிய புலிக் கொடிகளைப் பறக்க விட்டுக் கொண்டிருந்த இவ்விரு அரண்மனைகளிலும் வசித்த மாமன்னர் இரண்டாம் இராசேந்திர தேவரின் மனைவியரான கிழானடிகள், திரைலோக்கிய முடையாள், அவருடைய மகள் மதுராந்தகி, இராச மகேந்திரனின் மனைவி அருமொழிநங்கை, அவருடைய மகள் *வானவன் மாதேவி (வானவி) ஆகியோரும், அரண்மனைத் தாதியர், பணிப் பெண்கள், அரசகுலப் பெண்களின் சேடியர் ஆகியோரும் சோழகேரளன் அரண்மனை வாயிலில் கூடியிருந்தனர். போர் களத்திலிருந்து திரும்பும் மன்னரையும் அவரது சகோதரர்களையும் வரவேற்க இருந்த அம்மூவரது மனைவியர்களுக்காகப் பணிப் பெண்கள் ஆத்தி மாலைகளையும், மஞ்சள் நீரடங்கிய தங்கத் தட்டுக்களையும் சுமந்து கொண்டு நின்றனர்.

(* வீரராசேந்திரனுக்கு ஒரு மகள் இருந்தனளென்றும், அவள் மேலைச் சளுக்கிய மன்னனான ஆறாம் விக்கிரமாதித்தனை மணந்தனளென்றும் ஆராய்ச்சி நூல்கள் கூறுகின்றன. ஆனால் எந்த நூலிலும் அவள் பெயர் கொடுக்கப்படவில்லை. நம்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கதையில் அவள் ஒரு முக்கிய பாத்திரமாதலால், அவளுடைய தந்தை வழிப் பாட்டியார் வானவன் மகாதேவியின் பெயரை நான் சூட்டியிருக்கிறேன். நம் கதையில் அவளை 'வானவி' என்று சுருக்கி அழைப்போம்.)

இராசவீதி துவங்கும் இடத்தில், அதாவது, வெளிக் கோட்டையின் கீழை வாயிலிலும் புலிக்கொடி ஒன்று கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. அங்கே சோழ நாட்டின் அரசியல் அதிகாரிகளில் ஒருவரான செம்பியன் மூவேந்தான் தலைமையில், இன்னும் பல அரசியல் அதிகாரிகளும், வேங்கி நாட்டு இளவரசன் குலோத்துங்கனும், இரண்டாம் இராசேந்திர தேவரின் புதல்வர்களான இராசேந்திரசோழன், (தந்தையின் பெயரே மகனுக்கும் விளங்குவதைக் காண்க! ) முகையவிழங்கல் முடிகொண்ட சோழன், சோழ கேரளன், கடாரங்கொண்ட சோழன், படிகொண்ட பல்புகழ் முடிகொண்ட சோழன், இரட்டப்பாடி கொண்ட சோழன் ஆகிய அறுவரும், வீரராசேந்திரனின் புதல்வர்களாகிய மதுராந்தகன், கங்கை கொண்ட சோழன் ஆகிய இளைஞர்களும், போர்க்களத்திலுருந்து திரும்பும் வேந்தர் மரபினரையும், படையினரையும் வரவேற்க அரசாங்க விருதுகளுடன் காத்திருந்தனர்.

இப்படி நகரமெங்கும் மக்களும், அரச குடும்பத்தினரும், அரசாங்க அதிகாரிகளும் ஆங்காங்கே வரவேற்புக்குத் தயாராயிருக்கையில், நகரின் வடபால் அமைந்திருந்த கங்கை கொண்ட சோழேச்சுரர் திருக்கோவிலில் அன்று விசேட வழிபாடுகள் நடந்து கொண்டிருந்ததன் அறிகுறியாக ஆலயத்தின் கண்டாமணி நெடுநேரமாக ஒலித்துக் கொண்டிருந்தது.

வெற்றி வீரர்களாகத் திரும்பும் மன்னவரும் மற்றோரும், தலைநகருக்கு அரைக் காத தூரம் வடகிழக்கேயுள்ள *சோழகங்கம் ஏரிக்கரையில் முன்னாள் மாலையே வந்து தங்கியிருப்பதாகவும் மறுநாள் காலையில் நல்ல பொழுதாக இருப்பதால், அப்பொழுதுதான் தலைநகரில் பிரவேசிப்பார்களெனவும் முன்னாள் நகருக்குச் செய்தி வந்திருந்தது. ஆதலால் இரவோடு இரவாக அலங்கார ஏற்பாடுகளும், வரவேற்பு ஏற்பாடுகளும் நடந்தன. இப்பொழுது அனைவரும் வெற்றித் திருவை மருவி வரும் வீரச்சிங்கங்களை வரவேற்க உவகையுடன் காத்திருந்தனர்.

(*இது பொன்னேரி என்ற பெயருடன் இன்றும் இருக்கிறது.)

கீழ்வானில் செந்நிறத்துடன் உதித்த ஆதவன், பொன்னிறம் எய்தி, இப்பொழுது வெண்ணிறமாகவும் மாறி விட்டான். அவன் வானத்தில் மேலேறுந்தோறும் வெயிலின் கடுமை ஏறிற்று. அருகில் ஒருபுறம் மாபெரும் காவிரியாற்றிலிருந்தும், மற்றோரு புறம்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கடலனைய சோழகங்க ஏரியிலிருந்தும் வீசிய நீர்க்காற்றுக் கூடத் தனது குளிர்ந்த தன்மை மாறிச் சூடு பெற ஆரம்பித்திருந்தது.

கீழைக்கோட்டை வாசலிலிருந்து வடக்கு நோக்கிச் சென்றது மரங்கள் அடர்ந்த நீண்ட சாலை ஒன்று. அதன் வழியாகத்தான் மன்னரும் மற்றோரும் வரவேண்டும். அவர்கள் காலையில் எந்நேரம் கிளம்பி, எந்நேரம் இங்கு வந்து சேருவார்கள் என்பது திட்டமாகத் தெரியாததால் செம்பியன் மூவேந்தன் முதலானோர் அதிகாலையிலிருந்தே அங்கே வந்து காத்திருந்தனர். கோட்டை வாசலின் மேற்பாகம் ஒரு மும்மாட மண்டபமாக அமைக்கப்பட்டிருந்தது. அதன் கீழ்த்தளத்தில் அரசியல் அதிகாரிகளும் அரசகுல இளைஞர்களும் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர்.

மும்மாட மண்டபத்தின் மேல் உப்பரிகை மீது சோழ வீரன் ஒருவன் 'காளம்' என்ற நீண்ட ஊது கொம்புடன் நின்று கொண்டிருந்தான். அந்த உயரமான இடத்திலிருந்து அவனால் நெடுந்தூரம் காணமுடியும். மன்னரும் மற்றோரும் பார்வைக்குத் தென்பட்டதும் குழலெடுத்து ஊதி எல்லோரையும் தயார்ப்படுத்தவே அவன் அங்கே நின்று கொண்டிருந்தான்.

தூரத்தில் சாலை மரங்களுக்கு மேலே புழுதிப் படலம் தெரிந்தது. மும்மாட மண்டபத்தின் மேலே நின்ற வீரன் தனது கொம்பை உயர்த்தி வாயில் புதைத்து முழங்கினான். உடனே கூடியிருந்தோரிடையே ஒரு பரபரப்பு. மண்டபத்தில் அமர்ந்திருந்தோரும் கோட்டை வாயிலின் முன் கூடினர். புலிக்கொடி தாங்கிய குதிரை வீரன் ஒருவன், அரசகுலப் பெண்டிருக்குச் செய்தி அறிவிக்க உட்கோட்டையை நோக்கி விரைந்தான்.

சாலை மரங்களிடையே வெயில் புகுந்து சென்றதால் எழுந்த ஒளிப்புள்ளிகளின் இடையே கரும்புள்ளிகளாகப் படைகள் தென்பட்டன. பின்னர் யானைகளின் மணியோசையும் குதிரைகளின் குளம்போசையும் மெல்லெனக் கேட்டன. வான விளிம்பிலிருந்து மேக மண்டலம் ஒன்று திரண்டு வருவது மாதிரி கடல் போன்ற அந்தப் பெரும் படை கோட்டை வாயிலை நோக்கி விரைந்து வந்தது.

முதலில் யானைப்படை வந்தது. முகபடாம் தரித்த மலைபோன்ற யானை ஒன்றின் மீது புலிக் கொடியைத் தாங்கியவாறு சோழ வீரன் ஒருவன் முதலில் வர, அவனைத் தொடர்ந்து யானைப் படையும், குதிரைப் படையும், தேர்ப் படையும் வந்தன.

தேர்ப் படைக்குப் பின்னால் மூன்று வெண் புரவிகள் ஒரு வரிசையாக வந்தன. அவற்றுள் நடுவிலிருந்த புரவியில் சோழ வேந்தர் இரண்டாம் இராசேந்திர தேவர்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அமர்ந்திருந்தார். அவருக்கு இரு புறங்களிலும் பட்டத்து இளவரசர் இராசமகேந்திரனும், வீரராசேந்திரனும் வந்தனர். அவர்களுக்குப் பின்னால், போரில் கலந்து கொண்ட குறுநில மன்னர்களும், வீரச் சிங்கங்களான சோழச் சேனாதிபதிகளும் பல குதிரைகளில் வந்தனர். அடுத்ததாகப் போரில் கைப்பற்றிய பல்வேறு படைப்பொருள்களுடன், சிறைசெய்த பகைவர் படைவீரர்களும் இருந்தனர். எல்லோருக்கும் கடைசியாக, கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் சோழ நாட்டின் காலாட் படையினர் அணிவகுத்து வந்தனர்.

ஒவ்வொரு படையும் கோட்டை வாயிலைத் தாண்டி உள்ளே சென்ற போது, கூடியிருந்தோர் “வெற்றி வேல்! வீரவேல்! வாழ்க பரகேசரி இராசேந்திர தேவர்! வாழ்க, வாழ்க!” என்று வாழ்த்தினர். படையினரும்,“வெற்றி வேல்! வீரவேல்!” என்று எதிரொலி செய்தனர்.

மன்னரும், அவரது சோதரர்களும் அமர்ந்திருந்த புரவிகள் கோட்டை வாயிலை நெருங்கியதும், கூடி நின்றோர் அவர்களை எதிர்கொண்டு சென்றனர். மூன்று குதிரைகளும் நின்றன. இராசேந்திர தேவரும், மற்றுமுள்ளோரும் கீழே இறங்கினர். புரோகிதர்கள் மந்திர கோஷம் முழங்கப் பூர்ண கும்பம் அளித்து மாமன்னரை வரவேற்றனர். பின்னர் சோழேச்சுரர் கோவில் அர்ச்சகர் பொன் தட்டில் வைத்திருந்த ஆத்தி மாலையை மன்னருக்குச் சாத்தி, திருநீறு முதலிய பூசைப் பிரசாதங்களை வழங்கினார். பிறகு எல்லோரும் குதிரைகள் மீது ஏறிக்கொள்ள, ஊர்வலம் கோட்டைக்குள்ளே சென்றது.

வழி நெடுகக் கூடி நின்ற நகர மாந்தரின் வாழ்த்தொலியும், ஆனந்த ஆரவாரமும் வானைப் பிளந்தன. இவ்வாறு மக்களின் அன்பு நிறைந்த குதூகல வரவேற்பை ஏற்றுக் கொண்டவாறு அந்த மாபெரும் வெற்றிப் படை ஊர்வலம் உட்கோட்டைக் குள்ளே நுழைந்து சோழகேரளன் அரண்மனை முன்னுள்ள திடலில் வந்து நின்றது. மன்னரும், அரச குடும்பத்து ஆடவரும் மட்டும் தம் குதிரைகளோடு அரண்மனையின் முகப்பு மண்டபம் வரையில் சென்றனர். அங்கே சென்றதும் அவர்கள் குதிரைகளிலிருந்து இறங்கி மேற்கு முகமாக நிற்க, பாங்கிமார் நிறைகுடம், கெண்டி நீர், மஞ்சள் நீர்த் தட்டு, முப்பரி விளக்கு ஆகியவற்றை ஏந்திவர்களாக அவர்களை மும்முறை சுற்றி வந்து *திருட்டி நீக்கினர். பின்னர் போர் சென்ற மன்னவரையும், அவரது சோதரர்களையும் அவரவர் மனைவியர் நெருங்கி, ஆத்தி மாலை அணிவித்து, மஞ்சள் நீரடங்கிய தங்கத் தட்டைச் சுற்றி, நெற்றியில் அந்நீரல் திலகமிட்டு வணங்கினர்.

(*இதைத் திருஷ்டி கழித்தல் என்றும் சொல்வதுண்டு.)



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இவையெல்லாம் நடந்து கொண்டிருக்கையில் வெளியே போர்ப் படையினரும், பொது மக்களும் "வெற்றி வேல்! வீரவேல்! வாழ்க மாமன்னர் பரகேசரி இராசேந்திர தேவர்! வாழ்க இளவரசர் இராசகேசரி இராச மகேந்திர தேவர்! வாழ்க இளங்கோ வீரராசேந்திரர்!" என்று இடைவிடாமல் வாழ்த்தொலி கூறிக் கொண்டிருந்தனர்.

## அத்தியாயம் – 2. இரண்டு சபதங்கள்

இவ்விதமாக நடந்து கொண்டிருந்த கோலாகல வரவேற்பு நிகழ்ச்சிகளை அரசகுலப் பெண்டிர் அனைவரும் அரண்மனையின் கீழ்த் தளத்தில் நின்று கவனித்துக் கொண்டிருக்க, கன்னிப் பெண்களான மதுராந்தகியும், வானவியும் மட்டும் சற்று ஒதுக்கமாக அரண்மனை மேன்மாடத்திலிருந்து இவற்றைப் பார்த்தனர்.

வரவேற்பு நிகழ்ச்சிகளில் கடைசி அம்சம். மன்னர் இராசேந்திர தேவர் மட்டும் இப்பொழுது கிழக்கு நோக்கி நின்றார். அரச குடும்பத்து ஆண்கள் ஒவ்வொருவரும் வந்து அவர் முன் மண்டியிட்டு வணங்கி விடைபெற்றுச் சென்றனர். முதலில் அவருடன் போரில் பங்கு கொண்ட தம்பியர் இருவரும் விடை பெற்றுக் கொண்டு தங்கள் மாளிகையான முடிகொண்ட சோழன் அரண்மனைக்குக் குதிரையேறிச் சென்றனர். பின்னர் இராசேந்திர தேவரின் புதல்வர் அறுவரும் தந்தையை வணங்கிவிட்டு அவர் ஆசி பெற்று சோழகேரளன் அரண்மனைக்குள்ளே சென்றனர். பிறகு வீரராசேந்திரனின் மக்களான மதுராந்தகனும், கங்கை கொண்ட சோழனும் பெரிய தந்தையை வணங்கினர்.

இதுதான் அன்றைய நிகழ்ச்சிகளில் கடைசியானது என்பது மதுராந்தகிக்குத் தெரியும். எனவே, அவள் சற்றைக்கெல்லாம் அரண்மனைக்குள்ளே வரப்போகும் தந்தையை எதிர் கொள்ளும் பொருட்டு உப்பரிகையிலிருந்து புறப்பட்டாள்.

"வா, வானவி. நீயும் பெரியப்பாவைத் தரிசித்துவிட்டு உன் தந்தையைச் சந்திக்கச் செல்லலாம்," என்று கூறியவாறு மேன்மாடச் சுவரிலிருந்து திரும்பிய மதுராந்தகியை, வானவியின் "அடடா!" என்ற அலறல் நிறுத்தியது.

"என்ன வானவி?"

"இங்கே ஓடிவா, அக்கா. வந்து இந்த வேடிக்கையைப் பார்."

மதுராந்தகி மானைப்போல் மாடிச் சுவரண்டை ஓடி, கீழே நோக்கினாள். அங்கே குலோத்துங்கன் அப்பொழுது இராசேந்திர தேவரை வணங்கிக்கொண்டிருந்தான். அதைக்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கண்டுதானா வானவி, “அடடா!” என்று அலறினாள்? அதையா அவள் வேடிக்கை என்று குறிப்பிட்டாள்?

ஒன்றும் விளங்காத மதுராந்தகி, “என்ன வானவி, நீ எதை வேடிக்கை என்றாய்?” என்று வியப்புடன் வினவினாள்.

“உன் ஆசை அத்தானின் அசட்டுச் செயலைத்தான்!”

மதுராந்தகியின் தாமரை வதனம் சட்டென்று வாடியது. “வானவி, அவர் அப்படி ஒன்றும் நகைக்கும்படியான செயலைச் செய்யவில்லையே!” என்று கூறியவாறு அவள் தன் சகோதரியின் முகத்தைக் கூர்மையாக நோக்கினாள்.

வானவியிடமிருந்து ஓர் ஏளன நகைப்பு வெளிப்பட்டது. “ஒருவர் மீது அன்பைப் பொருத்தி விட்டால், அவர் செய்யும் செயல் எல்லாமே நல்லதாகத்தான் படும் போலிருக்கிறது!” என்று சொல்லி இன்னும் பெரிதாக நகைத்த அவள், பின்னர் தொடர்ந்து சொன்னாள்: "அக்கா, நீ நம் குலோத்துங்க அத்தானை நன்றாகக் காதலி. அவரையே மணந்துகொள். வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் அவர் தம்மையும் ஒரு சோழ அரச குமாரனாகக் கருதி, இம்மாதிரி இழிவான காரியங்களைச் செய்கிறாரே, அதை மட்டும் என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. வெற்றி வாகை சூடித் திரும்பும் மன்னரை அம்மரபைச் சேர்ந்தவர்கள் மட்டுமே வணங்க வேண்டும்; அவருடைய வீரமும் வெற்றியும் வருங்காலத்தில் தங்களுக்கும் கிட்ட வேண்டுமென்று மனமாரப் பிரார்த்தித்து, அவரது ஆசியைப் பெறவேண்டும். பிற மரபைச் சேர்ந்தவர்கள் யாராயிருந்தாலும், இந்த தருணத்தில் மன்னரை வணங்கக் கூடாது என்பதெல்லாம் உனக்கு தெரியாதா?”

வானவியின் சொற்கள் மதுராந்தகியை மெத்த விசனத்தில் ஆழ்த்தின. அவள் வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னாள்: “அது சரிதான், வானவி. ஆனால், அத்தான் தமக்கென்று ஒரு நாடும், ஓர் அரியணையும் காத்திருந்தும், ‘இந்தச் சோழ நாடே என் தாய்நாடு; இந்தத் தவத்திரு நாட்டுக்குத் தொண்டு செய்யவே நான் பிறந்துள்ளேன்’ என்று பிறந்தது தொட்டு இங்கேயே இருந்து, போர்ப் பயிற்சி பெற்று, இந்நாட்டுக்காக வாளேந்தும் காலத்தை எதிர்நோக்கி இருப்பவர் அல்லவா? ஆதலால் அவர் இத்தருணத்தில் என் தந்தையை வணங்கி ஆசி பெறுவதில் தவறென்ன இருக்கிறது?”

வானவி, முகத்தில் அரும்பியிருந்த ஏளனக் குறியில் சிறிது வெறுப்பையும் கலந்துகொண்டு இப்பொழுது பேசினாள்: “இந்த வெளிப்பூச்செல்லாம் எதற்கு, அக்கா? குலோத்துங்க அத்தான் உள்ளத்தில் என்ன இருக்கிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்!”



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“என்ன இருக்கிறதடி அம்மா? அத்தானோடு நெருங்கிப் பழகி, அவர் உள்ளத்தில் இடம் பெற்று, அதன் உள்ளும் புறமும் கண்டுள்ள நான் அறியாத எந்த ரகசியத்தையடி அம்மா, நீ அறிந்து விட்டாய்?” என்று மதுராந்தகி சிறிது கோபத்துடன் கேட்டாள்.

“ஒன்றுமே தெரியாதவள் போல் ஏன் இப்படிப் பேசுகிறாய், அக்கா? அவர்தான் ஏதோ அசட்டு நினைவோடு இந்தச் சோழ அரண்மனையை விடாப் பிடியாக பற்றிக் கொண்டிருகிறாரென்றால், நீயாவது அவருக்கு அறிவுரைகள் வழங்கித் தமது நாட்டுக்குப் போகச் செய்யாமல்...”

“வானவி!” என்று அடங்காச் சினத்துடன் கூவினாள் மதுராந்தகி. “அத்தான் என்னை மணக்க விரும்புவதையா அசட்டுத்தனம் என்கிறாய்? மீண்டும் ஒரு தடவை அப்படிச் சொன்னால் உன் நாவைத் துண்டித்து விடுவேன்...!”

"ஏது! அக்காளுக்குக் கோபம் வந்துவிட்டது போலிருக்கிறதே?" என்று மீண்டும் நகைத்தாள் வானவி. "ஆனால் அக்கா, நான் குறிப்பிட்டது உங்கள் திருமணத்தைப் பற்றியல்ல!"

“பின்?”

“அத்தான் பிறந்தபோது நமது பாட்டியார் அவரைத் தமது கரங்களில் எடுத்துக் கொண்டு ‘சந்திர குலத்தில் பிறந்த இக்குழந்தை சூரிய குலத்தை வளர்கத் தக்கவன் ஆவான்’ என்று கூறியதாகச் சொல்வார்களே, அதை நினைத்து இந்தச் சோழ அரியணை தமக்குக் கிட்டுமென்று மனப்பால் குடித்துக்கொண்டிருக்கிறார் அக்கா, உன் அருமை...”

(*அவனிபர்க்குப் புரந்தரனா மடையாளம் அவயத்தி னடைவே நோக்கி இவனெமக்கு மகனாகி யிரவிகுலம் பார்க்கத் தகுவ னென்றே (கலிங்கத்துப் பரணி. 237-ஆம் தாழிசை) கீழைச் சளுக்கிய மரபைச் சந்திர குலமென்றும், சோழ மரபைச் சூரிய குலமென்றும் சொல்லுவார்கள்.)

“போதும், நிறுத்து!” என்று இரைந்தாள் மதுராந்தகி. “அவர் அப்படி நினைத்திருப்பதாக யார் உன்னிடம் கூறியது?”

“இதையெல்லாம் யாராவது கூறித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமா, அக்கா? அவர் போக்கே இதற்கு அத்தாட்சி தந்து கொண்டிருக்கவில்லையா? நீயே நினைத்துப்பார்; இந்த எண்ணம் எத்துணை அசட்டுத்தனமானது! உன் தம்பிமார் அறுவரும் பட்டமகிஷியின் மக்களல்லவாதலால், நமது சோழ குல முறைப்படி தமது அடுத்த இளைய சகோதரர் இராச மகேந்திரருக்கு இளவரசுப் பட்டம் கட்டியிருக்கிறார் பெரியப்பா. ஆதலால் அவருக்குப் பிறகு இராச மகேந்திரரே இந்நாட்டை ஆளப்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

போகிறார். இன்று அவருக்கு மக்களில்லாதிருக்கலாம். ஆனால் நாளை ஒரு நாள் இளையபிராட்டி லோகமகா தேவியார் நம் நாட்டின் பட்டத்துகுரிய ஓர் ஆண் மகவைப் பெற்றெடுக்க மாட்டார் என்பது என்ன நிச்சயம்?

“ஒருகால் அவர்களுக்கு ஆண் குழந்தையே பிறக்காவிட்டாலுங்கூட, அடுத்த பட்டத்துரிமை என் தந்தைக்கல்லவா? அப்பொழுது என் தந்தை உயிரோடில்லையென்றால், என் இளைய சகோதரர்களில் ஒருவனல்லவா இந்தச் சோழ நாட்டின் அரியணை ஏற உரிமையுடையவன்? இப்படி நமது மரபிலே பலர் வரிசையாகக்காத்திருக்கையில், அத்தானின் பேராசையை நினைக்கும்போது நகைக்க மட்டுமா தோன்றுகிறது? ஆத்திரம் தீரச் சிறிது நேரம் அழலாம் என்றுகூடத் தோன்றுகிறது!

“இதோ பார், அக்கா... நான் இத்தனை காலமாக இதையெல்லாம் உன்னிடம் சொல்ல வேண்டாமென்று தான் இருந்தேன். ஆனால் நிலைமை இப்பொழுது மிக மோசமாகி இருப்பதை நீயே அறிவாய். நேற்று நடந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார். வேங்கியில் அத்தானின் தந்தை நோய்வாய்ப்பட்டிருக்கிறாரென்றும், அத்தானின் சிறிய தந்தை விசயாதித்தன் குந்தள நாட்டாரின் உதவியுடன் அரியணையைக் கைப்பற்றத் தருணம் பார்த்திருக்கிறாரென்றும், ஆதலால் இச்சமயத்தில் அத்தான் அங்கிருக்க வேண்டியது அவசியமென்றும் அத்தை அவசர ஓலை அனுப்பியிருக்க, இவர், ‘வெற்றி கொண்ட படை திரும்புகிறது; அதை வரவேற்காமல் வேங்கிக்குப் போகமாட்டேன்’ என்று கூறிவிடவில்லையா?

“அசட்டுப் பிடிவாதங்களுக்கும், அர்த்தமற்ற நினைவுகளுக்கும் ஒரு வரையறை வேண்டும், அக்கா. ஒன்றும் இல்லாவிட்டாலும் சோழ நாட்டின் நலனுக்காகவாவது இவர் வேங்கிக்கு மன்னராக வேண்டியது அவசியமில்லையா? குந்தளத்தார் நம்மைப் பிரித்துவிடப் பன்னெடுங் காலமாகச் சதி செய்து வருகிறார்கள் என்பதும், அதற்காகவே அவர்கள் இவருடைய சிறிய தந்தையைக் கைக்குள்ளே போட்டுக் கொண்டு அவரை வேங்கிக்கு அரசராக்கிவிட முயன்று வருகிறார்கள் என்பதும் நன்கு தெரிந்திருந்தும், இப்படி நடந்து கொண்டாரே? இதை என்னவென்று சொல்லுவது, அக்கா?

“என்னை நீ தவறாக நினைத்துக் கொண்டாலும் சரி; அவரைக் காதலித்து, அவரைத்தான் மணந்து கொள்ளுவேன் என்று உறுதி பூண்டிருக்கும் உன் நலனுக்காவே சொல்கிறேன். இந்தச் சோழ நாட்டின் மீதுள்ள பைத்தியத்தை உதறிவிட்டு, அவரை



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

உடனே வேங்கிக்குப் புறப்பட்டுப் போகச் சொல். அவருடைய பேதைமையான ஆசைகளுக்கெல்லாம் நீயும் தலையசைத்துக் கொண்டிராதே!"

பெருமழையெனப் பொழிந்த வானவியின் இந்தச் சொல் மழையைச் சிலையாக நின்று செவி மடுத்தாள் மதுராந்தகி. ஆனால் அவளது உள்ளம், கோடை மழையின் போது குமுறும் வானம்போல் குமுறிக் கொண்டிருந்தது. 'என்ன அபாண்டம்! என் அத்தானுக்கா இந்தச் சோழ நாட்டின் அரியணைமீது கண்?'

மதுராந்தகிக்கு, முன்னாள் மாலையில் குலோத்துங்கன் கூறிய மொழிகள் நினைவுக்கு வந்தன. அவன் பிறந்தது முதல் இந்த நாட்டிலேயே இருந்து வந்தமையால், தன்னை ஒரு சோழ அரச குமாரனாகவே கருதியிருக்கிறான் என்பதை யாவரும் அறிவர். ஆயினும் தந்தை நோய்வாய்ப் பட்டிருப்பதாகச் செய்தி வந்தபோது கூட வேங்கிக்குப் போக இணங்காத அவன் செயலை அரச குடும்பத்தினர் யாரும் ஒப்பவில்லை. மதுராந்தகியின் அன்னை கிழானடிகளும், சிற்றன்னை திரைலோக்கிய முடையாளும் மிக வற்புறுத்திச் சொன்ன பிறகுதான் அவன், மறுநாள் மாமா வந்ததும், அவரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட இணங்கினான்.

இது நிகழ்ந்த சிறிது நேரத்துக்கெல்லாம் மதுராந்தகியும் அவனும் அரண்மனைக்குப் பின்புறமாக அமைக்கப்பட்டிருந்த செயற்கை நீர் நிலையின் கரையில் வழக்கம்போல் சந்தித்தனர். அப்பொழுது மதுராந்தகியும் அவனது பிடிவாதம் அர்த்தமற்றது என்பதை எடுத்துக் கூறினாள். அதற்கு அவன் சொன்னான்: "மதுரா, இது என்ன, நீ கூட என்னை அந்நியனாக்கிப் பேசிவிட்டாயே? என் உடலில் ஓடுவது வேங்கி உதிரந்தான் என்றாலும், அதில் இரண்டு தலைமுறை சோழ உதிரக் கலப்பு இருக்கிறது, மதுரா. தவிர, நான் பிறந்தது, வளர்ந்தது, போர்க்கலை பயின்று வருவது எல்லாம் இங்கே தான் என்பதை நீ அறியாயா? எனவே, எனக்கு வேங்கி நாட்டைவிடச் சோழ நாட்டின் மீது அதிகமான பாசம் இருப்பதில் வியப்பு என்ன இருக்கிறது? இதோ பார், கண்ணே! என் சிறிய தந்தை வேங்கியை ஆள விரும்பினால் ஆண்டுவிட்டுப் போகட்டுமே! என்னைப் பற்றிய வரையில் எனக்கு இந்தச் சோழ நாட்டில் ஒரு சிறிய படைக்குத் தலைவனாகும் வாய்ப்புக் கிடைத்தாலே போதும்; அதை ஆயிரம் வேங்கிகளுக்கு இணையாகக் கருதுவேன். என் உள்ளம் கவர்ந்த உன்னிடம் மனம் விட்டுக் கூறுகிறேன். அறிவடைந்த நாளிலிருந்து நான் என் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இந்தச் சோழவள நாட்டுக்கே அர்ப்பணிக்க வேண்டுமென்று தீர்மானித்து விட்டேன்!"



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

'இப்படித் தம்மை வளர்த்த நாட்டுக்காக, தமக்கு உரிமையுள்ள அரியணையையே உதறிவிட்டுத் தொண்டாற்ற விரும்பும் உத்தமரையா இந்த அறியாச் சிறுமி பேராசை பிடித்தவராக உருவகப் படுத்திப் பேசுகிறாள்!' மதுராந்தகிக்கு இப்பொழுது வெறியே வந்து விட்டது. அவள் முகத்தில் அனல் பறக்கச் சொன்னாள்; "ஆமாம், அவர் அப்படித்தான் நினைத்திருக்கிறார்; அதில் என்ன தவறு?"

"தவறா? தவறில்லை அக்கா! அது பகல்கனவு!" என்று வெடித்தாள் வானவி.

"பகல் கனவும் பலிப்பதுண்டு, வானவி!"

"ஆனால் இது பலிக்காது; பலிக்க முடியாது!"

"பலிக்கச் செய்தால்...?"

"யார்? நீயா பலிக்கச் செய்யப் போகிறாய்?"

"ஆமாம்; நான்தான். முடியாதென்று நினைக்கிறாயா? பெண், மனம் வைத்தால், இந்தப் புவனத்தையே தலைகீழாகப் புரட்டிவிட முடியும், தெரியுமா?"

"இந்த உலகில் நீ ஒருத்தி மாத்திரமே பெண்ணல்ல, அக்கா. இதோ, நான் கூட ஒரு பெண்தான். உன்னால் புவனத்தைத் தலைகீழாகப் புரட்டிவிட முடியுமென்றால், என்னால் அதை நிமிர்த்துவிட முடியாதென்றா நினைத்தாய்? பார்க்கலாமா? வெண்டுமென்றால் சபதம் எடுத்துக் கொள்ளக் கூடத் தயாரக் இருக்கிறேன்...!"

"சபதமா?"

"ஆமாம்; நம் இருவர் திறமைக்கும் ஒரு பரிட்சை. துணிவிருந்தால் முன் வா. குலோத்துங்க அத்தானை இந்தச் சோழ அரியணையில் ஏற்றுவதாகச் சபதம் செய். நான் எதிர்ச் சபதம் செய்கிறேன்!"

"ஓ! அவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டாயா? அப்படியானால் இதோ கேள் என் சபதத்தை! - குலோத்துங்க அத்தானை மணந்து, அவருடன் இந்தச் சோழ அரியணையில் ஒரு நாளாவது அமராவிட்டால் என் பெயர் மதுராந்தகி இல்லை...!"

"கேட்டுக்கொள் என் சபதத்தை; குலோத்துங்க அத்தானுக்கு இந்தச் சோழ அரியணை மட்டுமில்லை; வேங்கி அரியணையும் கிட்டாமல் செய்யவில்லையென்றால், நான் வீரராசேந்திரரின் புதல்வி வானவன் மாதேவி இல்லை...!"



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் – 3. தந்தையும் மகளும்

அன்று பிற்பகலில் மாமன்னர் இராசேந்திர சோழ தேவர் காலை வரவேற்பு நிகழ்ச்சிகளின் களைப்பு நீங்கத் துயில்கொண்டு எழுந்த பின் சோழகேரளன் அரண்மனை அந்தப்புரத்துக்கு வந்தார்.

அரண்மனையில் ஆங்காங்கு தங்கள் நியமங்களில் ஈடுபட்டிருந்த பணிப்பெண்கள், வேந்தரைக் கண்டதும் கரம் கூப்பிச் சிரம் தாழ்த்தி வணங்கினர். அந்தப்புரத்தில் நுழைவாயிலைக் காவல் புரிந்து நின்ற பணிப்பெண்களில் ஒருத்தி மன்னர் பிரானின் வருகையை அறிவிக்க உள்ளே விரைந்தோடினாள்.

அந்தப்புரத்தின் நடு மண்டபத்தில் பட்டத்தரசி கிழானடிகளும் அவளது ஒரே அருஞ்செல்வியான *மதுராந்தகியும் மட்டுமே இருந்தனர். மதுராந்தகி அன்னையின் மடியில் முகத்தைப் புதைத்து அழுது கொண்டிருந்தாள். காலையில் தனக்கும் வானவிக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலையும், அதன் முடிவில் தாங்கள் செய்துள்ள சபதத்தையும் அவள் சற்றுமுன் தன் அன்னையிடம் கூறினாள்.

(*இரண்டாம் இராசேந்திர சோழ தேவருக்குக் கிழானடிகள், திரைலோக்கியமுடையாள் என இரு மனைவியர் இருந்ததாக ஆராய்ச்சி நூல்கள் கூறுகின்றன. ஆயின், மதுராந்தகி இவர்களுள் யாருடைய மகள் என்பது பற்றிய குறிப்பு எங்கும் காணக்கிடைக்கவில்லை. எனவே, பட்டத்தரசியான கிழானடிகளின் ஒரே மகளே மதுராந்தகி என நான் எடுத்துக் கொண்டுள்ளேன்.)

அதைச் செவிமடுத்த கிழானடிகள் பெரிதாக நகைத்து "மதுராந்தகி! உன் தந்தையார் உன் மீது அளவு கடந்த அன்பைச் சொரிந்து உன்னை இன்னும் அறியாப் பிராயத்தினளாகவே நிறுத்தி வைத்திருக்கிறார். இல்லாவிட்டால், இப்படி வேடிக்கையான ஆணை ஒன்றை இட்டிருப்பாயா?" என்றாள்.

"அம்மா, என் ஆணை வேடிக்கை அன்று; அது உண்மையானது; நான் நிறைவேற்றியாக வேண்டியது," என்று குமுறினாள் மதுராந்தகி.

"எதை நிறைவேற்றப் போகிறாய், மகளே? கீழைச் சளுக்கிய மரபினனுக்குச் சோழ அரியணையா? உன் தந்தையார் காது கேட்க இப்படிப் பேசி விடாதே. அப்புறம் நீ அவர் அன்புக்குரிய மகள் என்ற நிலை மாறி, நாட்டுக்குத் துரோகம் நினைப்பவள் என்ற நிலை ஏற்பட்டுவிடப் போகிறது. முத்தரையரை வென்று சோழப் பேரரசை நிறுவிய நம்முடைய முதாதை தஞ்சை கொண்ட கோப்பரகேசரி விசயாலய சோழர் காலம் முதல் வாழையடி

வாழையாக அரசு செலுத்திவரும் சோழ மரபுக்கு நீ முடிவு கட்டப் போகிறாயா? இது என்ன பொருளற்ற பிதற்றல் மகளே!"

ஆம்; பல்லவர்களுக்குத் திரை செலுத்தி, அவர்கள் ஆளுகையின் கீழ் குறுநில மன்னர்களாக விளங்கி வந்த முத்தரையர் மரபினரிடமிருந்து தஞ்சை உள்ளடங்கிய சோழ மண்டலத்தைப் போர் வலியால் பெற்ற விசயாலயச் சோழப் பராந்தகருக்குப் பிறகு இம்மாபெரும் சோழப் பேரரசின் அரியணைக்காக வேறு மரபினரும் கனவுகூடக் கண்டதில்லை. அப்படியிருக்க, தான் இன்று இட்டுவிட்ட ஆணை எளிதில் நிறைவேறக் கூடியதா என்ற ஐயம் அதனை இட்ட கணத்திலிருந்தே மதுராந்தகியின் உள்ளத்தைச் சூழ்ந்து வாட்டி வந்தது. ஆனால் அவள் என்ன, இந்தச் சோணாட்டின் பட்டத்தரசியாக ஆயுள் முழுவதும் வாழ்வேன் என்றா ஆணை இட்டாள்? இல்லையே! குலோத்துங்கனை மணந்து அவருடன் ஒரு நாளாவது சோழ அரியணையில் அமராவிட்டால், தன் பெயர் மதுராந்தகி அல்ல என்றுதானே கூறியிருக்கிறாள்? அது சாத்தியமில்லையா? சோழவள நாட்டின் ஏகச் சக்கரவர்த்தியாக விளங்குபவரால், இந்த ஒரு சிறிய ஏற்பாட்டைத் தன் மகளுக்காகச் செய்ய முடியாதா? குலோத்துங்கனுக்கும் அவளுக்கும் இடையே நிலவும் ஆழ்ந்த காதலை அவர் அறிவார். அவனையே தமது மகள் மணக்க உறுதி பூண்டிருப்பதும் அவருக்குத் தெரியும். தவிர, அவர் அவளுடைய விருப்பம் எதற்கும் இடையூறாக நின்றது என்பது இதுவரையில் கிடையாது. அத்தகைய அன்புப் பொழிலான தந்தையார் தனது இந்தச் சிறு கோரிக்கையை, அதிலும் அதனைத் தான் ஆணையிட்ட காரணத்துக்காக, நிறைவேற்றிக் கொடுக்கமாட்டாரா? கட்டாயம் செய்வார். அவர் 'என் மீது வைத்துள்ள பாசத்தின் அளவை இந்த அம்மாதான் அறியாமல் ஏதோ பிதற்றுகிறாள்!'

இதையும் மதுராந்தகி தன் அன்னையிடம் கூறத் தயங்கவில்லை. ஆனால் இதைக் கேட்டதும் கிழானடிகளின் வதனத்தில் துலங்கிய பரிவு மறைந்தது. அதன் இடத்தைக் குரோதம் சூழ்ந்தது. குரலிலே வெறுப்பு ஓங்க, பெரிய பிராட்டியார் என அழைக்கப்படும் அந்தச் சோழ அரசி மகளிடம் சொன்னாள்: "முன்பு அந்த ஓர் எண்ணமேனும் என் உள்ளத்தில் இருந்தது; நேற்று மாலையிலிருந்து அதுவும் காற்றோடு போய்விட்டது!"

"நீ எதைக் குறிப்பிடுகிறாய், அம்மா?" என்று திகிலுடன் வினவினாள் மதுராந்தகி.

"சொந்த நாட்டின் மீதே பற்றற்ற அந்தப் பிள்ளைக்கு என் ஒரே மகளை மனைவியாக்கும் எண்ணந்தான்!"

"அம்மா!" என்று அலறினாள் மதுராந்தகி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"ஆம் மகளே! நீ வீர பரம்பரையில் உதித்தவள். இந்தச் சோழப் பேரரசை நிறுவிய உன் முதாதை விசயாலய சோழ தேவர் காலத்திலிருந்து ஒவ்வொரு சோழ மன்னரும் எத்தனை வீர பராக்கிரமத்துடன் விளங்கினார்கள் என்பது ஒருகால் உனக்குத் தெரியாமல் இருக்கலாம். குடமூக்குப் போர், அரிசிற்கரைப் போர் முதலிய பல்வேறு போர்களில் கலந்து கொண்டு மார்பில் *தொண்ணூற்றாறு விழுப்புண் தழும்புடைய வீரர் விசயாலயசோழர். அவருடைய புதல்வர் ஆதித்த சோழர் கொங்கு மண்டலத்தை வென்று, அங்கிருந்து கொணர்ந்த பொன்னால் தில்லைச் சிற்றம்பலக் கோவிலின் முகட்டை வேய்ந்த பராக்கிரமசாலி. அவர் மைந்தர் முதலாம் பராந்தகர் வெள்ளூர்ப் போரில் பாண்டிய மன்னனையும், ஈழத்துப் போரில் உதயனையும், வல்லத்துப் போரில் வாணர்குல மன்னர்களையும், சீட்புலிப் போரில் கீழைச்சளுக்கிய மன்னனாகிய வீமனையும் வென்று புகழ் எய்தியவர். அவ்வாறே பிற்காலத்தில் இச்சோணாட்டில் கோலோச்சிய சுந்தர சோழர் திருமுனைப்பாடி நாட்டையும், தொண்டை நாட்டையும் தமது ஆட்சியின் கீழ்க் கொணர்ந்த மாவீரர். அவருடைய புதல்வராகிய முதலாம் இராச ராச சோழர் திக்கு விசயம் செய்து பாண்டி மண்டலம், சேர மண்டலம், தொண்டை மண்டலம், கங்க மண்டலம், கொங்கு மண்டலம், நுளம்பாடி, கலிங்கம், ஈழம் ஆகிய நாடுகள் அடங்கிய மும்முடிச் சோழ மண்டலம் ஆகிய பல மண்டலங்களைத் தமது ஆளுகைக்கு உட்படுத்தியவர். அவருடைய மைந்தரும் உனது பாட்டனாரும் ஆகிய முதலாம் இராசேந்திர சோழரோ இடைதுறை நாடு, வனவாசி, கொள்ளிப்பாக்கை, மண்ணைக் கடகம் ஆகியவற்றைப் போர் செய்து கைப்பற்றியவர்; ஈழ நாட்டுடன் பல போர்கள் நிகழ்த்தியவர்; வட நாட்டின் மீது படையெழுச்சி செய்து வங்க மன்னன் மகிபாலனை வென்று அவன் தலைமீது கங்கை நீர்க்குடத்தை ஏற்றி இங்குக் கொண்டுவந்து ‘கங்கை கொண்ட சோழர்’ என்று அழியாப் புகழ் பெற்றவர்; இன்று நாம் வாழும் இந்தக் கங்கை கொண்ட சோழபுரத்தை நிறுவியவர். அவருக்குப் பின் இச்சோணாட்டின் அரசுக் கட்டிலேறிய உன் பெரிய தந்தை இராசாதிராச சோழர் ஈழ நாட்டு மன்னர்களோடும், மேலைச் சளுக்கியர்களோடும் பல போர்களை நிகழ்த்தி, போர்களத்தில் வீர மரணம் எய்தி, ‘யானை மேல் துஞ்சின உடையார்’ என்ற மெய்க் கீர்த்தி அடைந்தவர். கடைசியாக உன் தந்தையின் வீரத்தைப் பற்றி நான் எடுத்துரைக்க வேண்டியதில்லை. இவ்வாறு வீரத்தின் மேல் வீரங்காட்டிய மரபின் வழித் தோன்றலாகிய உன்னை, நீ பெண்ணாக இருப்பினும், தன்னாட்டின் மீது பற்றற்ற ஒரு கோழைக்கு மணம் செய்விக்க நான் ஒருபோதும் உடன்படேன், மகளே!”



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

(*...புல்லர் தொழும்புடைய வானத்துத் தொண்ணூறு மாறுந் தழும்புடைய சண்டப்ர சண்டன்... (இராசராச சோழன் உலா-36-38))

இம்முடிவைக் கேட்டதும், "அம்மா!" என்று அலறியவாறு தாயின் மடிமீது சாய்ந்து விட்டாள் மதுராந்தகி. "என் வாழ்வின் குறிக்கோளைப் பாழ்படுத்தி விடாதே, அம்மா. என் உயிரின் ஒளியை அவித்து விடாதே. நீ நினைக்கிறவாறு அத்தான் கோழையல்ல; அன்றித் தமது நாட்டின் மீது பாசமற்றவரும் இல்லை. ஆனால், தாம் பிறந்து வளர்ந்த இத் தவத்திரு நாட்டின் மீது கொண்ட பற்று, அவருடைய தாய் நாட்டுப் பற்றையும் விஞ்சியிருக்கின்றது; அவ்வளவுதான். ஆதலால் அவரைத் தவறாக மதித்து விட்டிருக்கிறீர்கள்!"

மதுராந்தகியால் பேச முடியவில்லை; தேம்பித் தேம்பி அழுதாள். இது என்ன? கிணறு வெட்டப் பூதம் தோண்டிய கதையாகிவிட்டதே!

இந்நிலையில் அந்தப்புரத்தின் காவல் நியமப் பெண் மாமன்னரின் வருகையைக் கட்டியம் கூறிக்கொண்டு அங்கு வந்தாள்.

மன்னர் வருவதை அறிந்ததும், கிழானடிகள் அவசரத்துடன் மகளின் தலையை நிகிர்த்தி, "எழுந்திரு மதுராந்தகி. உன் தந்தையார் வருகிறாராம். போர் மீண்டுள்ள அவரை அந்தபுரத்தில் கண்ணீருடன் வரவேற்பது நன்னிமித்தமன்று. எழுந்து, கண்ணீரைத் துடைத்துக் கொள், மகளே," என்று எழுப்பினாள்.

ஆம், வீராங்கனையாக ஆணையிட்ட மதுராந்தகியும், அதனை நிறைவேற்றிக் கொள்ளக் கண்ணீரைக் கருவியாக்கிக் கொள்ள விரும்பவில்லை. அவள் எழுந்து, கன்னங்களில் ஓடியிருந்த கண்ணீரைத் துடைத்துக் கொள்ள விரைந்தாள். ஆயின் அதற்குள் மன்னர் அந்தப்புரத்தில் நுழைந்து விட்டார். அவர் கவனம், கன்னங்களைத் துடைத்துக் கொண்டிருந்த மகள்பால் தான் முதலில் சென்றது.

"மதுராந்தகி! என் கண்ணே! ஏன் இந்தக் கண்ணீர்?"

வீராதி வீரராகப் போர்க்களத்தில் மனிதத் தலைகளை வெட்டிச் சாய்க்கும் வேந்தர் வேந்தன், மகளின் கண்களில் கண்ணீரைக் கண்டதும் வெம்பனியாக உருகிக் கரைந்து போனார். அவருக்குத் தமது அருஞ் செல்வத்தின் மீது அத்தனை பாசம்.

இராசேந்திர சோழர் தம்மை வணங்கக் குனிந்த மகளைத் தூக்கி நிறுத்தி, "வணக்கம் இருக்கட்டும், மகளே; உன் வருத்தம் யாது? அதைத் தெரிவி முதலில்," என்று வாஞ்சையுடன் அவள் முகத்தை நிமிர்த்து வினவினார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கிழானடிகளே அவருக்குப் பதிலிறுத்தார். “உங்கள் செல்வ மகள் வர வரக் குழந்தையாகிக் கொண்டிருக்கிறாள்!” என்றாள் அவள்.

“பெற்றோருக்குத் தங்கள் செல்வங்கள் என்றென்றும் குழந்தைகள் தாமே தேவி!” என்று முறுவலுடன் உரைத்த சோழ தேவர், மகளை நோக்கி, “என்ன நடந்தது அம்மா? உன் அன்னை குறைப்படுமாறு என்ன செய்தாய்?” என்று கேட்டார்.

மதுராந்தகி தன் துயரை மறைத்துக் கொள்ளத்தான் முயன்றாள். ஆனால் வெஞ்சினம் கொண்டு பேசுவோர் கிளறிவிடும் துயரம், வேண்டுவோரைக் காணும்போது வீறுகொண்டு விடுகிறதே! “அப்பா!” என்று அவரது பரந்த மார்பில் முகத்தைப் புதைத்து விம்மினாள்.

“சொல், என் செல்வமே!” மன்னர் அவளுடைய கார்மேகக் கூந்தலை அன்புடன் வருடினார்.

“வெற்றிகொண்டு திரும்பியுள்ள தாங்கள், தங்கள் மகளுக்கு ஒரு வரம் தந்தருள வேண்டும், அப்பா.”

“வரமாவது, ஒன்றாவது! அவளுடைய பிதற்றல் எதையும் நிறைவேற்றுவதாக வாக்களித்து விடாதீர்கள்!” என்று அவர்கள் பேச்சில் புகுந்து எச்சரித்தாள் கிழானடிகள்.

“நீ சற்று அமைதியாயிரு தேவி!” என்று முகத்தின் முறுவல் மாறாமலே கூறிய சோழதேவர், “கேள் மகளே; நீ கேட்கும் வரம் இச்சோணாட்டுக்கும், அதன் குடிமக்களுக்கும் இழுக்காக இல்லாத வரையில், எதாக இருந்தாலும் கொடுத்தேன்!” என்றார்.

“அப்பா, நம் வானவியின் முன் இன்று நான் ஓர் ஆணையிட்டிருக்கிறேன். அதனை நீங்கள் நிறைவேற்றி வைக்க வேண்டும்.”

“ஆணையா? உன் சகோதரியிடமே ஆணையிட்டிருக்கிறாயா? வியப்பாக இருக்கிறதே நீ கூறுவது?” சொல்லை மறுவிய வியப்பு முகத்தையும் மறுவச் சோழதேவர் மகளின் முகத்தை நோக்கினார்.

“ஆம் அப்பா; அவளது உள்ளத்திலே மூண்ட பொறாமைத்தீ, என்னை அந்த ஆணையை இட வைத்தது.”

“பொறாமையா? உன் சகோதரிக்கு உன் மீது பொறாமையா?”

“என் மீது இல்லை, அப்பா; குலோத்துங்க அத்தான் மீது. அவர் இந்த நாட்டில் இருப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.”



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“இது என்ன புதிர் விடுகிறாய் மகளே? அவர்களுக்கு என்றால், இன்னும் யார் யாருக்கு?”

“என்னையும் உங்களையும் தவிர்த்து, இக்குடும்பத்தைச் சார்ந்த எல்லோருக்குமேதான். இதோ, என்னைப் பெற்றெடுத்த அன்னைக்குக் கூடத்தான்.”

“அப்படியா?” என்று மனைவியை நோக்கி முறுவலித்த சோழவேந்தர் மகளிடம் திரும்பி, “எதனால் அப்படிச் சொல்கிறாய், மதுராந்தகி?” என்று கேட்டார்.

“நேற்று அத்தை அம்மங்கை தேவியின் ஓலையுடன் வேங்கித் தூதன் ஒருவன் வந்தான், அப்பா!” என்று மதுராந்தகி சொல்லத் துவக்கியதும், மன்னர் குறுக்கிட்டார்: “ஆம். கேள்வியுற்றேன். குலோத்துங்கனே முற்பகலில் சொன்னான். வெற்றி மறுவித் திரும்பும் என்னிடம் விடைபெற்றுச் செல்லவே காத்திருந்தானாம். அதற்காக...?”

“அதற்காக அம்மா எங்கள் காதலையே முறித்துவிட முயலுகிறாள்!”

“என்ன? இது உண்மையா தேவி?” என்று அடங்கா வியப்புடன் கேட்டார் சோழதேவர்.

“ஆமாம்; பின் என்ன? வேங்கி நாட்டின் நிலையே அந்தரத்தில் தொங்குவதாக உங்கள் சகோதரியார் அவசர ஓலை அனுப்பியிருக்க, இவன் சிறிதுகூட நாட்டுப் பற்று இன்றி, ‘என் நாடு இதுதான்’ என்று பிதற்றினால்?“ என்று கூறினால் கிழானடிகள்.

“உன் கருத்து தவறு, தேவி. குலோத்துங்கன் பிறந்து வளர்ந்த சூழ்நிலை அவனை இச்சோழப் பேரரசின் மீது அளவற்ற பற்றுக் கொள்ளச் செய்துள்ளது. அதனால்தான் அவன் அவ்வாறு கூறியிருக்கிறான். அதற்காக, இந்தக் குழந்தைகளின் அன்புக்கு அணைகட்டி விடுவதா? இவர்களிடையே போடப்பட்டுள்ள முடி நீயும் நானும் போட்டதன்று, தேவி. அது என் அன்னையார் போட்ட முடி. ஆதலால் குலோத்துங்கனுக்கு ஓரடி மண்கூட இல்லாமற் போயினும், அவனே என் மருமகனாவான்.”

இவ்வாறு வீராவேசத்தோடு மொழிந்த சோழதேவர் மகளின் முதுகைத் தடவியாவாறு, “இதற்காகவா கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தாய், மகளே? கவலை ஒழி. குலோத்துங்கன் உனக்கே உரியவன்” என்று அவளைத் தேற்றினார்.

“ஆனால் உங்கள் மகள் அதற்காக மட்டும் கண்ணீர் விடவில்லையே! அவள் இட்டுள்ள அதிர்ச்சி தரும் ஆணையைக் கேட்டுவிட்டுப் பிறகு பேசுங்கள்,” என்றாள் கிழானடிகள்.

“ஆம் மகளே; உன் ஆணையைக் கூறு,” என்றார் சோழதேவர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“கூறுகிறேன் அப்பா. ஆனால் அதைக் கூறுமுன், அந்த ஆணையை நான் இடநேர்ந்த சூழ்நிலையை விளக்க வேண்டும்,” என்று தொடங்கிய மதுராந்தகி, காலை நிகழ்ச்சிகளின் போது குலோத்துங்கன் தன் தந்தைக்கு வெற்றி வணக்கம் செலுத்தியதிலிருந்து தனக்கும் வானவிக்கும் இடையே நடந்த விவாதத்தையும், வானவி அவனை வெகுவாக இழித்துப் பேசி எள்ளி நகைத்ததையும், அது தனக்கு வெறியூட்டவே, குலோத்துங்கனுடன் ஒரு நாளேனும் சோழ அரசுக் கட்டிலில் அமராவிட்டால் தன் பெயர் மதுராந்தகி அல்ல என்று ஆணை இட்டதையும் அறிவித்தாள்.

மகளின் மொழிகளால் மனம் மகிழ்ந்த மாமன்னர் கலகலவென நகைத்தார். பின்னர் அவள் முதுகில் தட்டியவாறு சொன்னார்; “வீரம் செறிந்த ஆணைதான் இட்டிருக்கிறாய், மகளே. உன்னை மெச்சுகின்றேன். பெண்ணாயிருந்தாலும் சோழ மரபின் உதிரம் ஓடுபவள் அல்லவா நீ? அதன் வீரச் செருக்கு உனக்கு இல்லாமல் போய்விடுமா? ஆனால் மதுராந்தகி!”

தந்தையின் பாராட்டால் மெய்ம்மறந்து, இனித் தன் ஆணை நிறைவேறிவிடும் என்று அச்சம் ஒழிந்த மதுராந்தகி, இந்த ‘ஆனால்’ என்ற சொல்லைக் கேட்டதும் அதிர்ந்து, “ஆனால் என்ன அப்பா?” என்றாள் சங்கையுடன்.

“வீரச் சபதங்களை வீரச் செயல்களால்தான் நிறைவேற்ற வேண்டும், குழந்தாய்!”

“அப்பா!”

“ஆம் மகளே; நான் இன்று இந்தச் சோழப் பேரரசின் சர்வ வல்லமை வாய்ந்த மன்னன்தான். ஆயினும் சில நெறிகளுக்கு நான் கட்டுப்பட்டே ஆகவேண்டும். அவற்றுள் ஒன்று, எனக்குப் பின் இவ்வரசுக் கட்டிலில் அமர அருகதை உள்ளவர் யார் என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பு.”

மதுராந்தகி தந்தையின் பேச்சை இடைமறித்தாள். “ஆனால் அப்பா, நான் அவரை சோழ நாட்டின் நிரந்தர மன்னராக்கி விடுவாதாக ஆணையிட்டிருக்கவில்லை; ஒருநாள் பொழுது மட்டுமே...!”

இப்பொழுது சோழதேவர் குறுக்கிட்டார்: “ஒரு நாள் என்ன? ஒரு கணம், கண் இமைக்கும் பொழுது கூட முறையற்ற ஒருவனை இவ்வரியணையில் அமர்த்த எனக்கு உரிமை கிடையாது, குழந்தாய். அந்த உரிமையை நான் எடுத்துக் கொண்டால், அது இந்நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும், புகழோங்கிய நமது சோழகுலத்துக்கும் இழுக்கு.”

“ஐயோ அப்பா! அப்படியானால்...?”



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“ஒரே வழிதான் இருக்கிறது குலோத்துங்கனுக்கு. அதன் மூலம் அவன் ஒருநாள் மட்டுமென்ன, தன் உயிருள்ள வரையில்கூடச் சோழ மண்டலாதிபதி ஆகலாம்.”

“சொல்லுங்கள் அப்பா; அது என்ன வழி?” மதுராந்தகி ஆவலுடன் துடித்தாள்.

“அவன் உன்னை மணந்து, தன் வீரத்தால் இந்நாட்டின் மன்னனாக வேண்டும்.”

“அப்பா!”

“இதுவே உண்மை நிலை மகளே; வீரம் அல்லது பிறப்புரிமை. இவ்விரண்டில் ஒன்றுதான் எவனையும் இந்நாட்டு மன்னனாக்க முடியும்!...”

சோழதேவர் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கையில் பணிப்பெண் ஒருத்தி ஓடிவந்து, “முடிகொண்ட சோழன் அரண்மனையிலிருந்து வீரன் ஒருவன் வந்திருக்கிறான், பிரபு. தங்களை உடனே காண வேண்டுமாம்,” என்று கூறி வணங்கி நின்றாள்.

“அவனை உள்ளே வரவிடு!” என்றார் மாமன்னர்.

வந்த வீரன் பரபரப்புடன் காணப்பட்டான். அவன் கண்களில் கண்ணீர் கசிந்து கொண்டிருந்தது. “மகாபுரபு! பட்டத்து இளவரசர்...”

அவன் வார்த்தைகளை முடிக்கவில்லை; “தம்பி இராசமகேந்திரா!” என்று அலறியவாறு சோழதேவர் அந்தப்புரத்திலிருந்து வெளியே பாய்ந்தார்.

## அத்தியாயம் – 4. காதல் ஓலை

**மே**ற்சொன்ன நிகழ்ச்சிகள் அன்று மாலையில் நடந்தன. அதாவது, மதுராந்தகி தன் ஆணையை நிறைவேற்றுவதற்கான செயல் முறைகளில் அன்று மாலையில்தான் முதன் முதலாக ஈடுபட்டாள். ஆனால் மதுராந்தகியிலும் ஒரு படி மேலே போய் இரண்டு ஆணைகள் இட்டிருந்த வானவி ஒரு கணங்கூட தாமதிக்கவில்லை. ஆணையை இட்டுவிட்டு முடிகொண்ட சோழன் அரண்மனைக்குத் திரும்பியதும், அவள் செயலாற்றத் தொடங்கி விட்டாள். அவள் செய்த முதல் பணி, தன் இளைய சகோதரன் மதுராந்தகனை அந்தப்புரத்துக்கு அழைத்து வரச் செய்து அவனிடம் சற்றுமுன் நடந்தவை அனைத்தையும் கூறியதாகும்.

மதுராந்தகியும் வானவியும் அன்று இட்டிருந்த ஆணைகளை நிறைவேற்றத் தனித்தனியே முயற்சிகளைத் தொடங்கிவிட்ட போதிலும், அவை நிறைவேற்றுவதில் மதுராந்தகிக்கு இருந்த சாத்தியக்கூறுகள் வானவிக்கு இருக்கவில்லை. மதுராந்தகி ஆளும் அதிபரின் புதல்வியாதலால், அரண்மனையிலும் அரசாங்கத்திலும் இதர அரசகுலப்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

பெண்டிருக்கு இல்லாத சில உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றிருந்தாள். வானவிக்கு அப்படி ஏதும் கிடையாது. அவள் பட்டத்து இளவரசர் மகள்கூட இல்லை. ஆதலால் தன் ஆணைகளை நிறைவேற்றுவதற்கு மதுராந்தகியைவிட அதிகமாகக் கஷ்டப்பட வேண்டும் என்பதை அவள் உணர்ந்தே இருந்தாள். ஆயினும் எப்பாடு பட்டாவது அவற்றை நிறைவேற்றிட வேண்டும் என்ற துடிப்பும், நிறைவேற்றிட முடியும் என்ற உறுதியும் அவளிடம் இருந்தன. அவற்றை நிறைவேற்றும் பொருட்டு, அவள் பாவ-புண்ணியம் பாராமல் எதையும் செய்யத் தயாராக இருந்தாள். அவ்வளவு தூரம் அவளுடைய உள்ளத்தில் குரோதம் பெருகியிருந்தது.

ஆம்; பதவி, மதிப்பு, தகுதி ஆகியவற்றைப் பெற வேண்டுமென்ற வேட்கை இன்றைய அரசியல்வாதிகளிடம் மட்டும் புதிதாகத் தோன்றியிருப்பதன்று. அரசு என்று ஒன்று தோன்றிய நாளிலிருந்தே அவ்வேட்கையும் தோன்றிவிட்டது. எனவே இன்று போலவே அன்றும் அரசியல் தொடர்புடையவர்களிடையேயும், அரச குலத்தினரிடையேயும் இவ்வேட்கையுடையோர் பலர் இருந்தனர்.

தவிர, ஆண் மக்களிடம் மட்டும்தான் இந்த வேட்கை இருந்தது என்று கூறுவதற்கில்லை. அரசகுல மகளிரில் கூட ஒரு சிலரை இவ்வேட்கை பிடித்தாட்டியுள்ளது. அந்த ரகத்தில் ஒருத்தியாகவே விளங்கினாள் வானவி. அவள் மட்டுமல்ல; அவளுடைய இளைய சகோதரனும், வீரராசேந்திரனின் *மூத்த மைந்தனுமான மதுராந்தகனும் இதே வேட்கை கொண்டு அலைந்தான்.

(*தன் றிருப் புதல்வனாகிய மதுராந்தகனை...
கொடுத்தருளி திண்டிறல் மைந்தனாகிய
கங்கைகொண்ட சோழனை.... (S.I.I.Vol. V.NO.976)

இப்பாடலிலிருந்து மதுராந்தகனே வீரராசேந்திரனின் மூத்த மைந்தனென்று நான் எடுத்துக்கொண்டுள்ளேன்.)

உண்மையில் வானவியின் பேதை உள்ளத்தில் இந்த வேட்கைத் தீயை மூட்டி விட்டவனே மதுராந்தகன் தான்! தான், தன் தம்பி கங்கை கொண்ட சோழன், தங்கள் பெரிய தந்தை இராசேந்திர தேவரின் புதல்வர் அறுவர் ஆகியோர் சோழ மரபினராக இருந்த போதிலும், வேறொரு மரபைச் சார்ந்த குலோத்துங்கன் அரண்மனை வட்டாரத்திலும், அரசியல் அதிகாரிகளாலும் தங்களை விட அதிகமாக மதிக்கப்பட்டு வந்ததே இந்த இளைஞன் உள்ளத்தில் கனலை மூட்டக் காரணமாயிற்று. ஆனால் இதனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய அவனால் முடியவில்லை. ஏனென்றால், அவன்



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஒருவனைத் தவிர இதர இளைஞர்கள் எழுவரும் குலோத்துங்கனைத் தங்கள் மூத்த சகோதரனாக மதித்துப் பணிவுடன் நடந்து வந்தார்கள். அவர்கள் உள்ளத்தில் புரட்சிக் கனலை எழுப்ப மதுராந்தகன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. தவிர அவன் தந்தை வீரராசேந்திரரோ, அரச குடும்பத்துக்குள் பொறாமை, புரட்சி, பூசல் ஆகியவை தோன்றுவதை வெறுப்பவர். ஓரிரு தடவைகள் மதுராந்தகன் குலோத்துங்கன் மீது கொண்டிருந்த குரோதத்தை உணர நேர்ந்தபோது, அவர் மகனை வன்மையாகக் கண்டித்தது கூட உண்டு.

ஆனால் இதனாலெல்லாம் மதுராந்தகன் திருந்திவிடவில்லை. அவன் கூண்டில் அடைபட்ட விலங்கைப்போல் உள்ளூரக் குமுறிக்கொண்டிருந்தான். தன் மனப்போக்குக்கு ஆதரவு தரக்கூடிய ஆண்கள் யாரும் இல்லாமற் போனமையால், தன் வயிற்றெரிச்சலைக் கூறச் சகோதரி வானவியையே நாடிச் செல்வான். முதலில் வானவி கூட அவன் போக்கைக் கண்டித்தாள். ஆயின் கரைப்பார் கரைத்தால் கல்லும் கரைந்துவிடக்கூடும் அல்லவா? ஏற்கெனவே மதுராந்தகியின் மீது வானவிக்குச் சிறிதளவு பொறாமை இருந்தது. அதை உணர்ந்து கொண்ட மதுராந்தகன், சகோதரியின் இந்தக் குறைபாட்டைச் சரியானபடி பயன்படுத்திக் கொண்டான். மதுராந்தகி குலோத்துங்கனை மணக்க இருப்பதால், அவனைச் சிறுகச் சிறுகச் சோழ அரசகுலத்தில் ஒருவனாக்கிப் பிறகு, தருணம் வாய்த்தால் அரசுக் கட்டிலும் ஏற்றிவிடத் திட்டமிட்டிருக்கிறாள் என்று அவன் தூபம் போட்டபோது, வானவி அதில் முற்றிலும் மயங்கிவிட்டாள். அந்தத் தூபத்தின் புகையே அன்று காலையில் அவளிடமிருந்து வெப்பம் மிக்க சொற்களாக வெளிப்போந்து, இருபெரும் ஆணைகளை இட வைத்தது.

என்ன இருந்தாலும், வானவி பெண்தானே? அதிலும் அரசகுலப் பெண்ணாதலால் பிரியம் போல் எங்கு வேண்டுமானலும் போய் எதை வேண்டுமானலும் செய்ய முடியாது. ஆனால் அரச குலத்து ஆண்களின் நிலை அதல்ல. அவர்களுடைய செயல்களுக்கும் சில கட்டுப்பாடுகள் இருந்த போதிலும், உட்கோட்டைக்குள்ளோ, அல்லது அதற்கு வெளியேயோ எங்கும் போய்வரும் சுதந்திரம் அவர்களுக்கு இருந்தது. ஆதலால்தான், தன் ஆணைகளை நிறைவேற்றும் பணிக்குத் தம்பியையே முதல் கருவியாக்கிக்கொள்ள அவள் தீர்மானித்து அவனை அழைத்து வரச் செய்து அன்றைய நிகழ்ச்சிகளை விரிவாக கூறினாள்.

அதைக் கேட்ட மதுராந்தகன், “பார்த்தாயா அக்கா, நான் அன்று சொன்னது முற்றிலும் மெய்யாகி விட்டது!” என்று கூறிக்களித்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“ஆம் தம்பி; மதுராந்தகி இத்துணை பேராசை கொண்டிருப்பாளென்று நான் நினைக்கவே இல்லை!” என்றாள் வானவி.

“ஆனால் அவள் பேராசை நிராசையாகத்தான் போகும்; நீ கவலைப்படாதே!” என்று உறுதியுடன் மொழிந்தான் மதுராந்தகன்.

“இல்லை மதுராந்தகா; நாம் அப்படி மெத்தனமாக இருக்க முடியாது. சோழ நாட்டின் அரசுரிமை உள்ளவர்களாக நம் பெரிய தந்தை இராசமகேந்திரன், நம் தந்தையார், அவரைத் தொடர்ந்து நீ, நம் தம்பி கங்கைகொண்ட சோழன் என்று பலர் காத்திருந்தபோதிலும், அந்தப் பேராசைக்காரி ஏதேனும் சூழ்ச்சி செய்து குலோத்துங்கனை அரியணையில் ஏற்றிவிடக்கூடும்!”

“சூழ்ச்சி! இவள் என்ன அக்கா, இத்தனை பேர்களின் உரிமைக்குப் புறம்பாக அவனை அரசுக் கட்டிலேற்றப் பெரிய சூழ்ச்சி செய்துவிடப் போகிறாள்!”

“அப்படிச் சொல்லாதே தம்பி. குலோத்துங்கன், அவன் தந்தைக்குப் பிறகு வேங்கி நாட்டின் மன்னனாகப் போகிறான் என்பதை மறந்து விடாதே. இங்கே இத்தனை காலமாக இருந்து போர்ப் பயிற்சி பெற்று, நமது படைப் பலத்தையும் அறிந்திருக்கிறான் அவன். ஆதலால் வேங்கியில் முடி சூட்டப்பட்டதும், போதிய படைகளைத் திரட்டித் திடீரென சோழ நாட்டின் மீது பாய்ந்து நம்மை முறியடித்து விடுவது அவனுக்கு மிக எளிது. ஒருகால் அதுவே அவர்கள் திட்டமாகவும் இருக்கலாம். முடக்காற்றுப் போர் முடிந்து எவ்வளவு சோழப்படை திரும்பி வருகிறது என்பதைக் கண்டறிந்து கொள்ளுவதற்காகவே, தந்தைக்கு உடல் நலமில்லை என்று அவசர ஓலை வந்திருந்தும், நேற்று அவன் வேங்கிக்குச் செல்ல மறுத்திருக்கக் கூடும். ஆம், அங்கே சென்று உடனேயே அரசுப் பதவியை ஏற்றுக் கொள்ள நேர்ந்தால், பிறகு இங்கே வருவதோ, நமது படை பலத்தைத் தெரிந்து கொள்ளுவதோ அத்தனை சுலபமானதில்லை அல்லவா? இப்படியெல்லாம் அந்தப் பேராசைக்காரி மதுராந்தகியும் அவனும் திட்டமிட்டிருப்பதால் தான் போலும், ஒரு நாளாவது அவனுடன் இந்தச் சோழ அரியணையில் உட்காராவிட்டால் தன் பெயர் மதுராந்தகி அல்ல என்று இன்று அவள் என்னிடம் ஆணையிட்டிருக்கிறாள்; விளங்கிற்றா, தம்பி?”

“விளங்கிற்று. ஆனால் வேங்கி அரியணை இந்தப் பஞ்சைக்குக் கிட்டுமென்று என்ன நிச்சயம்? அங்கேதான் இவன் சிற்றப்பன் விசயாதித்தன் பருந்துபோல் காத்துக் கிடக்கிறானே?”



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"விசயாதித்தன் காத்திருப்பது மெய்தான், தம்பி. ஆனால் அவன் படைபலம் அற்றவன். குந்தள மன்னன் ஆகவமல்லனின் படைபலத்தை நம்பியிருப்பவன். ஆகவமல்லனோ அண்மையில் முடிந்த முடக்காற்றுப் போரில் நமது படைகளை எதிர்த்து நிற்க முடியாமல் தன் மகன் விக்கிரமாதித்தன், இருகையன் முதலானாரோடு புறமுதுகிட்டு ஓடியிருப்பவன். ஆகவமல்லனின் படைக்கே தூண் போல் விளங்கிய வீரசிங்கம், தண்டநாயகன் வாலாதேவன் வேறு இப்போரில் கொல்லப்பட்டு விட்டான். ஆதலால் இன்றைய நிலையில் ஆகவமல்லன் விசயாதித்தனுக்கு உதவத் தக்க நிலையில் இல்லை. இவற்றையெல்லாம் உணர்ந்து, காலநிலை சரியில்லையென விசயாதித்தன் வாளா இருந்துவிட்டால், குலோத்துங்கன் வேங்கி மன்னனாகிவிட மாட்டானா?"

"ஆமாம் அக்கா. ஆனால் அதை நாம் தடுப்பது எப்படி?"

"எப்படி என்ற சொல்லுக்கு இடமேயில்லை, மதுராந்தகா. எப்படியாவது அவனுக்கு வேங்கி நாடும் இல்லையென்று ஆக்கிவிடத்தான் வேண்டும். முடக்காற்றுப் போரில் தோற்றுச் சோர்ந்து போயிருக்கும் ஆகவமல்லனுக்கு ஊக்கமூட்டி எப்படியாவது விசயாதித்தனுக்கு உதவி செய்து அவனை வேங்கி அரியணையில் ஏற்றச் செய்துவிட வேண்டும்."

"அது சரிதான்; ஆனால் ஆகவமல்லன் இப்பொழுது எப்படிப்பட்ட மனநிலையில் இருக்கிறானோ?"

"தண்டநாயகன் வாலாதேவன் போன்ற வலக்கரத்தை இழந்துவிட்ட பிறகு அவன் நிச்சயமாகத் தோல்வி மனப்பான்மையில் ஊறி மனம் ஒடிந்துதான் போயிருப்பான். அதில் ஐயமே இல்லை. இருந்தாலும், அந்நிலையிலும் அவனை இச்செயலுக்கு ஊக்கக்கூடிய சக்தி ஏதேனும் இல்லாமல் இராது. அது எது என்பதை நாம் கண்டறிய வேண்டும்."

"அறிவதுதான் எப்படி என்று கேட்கிறேன்!"

"நீ என்னடா தம்பி, சிறிதுகூட ராஜதந்திரம் அறியாதவன் போல் பேசுகிறாய்? இன்றுதான் குந்தள நாட்டுப் படையினரில் பலரைப் போர்க் கைதிகளாகச் சிறைப் பிடித்து வந்திருக்கிறார்களே, அவர்களில் ஒருவனை ரகசியமாக சந்தித்து, வாய்ச்சாலத்துடன் பேச்சுக் கொடுத்து அதை அறிய வேண்டும்."

"அக்கா! நீ சாதிக்க முடியாத காரியத்தைச் சொல்லுகிறாய். போர்க் கைதிகளை இதற்குள் பெரிய சிறைச்சலையில் அடைத்திருப்பார்கள் என்பதும், பகைவர் படையினை அடைத்து வைத்திருக்கும் அச்சிறைக்குள்ளே யாரையும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதும் உனக்குத் தெரியாதா?"



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“தெரியும் தம்பி. ஆயினும் நீ மனம் வைத்தால் அங்கே போக முடியும். போர்ப் பயிற்சி பெற்றுவரும் நீங்கள் நமது ஆயுதசாலைக்குள்ளே தடையின்றிச் சென்று, பயிற்சிக்குத் தேவையான ஆயுதங்களை எடுத்துக்கொள்ளும் பொருட்டு உங்களுக்குத் தனித்தனியே புலி இலச்சினை ஒன்று கொடுக்கப்பட்டிருப்பதை மறந்து விட்டாயா? அந்த இலச்சினையைக் காட்டினால், ஆயுத சலையில் மட்டுமின்றி, கட்டுக்காவல் உள்ள வேறு எந்தப் பகுதியிலுங்கூட உங்களுக்கு அனுமதி உண்டே!”

“ஆமாம்; நீ சொல்வது சரிதான். உன் திட்டப்படியே நான் பெரிய சிறைச்சாலைக்குச் சென்று மேலைச்சளுக்கிய வீரன் ஒருவனைச் சந்தித்து, ஆகவமல்லனைத் தூண்டக் கூடிய வழியை அறிந்து வருவதாக வைத்துக்கொள். அதன் பிறகு...?”

“அதன் பிறகு அவனைத் தூண்டக்கூடிய அச்செயலை நாம் ரகசியமாக நிறைவேற்றி வைப்பதாகவும், அதற்குப் பிரதியாக அவன் விசயாதித்தனை வேங்கி அரியணையில் ஏற்றி விட வேண்டுமென்றும் ஓலை அனுப்பவேண்டும்.”

“யாருக்கு? ஆகவமல்லனுக்கா? எங்கேயோ பல காத தூரத்துக்கு அப்பால் இருக்கும் ஆகவமல்லனுக்கு ஓலை அனுப்புவதா? எப்படி அக்கா? யார் மூலம் அனுப்புவது?”

“ஏன்? நீ சந்திக்கும் அந்தச் சளுக்கிய வீரனையே அதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். தம்பி, நான் ஒரு திட்டம் வகுத்துக் கொடுக்கிறேன்; அதன் படி நட. நம் நோக்கம் வெற்றியுடன் நிறைவேறிவிடும்.”

“சீக்கிரமே சொல், அக்கா...!”

“மதுராந்தகா! நீ இப்பொழுது நேராக நமது ஆயுதச் சாலைக்குப் போக வேண்டும். அங்கேதான் நம் வீரர்களுக்கான போர் உடைகளும் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. ஆயுதச் சாலைத் தலைவரிடம், போர்ப் பயிற்சி ஆசிரியர் இன்று உங்களைச் சோழ வீரர்களின் உடை அணிந்து பயிற்சிக்கு வரச் சொல்லியிருப்பதாகக் கூறி, உனக்கும், தம்பி கங்கை கொண்ட சோழனுக்கும் என்று இரண்டு ஜதை உடைகளையும், மற்றும் கத்தி, வேல் கேடயம், கவசம் போன்றவைகளையும் கட்டி எடுத்துக்கொள். பின்னர் மறைவான இடம் ஒன்றுக்குச் சென்று அந்த இரு உடைகளையும் ஒன்றன் மேல் ஒன்றாக நீயே அணிந்து கொள். உனது கத்தி, கேடயம் போன்ற கருவிகளை மட்டும் எடுத்துக் கொண்டு, மற்ற ஜதைக் கருவிகளையும் உனது சாதாரண உடையையும் அங்கேயே மறைத்து வை.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“பிறகு ஒரு சாதாரணப் போர் வீரன் போல், உன்னிடமுள்ள புலி இலச்சினையைக் காட்டிவிட்டுப் பெரிய சிறைச்சாலையின் உள்ளே செல். அங்கே அடைபட்டிருக்கும் சளுக்கிய வீரர்களை அவர்களுடைய போர் உடைகளிலிருந்தே கண்டுகொள்ளலாம். அவர்களிடம் சாதுரியமாகப் பேச்சுக் கொடுத்துப் பார். எவன் நமது நோக்கத்துக்கு உடன்படுவான் என்று தோன்றுகிறதோ, அவனைத் தனியே கூட்டிச் சென்று நமக்குத் தேவையான தகவலை அறிவிப்பானாகில், அவனை ரகசியமாக விடுதலை செய்து நாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறு. அவன் இணங்கினால், நீ அணிந்துள்ள சோழ வீரர்களின் உடைகள் இரண்டில் ஒன்றைக் களைந்து அவனிடம் கொடுத்து அணியச் செய். சோழ வீரனின் உடைய அணிந்து விட்டால், பிறகு அவனைச் சிறைச்சாலையிலிருந்து வெளிக் கொணர்வது எளிதே!...”

“இல்லை அக்கா; நீ சொல்வது போல் அது அத்தனை எளிதன்று. சிறைச்சாலைகளில் உள்ளே செல்ல விரும்பும் வீரர்களும், வெளியே வர விரும்பும் வீரர்களும் தங்களது படைத் தலைவரிடமிருந்து பெற்ற அனுமதி ஓலையையோ அல்லது இலச்சினையையோ காட்டினாலன்றி, அவ்வாறு செய்ய அனுமதிக்கபட மாட்டார்கள்.”

“அதாவது, மேலைச் சளுக்கிய வீரன் சோழ வீரனின் உடையில் இருந்தாலும் அவனிடம் ஓர் இலச்சினை இல்லாவிட்டால் வெளியே வர முடியாது என்கிறாய்; இல்லையா? அதற்கென்ன? அதற்கும் வழி செய்து விட்டால் போகிறது. நம் கங்கை கொண்ட சோழனிடம் இருக்கும் இலச்சினையை அவன் அறியாமல் இப்பொழுதே எடுத்து வந்து தருகிறேன். சளுக்கிய வீரன் வெளியே வர அதைப் பயன் படுத்திக் கொள்ளட்டும். இவ்வாறு நீங்கள் இருவரும் ஒருவர் பின் ஒருவராக சிறைச்சாலையிலிருந்து வெளியேறிய பிறகு, அவனை நம் அரண்மனைக்குப் பின்புற முள்ள பூங்காவுக்கு அழைத்து வா. இதர விஷயங்களை நானே அவனிடம் நேரில் உரைத்து ஆவன செய்து கொள்ளுகிறேன்.”

“அக்கா, உன் மதிநுட்பமே மதிநுட்பம். உண்மையில் இத்தகைய திறமை வாய்ந்த நீ மட்டும் ஒரு சிறு நாட்டின் அரியணையை அலங்கரிப்பாயானால், அந்நாட்டை விரைவில் இந்தச் சோழப் பேரரசைவிடப் பெரிய பேரரசாக்கி விடுவாய்!” என்று மகிழ்ச்சி பொங்கச் சகோதரியைப் பாராட்டினான் மதுராந்தகன்.

வானவி நெடுமூச்சு ஒன்றைச் சிந்தியாவாறு சொன்னாள்; “ம்...! எல்லாம் என்னுடைய இத்திட்டப்படி நடக்குமானால், தம்பி, நான் ஒரு நாட்டின் அரசியாவது மட்டுமல்ல; உன்னைக்கூட இந்தச் சோழ அரசின் அதிபதி ஆக்குவதற்கு முயற்சி



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

செய்வேன். பார்ப்போம், நமது முயற்சிகள் எவ்வளவு தூரம் வெற்றியடைகின்றன என்பதை. சரி, நீ புறப்படு. நான் கூறியதெல்லாம் நினைவிருக்கிறதல்லவா?"

"நினைவிருக்கிறது அக்கா. இன்னும் சில நாழிகைப் பொழுதில் சளுக்கிய வீரனுடன் உன்னைச் சந்திப்பேன்."

பின்னர், கங்கைகொண்ட சோழனின் புலி இலச்சினையை வானவி எடுத்து வந்து கொடுக்க, அதைப் பெற்றுக்கொண்ட மதுராந்தகன் உட்கோட்டைக்குள்ளே இருந்த பெரிய சிறைச்சாலையை நோக்கி நடந்தான்.

வானவி வகுத்துக் கொடுத்த திட்டப்படி யாவற்றையும் நிறைவேற்றிய மதுராந்தகன், அன்று பிற்பகலில் சளுக்கிய வீரன் ஒருவனுடன் முடிகொண்ட சோழன் அரண்மனையைச் சார்ந்த பூங்காவில் சகோதரியைச் சந்தித்தான்.

அவளுக்கு அவ்வீரனை அறிமுகப் படுத்துகையில் அவன் சொன்னான்: "அக்கா, இவன் பெயர் நந்துகன். ஆகவமல்லனின் புதல்வரான விக்கிரமாதித்தனின் மெய்க்காப்பாளர்களுள் ஒருவனாம் இவன். இன்றைய நிலையில் குந்தள மன்னனை விசயாதித்தனுக்கு உதவ தூண்ட வேண்டுமானால், அது விக்ரமாதித்தன் ஒருவரால்தான் முடியும் என்கிறான் இவன். குந்தள மன்னருக்குத் தமது மைந்தன்மீது அத்துணை பாசமாம்; அரசியல் அலுவல்களில் மகனின் ஆலோசனைகளுக்கு அவர் மாறு சொல்வதே இல்லையாம்."

இதைக் கேட்டதும் வானவியின் முகத்தில் மகிழ்ச்சி பரவிற்று. அவள் அவ்வீரனைத் தனியே கூட்டிச் சென்று நெடு நேரம் பேசிக்கொண்டிருந்தாள். பின்னர் அவர்களை அங்கேயே நிறுத்திவிட்டு, அவசர அவசரமாக அரண்மனைக்குச் சென்று ஓர் ஓலை எழுதி எடுத்து வந்தாள். அதனை அவ்வீரனிடம் கொடுத்து, தான் அணிந்திருந்த முத்து மாலை ஒன்றையும் கழற்றி அவனிடம் தந்தாள். "நந்துகா! கடைவீதியிலுள்ள பரிச்சாலைகள் ஒன்றில் இம்மாலையைக் கொடுத்துச் சிறந்த குதிரை ஒன்றை வாங்கிக் கொண்டு, இப்பொழுதே நீ கல்யாணபுரத்துக்குப் புறப்படு. இந்த ஓலையை இளவரசரிடம் கொடுத்து என் அன்பையும் வணக்கத்தையும் கூறு. என் விருப்பத்தை அவர் நிறைவேற்றி வைத்தால், அவர் விரும்பும் விதம் நானும் என் தம்பியும் நடக்கச் சித்தமாக இருக்கிறோம் என்று அறிவி!" என்று சொல்லி அவனை அனுப்பினாள்.

நந்துகன் சென்ற பிறகு, "என்ன அக்கா எழுதினாய் விக்கிரமாதித்தனுக்கு?" என்று வினவினான் மதுராந்தகன்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வானவி முறுவல் பூத்தாள்: "கன்னிப் பெண் ஒருத்தி ஓர் இளவரசனிடம் ஒரு வேண்டுகோளை நிறைவேற்றிக் கொள்ள எதைக் கருவியாக்கிக் கொள்ள முடியும் என்பதை நீயே சிந்தித்துப் பாரேன்...!"

மதுராந்தகன் சிந்திக்கவில்லை. "காதலா?" என்றான் பளிச்சென்று. அவனது முகத்தில் வியப்பு மிதந்தது.

"ஆம், தம்பி: நம் திட்டம் நிறைவேற நான் என்னையே அர்ப்பணிக்கத் துணிந்து விட்டேன்!" என்றாள் வானவி. அவளுடைய உதடுகள் இப்பொழுது முறுவலைச் சிந்தவில்லை. குரோதத்தால் துடித்தன!

## அத்தியாயம் – 5. எதிர்பாராத நிகழ்ச்சி

**சோ**ழத் தலைநகர் கங்கை கொண்ட சோழபுரம் துயரில் ஆழ்ந்திருந்தது. காலையில் வெற்றிக் களிப்பு எதிரொலித்த அந்நகரில் மாலையில் அழுகை ஒலம் எதிரொலித்தது. காலையில் மகிழ்ச்சி தாண்டவ மாடிய சோழ மக்கள் முகத்தில் மாலையில் துயரத்தின் சாயல் பிழிந்து நின்றது. காலையில் இன்பம் பெருக்கெடுத்தோடிய அந்நாட்டில் மாலையில் துன்பம் மழையாகப் பொழிந்தது.

ஆம்; சோழவள நாடு சிறிதும் எதிர்பாராத துயர நிகழ்ச்சி ஒன்று அன்று பிற்பகலில் நடைபெற்று விட்டது. பட்டத்து இளவரசர் இராசமகேந்திர தேவர் காலமாகிவிட்டார்!

அண்மையில் நடந்து முடிந்த முடக்காற்றுப் போரின் வெற்றிக்கு எண்ணற்ற சோழ வீரர்களின் வீரமும் தியாகமுமே காரணமாகும். எனினும், இறுதியாகக் குந்தளப் படையைக் கதிகலங்க அடித்துப் புறமுதுகிட்டு ஓடச்செய்த பெருமை இளைய தேவர் எனப் போற்றப்பட்டு வரும் இராச மகேந்திரருக்கெ உரியது. இளையதேவர் இன்று நேற்றல்ல, பல காலமாகப் பல போர்களில் தமது சகோதரர்களுடன் பங்கு கொண்டவர். தமது பராக்கிரமத்தாலும், போர் நுட்பத் திறனாய்வாலும், தாம் நடத்திச் சென்ற படைகளுக்கு வெற்றியைத் தேடித் தந்தவர். ஆயினும், தமது போர்த் திறமை முழுவதையும் நன்கு பயன்படுத்தி வருங்காலத்தில் சோழ அரியணையேறும் தகுதி தமக்குப் பரிபூர்ணமாக இருப்பதை நிரூபிக்கும் வாய்ப்பு அவருக்கு இந்த முடக்காற்றுப் போரிலே கிட்டியது.

முடக்காற்றுப் போர், இதுவரைச் சோழர்களுக்கும் மேலைச் சளுக்கியர்களுக்கும் இடையே நடந்த போர்கள் எல்லாவற்றிலும் பெரியது. இரு நாட்டவரும் மிகத்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

தீவிரமாகவும், பெரும் தீரத்துடனும் போரிட்டனர். நாள் தோறும் இரு தரப்பிலும் எண்ணற்ற வீரர்கள் உயிரிழந்தனர்; கணக்கற்ற குதிரைகளும் யானைகளும் மடிந்தன. ஆயினும், வெற்றி எந்நாட்டுக்கு என்பதை நிர்ணயிக்க முடியாதபடி இருந்தது போர் நிலை. போர்க்கலையில் வல்ல சோழப்படைத் தலைவர்களுக்கு இணையாகப் பகைவர்களாகிய மேலைச் சளுக்கியர்களின் படைத்தலைவர்கள் தங்கள் படைகளைப் போரிடச் செய்தனர். இதுவரையில் மேலைச் சளுக்கியர்கள் இத்தனை திறமையுடன் போரிட்டதே இல்லை. எப்படி அவர்களுக்குத் திடீரென்று இத்தனை திறமையும், போர் நுட்பமும் ஏற்பட்டன என்று சோழர்கள் வியந்தனர்.

ஆனால் விரைவில் அவர்களுக்கு இதன் ரகசியம் வெளியாகியது. மேலைச் சளுக்கர்களின் இந்தத் திடீர்ப் போர் நுட்பத்துக்கும், அதன் காரணமாகப் பிறந்திருந்த திறமைக்குப் பின்னணியில் இருந்தவன் அவர்களது புதிய தண்டநாயகன் வாலாதேவன் என்பது சோழர்களுக்குத் தெரிய வந்தது. வாலாதேவன் சளுக்கியர் படையை நடத்தியதோடு, தானே போர்க்களத்தில் குதித்து, நாள் தோறும் எண்ணற்ற சோழ வீரர்களை நமனுலகுக்கு அனுப்பி வந்தான். ஆதலால் அந்த வாலாதேவனை ஒழித்தாலன்றி, சோழர்கள் முடக்காற்றுப் போரில் வெற்றி கான முடியாது என்ற நிலை ஏற்பட்டது.

போர் மும்மரமாக நடந்து கொண்டிருக்கையில் ஒருநாள் இரவு முடக்காற்றங்கரையில் அமைக்கப்பட்டிருந்த பாசறையில் மாமன்னர் இரண்டாம் இராசேந்திர தேவர், பட்டத்து இளவரசர் இராச மகேந்திரர், இளங்கோ வீரராசேந்திரர் மற்றும் முக்கியமான சோழப் படைத்தளபதிகள் ஒன்று கூடி, வாலாதேவனை ஒழிப்பது பற்றித் தீவரமாக மந்திராலோசனை நடத்தினர். வாலாதேவன் சளுக்கியப் படையை நடத்துவதில் கவனம் செலுத்த முடியாதவாறு, தங்களுள் யாராவது ஒருவர் அவனுடன் நேர் நின்று போர் செய்வதென அவர்கள் முடிவு செய்தனர். அவ்வாறு இரண்டு மூன்று நாட்கள் செய்து வந்தால் பகைவர் படையைச் சிதறி ஓடச் செய்து விடலாமென்பது அவர்கள் கருத்து. வாலாதேவனுடன் நேர்நின்று போர் செய்யும் பொறுப்பை இளையதேவர் இராசமகேந்திரர் ஏற்றுக் கொண்டார்.

இந்தப் புதிய போர் நுணுக்கச் செயலாற்றல் காரணமாக மறுநாள் தொட்டு முடக்காற்றுப் போரில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. இளையதேவர் ஆக்ரோஷத்துடன் போர் செய்து, கணநேரங்கூட வாலாதேவனின் கவனம் பிற போர் நிகழ்ச்சிகளில் திரும்பாதபடி செய்தார். அவ்விருவரிடையே நிகழ்ந்த அந்த நேரிடைப் போரானது வலிமை மிக்க

இரண்டு சிங்கங்களுக்கிடையே நிகழ்ந்த கோரச் சண்டையை ஒத்திருந்தது. பகைவர்களாக ஒருவரை ஒருவர் வீழ்த்தத் தருணம் பார்த்திருந்த போதிலும், ஒருவர் திறமையைக் கண்டு மற்றவர் வியக்கும் வண்ணம் இருவரும் போர் செய்தனர். ஆயிரக் கணக்கான படைவீரர்கள் ஒருபுறம் போர் செய்து கொண்டிருந்த போதிலும், வெற்றி-தோல்வி, இந்த இரு மாவீரர்களிடையே நிகழும் போரின் முடிவைப் பொறுத்தே இருக்கிறது என்று அனைவரும் கருதும் வண்ணம் அவ்விருவரும் ஒருவருக்கு ஒருவர் சளைக்காமல் வீரப் போர் புரிந்தனர்.

இவ்வாறு அந்த இரு தனிப்பட்ட வீரர்களிடையே நிகழ்ந்த போரானது இரண்டு நாட்களே நீடித்தது. இரண்டாம் நாள் மாலையில் இளைய தேவரின் வீரவாளுக்கு வாலாதேவன் இரையானான். வாலாதேவன் வீழ்ந்து விட்ட செய்தி பரவியதுமே குந்தள வேந்தன் ஆகவமல்லன், அவன் மகன் விக்கிரமாதித்தன், மற்றும் இருகையன் ஆகியோர் இடிந்து விட்டனர்; இதரப் படைத் தலைவர்களும் மனம் சோர்ந்து விட்டனர். கடைசியில் இம்முறையும் அவர்கள் தோல்வியை எதிர்கொண்டு புறமுதுகிட்டு ஓட்டம் பிடித்தனர்.

இப்படி முடக்காற்றுப் போரில் வெற்றியைத் தேடித் தந்த வீரச் சிங்கம் இளையதேவர், அவ்வெற்றியை உடலில் வடுக்கூடப் படாமல் தேடிக்கொண்டுவிடவில்லை. போரில் அசகாய சூரனான வாலாதேவனின் வாளும் அம்புகளும் இளையதேவரின் உடலைப் பல இடங்களில் பதம் பார்த்திருந்தன. போர்க்களத்திலிருந்து திரும்புபவர்களுக்கு இத்தைகய உடற்காயங்களும், அவற்றுக்குரிய சிகிச்சைகளும் சகஜ மானவைதாம். அவ்வாறே இளையதேவரின் உடற்புண்களுக்கும் உடனடியாக மூலிகைகள் வைத்துக் கட்டப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டது. சோழப்படை ஊர் திரும்பும் பயணத்தை மேற்கொண்ட சில நாட்களுக்குள்ளே ரணமாற்றும் குணம் மிக்க அந்த மூலிகைகளால் அவரது புண்களில் பெரும்பாலனவை ஆறித் தழும்பிட்டு விட்டன. ஆனால் அவருடைய நெஞ்சின் இடப்பாகத்தில் அம்பு ஒன்று பாய்ந்து ஏற்படுத்தியிருந்த ஆழமான புண் ஒன்று மட்டும் எளிதில் ஆறாமல் இளையதேவருக்கு கொடுந்துன்பம் விளைவித்து வந்தது. அவர் நெஞ்சிலே பாய்ந்த அந்த அம்பானது விஷம் தோய்க்கப்பட்டதாக இருந்ததே அப்புண் ஆறாமைக்குக் காரணம்.

போர்ப் படையுடன் சென்றிருந்த ராணுவ மருத்துவர் தமது திறமை அனைத்தையும் காட்டி, பல்வேறு மூலிகைகள் மூலம் தொடர்ந்து சிகிச்சை அளித்து வந்த போதிலும், அந்த ரணம் நாள்படப் புறையோடிப் பெரிதாகி வந்ததேயன்றிக் குணமாகவில்லை. வீரம் செறிந்த இளையதேவர் அப்புண் அளித்த தாங்கொண்ணா வேதனையை வெளிக்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

காட்டிக்கொள்ளவில்லை. வேறு எவராகவேனும் இருந்தால், அந்த ரண வேதனையைப் பொறுக்க மாட்டாமல் படுக்கையில் விழுந்து அலறித் துடித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் இளையதேவரோ வேதனையை மறைத்துக் கொண்டதோடு நாடு திரும்பும் நெடும் பயணத்தையும் மேற்கொண்டார்.

இதன் பயனாக அன்று காலையில் கங்கைகொண்ட சோழபுரம் திரும்பி, வரவேற்பு நிகழ்ச்சிகள் முடிந்து, தமது அரண்மனைக்கு வந்த சிறிது நேரத்துக்கெல்லாம் இளையதேவருக்கு சன்னி கண்டுவிட்டது. உடனே அரசாங்கத்தின் தலைமை மருத்துவர் காலாந்தக மால்வேளார் வரவழைக்கப்பட்டார். சக்தி மிக்க பல மருந்துகள் அவருக்குக் கொடுக்கப்பட்டன. ஆனால் அவை எதுவும் பலனளிக்கவில்லை. மாலை நேரத்துக்குச் சற்று முன், சோழப் பேரரசின் வருங்கால வேந்தராக விளங்க வேண்டிய வீரதிலகத்தின் உயிர் உடற்கூண்டைவிட்டுப் பறந்தோடி விட்டது.

மணிமுடி தரித்த மன்னரேயாயினும், மண்ணிலே நெளியும் கேவலம் புழுவேயாயினும், உயிரினங்கள் யாவற்றுக்கும் பிறப்பும் இறப்பும் நிலையான நிகழ்ச்சிகள்தாம். ஆனால் சோழப் பேரரசை நிறுவிய விசயாலய சோழர் காலந்தொட்டு, அந்நாட்டில் மணிமுடி தரித்து செங்கோலோச்சிய மன்னர்கள் யாவருக்கும் ஏற்படாத புதுவகை மரணம் இளையதேவரான இராச மகேந்திரருக்கு ஏற்பட்டது. ஆம், அவரது முன்னோர்களில் முதுமையில் மரணமடைந்தோரும் இருந்தனர்; இளமையில் மரணமடைந்தோரும் இருந்தனர். ஆனால் பெரும்பாலும் அவர்களுக்குக் கிட்டிய சாவு வீரச் சாவு. போர்க்களத்தில் வீரச் சமர் புரிந்து பெற்ற சாவு. முதுமை காரணமாக, நீடித்த நோய் வாய்ப்பட்டு இறந்தவர்களும் ஓரிருவர் இருந்தனர். எனினும் இத்தனை இளம் வயதில் நோய்ப் படுக்கையில் சாயாமலே ஓர் அம்புப் புண்ணுக்கு இரையானவர்கள், அதிலும் வெற்றி கொண்டு தலைநகர் திரும்பிய சில நாழிகைப் பொழுதுக் கெல்லாம் மரண தேவனை எதிர் கொண்டவர்கள் அன்றுவரைச் சோழப் பரம்பரையில் யாருமே கிடையாது.

தவிர, இளையதேவர் சோழ அரச குடும்பத்தினருடையவும், குடிமக்களுடையவும் பேரன்புக்குப் பெரிதும் பாத்திரமாக விளங்கியவர். எவ்வளவுக்கு எவ்வளவு வீரம் செறிந்தவரோ, அவ்வளவுக்கு அவ்வளவு அன்புருவாக விளங்கியவர். மாமன்னர் சோழ தேவரையும், இளையதேவர் இராச மகேந்திரரையும் நாட்டு மக்கள் தங்கள் இரு கண்களாகப் போற்றி வந்தனர். ஆதலால் அவரது திடீர் மரணம் நாட்டை ஒரே துயரில் ஆழ்த்திவிட்டது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அது மட்டுமா?

தந்தையின் ஒரு சொல்லசைவிலே தனது ஆணையை நிறைவேற்றிவிட முடியுமென இறுமாந்திருந்த மதுராந்தகியின் எண்ணத்திலே ஏற்கெனவே மண்ணைத் தூவிவிட்டார் சோழ தேவர். இப்பொழுது அவளுடைய கை மேலும் ஒருபடி தாழ்ந்து விட்டது. ஆம், இளையதேவரின் மறைவு காரணமாக, இதுவரையில் இளங்கோவாக விளங்கி வந்த வானவியின் தந்தை வீரராசேந்திரன் அடுத்த பட்டத்து இளவரசர் ஆகிவிடுகிறார். பட்டத்து இளவரசருக்கும், அவரது மக்களுக்கும் உரிய அரசியல் சலுகைகள் இனி வானவிக்கும் கிட்டும். அதாவது, கிட்டத்தட்ட மதுராந்தகியின் அரசியல் அந்தஸ்துக்கு வானவியும் உயர்ந்து விடுகிறாள். இது மதுராந்தகிக்குத் தன் ஆணையை நிறைவேற்றிக் கொள்ள ஒரு குந்தகமாக இருக்கப் போவதோடு, வானவி தனது ஆணைகளை நிறை வேற்றிக் கொள்ள பெரிதும் சாதகமாகவும் அமையப் போகிறது.

எடுத்த எடுப்பிலே மதுராந்தகிக்கு இரு தோல்விகள். ஆனால், தோல்விகளே வெற்றிச் சிகரத்துக்கு ஏறும் படிகள் என்ற கருத்துடைய அவள் இதனால் மனம் தளர்ந்து விடவில்லை. அன்று தந்தை தனக்கு உணர்த்திய ‘உரிமை அல்லது வீரம்’ என்று இரு தாரக மந்திரங்களை அவள் வலுவாகப் பற்றிக்கொண்டாள். குலோத்துங்கனைப் பொறுத்தவரையில் அவனுக்குச் சோழ அரியணைமீது எவ்வித உரிமையும் இல்லை. ஆதலால் வீரத்தின் மூலந்தான் அவனைத் தன் ஆணையை நிறைவேற்றச் செய்ய வேண்டும் என்ற உறுதியும் கொண்டாள்.

இளையதேவரின் எதிர்பாராத மரணத்தால் குலோத்துங்கனின் வேங்கிப் பயணம் திட்டமிட்டிருந்தவாறு அன்று மாலையில் தொடங்க முடியாததாயிற்று. அடுத்து வந்த மூன்று நாட்களும் துக்கம் கொண்டாடும் நாட்களாக அமைந்து விட்டமையாலும், அரச குடும்பத்தினர் அந்நாட்களில் பயணத்தை மேற்கொள்வது இயல்பில்லை ஆதலாலும், அந்நாட்களிலும் அவன் புறப்பட இயலாதவனானான். ஆதலால், வெற்றி விழா முடிந்த ஐந்தாவது நாள்தான், குலோத்துங்கன் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து புறப்பட முடிந்தது. அன்று பகலில் இரு சோழ வீரர்களுடன் அவன் புறப்பட இருந்தான். பிரயாணத்துக்கான ஏற்பாடுகள் அரண்மனையில் நடந்து கொண்டிருந்தன.

அப்பொழுது காலை பத்து நாழிகைப் பொழுதிருக்கும், குலோத்துங்கன் அரசகுலப் பெண்டிரிடம் விடை பெற்றுக் கொள்ள சோழ கேரளன் அரண்மனை அந்தப்புரத்துக்கு வந்தான். தன் அத்தை கிழானடிகளிடமும், திறைலோக்கியமுடையாளிடமும்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

விடைபெற்றுக் கொண்டபின், அவனுடைய கண்கள் மதுராந்தகிக்காக் அந்தப்புரமெங்கும் துழாவின.

"யாரைத் தேடுகிறாய், *அபயா?" என்று அவன் நோக்கை உணர்ந்த கிழானடிகள் முறுவலித்தவாறு வினவினாள்.

(*குலோத்துங்கனுக்கு அபயன் என்ற பெயரும் வழங்கி வந்துள்ளது. S.S.I., Vol. IV.NO.1338)

குலோத்துங்கன் மறுமொழி கூறுமுன், அருகில் அமர்ந்திருந்த திரைலோக்கியமுடையாள் 'கொல்'லென நகைத்து, "இது என்ன கேள்வி அக்கா? அந்தப்புரத்தில் அபயனின் விழிகள் அலைபாய்ந்து கொண்டிருந்தால், அவை யாருக்காக அலைபாயும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று கூறிவிட்டுக் குலோத்துங்கனை நோக்கி, "தம்பி அபயா, காதலர் விடைபெறுவதற்குத் தனியிடம் தேவை அப்பா. அதை உணர்ந்துதான் போலும், நீ இங்கே வந்து கொண்டிருப்பதாகப் பணிப்பெண் வந்து அறிவித்ததும், மதுராந்தகி அரண்மனைப் பூங்காவுக்குப் போவதாகக் கூறிச் சென்று விட்டாள். போ, விரைவாக அங்கே போ. உன் காதலி உனக்காக அங்கே காத்திருக்கப் போகிறாள்," என்று சொன்னாள்.

குலோத்துங்கன் கிளம்பினான். ஆனால் அச்சமயம், "நில் அபயா!" என்ற கிழானடிகளின் அவசரக்குரல் அவனை நிறுத்தியது.

அவன் திரும்புமுன் கிழானடிகளே எழுந்து அவனிடம் நடந்தாள். அன்புடன் அவன் தோள் மீது கைவைத்து, "அபயா, அந்தப் பித்துக் கொண்ட பெண்ணுக்கு நீ தான் அறிவுரை கூற வேண்டும். நம் வானவி விளையாட்டாக ஏதோ கூறியதற்கு இவள் திடுக்கிடும்படியான ஆணை ஒன்றை இட்டிருக்கிறாளாம், ஆணை!..." என்றாள்.

"ஆணையா?"

"ஆம், உன்னை இந்தச் சோழ நாட்டின் வேந்தனாக்குவதாக!"

"என்ன?" குலோத்துங்கன் திடுக்கிட்டான்.

"அசட்டுத்தனமாக அப்படி ஓர் ஆணையிட்டதோடு நில்லாமல், அதனை நிறைவேற்றித் தருமாறு தன் தந்தையிடமும் வெட்கமின்றிக் கேட்டு விட்டாள்!"

"இது என்ன கேலிக்கூத்து? மதுராந்தகியா இப்படியெல்லாம் நடந்து கொண்டாள்? என்னாள் நம்ப முடியவில்லையே?"

"எங்களாலுந்தான் நம்ப முடியவில்லை. ஆனால் அவள் தந்தையார் அவளுக்குச் சரியான விடை பகர்ந்து விட்டார்."



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“மாமன் என்ன கூறினார்கள்?”

“இந்தச் சோழநாட்டின் அரியணையில் ஒருவன் அமர, ஒன்று அவன் இந்நாட்டின் அரசுரிமை பெற்றவனாக இருக்க வேண்டும்; அல்லது தன் போர் வலிமையால் அதைக் கைப்பற்றிக் கொள்ளவேண்டும் என்றார்கள்.”

“நன்கு கூறினார்கள்; நன்கு கூறினார்கள்! அந்த இரண்டும் என்னிடம் கிடையா. நான் இந்தச் சோழ அரியணையை மனத்தால் நினைப்பதற்குக் கூட உரிமையற்றவன். தவிர, வளர்த்த வீட்டையே சூரையாடும் வஞ்சகனுமல்ல நான். அத்தை, நீங்கள் கவலை விடுக. உங்கள் மகளின் பைத்தியக்கார எண்ணத்தில் நான் ஒருபோதும் பங்குகொள்ளமாட்டேன்.”

“அது சரிதான், அபயா. உன் மனப்போக்கை நாங்கள் நன்கு அறிவோம். இருப்பினும் கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்களே?” என்று இன்னும் ஐயம் நீங்காதவளாக குலோத்துங்கனின் முகத்தை நோக்கினாள் கிழானடிகள்.

“ஆமாம், அதோடு காதல் கிழத்தி கரைக்கும்போது...?” என்ற இடைச் சொருகலை நுழைத்து முகத்தை நெளித்தாள், அருகில் அமர்ந்திருந்த திரைலோக்கியமுடையாள்.

குலோத்துங்கனுக்கு ரோசம் பொத்துக்கொண்டு வந்தது. “என்னை அத்தனை பெரிய பித்தனாகவா எண்ணுகிறீர்கள், அத்தை?” என்று குமுறினான் அவன். “உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கும் துரோகியாக நான் ஒருபோதும் மாற மாட்டேன். என்னை நம்புங்கள் அத்தை; நோய் வாய்ப்பட்டிருக்கும் என் தந்தையார் மீது ஆணையாகக் கூறுகிறேன்: இத்தவத் திருநாட்டுக்காக நான் எத்தகைய தியாகமும் செய்யத் தயாரயிருப்பேனேயன்றி, இந்த அரியணையைப் பெற சிறு துரும்பைக்கூட நான் ஒருநாளும் அசைக்க மாட்டேன்.”

“நீ கூறுவது மெய்தான், அபயா. ஆயின் இராசரீகமும் நியதிக் கோட்பாடுகளும் முற்றிலும் மாறுபட்டவை. தனது அரசைப் பெருக்குவது அரசர்களின் கடமை; அதுதான் அவர்களது வீரத்துக்கு அறிகுறி. அதிலே நியாய வாதங்களைப் பொருத்திப் பின் வாங்குபவனைக் கோழை என்கின்றது இராசரீகம். தவிர, நீ இந்நாட்டின் மீது அழியாப் பற்றுடையவன் என்பது நாடறிந்த உண்மை. அந்தப் பற்று, ஆளும் ஆசையாக உருப்பெறுவது இயற்கையென்றே இந்நாட்டு மக்கள் கருதுவார்கள். அதிலும் என் விந்தை மகள் செய்திருக்கும் ஆணையைப்பற்றி இச்சோணாட்டு மாந்தர் கேள்வியுறும் போது அவர்கள் குமுறுவார்கள்; உங்கள் இருவருக்கும் துரோகி என்ற பட்டத்தைச் சூட்டி வெறுப்பார்கள். அத்தகைய நிலை ஏற்படுவதை நாங்கள் எங்ஙனம் பொறுப்போம்,



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அபயா?" கிழானடிகள் குரல் கரகரத்தது: அவளது நயனங்களிலே நீர்ப் பொட்டுக்கள் துளிர்ந்தன.

மதுராந்தகியின் ஆணையின் விபரீதப் போக்கை உணர்ந்தான் குலோத்துங்கன். அவன் உள்ளம் விம்மிற்று. "ஆம் அத்தை!" என்றான் அவன். "அதைத் தவிர்க்க நான் என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்."

"செய்ய வேண்டியது பெரிதாக ஒன்றும் இல்லை, அபயா. நீ நலமுற நாடு சேர்ந்து, நோயுற்றுள்ள உன் தந்தையாரிடமிருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, இந்த வீணாசைக் காரியையும் மணந்து அங்கே அழைத்துச் சென்றுவிட வேண்டும். அதுதான் எங்களுக்கு நீ செலுத்தும் நன்றிக் கடன்; அது தான் உன்னை வளர்த்து ஆளாக்கிவிட்ட இந்தச் சோழ வளநாட்டுக்கு நீ செய்யும் அருந்தொண்டு."

"அப்படியே செய்கிறேன், அத்தை," என்று உணர்ச்சி பெருகக் கூறினான் குலோத்துங்கன். "மதுராந்தகியின் அசட்டுத்தனத்தால் எங்களையும் உங்களையும் சூழ இருக்கும் அவப்பெயரைத் துடைக்க அவ்வாறே செய்கிறேன், அத்தை. இனி, இந்நாடு உதவி கோரி என்னை அழைத்தாலன்றி, அல்லது நான் நாடிழந்து நடுத்தெருவில் நிற்கும் நிலை தோன்றினாலன்றி இச்சோழ மண்ணில் அடி எடுத்து வையேன். வருகிறேன் அத்தை. வணக்கம்...!" அவன் அவ்விருவரது பாதங்களையும் தொட்டு வணங்கிவிட்டு விர்ரென நடந்தான்.

மாமன் மனைவியை மாமி என்று அழைப்பதற்குப் பதிலாக அத்தை என்று அழைக்கும் பழக்கம் அன்று சோழ அரச பரம்பரையினரிடையே இருந்தது.

## அத்தியாயம் – 6. தோல்வி மேல் தோல்வி

**சோ**ழகேரளன் அரண்மனைக்குப் பின்னால் அமைந்திருந்தது அந்த அழகிய பூங்கா. பல்வேறு நறுமண மலர்ச்செடிகளும், பழ மரங்களும், பூத்தும் காய்த்தும் குலுங்கின, இனிமையான தென்றல் இந்நறுமணங்களைச் சுற்றிலும் நெடுந்தூரத்துக்குப் பரப்பின. பூங்காவின் மையத்திலே ஒரு செயற்கை வாவி. காவிரி நீர் கால்வாய் மூலம் பாய்ந்து அந்தக் குளத்தை நிரப்பியது. நாற்புறமும் படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்ட அந்தக் குளத்தின் கரையிலே, ஒரு மகிழ மரத்தைச் சுற்றிய மேடையில் அமர்ந்திருந்தாள் மதுராந்தகி. அரண்மனையிலிருந்து இக்குளத்துக்கு வரும் வழி மீது அவள் கண்கள் பாய்ந்திருந்தன. ஆம், தன் அன்புக்குரிய அத்தான் தனது தாய்மார்களிடம் விடைபெற்றுக்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கொண்ட பிறகு தன்னிடம் விடைபெற இங்குதான் வருவார் என்பதை அவள் அறிவாள். ஆனால் அவளுடைய விழிகள் அவ்வழியில் நிலைத்திருந்த போதிலும் மனம் அங்கில்லை. தறிகெட்ட கன்றாக அது எங்கோ சுற்றிக் கொண்டிருந்தது.

அவளுடைய ஆணையின் போக்கு இப்பொழுது மாறிவிட்டது. இனி குலோத்துங்கன் தனது வீரம் ஒன்றில்தான் அவளுடைய ஆணையை நிறைவேற்றி வைக்க வேண்டும். அத்தானின் வீரத்திறனில் அவளுக்கு ஐயம் சிறிதுமில்லை. ஆனால் அவன் இந்நாட்டின் மீது கொண்டுள்ள பக்தி? தன்னை வளர்த்து ஆளாக்கிவிட்ட நாட்டின் மீது யாவரும் நன்றி கொள்ள வேண்டியதுதான். அந்த நன்றி பக்திப் பெருக்காக உருவெடுத்தாலும் வியப்படைவதற்கில்லை. ஆனால் அது கண்மூடித்தனமான பக்தியாக இருக்கக் கூடாதல்லவா? துரதிர்ஷ்டவசமாக, குலோத்துங்கன் சோழநாட்டின் மீது கொண்டிருந்த பற்று அத்தகைய மூடப்பற்று என்றே மதுராந்தகி கருதினாள்.

அவள் நினைத்தாள்: ‘அரசிளங் குமரர்களும், குமரிகளும் செவிலித் தாயின் அரவணைப்பில்தான் வளருகின்றனர். பெற்ற மகவுக்கு ஒப்பாகத் தங்களை மார்மேலும் தோள் மேலும் சுமந்து, தாலாட்டிச் சீராட்டி வளர்க்கும் அந்த செவிலித் தாயிடம் கொண்ட பாசம், பெற்ற தாயிடம் செலுத்த வேண்டிய பாசத்தை மறக்கடிக்கலாமா? அத்தான் இந்த நாட்டின் மீது கொண்டுள்ள பற்று அப்படித்தான் இருக்கிறது. தாய்நாட்டில் தனக்கெனக் காத்திருக்கும் அரியணையைவிட இந்தச் சோணாட்டின் படைத் தலைவர் பதவி உயர்ந்தது என்ற அவருடைய கருத்து தர்க்க முறையில் போற்றப்பட வேண்டியதுதான்; ஆயின் நடைமுறையில் அது ஏற்றதல்லவே?’

‘நல்லவேளையாக அந்தப் பித்து அவரிடம் நிலைப்பட்டு விடாமல் செய்து விட்டது சூழ்நிலை. இப்பொழுது அவர் வேங்கிக்குச் சென்றுதான் ஆக வேண்டும். நோயால் நலிந்துள்ள தந்தையிடமிருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். ஆனால் இப்பொழுது நமது ஆணை நிலைமையை வேறொரு விதத்தில் சிக்கலடையச் செய்துள்ளதே! அந்தத் திமிர் கொண்ட வானவியின் கொட்டத்தை அடக்கி, அவள் முகத்தில் கரியைப் பூச, இவர் வீரத்தால் அல்லவா இந்நாட்டை வெல்ல வேண்டும்? பாசத்தின் ஊற்றாக விளங்கும் நம் தந்தையாரிடமிருந்து நாட்டைப் பறிக்க வேண்டும் என்பதோ, அல்லது அவருக்குப் பின் அரசுரிமை பெற்றுள்ள அன்புருவான சிறிய தந்தையார் வீரராசேந்திரருக்கு அவ்வுரிமை இல்லாமற் செய்துவிட வேண்டுமென்பதோ நமது நோக்கமல்ல. ஒருநாள், ஒரே ஒருநாள், அறுபது நாழிகைப் பொழுது மட்டும் அப்பொறாமைக் காரியின் கண்முன் இச்சோழ நாட்டினரசியாக இருந்து காட்ட வேண்டும்


Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

என்பதே நமது நோக்கம்; அது நமது ஆணை. அதற்கு இந்நாட்டின் மீது போர் தொடுக்க அவரைத் தயார் செய்ய வேண்டுமே; அது இயலுமா?'

'இயலுமா என்ற சிந்தனைக்கு இடமில்லை. இயலத்தான் வேண்டும்; இயலச் செய்யத்தான் வேண்டும். இல்லவிட்டால், நான் எங்கு எத்தகைய பெருமை பெற்று வாழ்ந்தாலும், அது நிறைந்த வாழ்வாகாது; வெற்றி வாழ்வாகாது; வீர வாழ்வாகாது. அது கோழை வாழ்வகிவிடும். வானவியின் வாய்ச் சொல்லுக்கும், ஏளனத்துக்கும் அஞ்சி வாழும் அவல வாழ்வாகிவிடும்; அவளுடைய ஆணை முன் நிற்க முடியாமல் தோற்று ஓடி ஒளிந்து வாழும் இழிவு வாழ்வாகிவிடும்.'

'ஆதலால் அத்தானை இப்பொழுதே போருக்குத் தயார் செய்யும்படி போதித்து அனுப்பியாக வேண்டும். அதற்கு அவர் எளிதில் இணங்கி வரமாட்டார் என்பது தெளிவு. ஆனால் இங்குதான் நமது பெண்மையின் சக்தியைப் பிரயோகிக்க வேண்டும்; நமது காதலின் வலிமையைப் பரிசோதிக்க வேண்டும். நாம் அவர் மீது கொண்டுள்ள காதல் எத்தனை உறுதியானதோ, அத்தனை உறுதியான காதலை அவர் நம்மீது கொண்டிருந்தால், அக்காதலின் சக்தி அவருடைய அசட்டுத்தனமான செவிலித் தாய்ப் பாசத்தை விரட்டி அடித்துவிடும். ஆம், இன்று நாம் நிகழ்த்தப் போவது ஒரு பெரும் காதல் பரீட்சை. ஏன்? எங்கள் வருங்கால வாழ்க்கைக்குரிய பரீட்சைகூட அதுவேதான்...!"

திரண்ட இரண்டு கரங்கள் தன் தோள்மீது சாய்ந்து கண்களை மூடவே, மதுராந்தகி துள்ளி எழுந்தாள். அவள் காத்திருந்த கட்டம் வந்து விட்டது. அக்கரங்களுக்குரியவன் அவளுடைய ஆசை அத்தான்தான்.

"அத்தான்!" அவள் குலோத்துங்கனின் கரங்களை மெதுவாக விலக்கியவாறு முகத்தைப் பின் சாய்த்து மோகனப் புன்னகை ஒன்றைச் சிந்தினாள். "மதுரா!" குலோத்துங்கனின் குரலில்தான் எத்தனை குழைவு! அவன் அவளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான்.

கணநேரம் இருவரும் உலகையே மறந்த இன்பநிலையில் இருந்தனர். பின்னர் மதுராந்தகி அவனது அணைப்பிலிருந்து விடுபட்டு, "உட்காருங்கள் அத்தான்," என்று அவன் கைகள் இரண்டையும் பற்றி மேடையில் அமர்த்தினாள். பின்னர் தானும் மேடைமீது அமர்ந்து அவனது பரந்த மார்பின் மீது உடலைச் சாய்த்துக் கொண்டாள். "புறப்பட்டு விட்டீர்களா?" அவள் குரலில் ஏக்கம் கசிந்தது.

"ஆம் கண்ணே; கடமை அழைக்கிறது. ஆனால்...?"

"ஆனால் என்ன?"



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"முன்பெல்லாம் எத்தனையோ தடவைகள் வேங்கி சென்றேன்; திரும்பினேன். ஆனால் இத்தடவை திரும்ப மாட்டேன்."

"ஆம், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபின் அங்கிருந்து அசைய முடியாதுதான். ஆனால் நான்...?"

"நீயும் அங்கே வருவாய், மதுரா. தந்தையாரின் உடல் நிலையைப் பொருத்து நம் திருமணம் விரைவில் வேங்கியில் நிகழும். வேங்கி அரியணையில் நீ இன்றி நான் அமருவேனா?"

"என்னுடைய காதல் லட்சியத்தின் ஒரு பகுதி பூர்த்தியாயிற்று," என்று தன் குறு குறுக்கும் விழிகளால் புன்னகை புரிந்தாள் மதுராந்தகி.

அவள் எதற்கு அடிப்படையிடுகிறாள் என்பதைக் குலோத்துங்கன் உணர்ந்து கொண்டான். ஆனால் அதைக் காட்டிக்கொள்ளாமல், அவளுடைய மறுமொழியால், வியப்படந்தவன் போல், "என்ன? ஒரு பகுதியா?" என்று வினவினான்.

"ஆமாம்!" என்றவாறு அவன் மார்பில் சாய்திருந்த அவள் எழுந்து நிமிர்ந்து அமர்ந்தாள். "உங்கள் மதுராந்தகிக்கு இருண்டு அரியணைகளில் அமரும் வாய்ப்பை நீங்கள் அளிக்கவேண்டும்; அளிக்கவும் போகிறீர்கள்."

குலோத்துங்கன் உள்ளூர நகைத்தான். "நீ என்ன சொல்கிறாய் கண்ணே?"

"உங்களுக்குத் தெரியாதா? யாரும் உங்களிடம் சொல்லவில்லையா? அம்மாகூடக் கூறவில்லையா அதை?" அவள் வியப்பு மிகுந்த முகத்தால் அவனை விழுங்கினாள்.

"எதை?"

"நான் வானவியின் முன் இட்டிருக்கும் ஆணையைப்பற்றி?"

"ஓ! அதுவா? அதை நான் வெறும் விளையாட்டுப் பேச்சு என்றல்லவா கருதினேன்!"

"விளையாட்டுப் பேச்சல்ல, அத்தான், உண்மை."

குலோத்துங்கன் தீவிரமானான். "உண்மையானால், அது வெறும் பிதற்றல் மதுரா; மனத்தால் நினைப்பதற்குக்கூட வெட்கப்பட வேண்டிய பிதற்றல்."

"அத்தான்...!"

"பின் என்ன, கண்ணே? இந்தச் சோழ நாட்டின் உரிமையைப் பற்றி நினைக்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது...?"

"உரிமையோடுதான் ஒருவர் நாட்டுக்கு மற்றொருவர் அரசராகிறார்களோ?"



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

குலோத்துங்கன் சொல்லொணாத வியப்போடு அவளை ஏறிட்டு நோக்கினான். "நீ என்ன சொல்கிறாய், மதுராந்தகி? உன் அசட்டு ஆணைக்காக, என்னை வளர்த்து ஆளாக்கி விட்ட நாட்டின் மீது போர்தொடுக்கச் சொல்கிறாயா?"

"அது அரச தர்மம். வீரம் செறிந்த மன்னர்களுக்கு எடுத்துக்காட்டு. ஒரு மன்னர் தமது நாட்டை விஸ்தரிக்கப் பிற நாட்டின் மீது போர் தொடுப்பது புதிய செயல் ஒன்றும் இல்லையே?"

"ஆனால் சோழவளநாடு எனக்கு இதுநாள் வரைச் சோறிட்டு வந்த நாடாயிற்றே, மதுரா? உண்ட வீட்டிலேயே கன்னம் வைக்கச் சொல்கிறாயா?"

"சோறிட்ட நாட்டிடம் சொந்தம் கொண்டாடுவது அரசர்க்குப் புதிதல்ல அத்தான். உண்ட வீட்டில் உரிமை கொண்டாடுவதும் அவர்கள் உலகில் புதிதல்ல. சரித்திரத்தை நினைவு கூர்ந்து பாருங்கள். எத்தனை மன்னர்கள் ஒண்டிய இடத்திடம் உரிமை கொண்டுள்ளார்கள்? எத்தனை மன்னர்கள் புகலளித்த நாட்டினை வஞ்சகத்தால் பிடுங்கிக் கொண்டுள்ளார்கள்? அரசியல் வாதம் வேறு; உலகியல் வாதம் வேறு, அத்தான். நீங்கள் ஒரு நாட்டின் அரசராகப் போகிறீர்கள். ஆதலால் நீங்கள் அரசியல் வாதத்தைத்தான் பின் பற்ற வேண்டுமேயன்றி, உலகியல் வாதத்தை அல்ல. தவிர, நான் என்ன, வஞ்சத்தால் இந்நாட்டைப் பெறுங்கள் என்று போதிக்கிறேனா? வீரத்தால் வெல்லுங்கள் என்று தானே வேண்டுகிறேன்?"

"அந்தோ மதுரா, நீ ஏன் இப்படிச் சிந்தனையின்றி அரற்றுகிறாய்? அரசியல் வாதத்தைப் பின்பற்ற வேண்டிய இடத்தில் பின்பற்ற வேண்டியதுதான். ஆனால் இதுகாறும் பல போர்கள் புரிந்து மேலைச்சளுக்கர்களிடமிருந்து எங்கள் நாட்டைப் பாதுகாத்துத் தந்து, என்னை அரசுக்கட்டில் ஏற்றி, அழகுருவான உன்னையும் எனக்கு அளிக்கப் போகும் உன் தந்தையிடமிருந்தும், அவருடைய சந்ததியாரிடமிருந்தும் நாட்டைப் பிடுங்கிக் கொள் என்று போதிக்கிறாயே, இது எந்த வாதத்துக்கும் பொருந்தாததாக இருக்கிறதே, மதுராந்தகி?"

மதுராந்தகி சிறிது நேரம் அமைதியாக இருந்தாள். நியாய வாதத்தின் மூலம் தன் கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ள முடியாது என்பது இப்பொழுது அவளுக்கு விளங்கிவிட்டது. முரட்டு வாதந்தான் இனி அவளைக் காரியசித்தி பெறச் செய்ய வேண்டும். முகத்திலே சொல்லில் அடங்காத வேதனையுடன் தன்னையே கண்கொட்டாது நோக்கிக் கொண்டிருந்த குலோத்துங்கனைத் தலைநிமிர்ந்து நோக்கி



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவள் கேட்டாள்: "அத்தான், நீங்கள் என்னை உண்மையாவே காதலிக்கிறீர்களா? நான் உங்கள் மனைவியாக வேண்டும் என்று விரும்புகிறீர்களா?"

"இது என்ன கேள்வி, கண்ணே? ஏன் உனக்கு இந்தத் திடீர்ச் சந்தேகம்? என் உயிரே நீதான் என்பது உனக்கு தெரியாதா?" என்று வியப்புடன் கூறினான் குலோத்துங்கன்.

"அப்படியானால், என் ஆணையை நிறைவேற்றி வைப்பதாக நீங்கள் வாக்களிக்க வேண்டும். வேங்கி சென்று அரசுரிமையை ஏற்றதும் சோழநாட்டின் மீது படையெடுத்து வெற்றி வாகை சூடி, இன்று என் தந்தை அமர்ந்து ஆட்சி செலுத்தி வரும் 'இராசேந்திர சோழ மாவலி வாணராயன்' அரியணையில் என்னுடன் ஒருநாளேனும் அமர்ந்து செங்கோல் ஏந்துவதாக நம் காதல் மீது ஆணையாக உறுதிகூற வேண்டும்!"

"இல்லாவிட்டால்...?" குலோத்துங்கன் உண்மையான தீவிரத்துடன் கேட்டான்.

"நம் காதல் நிறைவேறாக் காதலாகத்தான் முடியும். ஆம், என்று நான் அந்த ஆணையை இட்டேனோ, அன்றே என் காதலை அதனுடன் பிணைத்து விட்டேன். இனி அவை இரண்டையும் பிரிக்க முடியாது."

"அப்படியானால் இந்தப் பிறவியில் நாம் ஒன்று சேரக் கொடுத்து வைக்கவில்லை, மதுராந்தகி. நான் வருகிறேன்."

குலோத்துங்கன் சட்டென்று எழுந்தான். அவன் எழுவதற்கும், அரண்மனைப் பணிப்பெண் ஒருத்தி அங்கே விரைந்து வருவதற்கும் சரியாக இருந்தது.

"இளவரசே, மன்னர்பிரான் தங்களை உடனே அழைத்துவரச் சொன்னார்கள்," என்றாள் அப்பணிப்பெண்.

"ஆம், நான் புறப்பட வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. விடைபெற்றுக் கொள்கிறேன், மதுராந்தகி. சிந்தித்துப் பார். ஒருகால் உன் மனம் மாறினால், தந்தையாரிடம் தெரிவித்து எனக்கு ஓலை அனுப்பச் செய். என் அன்பும் காதலும் என்றும் உன்பால் இருக்கும்!" என்றான் குலோத்துங்கன்.

மதுராந்தகியும் எழுந்து நின்றாள், அவள் உதடுகள் துடித்தன. கண்களிலே கண்ணீர் கசியத் தொடங்கியது. ஆயினும் அவளது உள்ளத்தே உறைந்திருந்த உறுதி உருகவில்லை. "அதற்குத் தேவை ஏற்படாது. சிந்திக்க வேண்டியவர் நீங்கள்தாம். உங்கள் உள்ளம் மாறினால், என் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கும் உறுதியுடன் வேங்கி வீரன் ஒருவன் உங்கள் ஓலையைத் தாங்கி இங்கு வரட்டும்!" என்று திடமாக உரைத்தாள் அவள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

குலோத்துங்கன் மறுமொழி ஒன்றும் கூறவில்லை. பணிப்பெண் பின் தொடர அவன் சோழகேரளன் அரண்மனையை நோக்கி நடந்தான். மதுராந்தகியும் அதன் பிறகு அங்கு நிற்கவில்லை. அவளும் அவர்களைப் பின் பற்றினாள்.

சோழ கேரளன் அரண்மனையின் அரசாங்க மண்டபத்திலே இராசேந்திர தேவரும், புதிய பட்டத்திளவரசர் வீரராசேந்திரரும், மற்றும் படைத்தலைவர்களும் அரசியல் அதிகாரிகளும் கூடியிருந்தனர். எல்லோருடைய முகங்களிலும் ஒருபுறம் துயரமும், மறுபுறம் கொதிப்பும் காணப்பட்டன.

குலோத்துங்கன் அங்கு வந்ததும், சோழத்தேவர் அவனை அருகில் அழைத்து, "அபயா, உன் வேங்கிப் பயணத்தை நிறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டு விட்டது. இதோ வந்துள்ள உங்கள் நாட்டுத் தூதன் திடுக்கிடும் இரண்டு செய்திகளைக் கொணர்ந்துள்ளான். உன் தந்தையார் நான்கு நாட்களுக்கு முன் நோய்க்கு இரையாகி விட்டாராம். உடனேயே உன் சிற்றப்பன் விசயாதித்தன் அரசைக் கைப்பற்றிக் கொண்டு விட்டானாம். எனவே இந்நிலையில் நீ இங்கே வருவது உன் உயிருக்கே அபாயமாகுமென்று சகோதரி அம்மங்கை ஓலை அனுப்பியுள்ளாள்!" என்றார்.

தந்தையின் மரணச் செய்தி குலோத்துங்கனை ஓரளவு தாக்கிய தெனினும், நாட்டைத் தன் சிறிய தந்தை கைப்பற்றிக் கொண்ட செய்தியால் அவன் சிறிதும் பாதிக்கப்படவில்லை. ஆனால் பாதிக்கப் பட்டவள் அங்கே வேறொருத்தி இருந்தாள். ஆம், மதுராந்தகிதான்! பாவம். அவளுக்கு இது தோல்வி மேல் தோல்வியாக அல்லவா போய்விட்டது!

## அத்தியாயம் – 7. மந்திராலோசனை

**வே**ங்கியிலிருந்து வந்த தூதன் உடனே நாடு திரும்ப வேண்டுமென்று விடைபெற்றுச் சென்று விட்டான். எவ்வித அதிர்ச்சியும்மின்றி அச்செய்தியை அமைதியுடன் ஏற்று நின்ற குலோத்துங்கனுக்கும் சோழ தேவர் விடை கொடுத்து அனுப்பினார். அங்கு ஒரு தூணருகில் நிலைத்துப் போய் நின்றிருந்த மகளை இப்பொழுது தான் அவர் பார்த்தார். "நீ ஏன் அம்மா கண்ணீர் விடுகிறாய், கண்ணீர் விட வேண்டியவனே விடாத போது? போ, அந்தப்புரத்துக்குப் போய் உன் அன்னையிடமும், சிற்றன்னையிடமும் இச்செய்தியை அறிவி," என்று மகளையும் அங்கிருந்து



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அப்புறப்படுத்தினார். பிறகு அவர் எஞ்சியிருந்தவர்களைத் தமது ஆஸ்தான மண்டபத்துக்கு அழைத்துச் சென்று அமரச் செய்தார்.

அங்கே அப்பொழுது அரசியலில் வழக்கமாகக் கலந்துகொள்ளும் பெருந்தரத்து அதிகாரிகளும், ஆலோசகர்களும் மட்டுமே இருந்தனர். யாவரும் அமர்ந்ததும் சோழதேவர் வேங்கித் தூதன் கொணர்ந்த ஓலையை உடன்கூட்டத்து அதிகாரியான வீரராசேந்திர மழவராயரிடம் கொடுத்து அனைவருக்கும் படித்துக் காட்டிச் சொன்னார்.

மழவராயர் அதனை வாங்கி உரக்கப் படித்தார்:

"மகாராசாதிராச கோப்பரகேசரிவர்ம உடையார் இராசேந்திர சோழ தேவரவர்கள் சமூகத்துக்கு வேங்கி மாதேவி அம்மங்கை நாச்சியார் அவர்கள் ஆணைப்படி திருமந்திர ஓலைக்காரன் வீர நுளும்பன் ஆயிரங்கோடித் தண்டனிட்டு வரைந்து கொள்வது யாதெனில்:

"எங்கள் தேவியார் மன்னர் சமுகத்துக்கு முன்னர் அனுப்பியிருந்த ஓலை கிடைத்திருக்கலாம். வேங்கி நாடு பாவம் செய்த நாடு. அது தன் அரசர் திலகத்தை இழந்துவிட்டது. எங்கள் குல வேந்தர் நரேந்திர தேவரின் ஆவி நேற்று மாலை விண்ணோகிவிட்ட தென்பதை மிகுந்த துயரத்துடன் சமுகத்துக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"பட்ட காலிலே படும் என்பது போல் அதுசமயம் இளவரசர் *சப்தம விஷ்ணுவர்த்தனர் இங்கு இல்லாதது காரணமாக, மன்னர் பெருமானின் தம்பியார் விசயாதித்தர் குந்தள நாட்டின் படைத்தலைவரான சாமுண்டராயரின் உதவியுடன் அரியணையைக் கைப்பற்றிக் கொண்டு விட்டார். எங்கள் குலதெய்வம் அம்மங்கை நாச்சியார் அக்கசடனால் அரண்மனையிலேயே சிறை செய்யப்பட்டுள்ளார்கள். அதுபற்றியே இத்திருவோலை அவர்கள் கைப்பட வரையப்படாமலும், வேங்கி இலச்சினையைத் தாங்காமலும் வருகிறது.

(*குலோத்துங்கனுக்கு இளவயதில் வேங்கி நாட்டில் இளவரசுப் பட்டம் கட்டப் பட்ட போது அளிக்கப்பட்ட அபிடேகப் பெயர் - Ins.396 & 400 of 1933)

"தேவியார் முன்னர் அனுப்பியிருந்த ஓலையில் இளவரசர் விஷ்ணுவர்தனரை உடனே இங்கு அனுப்புமாறு சமூகத்துக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்களாம். ஆனால் இப்பொழுதுள்ள நிலையில் இளவரசர் தனியாக இங்கு வந்தால், அவரும் விசயாதித்தரால் சிறைப்படுத்தப்படக் கூடுமென தேவியார் கருதுகிறார்கள். ஆதலால் இதுகாறும் இளவரசர் கங்காபுரியிலிருந்து (கங்கை கொண்ட சோழபுரத்தைப் பிற நாட்டினர்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கங்காபுரி என்றே அழைத்து வந்தனர்) புறப்பட்டிராவிடில், அவர்களை அங்கேயே நிறுத்தி வைத்துக் கொள்ளுமாறு தேவியார் தெரிவிக்கச் சொன்னார்கள். ஒருகால் இளவரசர் முன்னமேயே வேங்கிப் பயணத்தை மேற்கொண்டிருந்தால் கூட, வேகமாகச் செல்லக்கூடிய தங்கள் நாட்டுக் குதிரைப் படையினர் சிலரை உடனே அனுப்பி அவரை வழியில் சந்தித்துக் கங்காபுரிக்குத் திருப்பி அழைத்துக்கொள்ள வேண்டும் என்பது தேவியாரின் விருப்பம்.

"அதர்மர்கள் தாமாகவே அழிவார்கள்: தர்மமும் நேர்மையும் என்றும் வெற்றி பெற்றே தீரும் என்பது தேவியாரவர்களின் கருத்து. ஆதலால், இப்பொழுதுதான் பெரும்போர் ஒன்றை முடித்துவிட்டு நாடு திரும்பியிருக்கும் தாங்கள், மீண்டும் வேங்கிக்காக உடனடியாகப் போர் எதும் தொடுக்க வேண்டாமென்றும் அவர்கள் சமூகத்துக்கு வரையச் சொன்னார்கள்.

இங்ஙனம்,
தங்கள் அடிமைக்கு அடிமை,
திருமந்திர ஓலைக்காரன்
வீர நுளும்பன்."

மழவராயர் இவ்வாறு படித்து முடித்ததும் சோழதேவர் சொன்னார்:

"குந்தளத்தார் திமிர் இன்னும் ஒடுங்கியதாகத் தெரியவில்லை. கொப்பத்துப் போரோடு அவர்கள் கொட்டம் அடங்கியதென நினைத்தோம். ஆனால் அடிபட்ட பாம்பு காற்றைக் குடித்து மீண்டும் நெளிவது போல் அடுத்த போருக்குத் தயாரானார்கள். முடக்காற்றுப் போரில் அவர்கள் முதுகெலும்பையே ஒடித்துவிட்டு திரும்பினோம்! இப்பொழுது மீண்டும் வாலாட்டத் தலைப்பட்டிருக்கிறார்கள். அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கும் அவையோர்களே! இப்பொழுது நாம் எந்தவிதமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை ஆலோசிக்கவே உங்களை இங்கு அழைத்து வந்தேன். அனைவரும் தங்கள் மேலான கருத்தைத் தயக்கமின்றித் தெரிவிக்க வேண்டுகிறேன்."

அவையில் சிறிது நேரம் ஆழ்ந்த அமைதி நிலவியது. பின்னர் சோழர்களின் குலகுருவான வாசுதேவ நாராயண பட்டர் பேசலானார்: "மன்னர் மன்னவா! இச் சோழவள நாடு என்றுமே பகைவர்க்கு அஞ்சியதில்லை. பரந்த நம் நாட்டின் எல்லைக் குள்ளேயிருந்து பிடி மண்ணைப் பிற நாட்டான் ஒருவன் அள்ளினால் கூட, அதை நமக்கு விளைவிக்கப்பட்ட அவமதிப்பாகக் கருதிப் போர் தொடுத்திருக்கிறோம். தவிர, நாட்டின் எல்லையைப் பரப்புவதிலும் நாம் இதர நாட்டாருக்குப் பின் வாங்கியவர் அல்லர்.


Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மன்னரவர்களின் கருத்துப்படி குந்தளத்தாரின் கொட்டத்தை அடக்கி அவர்களை மீண்டும் தலையெடுக்காதவாறு தரையோடு தரையாக வெட்டிச் சாய்க்க வேண்டியது அகத்தியந்தான். ஆயினும் அரசரவர்களின் சகோதரி வேங்கிப் பிராட்டியார் எழுதியிருக்கிறவாறு நாம் இப்பொழுதுதான் ஒரு நெடும் போரை முடித்துவிட்டுத் திரும்பியுள்ளோம். பல நாட்களாக வீட்டையும் வீட்டாரையும் மறந்து நாட்டின் நலத்தையே கருத்தில் கொண்டு வீரச்சமர் புரிந்த நமது படையினர் தங்கள் மனைவி-மக்களிடம் திரும்பி நான்கு நாட்கள் கூட இன்னும் ஆகவில்லை. அவர்கள் என்றென்றும் தாய் நாட்டுக்காகத் தங்கள் இன்ப-துன்பங்களைப் பாராது வாளெடுக்கக் கூடிய வீரர்கள்தாம். இருப்பினும், மீண்டும் போர் ஆயத்தம் தொடங்கி உடனே அவர்களை இங்கிருந்து கிளப்புவது நல்லதென்று நான் கருதவில்லை.

“பதுங்கியிருந்து பாயும் குள்ள நரியைப்போல் விசயாதித்தன் நாம் நாடு திரும்பிக் கொண்டிருக்கையிலே வேங்கியைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டான். சந்தர்ப்பங்களும் அவனுக்கு வாய்ப்பாக அமைந்து விட்டன. இது மன்னரவர்களுக்கும், அவர்கள் சகோதரி, மருமகன் போன்றோருக்கும், இப்புனிதச் சோணாட்டுக்கும் இழைக்கப்பட்ட மாபெரும் அவமதிப்பே. ஆயினும், அவமதிப்பு என்னவோ இழைக்கப்பட்டு விட்டது. இப்பொழுது நாம் போர் தொடுத்து வேங்கியைக் கைப்பற்றினாலுங்கூட, அது அந்த அவமதிப்பைப் போக்கியதாகி விடாது. ஆதலால் இன்னும் சில காலம் நமது படையினருக்கு ஓய்வளித்த பிறகே போர் ஆயத்தங்களைச் செய்ய வேண்டும் என்பது என் ஆலோசனை.”

“குருதேவரவர்கள் மன்னிக்க வேண்டும்,” என்று கூறியவாறு சிங்கம்போல் உடனே எழுந்து நின்றார் இளவரசர் வீரராசேந்திரன். “படையினருக்கு ஓய்வா? ஓய்வைப் பற்றிப் பேசும் படை ஒரு போதும் நாட்டைக் காக்கும் படையாகாது. நமது சோழப்படையை நான் அத்தகைய சோம்பேறிப் படையாகக் கருதவில்லை. அந்த வீரப்படையிலுள்ள ஒவ்வோர் ஆண்மகனுக்கும் நாடே வீடு; நாட்டின் நலமே வீட்டின் நலம். அதிலும் இப்பொழுது நாம் நாட்டின் எல்லையைப் பெருக்க அடுத்த சமருக்குத் தயாராகவில்லை. கடந்த இரண்டு தலைமுறைகளாக வேங்கி நாடு சோழநாட்டின் ஒரு பகுதியாக இருந்து வந்திருக்கிருக்கிறது. அது நம் நாட்டின் வடவெல்லைப் பாதுகாப்புக் கேந்திரம். அந்தப் பாதுகாப்புக் கேந்திரத்தை நம்மிடம் பல தடவைகள் தோற்றோடிய பேடி ஒருவன் வஞ்சமாகக் கைப்பற்றி, உரிமையற்ற மற்றொரு பேடிக்கு வழங்கியிருக்கின்றான். அதோடு நில்லாமல் பதியை இழந்து பரதவித்து நின்ற அந்நாட்டின் அரசியை-எங்கள் அருமைசோதரியை சிறையிட்டிருக்கிறான். இதைவிடப் பெரிய அவமானத்தை ஒருவன்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சோழ நாட்டுக்குச் செய்ய முடியுமா? நம்மை அவமானப் படுத்தியவனை உடனே போருக்கு இழுத்து, அவன் பூண்டே இல்லாமல் ஒழிக்க வேண்டியது ஒவ்வொரு சோழப்பிரஜையின் கடமையாகும். அக்கடமையைப் புறக்கணித்து ஓய்வை விரும்புபவனின் உடலில் ஓடுவது வீரம் செறிந்த சோழ நாட்டின் உதிரம் அன்று. அது கோழை உதிரம். அத்தகையவன் உயிரோடு இருப்பதே நம் நாட்டுக்கு ஓர் அவகேடு. ஆதலால், என்ன நேர்ந்தாலும் சரி, நாம் உடனே வேங்கியின் மீது பொருது கொண்டு சென்று அந்தக் கயவன் சாமுண்டராயனைக் கொன்று, விசயாதித்தனையும் நாட்டைவிட்டு ஓட்டிவிட்டு எங்கள் மருமகனும், வேங்கி அரியணைக்கு உரிமையுள்ளவனுமான குலோத்துங்கனுக்கு மகுடம் சூட்டி வரவேண்டும் என்பது என் முடிவான கருத்து."

வீரராசேந்திரர் இவ்வாறு கூறி முடிந்ததும் ஒரு கலகலப்பு ஏற்பட்டது. "ஆம், இளவரசர் கூறுவதே சரி," "இந்த அவமானத்துக்கு உடனே பழி வாங்கியே ஆக வேண்டும்," "சாமுண்டராயனைக் கண்டதுண்டமாக வெட்டாமல் என் வாளை உறையில் இடேன்; வேங்கி நாட்டுக்குச் சோழ நாடு பட்டுள்ள கடன் இது; இதைத் தீர்க்காவிடில் நாம் கடமை மறந்த கசடர்கள் ஆவோம்!" எனப் பலப்பல கருத்துக்கள் அங்குக் கூடியிருந்த இதர அதிகாரிகளிடமிருந்து துள்ளி விழுந்தன.

அந்தக் கலகலப்பு அடங்கியதும், சோழதேவர் அமைதி ததும்பும் குரலால் சொன்னார்: "வீர திலகங்களே! உங்கள் உணர்ச்சிகளை நான் மெச்சுகிறேன். உங்களைப் போன்ற தன்னலம் கருதாத உழைப்பாளர்கள் இருக்கும் வரையில் இச்சோழ நாட்டுக்கு எவ்விதக் கவலையும் கிடையாது. ஆயினும், போர் விஷயமாகக் குருதேவர் வெளியிட்ட கருத்தையே நான் ஆமோதிக்கிறேன்."

குறுநில மன்னர் மிலாடுடையான் நரசங்கிவர்மன் இப்பொழுது எழுந்து நின்று, "மன்னரவர்கள் அந்த முடிவுக்கு வந்ததன் காரணத்தை அவையோர் அறியலாமா?" என்று வினவினார்.

"காரணம் நான் சற்றுமுன் விளக்கிய காரணமாகத்தான் இருக்க வேண்டும். அப்படித்தானே மன்னவா?" என்று கேட்டார் குருதேவர்.

"ஆம் குருதேவா. அதோடு மற்றொரு முக்கியமான காரணமும் உளது."

"என்ன அது?" எங்கோ தூரத்தில் அமர்ந்திருந்த படைத் தலைவர் வினவினார்.

"நமது முயற்சி விழலுக்கு இறைத்த நீராகக் கூடாதென்று நான் கருதுகிறேன்."

"விழலுக்கு இறைத்த நீரா?" என்று வியப்புடன் கேட்டார் வீரராசேந்திரர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"ஆம்; சற்று முன் உங்கள் கண்களாலேயே பார்த்தீர்கள். தந்தை இறந்து விட்டார்; நாட்டைப் பிறர் கைப்பற்றிக் கொண்டு விட்டான் என்று கூறக் கேட்டபோது, இப்பொழுது நீங்கள் அடைந்திருக்கிறீர்களே, இந்தக் கொதிப்பில் ஆயிரத்தில் ஒரு பங்காவது அடைந்தானா குலோத்துங்கன்? நான் சொல்கிறேன்; அவனுக்கு அந்நாட்டின் மீது பற்று இல்லை. தன் சிற்றப்பன் அதை ஆள விரும்பினால் ஆண்டுவிட்டுப் போகட்டுமே என்ற கருத்தை அவன் பல தடவைகள் பலரிடம் வெளியிட்டிருக்கிறான். இவ்வாறு அவனே அந்நாட்டைத் தனது சிறிய தந்தைக்கு விட்டுக் கொடுக்க விரும்பும் போது, நாம் அதை அவனது சிறிய தந்தையிடமிருந்து பறிப்பதற்காகப் போரிட நினைப்பதில் பொருள் என்ன இருக்கிறது?"

"என்ன? குலோத்துங்கனா இப்படிக் கருதுகிறான்?" என்று கொதித்தார் வீரராசேந்திரர்.

"ஆம், தம்பி."

வீரராசேந்திரரின் வாய் அடைத்துப் போயிற்று. ஆனால், தண்டநாயகர் மதுராந்தகத் தமிழ் பேரரையர் எழுந்து சொன்னார்: "மன்னர் பெருமானே! வேங்கிச் சிங்கக் குட்டி வீரம் குன்றி இவ்வாறு முடிவுறுத்திருப்பார் என்று நான் கருத மாட்டேன். அவர் இச்சோழவள நாட்டின் மீது குன்றாத பாசமுடையவர். தாம் இங்கேயே ஒரு சாதாரணப் படைத் தலைவராக இருந்து தம்மை வளர்த்த நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற விருப்பம் அவருக்கு இருப்பதை நான் அறிவேன். அது பற்றியே அவர் இவ்வாறு முடிவுறுத்தியிருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்."

குதிரைப்படைத் தலைவர் ஐயமுரி நாடாழ்வார் அடுத்ததாக எழுந்து பேசினார்: "தண்டநாயகர் அவர்களின் கூற்றை நான் ஆமோதிக்கிறேன். ஆயினும் வேங்கி இளவரசர் இக்கருத்துடையவராக இருப்பது பற்றி மட்டும் நாம் போர் தொடங்குவதை நிறுத்தக்கூடாது. ஏனென்றால் அவர் கருத்து எப்படி இருந்தாலும், விசயாதித்தன் கைக்கு வேங்கி போய் விட்ட பிறகு, சோழ நாடு தன் வடவெல்லைப் பாதுகாப்புக் கேந்திரத்தை இழந்து விட்டது. விசயாதித்தன் குந்தளத்தாரின் கைப்பாவை. ஆதலால் நமது வடவெல்லைப் பாதுகாப்புக் கேந்திரம் இப்பொழுது தெற்கெல்லைப் பிராந்தியமாகி விட்டது குந்தளத்தாருக்கு. எனவே, இளவரசர் குலோத்துங்கன் வேங்கி அரியணையை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், நாம் அந்நாட்டைப் போரில் வென்று நமது மாதண்டநாயகராக அரச குடும்பத்தினர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்பதே அடியேனின் கருத்து."



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“ஆம், அதோடு சிறை செய்யப்பட்டுள்ள எங்கள் சகோதரியாரை மீட்க வேண்டியதும் நம் நாட்டின் கடமையாகிறது. அதற்காகவேனும் நாம் வேங்கி மீது பொருது கொண்டே ஆக வேண்டும்” என்று கூறினார் வீரராசேந்திரர்.

அவையோர் கூற்று அனைத்தையும் அமைதியோடு செவிமடுத்த பின் சோழதேவர் மொழிந்தார்: “உங்கள் கருத்துக்கள் என்னைக் கவர்கின்றன; உங்கள் வீரம் என்னை வீறுகொள்ளச் செய்கிறது: உங்கள் நாட்டுப் பற்று என் உள்ளத்தில் நன்றிப் பெருக்கை விளைவிக்கிறது. ஆயினும் வேங்கிப் படையெடுப்பு இப்பொழுது தேவையா என்ற ஐயத்தை என்னால் போக்கிக் கொள்ள முடியவில்லை. ஆம், இப்பொழுது நாம் தொடுக்க நினைக்கும் போர் தேவையற்ற போர் என்றே இன்னும் நான் கருதுகிறேன்.”

“தேவையற்ற போரா?”, “மன்னரவர்களின் கருத்துத் தவறு”, “இல்லை, இல்லை; இது தேவையான போர்தான்,” என்று சோழதேவரின் சொல்லுக்குப் பலரிடமிருந்து எதிர்ப்புக்கள் வந்தன.

இராசேந்திரசோழப் பேரரசர் இளமுறுவல் பூத்தார். “அமைதி!” என்றார் அவர். அவையில் அமைதி நிலவியதும் தொடர்ந்தார்: “அறிவிற் சிறந்த உங்களில் பெரும்பான்மையோர் கருத்தை ஏற்று, அதன்படி ஒழுக வேண்டியது மன்னனாகிய என் கடமையே. ஆயினும் என் கருத்தையும் அவையோர்களுக்கு வெளியிட எனக்கு உரிமை உண்டு. நான் என் கருத்து முழுவதையும் கூறவில்லை. அதற்குள் அனைவரும் துடிக்கிறீர்கள். உங்கள் துடிப்பு பாராட்டுதற்கு உரியதுதான். எனினும் நான் கூறுவதை முழுவதும் கேட்டுவிட்டு ஒரு முடிவுக்கு வருமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவையோர்களே! நம் தவத்திரு நாடு பல தலைமுறைகளாக, பல போர்களைப் பல காரணங்களுக்காக நிகழ்த்தியிருக்கிறது. ஆனால் அப்போர்கள் எல்லாவற்றிலும் நாமும் சரி, நமது முன்னோர்களும் சரி, அடிப்படைக் கொள்கை ஒன்றைப் பின்பற்றி வந்திருக்கிறோம் - அதாவது, வீரர்களோடு தான் போரிடுவது என்று! இப்பொழுது நீங்கள் தொடுக்க விரும்பும் இந்தப் போரைக் குந்தள மன்னன் ஆகவமல்லனோடு தொடுப்பதாக இருந்தால், உங்களுக்கு முன்னர் நான் போர்க் களத்தில் குதிப்பேன். ஆனால் இந்தப் போரோ, கோழையும், பேடியுமான விசயாதித்தன் மீது தொடுக்கப் போகும் போர்!..."

“ஆனால் இப்போருக்கு மறைமுகமாகக் காரணமாக இருந்தவனும், இப்பொழுது நாம் போர் தொடுத்தால் விசயாதித்தனுக்கு உதவப் போகிறவனும் அந்த ஆகவமல்லன் தானே?” என்று குறுக்கிட்டுக் கூறினார் வீரராசேந்திரர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“உண்மைதான் தம்பி,” என்று மீண்டும் ஒரு முறுவலைச் சிந்தினார் சோழதேவர். பின்னர் புகன்றார்: “விசயாதித்தன் தனக்கு வேங்கி அரியணையில் உரிமை இல்லாதது கண்டு குந்தளத்தாரை அடைக்கலம் சார்ந்து உதவி கோரினான். இம்மாதிரி அரச குலத்தோர் படைப்பலமுள்ள பிறநாட்டு மன்னர்களை நாடி, அவர்கள் உதவி பெற்று ஓர் அரசை அடைவது ஒன்றும் புதிய செயலல்ல. ஆகவமல்லனைப் போல் நம் முன்னோர்கள் கூடப் பல சிற்றரசர்களுக்கு உதவியிருக்கின்றனர். ஆயினும் அதனை எதிர்த்துத் தொடுக்கப்படும் போர், அப்படை அடைக்கலம் சார்ந்தாரின் மீது தொடுக்கும் போராகுமேயன்றி, அடைக்கலம் அளித்தவர்கள் மீது தொடுக்கும் போராகாது. அவ்வாறே இந்தப் போரையும் எல்லா நாட்டு மன்னர்களும், எல்லா நாட்டு மக்களும் ‘வேங்கிப் போர் என்றும், பேடியான விசயாதித்தன் மீது தொடுக்கப் பட்ட போர்’ என்றும் கூறுவார்களேயன்றி, மற்றெவ்விதமும் குறிப்பிட மாட்டார்கள். விசயாதித்தனோ பெருங்கோழை என்றும், வாள் பிடித்துப் போர் செய்தே அறியாதவன் என்றும் நாம் அறிவோம்!”

அப்போது:

“வேங்கியிலிருந்து மற்றோரு தூதன் வந்திருக்கிறான் அரசே.”

“மற்றொரு தூதனா? அவனை வரவிடு!” கட்டளையிட்டார் மாமன்னர்.

சற்றைக்கெல்லாம் அங்கு வந்த வேங்கித் தூதன் சோழதேவரை வணங்கிவிட்டு, “மன்னர் மன்னவா எங்கள் பிராட்டியார் அம்மங்கை தேவி இவ்வோலையைத் தங்களிடம் சேர்க்கக் கட்டளையிட்டார்கள்,” என்று ஓர் ஓலையை நீட்டினான்.

சோழதேவர் அவ்வோலையை வாங்கிப் படித்தார். படிக்கப் படிக்க அவரது முகமும் கண்களும் குருதிச் சிவப்பாக மாறின. “ஒற்றன்! ஒற்றன்!” என்ற சொற்களை உதடுகள் உதிர்த்தன.

## அத்தியாயம் – 8. ஓலை கொணர்ந்த ஒற்றன்

முடிகொண்ட சோழன் அரண்மனையிலிருந்தும், சோழ கேரளன் அரண்மனையிலிருந்தும் உட்கோட்டையின் வடக்கு வாசலை நோக்கி ஒரு சாலை போகிறது. அச்சாலையும் கோட்டையின் வடக்கு வாசலும் பொதுமக்கள் உபயோகத்துக்கானவை அல்ல. அவை அரசகுல மாதருக்கென்றே தனியாக அமைக்கப்பட்டவை. அரசகுல ஆடவருடன் வெளிச் செல்லும்போது மட்டுமே



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அரண்மனைப் பெண்டிர் உட்கோட்டையின் கிழக்கு வாசல் வழியே செல்வார்கள். தனியாக எங்கேனும் போவதாக இருந்தால், அவர்கள் வடக்குக் கோட்டை வாசலையே பயன்படுத்துவார்கள். அந்த வாசலைத் தாண்டியதும் அச்சலை பல கிளைகளாகப் பிரிகிறது. ஒவ்வொரு கிளையும் ஒவ்வொரு பொதுச்சலையுடன் இணைகிறது.

முன் அத்தியாயத்தில் கூறிய மந்திராலோசனை நடந்து கொண்டிருந்த அதே மாலை நேரத்தில் முடிகொண்ட சோழன் அரண்மனையிலிருந்து பல்லக்கு ஒன்று கிளம்பி, வடக்குக் கோட்டை வாசல் வழியாக வெளியேறி, சோழேச்சுரன் ஆலயத்துக்குச் செல்வதற்கான பொதுச்சாலையில் போயிற்று. பல்லக்கின் உள்ளே வானவியும், அவளது அந்தரங்கத் தோழியான பங்கயற்கண்ணியும் வீற்றிருந்தனர்.

மனம் சோர்வுற்றிருக்கும்போது, அல்லது அது களிப்பில் மிதக்கும் போது, வானவிக்கு அரண்மனையில் இருக்கப் பிடிக்காது. மாலையானதும் ஆலயத்துக்குத் தரிசனத்துக்குப் போவதாகக் கூறிக்கொண்டு வெளியில் கிளம்பிவிடுவாள். ஆனால் இன்று அவள் மனம் சோர்வுற்று இருக்கவில்லை; களிப்பில் தான் மிதந்தது. இன்றென்ன? நான்கு நாட்களுக்கு முன் அந்த அகந்தை கொண்ட மதுராந்தகியின் முன் இரு பெரும் ஆணைகளை இட்டதைத் தொடர்ந்து, நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒற்றாக, எதிர்பாராத விதமாகத் தனக்குச் சாதகமாக நடந்து வருவதைக் கண்டதிலிருந்தே அவள் மகிழ்ச்சியில் மிதக்க ஆரம்பித்து விட்டாள்.

ஆம், ஒரு பெண்ணால் எளிதில் நிறைவேற்ற இயலாத எதிர் ஆணைகள் இரண்டை இட்டாள் அவள். அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தன்னையே தியாகம் செய்து கொள்ளவும் துணிந்தாள். தம்பி மதுராந்தகனைத் தூண்டிவிட்டு மிக அபாயகரமன வேலை ஒன்றைப் பணித்து அதை அவன் மூலம் வெற்றிகரமாக நிறைவேற்றச் செய்தாள். அந்த முதல் வெற்றி அவளுக்கு முழு வெற்றியாகப் போகிறது என்பதன் அறிகுறிபோல் குந்தள வீரனைக் கல்யாணபுரத்துக்கு அனுப்பிவிட்டு அரண்மனைக்குத் திரும்பிய போது அவளுக்கு மற்றொரு களிப்பூட்டும் செய்தி காத்திருந்தது - அவளுடைய பெரிய தந்தை இறந்துவிட்டார்!

பெரிய தந்தை இராச மகேந்திரரிடமும், பெரியன்னை லோகமகாதேவியிடமும் பற்று அற்றவள் அல்லள் அவள். உண்மையில், மக்கட்பேறற்ற அவர்கள் வானவியைத்தான் தங்கள் மகளாகக் கருதி அன்பு செலுத்தி வந்தனர். இருந்தபோதிலும், அத்தகைய பாசம் மிக்க பெரிய தந்தையின் மரணச் செய்தி வானவிக்கு மகிழ்ச்சியையே அளித்தது. ஏனென்றால் அவருடைய மறைவால் வானவியின் தந்தை பட்டத்து இளவரசர்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஆகிவிட்டார்; அவளும் அரசகுலப் பெண்டிரிடையே ஏறக்குறைய மதுராந்தகியின் தகுதியை பெற்று விட்டாள் இல்லையா? இனி, அந்த மதுராந்தகி எந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தித் தன் ஆணையை நிறைவேற்றிக் கொள்ள முயல்கிறாளோ, அதே செல்வாக்கை இவளும் பயன்படுத்தி, அவள் ஆணை நிறைவேறாதிருக்கவும் வகை செய்துகொள்ள முடியுமே!

இது வானவிக்குக் கிட்டிய முதலாவது எதிர்பாராத வெற்றி. இது மட்டுந்தானா? நந்துகனைக் காதலோலையுடன் கல்யாணபுரத்துக்கு அனுப்பிவிட்ட போதிலும், குலோத்துங்கனும் அன்றே வேங்கிக்குப் புறப்பட இருந்ததால், தன் ஓலை மேலைச் சளுக்க இளவரசரை எட்டுமுன் குலோத்துங்கன் வேங்கியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு விட்டால் என்ன செய்வது என்று அவள் கலங்கிக் கொண்டிருந்தாள். இப்பொழுது பெரிய தந்தையின் மறைவால் குலோத்துங்கனின் வேங்கிப் பயணம் குறைந்தது மூன்று நாட்களாவது தாமதப்பட்டுவிடும். இனி அவள் அந்தக் கவலையையும் விட்டுவிடலாம். மூன்று நாட்களுக்குள் எத்தனையோ நாடுகள் இருந்த சுவடே தெரியாமல் மறைந்திருக்கவில்லையா? ஆதலால் இதுவும் பெரிய தந்தையின் மரணத்தால் தனக்குக் கிட்டிய மற்றோர் எதிர்பாராத வெற்றி என்றே அவள் கருதினாள்.

இந்த இரண்டு வெற்றிகளுமே தன்னை வானளாவ உயர்த்திவிட்டதாக நினைத்தாள் அவள். அப்படி நினைத்திருக்கையில் அவளுடைய முதல் ஆணையின் முழு வெற்றியைப் பறைசாற்றிக் கொண்டு மற்றொரு மகிழ்ச்சி தரும் செய்தியும் வந்தால், அவளுக்குப் பெருமை தலை கொள்ளாமற் போகாமல் என்ன செய்யும்? அந்தச் செய்தியை சற்றுமுன், இதோ அவளுடன் பல்லக்கில் அமர்ந்திருக்கும் தோழி பங்கயற்கண்ணிதான் கொண்டுவந்தாள். வேங்கி அரண்மனையை மேலைச் சளுக்கர்களின் உதவியுடன் விசயாதித்தன் கைப்பற்றிவிட்டானாம்! இப்பொழுதுதான் சோழதேவருக்கு ஓலை வந்ததாம். அந்த ஓலையைக் கொணர்ந்த வேங்கித் தூதனைக்கூட அவள் கண்ணால் பார்த்தாளாம்!

வேங்கி ஓலைச் செய்தியைக் கேட்ட கணத்திலே வானவிக்கு வானாத்துக்கும் நிலத்துக்குமாகக் குதிக்க வேண்டும்போல் இருந்தது. ஆனால் அந்த மகிழ்ச்சியை அவள் அரண்மனைக்குள் காட்டமுடியுமா? தம்பி மதுராந்தகனை மட்டும் சந்தித்துத் தனது முதல் வெற்றியைப் பறைசாற்றிவிட்டு, தோழியுடன் வெளிக்கிளம்பி விட்டாள்.

பல்லக்கில் போகும்போது அவளுக்கு அப்பல்லக்கை நான்கு பேர்கள் சுமந்து செல்வதாகத் தோன்றவில்லை. அது ஒரு வானவூர்தியாக மாறி தன்னை இன்ப உலகிற்கு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இட்டுச் செல்வதாகவே தோன்றியது. “வெற்றியடி வெற்றி! உன் தோழி வானவிக்கு வானம் கொள்ளா வெற்றி!“ என்று பங்கயற்கண்ணியிடம் பரவசத்துடன் பலப்பல பேசிக்கொண்டே சென்றாள்.

அவர்கள் சோழேச்சுரம் ஆலயத்தை நெருங்கியபோது அங்கே இரவுப்பூசை தொடங்கப் போவதற்கான மணி ஒலித்துக்கொண்டிருந்தது. எனவே வானவி முதலில் அங்கே இறங்கி, தன் ஆணையை நிறைவேற்றி வைத்ததற்காக ஆண்டவனை வாயார, மனமார வாழ்த்தினாள். பூசை முடியும் வரையில் அவர்கள் அங்கே தங்கியிருந்துவிட்டுப் பிறகு பல்லக்கில் ஏறி அரண்மனைக்குச் செல்லும் வழியில் திரும்பினர்.

பௌர்ணமியை நெருங்கிக்கொண்டிருந்த நாளாதலால் அந்த முன்னிரவு நேரத்திலும் வானத்து முழுமதி வெள்ளியை உருக்கி நிலமகளின் உடலெல்லாம் வார்த்திருந்தான். ஆலயத்திலிருந்து திரும்புவோர் கும்பலைக் கடந்து சாலையின் திருப்பம் ஒன்றுக்கு வந்ததும் வானவி பல்லக்கை இறக்கும்படி பணித்தாள். அவளும் பங்கயற்கண்ணியும் அதிலிருந்து வெளியே வந்தனர். “பல்லக்கை சாலை மரம் ஒன்றின் மறைவில் வைத்துவிட்டு நீங்கள் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நாங்கள் கால்வாய் வரையில் போய்விட்டு அரை நாழிகைப் பொழுதில் திரும்புகிறோம்,” என்று பல்லக்குத் தூக்குவோரிடம் கூறிவிட்டு தெற்கு-வடக்காகச் சென்ற அச்சலையின் மேற்குப் புறமாக நெருங்கி வளர்ந்திருந்த மரங்களிடையே தோழியுடன் புகுந்து சென்றாள் அவள்.

அந்தச் சாலைக்குச் சிறிது தூரத்துக்கு அப்பால், சாலை செல்லும் திசையிலேயே ஒரு கால்வாய் ஓடியது. அதுதான் சோழகேரளன் அரண்மனைப் பூங்காவிலுள்ள செயற்கை வாவிக்குக் காவிரியிலிருந்து நீர் கொண்டுவரும் கால்வாய். அந்தக் கால்வாயே உட்கோட்டையைச் சுற்றிய அகழியாகவும் விளங்கியதால் மிக ஆழமானதாகவும், முதலைகள் வாழ்வதாகவும் இருந்தது. அதன் இரு கரைகளிலும் அடர்த்தியான தாழம்புதர்கள். இடையிடையே, பொதுமக்களுக்கும் அக்கால்வாய் நீர் பயன்படும் பொருட்டு, சில படித்துறைகள் அமைக்கப்பட்டிருந்தன. அப்படித்துறைகளைப் பெரும்பாலும் ஆலயத்துக்கு வந்து செல்வோரே பயன்படுத்துவது வழக்கம். இப்பொழுது இரவு நேரமாதலாலும், ஆலயத்தில் பூசைகள் அநேகமாக முடிந்துவிட்டதாலும் அப்படித் துறைகளில் யாரும் இல்லை. அத்தகைய படித்துறைகளுள் ஒன்றின் கடைசிப் படிகளில் வந்து அமர்ந்தனர் வானவியும், பங்கயற்கண்ணியும். இளவயதுப் பெண்கள் மகிழ்ச்சியில் திளைக்கும்போது இன்பக் கற்பனைகளுக்கும், இன்பப் பேச்சுக்களுக்கும் பஞ்சம் ஏற்படுமா, என்ன? பாதங்களைக் கால்வாய் நீருக்குள் நுழைத்து அதைத் துழாவியவாறு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இருவரும் பொழுது போவதே தெரியாமல் பேசிக்கொண்டிருந்தனர். வானவி, மதுராந்தகியின் கொட்டத்தை அடக்கி, அவளைச் சாதாரணப் பெண்ணிலும் சாதாரணப் பெண்ணாகச் செய்துவிட்டு, சளுக்கிய விக்கிரமாதித்தனை மணந்து கல்யாணபுரத்தில் அவனுடன் கழிக்க இருக்கும் குதூகல நாட்களைப்பற்றி இப்பொழுதே தன் தோழியுடன் கலந்து ஆலோசித்துத் திட்டங்கள் வகுக்கலானாள்.

வானவியின் பேச்சும் திட்டங்களும் இன்னும் ஓயவில்லை. ஆனால் இடையே அதற்கு ஒரு குந்தகம் விளைந்தது. திடீரென்று பங்கயற்கண்ணி உலகமே கிடு கிடுக்குமாறு வீரிட்டாள். “முதலை!... முதலை!” என்று அலறினாள். ஒரு கணம் தப்பியிருந்தாலும் பங்கயற்கண்ணியின் வலது பாதத்தைப் பற்றியிருந்த முதலை அவளை நீருனுள்ளே இழுத்துச் சென்றிருக்கும். ஆனால் அதற்குள் அங்கே ஓர் அதிசயம் நிகழ்ந்து விட்டது. எங்கிருந்தோ ஓர் அம்பு விர்ரென்று வந்து எஃகை நிகர்த்த முதலையின் செதிள்களுக்குள்ளே பாய்ந்து குத்திட்டு நின்றது. முதலை பங்கயற்கண்ணியின் காலை விட்டு விட்டு, வேதனை தாளாமல் வாலை ஓங்கி அடித்துக்கொண்டு முதுகில் தைத்த அம்புடனே நீருக்குள்ளே சென்று மறைந்து விட்டது.

இந்த எதிர்பாராத நிகழ்ச்சியால் பதைபதைத்துப் போன வானவி, பயத்தாலும் வேதனையாலும் மயங்கி விழும் நிலையிலிருந்த தோழியை அணைத்தவாறு மேல் படிக்கு இட்டு வந்தாள். பிறகு அவளைப் படியில் அமர்த்தித் தானும் அமர்ந்து, அவள் உடலைத் தன்மீது சாய்த்துக்கொண்டே அமைதிப் படுத்தினாள். முதலையின் பற்கள் பதிந்து ரத்தம் கசிந்த தோழியின் பாதத்தைப் பார்க்கையில், அவள் நெஞ்சகத்திலிருந்து உதிரம் கொட்டியது. “பங்கயா, பங்கயா! பயப்படாதே. நீ காப்பாற்றப்பட்டுவிட்டாய்,” என்று பின்புறமிருந்து வந்த குரல் வானவியைத் தன் நினைவு அடையச் செய்தது. ஆம், முதலையின் மீது அம்பு எய்த ஆடவன்தான் அங்கு நின்று கொண்டிருந்தான்.

பகல்போல் வீசிய நிலவில் அவன் முகம் பளிச்சென்று தெரிந்தது. கட்டிளங்காளை அவன். இத்தனை குறி தவறாமல் அம்பு எய்த அவன் சோழ நாட்டானாகத்தான் இருக்க வேண்டுமென்று வானவி கருதினாள். அவள் நன்றி தோன்ற அவனை நோக்கி, “வந்தனம் ஐயா. என் ஆருயிர்த் தோழியின் ஆயுளை மீட்டுத் தந்ததற்கு அனந்த கோடி வணக்கம். தாங்கள் யாரோ?” என்று வினவினாள்.

அந்த இளங்காளை விடையிறுக்கு முன் பங்கயற்கண்ணி அயர்வால் மூடியிருந்த இமைகளைத் திறந்து அவனை நோக்கினாள். “இவர்... இவர்...”

“என்ன பங்கயா?...”



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"இன்று பிற்பகலில் வேங்கியிலிருந்து ஓலை கொணர்ந்த தூதர்."

"ஆ!" வானவி வியப்பு மலர அவ்விளைஞனை விழித்துப் பார்த்தாள். அவள் முகத்தில் முன்னமே பொங்கி நின்ற நன்றிப் பெருக்கு இரட்டிப்பாயிற்று. "வேங்கி வீரரே, மற்றோர் நன்றி!..."

அவன் இடைமறித்தான். "அம்மணிகள் யாரென்று நான் அறியலாமோ?"

பங்கயற்கண்ணி நிமிர்ந்து உட்கார்ந்தாள். "இவள் சோழ நாட்டுப் பட்டத்து இளவரசர் வீரராசேந்திர தேவரின் புதல்வி வானவி தேவி, நான்..."

மீண்டும் அவ்வீரன் இடைமறித்தான். "என் பக்கியமே பாக்கியம்!" என்றான் அவன். "தேடித்திரிந்த மூலிகை காலில் சிக்கிக்கொண்டது, அம்மணி."

"என்ன சொல்கிறீர், வீரரே?"

"இளவரசியாரைத் தனியே சந்திக்க விரும்பினேன்; சந்தித்துவிட்டேன்."

"எதற்காக, வீரரே? எதற்காக எங்கள் இளவரசியாரைத் தாங்கள் தனியே சந்திக்க விரும்பினீர்கள்?"

அவன் இடைக் கச்சையிலிருந்து ஓர் ஓலையை எடுத்து வானவியிடம் நீட்டினான். "இளவரசி, நீங்கள் அனுப்பிய காதல் ஓலை உங்களிடமே திரும்பி வருகிறது."

ஓலையப் பெற்றுக்கொண்ட வானவியின் கரங்கள் நடுங்கின. ஐயோ! கடைசியில் அவள் அகப்பட்டுக்கொண்டு விட்டாளா? "பங்கயா! இது எப்படி இவருக்குக் கிடைத்தது என்று கேள்," என்று பதறினாள் அவள்.

"நந்துகனிடமிருந்து பெற்றுக் கொண்டேன்."

"நந்துகனை உங்களுக்குத் தெரியுமா? நான் அவனிடம் ஓலை கொடுத்து அனுப்பியது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"நந்துகனையா தெரியுமா என்று கேட்கிறீர்கள்? அவனை இன்று நேற்றல்ல; கடந்த பத்தாண்டுகளாகத் தெரியும், இளவரசி. அதனால் அவனே என்னிடம் சொன்னான்."

"ஆயினும் ஒரு பெண் ஓர் ஆணுக்கு எழுதியுள்ள ஓலையை நீங்கள் படித்ததும், அதைப் பெற்றுக் கொண்டதும் தவறில்லையா, ஐயா? உங்களை நல்லவரென்று நினைத்தோமே?" என்றாள் பங்கயற்கண்ணி.

"என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் அம்மணி. எனக்கு, நீங்கள் அவனிடம் ஓலை கொடுத்து அனுப்பியிருந்தது தெரியாது; அதைத் தருமாறு நான் அவனிடம் கேட்கவும்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இல்லை. அவனே அச்செய்தியைக் கூறி, என்னை அதைப் பெற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தினான்."

"துரோகி!" என்று குமுறினாள் வானவி.

"நந்துகனை அப்படிச் சொல்லாதீர்கள் இளவரசி. அவன் நல்லவன்."

"ஆமாம் நல்லவன்... உங்களைப்போல்! ஒரு பெண் ஓர் ஆடவனுக்கு ரகசியமாக அனுப்பிய ஓலையை..."

"அவனிடமே சேர்த்து விட்டான்!"

"என்ன?"

"இன்னுமா விளங்கவில்லை இளவரசி?"

"நீங்கள்... நீங்கள்...?"

"ஆம், குந்தள விக்கிரமாதித்தன் தான்!"

வானவியைச் சட்டென்று வெட்கம் கவ்விக் கொண்டது. பங்கயற்கண்ணிக்குப் பின் சென்று பதுங்கிக் கொண்டாள் அவள்.

"இளவரசியின் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப் பட்டதென்று கூறுங்கள் தோழி!" என்றான் விக்கிரமாதித்தன் குறுநகையுடன்.

"ஏற்றுக்கொள்ளு முன்பே அதனைச் சாமுண்டராயர் மூலமாக நிறைவேற்றி வைத்ததற்கு என் நன்றியைக் கூறுவாய், பங்கயா!" என்றாள் வானவி.

இதுவரையில் மலர்ந்த முகத்துடன் பேசிவந்த விக்கிரமாதித்தனின் முகம் இப்பேச்சைக் கேட்டதும் சுருங்கியது.

"வாக்களித்தவாறு என்னை நான் அவருக்கு அடிமைப்படுத்திக் கொள்ளச் சித்தமாக இருக்கிறேன் என்பதையும் அறிவிப்பாய், பங்கயா!" என்று தொடர்ந்து சொன்னாள் வானவி.

விக்கிரமாதித்தன் ஏதோ கூற வாயெடுத்தான். ஆனால் தொலைவில் யாரோ ஓடி வருவதைப் பார்த்துவிட்டுச் சட்டென்று உறையிலிருுந்து வாளை உருவினான்.

"என்ன?" வானவி திடுக்கிட்டு வினவினாள்.

"அதோ!"

அவன் சுட்டிக்காட்டிய இடத்தைப் பெண்கள் இருவரும் நோக்கினர். அங்கே, குடல் தெறிக்க மதுராந்தகன் ஓடி வந்து கொண்டிருந்தான்.

பங்கயற்கண்ணி நகைத்துவிட்டு, "பகையாள் அல்ல இளவரசே, உங்கள் மைத்துனன் - இளவரசியின் இளைய சகோதரன் மதுராந்தகன்!" என்று விளக்கினாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இதற்குள் மதுராந்தகன் அவர்களை நெருங்கி வந்து விட்டான். அங்கே ஒரு வேற்றாள் நிற்பதைக் கூடக் கவனியாமல் பதற்றத்துடன், "தோல்வி அக்கா! படுதோல்வி! எல்லாம் பொய்!" என்று கூறினான்.

"என்ன சொல்கிறாய் தம்பி?" கலக்கத்துடன் வினவினாள் வானவி.

"குலோத்துங்கனின் தந்தை இறக்கவும் இல்லையாம், விசயாதித்தன் அரசைக் கைப்பற்றிக் கொள்ளவும் இல்லையாம். வேங்கியிலிருந்து வேறோரு தூதுவன் அத்தை கைப்பட வரைந்த ஓலையுடன் வந்திருக்கிறான். பிற்பகலில் வேங்கித் தூதன் என்று கூறிக்கொண்டு வந்தவனைக் குந்தள ஒற்றன் என சந்தேகித்து, அவனைத் தேடிப்பிடித்துச் சிறையிட நாலா பக்கமும் வீரர்களை விரட்டியிருக்கிறார்கள்."

இதைக் கேட்டதும் வானவிக்கும், பங்கயற்கண்ணிக்கும் உடலெல்லாம் நடுங்கியது. அவர்கள் நடுக்கத்தை மிகைப் படுத்துவதைப் போல் அச்சமயம் கால்வாயின் எதிர்க் கரையில், சிறிது தூரத்தில் சில குதிரைகள் பாய்ந்தோடி வரும் குளம்பொலி கேட்டது.

## அத்தியாயம் – 9. காதலனும் காதலியும்

**ஏ**மாற்றத்தினாலும், அதிர்ச்சியினாலும் என்ன செய்வதென்பதே தோன்றாமல் சிலையாக நின்றுவிட்டாள் வானவி. அபாயமோ நெருங்கி வந்து கொண்டிருந்தது. அவர்கள் நின்ற இடம் படிக்கட்டின் முகப்பு. இரு புறங்களிலும் சிறிது தூரம் வரையில் புதர்களோ, மரங்களோ கிடையா. பகலைப்போல் நிலவு வேறு காய்ந்ததால், எதிர்க்கரை வழியே மங்கிய பார்வையுடயவர் சென்றால் கூட இவர்கள் நால்வரையும் நன்றாகக் கண்டுவிட முடியும். எதிர்க்கரையில் கேட்ட குளம்போசைகள், வருகிறவர்கள் நிச்சயமாகச் சோழப் படையினரே என்பதை நன்றாக அறிவுறுத்தின. இவையெல்லாம் தெரிந்திருந்த போதிலும் செயலற்று நின்றாள் வானவி.

ஆனால் அவளுடைய உற்ற தோழி பங்கயற்கண்ணி உடனேயே எச்சரிக்கை அடைந்து விட்டாள். அவளுந்தான் இந்த எதிர்பாராத செய்தியால் ஏமாற்றமடைந்திருந்தாள். ஏன்? கூறிய அறிவு படைத்த அவள் முன்பே இந்த ஏமாற்றத்தை எதிர் பார்த்து விட்டாள் என்று சொன்னாலும் தவறில்லை. ஆம்; வேங்கி வீரனாக வந்து தங்கள் இளவரசியின் உள்ளத்தைக் குளிர்விக்கும் ஓலையத் தந்தவன் வேங்கி வீரன் அல்லன்; குந்தள நாட்டு இளவரசன் என்று அறிந்ததுமே



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

‘சிறைப்பட்டிருக்கும் அம்மங்கை தேவியார் இவரிடம் எங்ஙனம் ஓலை கொடுத்து அனுப்பியிருக்க முடியும்?’ என்ற கேள்வி பங்கயற்கண்ணியிடம் எழுந்தது. ‘ஒரு கால் அரசியல் சூழ்ச்சி ஏதாவதாக இருக்கலாமோ? இந்நாட்டில், முடக்காற்றுப் போருக்குப் பின் எஞ்சியுள்ள படைகளின் எண்ணிக்கையை அறியும் பொருட்டுக் கோட்டைக்குள்ளே வருவதற்கு இவர் வேங்கி வீரனாக வேடம் தரித்து வந்திருப்பாரோ? அவ்வாறாயின், அவர் கொணர்ந்த ஓலை, அதில் அடங்கியிருந்த செய்தி எல்லாம் பொய்யாக அல்லவா இருக்க வேண்டும்?’ என்று அப்பொழுதே சிந்திக்கத் தொடங்கி விட்டாள் அவள்.

வானவிக்கும் இயற்கையாக இது போன்ற ஐயம் தோன்றித்தான் இருக்க வேண்டும். ஆனால் அவள், காரியார்த்தமாகக் காதல் கொண்ட காளையைக் கட்டழகனாகக் கண்ணெதிரே கண்டதும் அடைந்த களிப்பில் உலகையே மறந்திருந்ததால், ஐயங்களுக்கும், ஆராய்ச்சிகளுக்கும் அவள் உள்ளம் அப்போது இடம் அளிக்கவில்லை. ஆதலால்தான் செய்தி வெளிப்பட்டதும், அவள் அடைந்த அதிர்ச்சியும் ஏமாற்றமும் பங்கயற்கண்ணி அடைந்தவைகளைவிட அதிகமாக இருந்தன.

மதுராந்தகன் வந்து அந்தத் திடுக்கிடும் செய்தியை அறிவித்ததும், தான் நினைத்தவாறு இது ஓர் அரசியல் சூழ்ச்சியே என்பது பங்கயற்கண்ணிக்கு உறுதியாகிவிட்டது. தன் தோழி வானவிக்கு இது ஏமாற்றத்தையே அளித்திருக்கும்; அவளுடைய வெற்றிக் களிப்புக்கு ஒரு பேரிடியாகவே இருந்திருக்கும். ஆயினும் என்ன நோக்கத்தோடு குந்தள இளவரசர் இச்சூழ்ச்சியைக் கையாண்டிருக்கிறாரோ, யார் அறிவார்? எதுவாயினும், வானவிக்கு ஆசை காட்டி மோசம் செய்ய வேண்டும் என்ற கருத்துடன் அவர் இதைச் செய்திருக்க முடியாது. ஏனென்றால், அவள் ஓலை கொடுத்து அனுப்பியிருந்த வீரனையே அவர் நடுவழியில் தானே சந்தித்திருக்கிறார்! எனவே இதில் மிக முக்கியமான அரசியல் தந்திரந்தான் ஏதேனும் இருக்க வேண்டும்; அதை அறிந்து கொள்ளுமுன், குந்தள இளவரசரைத் தவறாக மதிப்பிடுவது மதியீனம் என்று முடிவுறுத்தினாள் அவள்.

கணப் பொழுதில் இத்தகைய மதி நுட்பமான முடிவுக்கு வந்துவிட்ட பங்கயற்கண்ணிக்கு, நெருங்கிக் கொண்டிருக்கும் அபாயத்திலிருந்து விக்கிரமாதித்தனைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆதலால், அங்கே நிலவிய அமைதியைக் கலைத்தாள் அவள். “நம் வீரர்களென்றே நினைக்கிறேன். வாருங்கள், அவர்கள் தலை மறையுமட்டும் எல்லோரும் அந்தப் புதர் மறைவில் பதுங்கிக் கொள்வோம்,” என்று கூறிவிட்டு, கால் அளித்த வேதனையையும் பொருட்படுத்தாமல்,



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சிலையாகி நின்ற வானவியை இழுத்துக் கொண்டு சிறிது தொலைவில் இருந்த பெரிய தாழம்புதர் ஒன்றை நோக்கி விரைந்தாள்.

"என்ன அக்கா? என்ன அபாயம்? யார் இவர்?" என்று கேள்விகளை அடுக்கிய மதுராந்தகனையும், சிறிது நேரம் வாய் பேசாமல் மற்றொரு புதர் மறைவில் பதுங்கிக் கொள்ளச் செய்தாள் பங்கயற்கண்ணி.

எதிர்க் கரையில் கேட்ட குதிரை அடி ஓசைகள் நெருங்கி வந்து, பிறகு தொலைவில் சென்று தேய்ந்துவிட்டன. அதன் பிறகுதான் பங்கயற்கண்ணிக்கு மூச்சுச் சரியாக வந்தது. இன்னும் வேங்கி வீரனின் உடையிலேயே இருந்த குந்தள இளவரசரை அந்த வீரர்கள் மட்டும் கண்டிருந்தால்? அதிலும் சோழ அரச குடும்பத்தைச் சார்ந்த இருவருடன்? - தெய்வந்தான் மதுராந்தகனின் உருவில் வந்து சரியான சமயத்தில் விக்கிரமாதித்தனையும் வானவியையும் காத்தது என்று அவள் நினைத்தாள். 'இல்லாவிட்டால், குதிரைகளின் குளம்போசை காதில் விழும்பொழுது நாங்கள், நம் வீரர்கள் கால்வாய்க் காவலுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்றெண்ணி வாளா இருந்திருப்போமே!'

"படையினர் போய்விட்டனர். எல்லோரும் வெளியே வாருங்கள்," என்று கூறியவாறு, தான் பதுங்கியிருந்த புதரிலிருந்து வெளியே வந்தான் மதுராந்தகன். அவனுக்கு இவர்கள் செயல் ஒரே குழப்பமாக இருந்தது.

ஆனால் வானவி, பங்கயற்கண்ணி, விக்கிரமாதித்தன் மூவரும் மறைவிடத்திலிருந்து நகரவில்லை. எனவே அவன் அவர்கள் அருகில் வந்து, "ஏன் அமர்ந்திருக்கிறீர்கள்? இவர் யார்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!" என்றான்.

வேங்கி வீரனை ஒற்றனெனச் சந்தேகித்துச் சோழப் படையினர் வருகிறார்கள் என்றதும், வானவியும், பங்கயற்கண்ணியும் பரபரப்படைந்து தங்களுடன் இருந்த அந்நியனை மறைவிடத்துக்கு அழைத்துச் சென்றனர். கூர்மதியுடைய எவரும் இந்நிகழ்ச்சியிலிருந்தே அந்த அந்நியன்தான் வேங்கி வீரன் என உணர்ந்திருப்பார்கள். ஆனால் மதுராந்தகன் அத்தனை அறிவு படைத்தவன் அல்லன். வெறும் வாய் வீச்சையும், அசட்டுத் துணிவையும் அன்றி, பாராட்டுதற்குரிய பண்புகள் ஏதும் அவனிடம் கிடையாது.

அதை வானவியும், பங்கயற்கண்ணியும் அறிவார்கள். எனவே அவன் இன்னுங்கூடத் தங்களுடன் இருப்பவர் யார் என்று உணர்ந்து கொள்ளாததைக் கண்டு வியப்படையவில்லை. "இவர்தான் அவர்கள் தேடி அலையும் வேங்கி வீரர்!" என்று பங்கயற்கண்ணி வெளிப்படையாகக் கூறியபோது கூட அந்த நுண்ணறிவு அற்றவன், "என்ன? உண்மையாகவா?" என்று வியப்பைச் சிந்தினான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"ஆமாம்."

"ஐயோ! அப்படியானால் இவரை ஏன் பதுக்கி வைத்தீர்கள்? நான் இப்பொழுதே போய்..."

விக்கிரமாதித்தானின் உறையிலிருந்து வெளிவந்து தன்னை நோக்கி நீட்டப்பட்ட வாள் அவனை பேசவிடாமற் செய்தது. "இளவரசே! இங்கிருந்து நகர்ந்தீர்களானால், உங்கள் தலை உங்களுக்கு முன் உங்கள் உடலிலிருந்து நகர்ந்து விடும்!"

"சீ! கேவலம், ஓர் அயல்நாட்டுப் படைவீரன் நீ! உனக்கு இத்தனை வாய்த்துடுக்கா?" என்று குதிக்க முயன்ற சகோதரனை வானவி கையமர்த்தினாள். "மதுராந்தகா! நாவை அடக்கு. இவர்... இவர்..."

"ஆமாம், உங்கள் மைத்துரனராகப் போகிறவர்!" என்று தோழி கூறத் தயங்கியதைத் தெளிவாக்கினாள் பங்கயற்கண்ணி.

"பங்கயா! விளையாடுகிறாயா? அன்று குந்தள இளவரசரை மணக்கப் போவதாக ஓலை அனுப்பிய என் சகோதரி, இன்று சாதாரண வேங்கி வீரன் ஒருவனை..." அவனுக்கே மேலே பேச வரவில்லை.

அவனுடைய பேதமையைக் கண்டு கொல்லென நகைத்த பங்கயற்கண்ணி, "இல்லை இளவரசே; நீங்கள் நினைத்திருக்கிறவாறு இவர் வேங்கி வீரன் இல்லை. வேங்கி வீரரின் உடையில் இருக்கும் குந்தள இளவரசர்தாம்!" என்று விளக்கினாள்.

"அப்படியா? குந்தள இளவரசர் விக்கிரமாதித்தரா? மன்னிக்க வேண்டும், மைத்துனரே!" என்று விக்கிரமாதித்தனின் கரங்களைப் பற்றினான் மதுராந்தகன்.

விக்கிரமாதித்தன் மறுமொழி கூறவில்லை. அவன் மதுராந்தகனின் கையை உதறிவிட்டுத் தன் கையிலிருந்த உடைவாளை உறையில் செருகிக் கொண்டே பங்கயற்கண்ணியை நோக்கி, "தோழி, நான் சிறிது நேரம் இளவரசியுடன் தனிமையில் பேச விரும்புகிறேன்," என்றான்.

அதனை ஆமோதிப்பவள் போல வானவியும் அவளை நோக்கிக் கண்சாடை காட்டவே, "வாருங்கள் இளவரசே, நாம் சாலைக்குப் போகலாம்," என்று பங்கயற்கண்ணி மதுராந்தகனை அழைத்தாள்.

"அக்கா! மைத்துனர் ஜாக்கிரதை. மீண்டும் நம் படையினர் யாரேனும் இந்தப் பக்கம் வந்தாலும் வரலாம்," என்று எச்சரித்துவிட்டு அங்கிருந்து அகன்றான் மதுராந்தகன். பங்கயற்கண்ணியும் அவனைப் பின் பற்றினாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவர்கள் தலை மறைந்ததும், "உட்கார் வானவி," என்று உரிமையுடன் அவளை ஒருமையில் குறிப்பிட்டான் விக்கிரமாதித்தன்.

வானவி அமரவில்லை. அவள் திடீரென எதையோ நினைத்துக்கொண்டு, "இளவரசே! நீங்கள் இனி இந்த உடையில் இருப்பது அபாயத்தை விரும்பி அழைப்பதாகும். உங்களிடம் மாற்றுடை ஏதும் இல்லையா?" என்று கவலையோடு வினவினாள்.

"இருக்கிறது. ஆனால் மாற்றுடை அணிய வேண்டிய தேவை இப்போதுதானே ஏற்பட்டிருக்கிறது!" என்றான் விக்கிரமாதித்தன்.

"எங்கே வைத்திருக்கிறீர்கள் மாற்றுடைகளை?"

"அருகில்தான். அதோ, அந்த மரக் கூட்டத்தின் மறைவில் என் குதிரையைக் கட்டியுள்ளேன். அதன் சேணத்தில் இருக்கின்றன."

"அப்படியானால் முதலில் அங்கே போய் உடை மாற்றிக் கொண்டு வந்துவிடுகிறீர்களா? நாம் பயமின்றிப் பேசிக் கொண்டிருக்கலாம்," என்று கொஞ்சும் குரலில் வேண்டிக் கொண்டாள் வானவி.

விக்கிரமாதித்தனும் அபாயத்தைத் தானாக எதிர்கொள்ள விரும்பவில்லை. "சரி வானவி," என்று கூறிவிட்டு அவன் மரங்களிடையே புகுந்து சென்றான்.

வானவி முன்பே தன்னைச் சமாளித்துக் கொண்டு விட்டாள். திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்தும், ஏமாற்றத்திலிருந்தும் தன்னை மீட்டுக் கொண்டு விட்டாள். தம்பி மதுராந்தகனைப் போல் அறிவிலியல்லள் அவள். கூரிய அறிவு படைத்தவள். ஆதலால் ஏதோ ஒரு நிமித்தம் பற்றியே விக்கிரமாதித்தன் வேங்கி வீரனாக இங்கு வந்து ஒரு பொய்யோலையைத் தன் பெரிய தந்தையாரிடம் கொடுத்திருக்க வேண்டும் என்று அவள் ஊகித்து விட்டாள். அது எந்த நிமித்தம் பொருட்டாக இருந்தாலும், தன் ஆணைகளை அவன் ஒருவனே நிறைவேற்றி வைக்கக் கூடியவன் என்ற நம்பிக்கை அவளிடம் தளரவில்லை. ஆம், சற்று முன் கூட அவன் அதனை நிறைவேற்றி வைப்பதாக உறுதி கூறினானே! எனவே, தனது வெற்றிக் களிப்பு இப்பொழுது தோல்வியில் முடிந்து விட்டாலும், இவனை விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டு காரியம் நிறைவேற வழி செய்து கொள்ள வேண்டும் என்று அவள் துணிந்தாள். அதற்காகவேதான் அவன் தன்னுடன் தனிமையில் பேச விரும்பியதும் கண் அசைவின் மூலம் தம்பியையும், தோழியையும் அப்புறப் படுத்தினாள். இப்பொழுது அவனை உடைமாற்றி வருமாறும் வேண்டிக் கொண்டாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சற்றைக்கெல்லாம் விக்கிரமாதித்தன் மாற்றுடை அணிந்து திரும்பி வந்தான். பகலெனக் காய்ந்த நிலவில் அரசகுலத்தினர் அணியும் பகட்டான ஆடைகளுடன் வந்து நின்ற அவனது தோற்றம் வானவியின் இளமை உள்ளத்தைப் பரவசமடையச் செய்தது. கண்ணால் கண்டிராத ஒருவனை அவள் காரியார்த்தமாகக் காதலித்தாள். தன் காரியத்தை நிறைவேற்றி வைத்தால் அவனை மணந்து கொள்வதாக ஓலை அனுப்பினாள். இப்பொழுது அவனது எழில் உருவைத் தெளிவாகக் கண்டதும் இயல்பாகவே அவள் உள்ளம் அவனைக் காதலிக்கத் தொடங்கிவிட்டது. 'என் ஆணைகள் நிறைவேற உதவினாலும், உதவாவிட்டாலும் இந்தக் கட்டழகரைக் கணவராகப் பெற்றால் நான் பாக்கியசாலியே' என்று அவள் எண்ணினாள்.

திரும்பி வந்த விக்கிரமாதித்தன் தாங்கள் முன்பு மறைந்து கொண்ட தாழம்புதரை அடுத்திருந்த பிரும்மாண்டமான வாகை மரம் ஒன்றன் வேரில் அமர்ந்தான். வானவியும் அங்கே வந்து அவன் அருகில் உட்கார்ந்தாள்.

விக்கிரமாதித்தன் பேசலானான்: "என்னை மன்னித்துக் கொள் வானவி. என் செயல் உனக்குப் பெரிய ஏமாற்றத்தையே விளைவித்திருக்கும். ஆனால், நீ ஏமாற்றத்துக்கு உள்ளானாலும் தவறில்லை; பொய்யை உண்மையென நம்பி, தவறாக ஏதாவது செய்துவிடலாகாது என்பதற்காகவே, நாடு திரும்பு முன் உன்னை எவ்வாறேனும் தனியே சந்தித்து விவரங்களைக் கூறிவிட வேண்டுமென்று விழைந்தேன். எனக்கு அதிகக் கஷ்டம் அளிக்காது, தற்செயலாகவே நிகழ்ந்து விட்டது நமது சந்திப்பு!" என்றான் அவன்.

வானவி ஒன்றும் பேசவில்லை. அவனுடைய எழில் உருவை தெவிட்டாமல் கண்களால் பருகிக் கொண்டிருந்தமையால், விக்கிரமாதித்தன் பேசியது ஒன்றுமே அவளது செவிகளில் புகவில்லை.

அவளுடைய அமைதியைத் தவறாகக் கருதிய விக்கிரமாதித்தன், "என் மீது கோபமா, வானவி?" என்று வினவி, அன்புடன் அவளது கரங்களைப் பற்றினான்.

அந்த முதல் ஸ்பரிசம் வானவியை மெய்மறக்கச் செய்தது. "உங்கள் மீது கோபமா? இளவரசே! இது என்ன அபசாரம்?" என்று அவள் குமுறினாள்.

"கோபம் இருந்தாலும், இல்லாவிட்டாலும், உன்னிடம் முழு விவரங்களையும் கூறிவிட விரும்புகிறேன். கண்ணே! நான் இங்கே அந்தப் பொய்யோலையுடன் வந்தது எதற்காகத் தெரியுமா?"

"குறிப்பாகத் தெரியாது. இருந்தாலும் அரசியல் காரணம் ஏதாவது பற்றி இருக்குமென நினைத்தேன்."



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“அரசியல் காரணம் ஏதும் இல்லை, அன்பே. எல்லாம் உனக்காகத்தான். இந்தப் பொன்னுடலை என் உடமையாக்கிக் கொள்ளும் பொருட்டுத்தான்.” அவன் வானவியை அருகில் இழுத்து அவள் தலையைத் தன் பரந்த மார்பின் மீது சாய்த்துக் கொண்டான்.

“எனக்காகவா?” போதையேறிய குடிகாரனைப் போல் இன்பத்தின் சிலு சிலுப்பில் தேனென இசைத்தால் வானவி.

“ஆம், உன் விருப்பத்தை நிறைவேற்றத்தான். விவரமாகச் சொல்கிறேன், கேள். முடக்காற்றுப் போரில் நாங்கள் அடைந்த தோல்வி படுமோசமானது. ஏறக்குறைய எங்கள் படைப்பலம் அனைத்தையுமே இழந்து விட்டோம். ஆயினும் அது கூட எங்களைப் பாதிக்கவில்லை. தண்டநாயகன் வாலாதேவனை இழந்ததுதான் எல்லாவற்றிலும் பெரிய இழப்பாகப் பட்டது எங்களுக்கு. அவன் மூலம் நாங்கள் பல வெற்றிகளை எதிர்பார்த்திருந்தோம். போர்க் களத்தில் படைகளை அணிவகுத்து நடத்துவதிலும் சரி, நேர் நின்று போர் செய்வதிலும் சரி, அவனுக்கு இணையே இல்லையென்று நாங்கள் இறுமாந்திருக்க, உங்கள் பெரிய தந்தை அத்தகைய அசகாயசூரனைப் போர் செய்து கொன்றுவிட்டதைக் கண்டதும் நாங்கள் பெரும் அதிர்ச்சி அடைந்தோம். வாலாதேவனையே வீழ்த்திவிட்ட அவரைப் போரில் வெல்வதென்பது இயலாத செயல் என உணர்ந்த நாங்கள், அவரை வஞ்சகமாகக் கொன்றாலன்றி, இனி சோழர்களுடன் நிகழ்த்தும் போர் எதிலும் வெற்றியை எதிர்பார்க்க முடியாதென்று தெளிந்தோம். எனவே சோழ நாட்டுக்குச் சென்று இராசமகேந்திரரை ஒழிக்கும் பணியை என் தந்தையார் எனக்கு இட்டார். அதற்காகவே நான் இங்கு வந்து கொண்டிருந்தேன்.”

“விளங்கி விட்டது. வழியில் நந்துகனைச் சந்தித்தீர்கள். அவன் என் பெரிய தந்தையார் இறந்ததை அறிவித்திருப்பான். ஏனெனில், அவன் பரிச்சாலையில் குதிரை வாங்கிக் கொண்டு அன்றிரவுதானே புறப்பட்டிருப்பான்? அதற்குள் அவர் காலமாகிவிட்ட செய்தி அவனுக்கு தெரிய வந்திருக்குமே? அதோடு என் ஓலையையும் தந்திருப்பான். உங்களை அடைய சோழ இளவரசி ஒருத்தி ஏங்கி நிற்பதை அறிந்ததும், அவள் அழகியா, குரூபியா என்பதைத் தெரிந்து கொண்ட பின்னரே செயற்பட வேண்டும் என்று எண்ணியிருப்பீர்கள். ஆனால் அதைக் கண்டறிய கோட்டைக்குள்ளே வர வேண்டியிருக்குமே! அதற்காக வேங்கி வீரனாக மாறி ஒரு பொய்யோலையைத் தயாரித்து எடுத்துக்கொண்டு வந்தீர்கள்: அப்படித்தானே?” என்று குறும்பு நகையுடன் குறுக்கிட்டுக் கூறினாள் வானவி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“இல்லை வானவி. அப்படியில்லை. உன் எழிலைப்பற்றி ஓலையைத் தந்த போதே நந்துகன் விவரித்து விட்டான். ஆதலால் அதுவன்று நான் இங்கே வந்ததன் நோக்கம்.”

“பின்?”

“வானவி! உன்னை என் உயிருக்கு உயிரானவள் என நம்பி அரசியல் அந்தரங்கங்கள் சிலவற்றை இப்பொழுது சொல்லப் போகிறேன். முடக்காற்றுப் போரில் நாங்கள் எங்கள் படைப்பலத்தை வெகுவாக இழந்து விட்டோம் என்று சற்றுமுன் சொன்னேன். உண்மையைச் சொல்லப் போனால், அப்போரில் எஞ்சியவர்கள் நான், என் தந்தை ஆகவமல்லர், என் சகோதரன் ஜெயசிம்மன், மற்றும் இருகையன் போன்ற சில படைத் தலைவர்கள் தாம். ஆம், போரில் உயிர் தப்பிய எங்கள் படையினர் அனைவரையுந்தான் உங்கள் நாட்டினர் போர்க் கைதிகளாகச் சிறைப்பிடித்து வந்து விட்டனர்.

“இத்தகைய நிலையில் நாங்கள் மீண்டும் ஒரு சிறு படையைத் திரட்டுவதென்றால் கூடக் குறைந்தது ஒரு மாத காலம் ஆகும். ஆனால் உன் ஓலையோ, உடனடியாக விசயாதித்தருக்கு உதவினாலன்றி குலோத்துங்கன் வேங்கி அரியணையில் ஏறிவிடக்கூடுமென்று அறிவித்தது. ஆதலால் நான் முதன் முதலில் குலோத்துங்கன் வேங்கி போய்ச் சேராமலிருக்க வகை செய்ய விரும்பினேன். நந்துகனைக் கல்யாணபுரம் சென்று என் தந்தையாரிடம் எல்லா விவரங்களையும் அறிவித்து, விரைவில் ஒரு படையைத் திரட்டிக் கொண்டு தயாராக இருக்கும்படி செய்தி அனுப்பிவிட்டு, வேங்கி வீரன் உடையில் அந்தப் பொய்யோலையுடன் இங்கே வந்தேன். என் ஓலைச் செய்தி பொய்யென்பது வெளியாகாமலே இருந்துவிடும் என்பது என் எண்ணமன்று. அதற்கு சிறிது காலம் பிடிக்குமென்று நினைத்தேன். ஆனால் என் நினைவுக்கு மாறாக, அது உடனடியாகவே வெளியாகி விட்டது. ஆயினும் நீ கவலை கொள்ளாதே, வானவி. இனி உன் விருப்பத்தை நிறைவேற்றுவது ஒன்றே என் வாழ்வின் குறிக்கோளாக இருக்கும், உடனே இயலாவிடினும், விரைவில் உன் ஆணைகளை நிறைவேற்றி, உன் உள்ளத்தைக் குளிர்வித்து, உன் கரங்களை உவகையோடு பற்றுவேன்.”

விக்கிரமாதித்தனின் இந்த வாக்குறுதி வானவியை இன்பவாரிதியில் ஆழ்த்தியது. அவள் தன்னை மறந்த களிப்புடன் அவன் கைகளை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு, “அந்த நன்னாளுக்காக ஆவலுடன் காத்திருப்பேன், அன்பே. என் ஆணைகள் நிறைவேறி, அன்புக்குரிய உங்களோடு கல்யாணபுரத்தில் காத்திருப்பேன்!” என்றாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

காதலர்கள் பின்னும் சிறிது நேரம் உல்லாசமாக உரையாடிக் கொண்டிருந்த பிறகு பிரிந்தனர். விக்கிரமாதித்தன் தன் குதிரை நிறுத்தப் பட்டிருந்த இடத்தை நோக்கி நடந்தான். வானவி சாலைக்குப் புறப்பட்டாள். இருவரும் நின்ற இடத்திலிருந்து ஓரடி எடுத்து வைத்தார்களோ இல்லையோ, “நில்லுங்கள்!” என்ற ஓர் அதட்டல் குரல் அவரகளைத் திடுக்கிட வைத்தது. மறுகணம் எதிரே இருந்த மரத்தின் மறைவிலிருந்து உருவிய வாளுடன் குலோத்துங்கன் எதிர்ப்பட்டான். அவனைத் தொடர்ந்து ஆயுதம் தாங்கிய சோழப் படைவீரர் பலர் வெளிவந்தனர்.

விக்கிரமாதித்தன் சட்டென்று வாளை எடுத்துக்கொண்டு சண்டைக்குத் தயாரானான். குலோத்துங்கனையும், சோழ வீரர்களையும் வீழ்த்தி விட்டுத் தப்பி ஓடிவிடத்தான் அவன் முயன்றான். ஆயினும் இருபதுக்கும் மேற்பட்டவர்களுடன் அவன் ஒருவனாகவே போரிட்டு மீள இயலவில்லை.

விரைவில் அவன் உடைவாள் ஒடிந்து விழுந்தது. விக்கிரமாதித்தன் கைதானான். அவனது கைகளைக் கயிற்றால் பிணித்துச் சோழ வீரர்கள் இழுத்துச் சென்ற காட்சியை வானவி மட்டும் கண்டிருந்தாளானால், அங்கேயே மனமுடைந்து விழுந்து செத்திருப்பாள். ஆனால் அவள்தான் விக்கிரமாதித்தன் சோழ வீரர்களுடன் சண்டையில் ஈடுபட்டிருந்த போது, தன் தலை தப்பினால் போதுமென்று அங்கிருந்து நழுவி விட்டாளே!

## அத்தியாயம் – 10. ‘காலம் வரக் காத்திருப்பேன்!’

**சோ**ழதேவர் வேங்கி நாட்டிலிருந்து இரண்டாவதாக வந்த ஓலையைப் படித்துவிட்டு ஏதோ முணு முணுத்ததும், அருகில் அமர்ந்திருந்த இளையதேவர் வீரராசேந்திரர் எழுந்து அவரிடம் சென்று, “என்ன அண்ணா?” என்று வினவினார்.

“சூழ்ச்சி! குந்தளத்தானின் சூழ்ச்சி! காலையில் ஓலை கொணர்ந்தவன் அவர்களின் ஒற்றன்! பிடியுங்கள் அவனை. எங்கிருந்தாலும் உடனே பிடித்து என்னிடம் கொண்டு வாருங்கள். செல்லுங்கள் படைத் தலைவர்களே!” என்று குமுறினார் இராசேந்திர தேவர்.

மறுகணம் மந்திராலோசனை அவை கலைந்தது. படைத் தலைவர்கள் ஒற்றனைப் பிடித்து வரப் பறந்தனர். அரண்மனை எங்கும் ஒரே பரபரப்பு. “பொய் ஓலை! குந்தள ஒற்றன்!” என்பதே எங்கும் பேச்சு.

அந்த ஒற்றனைச் சோழப் படைத் தலைவர்கள் அனைவருமே நேரில் பார்த்திருந்தனர். தவிர, அவன் விடை பெற்றுச் சென்று அதிகப்பொழுதும்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஆகிவிடவில்லை. எத்தனை வேகமாகச் செல்லக் கூடிய குதிரையில் போயிருந்தாலும் அரைக் காதம் அல்லது ஒரு காதத் தொலைவுக்கு அப்பால் அவன் சென்றிருக்கவே முடியாது. சோழப் படையினரிடம் குந்தளத்தாரின் குதிரையை வேகத்தில் விஞ்சிவிடும் குதிரைகள் நிறைய உண்டு. அத்தகைய குதிரைகளில் ஏறி, ஆளுக்குச் சில வீரர்களையும் உடன் அழைத்துக் கொண்டு படைத்தலைவர்கள் தலைக்கு ஒரு சாலையாக விரைந்தனர். ஆனால் பாவம், அந்த ஒற்றன் இன்னும் நகர் எல்லையைக் கடந்து அப்பால் செல்லவில்லை என்பதை அவர்கள் யாரும் அறிந்திருக்கவில்லை!

தன் தந்தை இறந்துவிட்டதாகவும், நாட்டைச் சிறிய தந்தை கைப்பற்றிக் கொண்டு விட்டதாகவும் வந்த ஓலை பொய்யோலை என்ற விவரம் சற்றைக்கெல்லாம் குலோத்துங்கனுக்கும் தெரிய வந்தது. அவனும் அந்த ஒற்றனை நேரில் பார்த்திருந்தான். ஆதலால் தானும் அவனைத் தேடும் பணியில் ஈடுபடலாமென அவனும் குதிரையேறிக் கிளம்பினான். படைப் பயிற்சிப் பள்ளியைச் சார்ந்த சில வீரர்களும் அவனுடன் சென்றனர்.

குலோத்துங்கனும் அவனுடன் வந்த வீரர்களும் முதலில் உட்கோட்டையின் வாசல் வழியே வெளியேறி வெளிக் கோட்டையின் கிழக்கு வாசலுக்கு வந்தனர். வெளிக்கோட்டையின் கிழக்கு வாசல் காவலர்கள், அவர்கள் செல்லும் நெடுஞ்சாலை வழியில் படைத்தலைவர் அணிமுரி நாடாழ்வார் சில வீரர்களுடன் முன்னமே சென்றிருப்பதாக அறிவித்தனர். எனவே குலோத்துங்கன், தாங்கள் வேறு சாலையில் தேடிச் செல்வது நலமெனக் கருதி, தன்னுடன் வந்தவர்களை இட்டுக்கொண்டு வெளிக்கோட்டையின் கிழக்கு வாசலிலிருந்து சோழேச்சுரன் ஆலயத்துக்குச் செல்லும் சிறிய சாலையில் சென்றான். அச்சலை வழியே சென்றால் சோழேச்சுரன் ஆலயத்துக்கு அண்மையில் காவிரிக் கால்வாயைக் கடப்பதற்கு ஒரு பாலம் உள்ளது. பாலத்தின் வழியே கால்வாயின் அக்கரை சேர்ந்தால் அங்கே ஓர் ஒற்றையடிப் பாதை பொது மக்கள் உபயோகத்துக்கானதன்று, அது கால்வாய் காப்பாளர் படையின் உபயோகத்துக்கானது. காவிரி ஆறுவரைச் செல்லும் அந்த ஒற்றையடிப் பாதை, பிறகு வடக்கே செல்லும் நெடுஞ்சாலையுடன் இணைகிறது. அப்பொழுது மாலை மங்கி முன்னிரவு தொடங்கிவிட்ட போதிலும், கால்வாய்க் காப்பாளர் படையினர் தங்கள் காவல் வேலையைத் தொடங்கும் நேரமாகிவிடவில்லை. மனிதர் நடமாட்டமற்ற அந்த ஒற்றையடிப் பாதையைக் குந்தள ஒற்றன் ஏன் பின் பற்றியிருக்கக்கூடாது? கால் காதத் தொலைவை, யார் கண்ணிலும் படாமல் அவன் கவலையின்றிக் கடக்கலாமே?



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இந்த எண்ணத்துடன்தான் குலோத்துங்கன் அவ்வழியில் அவனைத் தேடிச் சென்றான். குலோத்துங்கன் ஊகித்தது முற்றிலும் சரியே. ஒற்றனாக வந்த விக்கிரமாதித்தன், தான் கொணர்ந்த ஓலை பொய்யோலை என்பது இவ்வளவு விரைவில் வெளியாகிவிடும் என்று எதிர்பார்த்திரா விட்டாலும், வானவியை ரகசியமாகச் சந்திக்க விரும்பியதால், அதற்கு என்ன வழியைக் கையாளலாம் என்பதை, எவர் கண்ணிலும் படாத ஓரிடத்திலிருந்து சிந்திக்க நினைத்தான். உடனே நாடு திரும்பப் போவதாக மாமன்னரிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பிய அவன், இப்பொழுது குலோத்துங்கன் வந்த வழியாகவே வெளிக்கோட்டைக் கிழக்கு வாசலுக்கு வந்து, பின்னர் சோழேச்சுரன் ஆலயத்துக்குச் செல்லும் சிறிய சாலையில் திரும்பினான். ஆலயத்தை நெருங்கியபோது பொழுது இருட்டி விட்டது, அதோடு காவிரிக் கால்வாயின் கிழக்குப் பகுதி மரங்கள் அடர்ந்து இருந்ததும் அவனுக்கு வசதியாகப் போயிற்று.

ஆலயத்துக்குத் தெற்கே சிறிது தொலைவில் வாகை மரங்கள் நெருங்கி வளர்ந்தும், தாழம்புதர்கள் மண்டியும் இருந்த ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து, குதிரையை ஒரு மரத்தின் வேரில் கட்டிப் போட்டுவிட்டுத் தானும் அம்மரத்தடியிலே படுத்தாவாறு வானவியைச் சந்திக்கும் வழியில் சிந்தனையைச் செலுத்தினான். இராசமகேந்திரரைத் தீர்த்துக்கட்டும் நோக்கத்துடன் கல்யாணபுரத்திலிருந்து வந்தவனாதலால், அவனிடம் பல்வேறு புனைவேடங்களுக்கான உடைகளும் இதரப் பொருள்களும் இருந்தன. அவற்றின் உதவியால், தன்னை கடாரத்து முத்து வர்த்தகனாக மாற்றிக் கொண்டு மறுநாள் காலையில் முடிகொண்ட சோழன் அரண்மனைக்குச் சென்று அவளைச் சந்திக்க முயலுவதென்று அவன் முடிவுறுத்தினான். மாலையில் சோழ கேரளன் அரண்மனையில் உணவருந்திய பிறகே கிளம்பியிருந்தமையால் இரவுப் பொழுதை நிம்மதியாக இந்த மனித நடமாட்டமற்ற இடத்திலே தள்ளலாமென்று அங்கேயே உறக்கம் கொள்ள ஆரம்பித்தான்.

சிறிது நேரம் நன்றாகத் தூங்கவும் தூங்கினான் விக்கிரமாதித்தன். ஆனால் பிறகு, சோழேச்சுரன் ஆலயத்து இரவுப் பூசையின்போது எழுந்த கண்டாமணியின் பேரோசை அவன் உறக்கத்தைக் கலைத்து விட்டது. அதன் பின்னர் நெடும்பொழுது அவனுக்கு உறக்கம் வரவில்லை. சிறிது நேரத்துக்குப் பிறகு அவனுக்கு தாகமும் எடுத்தது. கால்வாயில் நீர் பருகச் சென்றபோது, தான் தங்கியிருந்த மரக்கூட்டத்துக்கு அப்பால் கால்வாய்க் கரையில் படிக்கட்டு ஒன்று இருப்பதையும், அதன் கடைசிப் படியில் இரண்டு இளம் பெண்கள் அமர்ந்திருப்பதையும் கண்டான். இளமை துடிக்கும் வயதல்லவா அவனுக்கு? பெண்களைக் கண்டதும் அருகில் சென்று பார்க்கவேண்டுமென்ற அவா



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவனுக்கு உண்டாகியது. போனான். போய், பங்கயற்கண்ணியை முதலை வாயிலிருந்து மீட்டான். தான் காண விரும்பியவளையும் கண்டான். அவளைத் தனிமைப்படுத்தி ஆசை தீர உரையாடிக் கொண்டும் இருந்தான். ஆனால் இரண்டு கண்கள் தங்களைக் கண்காணிப்பதை அவன் உணரவில்லை.

பொழுது இப்பொழுது நன்றாக இருட்டி நிலவு வீச ஆரம்பித்து விட்டது. முன்பு அவர்கள் கடந்து சென்ற பாலத்தை நெருங்கியபோது சயங்கொண்ட சோழ பிரம்மாதிராசர் என்ற படைத்தலைவரும் வேறு சில வீரர்களும் ஒற்றையடிப் பாதையில் எதிரே வந்தனர். (இவர்களுடைய குதிரைகளின் குளம்போசை கேட்டு வானவி, விக்கிரமாதித்தன், பங்கயற்கண்ணி, மதுராந்தகன் ஆகிய நால்வரும் தாழம்புதர்க்குள்ளே பதுங்கிக் கொண்டனர்.) பிரம்மாதிராசர், தாங்கள் கோட்டை அகழியிலிருந்து கால்வாய்க் கரை ஓரமாகவே வந்ததாகவும், ஆதலால் குலோத்துங்கனும் அவனது வீரரும் திரும்புகாலில் அவ்வழிச் செல்லாமல், கிழக்குக் கரையை ஒட்டிச் செல்லும் சோழேச்சுரன் ஆலயத்துக்கு வரும் சாலை வழியே போகுமாறும் கூறினார்.

அவ்வாறே அவர்கள் மீண்டும் பாலத்தின் வழியே திரும்பி வந்து, ஆலயத்தின் வெளிமதிலைச் சுற்றிக்கொண்டு வானவியும், பங்கயற்கண்ணியும் திரும்பிய சாலையில் புகுந்தனர். இதற்குள் ஆலயத்தில் இரவுப் பூசை முடிந்து யாவரும் திரும்பி விட்டமையால் சாலையில் அமைதி நிலவியது. அந்த அமைதியில், விக்கிரமாதித்தன் மறைந்திருந்த இடத்துக்கு நேரே அவர்கள் வந்தபோது, குதிரையின் கனைப்பு ஒலி ஒன்று கேட்டுச் சட்டென்று நின்றான் குலோத்துங்கன். அவ்வொலி அடுத்திருந்த மரக்கூட்டத்தின் இடையிலிருந்து வந்ததால் அவனுக்கு சந்தேகம் எழுந்தது. தன் வீரர்களை அங்கேயே சாலையில் நிறுத்திவிட்டு அவன் மட்டும் குதிரையிலிருந்து இறங்கி, மரக்கூட்டதினிடையே நடந்து சென்றான். அங்கே தாங்கள் தேடித்திரிந்த அந்த ஒற்றன் வேங்கி வீரன் உடைகளைக் களைந்துவிட்டு அரசகுலத்தினர் அணியும் ஆடைகளை அணிவதை அவன் கண்ணுற்றான். அப்படியே அவன் மீது பாய்ந்து கட்டிப் பிடித்துக் கொள்ளும் துடிப்புடன் ஓரடி எடுத்து வைத்தான் குலோத்துங்கன், ஆனால் இது என்ன? அவன் எங்கோ வேகமாகச் செல்கிறானே!

குலோத்துங்கன் அவனைப் பின்பற்றினான். அதோ! அதோ நிற்பது யார்? வானவி அல்லவா? ஒற்றன் வாகை மரத்தின் வேரில் அமருகிறான்; அவனருகில் அவளும் சென்று அமருகிறாளே!



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இதில் ஏதோ பெரிய சூது இருக்கிறது என்று உடனே எச்சரிக்கையடைந்தான் குலோத்துங்கன். அவன் சட்டென்று வந்த வழியே திரும்பி, தன்னுடன் வந்த வீரர்களிடம் சென்றான். எல்லோரும் குதிரையை விட்டிறங்கி, விக்கிரமாதித்தனின் குதிரை கட்டப்பட்டிருந்த இடத்திலேயே குதிரைகளை நிறுத்திவிட்டு, வானவியும் அவனும் அமர்ந்திருந்த இடத்துக்கு அருகில் வந்து ஆளுக்கு ஒரு மரத்தின் பின்னால் மறைந்து கொண்டனர்.

பிறகு நடந்தவைகளை நாம் அறிவோம்!

விக்கிரமாதித்தனை வீழ்த்தி, அவனைக் கயிற்றால் பிணைக்கச் செய்த பிறகே குலோத்துங்கனின் கவனம் வானவியின் பால் சென்றது. ஆனால் அவள்தான் காதலன் பிடிபட்ட கணத்திலேயே காற்றாகப் பறந்துவிட்டாளே! இதற்குள் அவள் பங்கயற்கண்ணியுடனும் மதுராந்தகனுடனும் முடிகொண்ட சோழன் அரண்மனை போய்ச் சேர்ந்திருப்பாளே! ஆனால் பேதைப் பெண்! அவள் இனி எதையும் மூடி மறைக்க முடியாது. தன் சூழ்ச்சிக்குச் சான்று விட்டு விட்டுத்தான் ஓடியிருந்தாள். அவள் நந்துகன் வழியே விக்கிரமாதித்தனுக்கு அனுப்பிய ஓலையை பின்னவன் அவளிடம் திருப்பித் தந்தான் அல்லவா? ஓடிய அவசரத்தில் அதைக் கீழே நழுவவிட்டு விட்டாள். அவ்வோலை குலோத்துங்கனின் கையில் அகப்பட்டு விட்டது!

சோழதேவர் சொல்லொண்ணாச் சினத்துடன் தமது அந்தரங்க அறையில் குறுக்கும் நெடுக்கும் நடை போட்டுக் கொண்டிருந்தார். அவருக்குச் சிவந்த மேனி; சிவந்த முகம். ஆதலால் குரோதம் கொதிக்கும் போது, அவரது முகம் மட்டுமின்றி மேனியும் குங்குமச் சிவப்பாக மாறிவிடும். அகன்ற பெரு விழிகளோ அச்சமயம் தீயை உமிழும். அரசர் கோபமுற்றிருக்கிறார் என்றால் அரண்மனையில் அனைவருக்கும் நடுக்கந்தான். அவரது உயிருக்கு உயிரானவர்கள் கூட அச்சமயம் அவர் எதிர்ப்பட அஞ்சுவார்கள். ஆம், மன்னர் சினம் கொண்டால், முன் நிற்பவர் யாராயிருந்தாலும் சுட்டெரித்து விடுவார்.

அன்று அவரது அத்தகைய எரிப்புக்கு ஆளாகி நின்றார் இளையத்தேவர் வீரராசேந்திரர். சிங்கத்தின் முன் எலியைக் கொண்டு நிறுத்தினால் அது எவ்வாறு நடுங்குமோ, அவ்வாறு நடுங்கிக் கொண்டிருந்தார் அவர்.

“இது அவமானம்! சோழ பரம்பரைக்கே அவமானம்! சோழ நாட்டுக்கே சொல்லில் அடங்காத அவமானம்!” என்று நடந்து கொண்டே கொதித்தார் சோழதேவர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

நீண்ட நேரமாகத் தீக்கங்கென வந்த சகோதரரின் சொல்லம்புகளை வாய் திறவாது அமைதியாகத் தாங்கி நின்ற இளையதேவர் இப்பொழுது மெதுவாக வாய் திறந்து, "அண்ணா!" என்றார்.

"ஆமாம் அண்ணா!" என்று குதித்துக்கொண்டு திரும்பினார் சோழதேவர். "இந்த அண்ணா உறவெல்லாம் அரசியலில் இல்லை. புகழ் பெற்ற இராசேந்திர சோழ மாவலி வாணராயன் அரியணையில் அமர்ந்து ஆட்சி செலுத்துவோனுக்கு உறவினரும் ஒன்றுதான். அந்த அயல்நாட்டுத் துரோகிக்கு அளிக்கப்பட்ட அதே தண்டனைதான் உன் மகளுக்கும். அவனுடன் அவளும் பாதாளச் சிறை செல்ல வேண்டியவளே. என் தம்பி மகள் என்பதற்காக நான் அவள் பால் எள்ளளவும் இரக்கம் காட்ட மாட்டேன்."

"என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் அண்ணா. மகளுக்குப் பரிந்து பேசுவதாக நினையாதீர்கள். ஆனால் சற்றுமுன் அந்தத் துரோகியிடம் இம்மாதிரி ஓலை எழுதி அனுப்பிக் குந்தள இளவரசனை இங்கு வரவழைத்ததன் காரணத்தை வினவியபோது அவள் என்ன சொன்னாள், தெரியுமா?"

"என்ன சொன்னாள்?" சோழதேவரின் சுருதி ஏனோ இறங்கி ஒலித்தது.

"மாமன்னரின் மகள் அம்மன்னரின் அரியணையில் தன் காதலனை உட்கார்த்தி விடுவதாக ஆணையிட்டு, அதனை நிறைவேற்ற முயன்று வருகையில், நான் எங்கோ இருக்கும் வேங்கி நாட்டு அரியணையில் வேறொருவரை அமர்த்த முயன்றது எப்படித் துரோகமாகும்? என்று கேட்டாள், அண்ணா, நீங்கள் அறிவீர்களோ என்னவோ? அன்று வெற்றிப்படை வரவேற்பு விழாவின்போது..."

"எல்லாம் தெரியும்!" என்று குறுக்கிட்டுக் கூறிவிட்டுச் சோழதேவர் மீண்டும் கூண்டில் அடைபட்ட விலங்கைப்போல் குறுக்கும் நெடுக்கும் நடந்தார். சிறிது நேரம் அவ்வாறு நடந்த பிறகு சட்டென்று திரும்பி வீரராசேந்திரரிடம் வந்தார். இளவலின் தோள் மீது கை வைத்து, "தம்பி! நேற்று நீங்கள் அந்தப் பொய்யோலையைப் பார்த்ததும் குந்தளத்தார் மீது மீண்டும் போர் தொடுக்க வேண்டுமென்று ஒருமுகமாகக் கூறியபோது நான் ஏன் அதற்கு இணங்கவில்லை, தெரியுமா? என் மகளின் மனத்தில் குடி கொண்டுள்ள அந்த விபரீத ஆசை அழிவதற்குத்தான். குலோத்துங்கன் வேங்கிக்கு அரசன் ஆனால்தானே அவள் அவனை இந்நாட்டின் அரையணைக்காகப் போர் தொடுக்கத் தூண்ட முடியும்? வேங்கி நாடு இனி விசயாதித்தனுக்குத்தான் என்று நான் அன்றே தீர்மானித்து விட்டேன்!" என்றார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"ஆனால் அண்ணா, அவனை வேங்கி அரியணையைக் கைப்பற்றிக்கொள்ள விட்டால் நம் நாட்டின் வடவெல்லைப் பாதுகாப்புக் கேந்திரத்தை நாம் இழந்து விடுவோமே! பல காலமாகக் குந்தளத்தாரின் கைப்பாவையாக இருந்துவரும் அவன்..."

"நமது கைப்பாவை ஆவான். ஆக்கமுடியாதென்று நினையாதே. அவன் குறிக்கோள் வேங்கி அரியணை. அதை யார் கிடைக்கச் செய்கிறார்களோ, அவர்களுக்கு அவன் அடிமை. நாம் அதை அளிக்க முந்திக்கொண்டு விட்டால்...?"

"அது சரிதான் அண்ணா; ஆனால் இப்பொழுதுதான் நிலைமை தலைகீழாக மாறிவிட்டதே. நம் மைத்துனர் நோய் மீண்டு சுகம் பெற்றுவிட்ட போதிலும் அரசியல் அலுவல்களைக் கவனிக்கும் எண்ணம் இல்லையென்றும், ஆதலால் விரைவில் குலோத்துங்கனை அங்கு வரவழைத்து அவனுக்கு முடிசூட்டிவிட மைத்துனர் விரும்புவதாகவும் அம்மங்கை தன் ஓலையில் குறிப்பிட்டிருக்கிறாளே?"

"உண்மைதான் தம்பி. ஆனால் நான் நேற்று நமது மந்திராலோசனை அவையில் அறிவித்தது நினைவில்லையா? குலோத்துங்கன் இந் நாட்டைவிட்டுப்போக விரும்பவில்லை. அதோடு வேங்கிக்குத் தனது சிறிய தந்தை வேந்தனாவதிலும் அவனுக்கு இசைவே. அவன் விரும்புவதெல்லாம் இந்நாட்டில் சிறு படைப் பகுதியின் தலைமைப் பதவியும், என் மகள் மதுராந்தகியுந்தான். எனவே விரைவில் அவர்கள் திருமணத்தை நடத்தி, குலோத்துங்கனை நமது படைத்தலைவர்களில் ஒருவனாகவும் செய்துவிடப் போகிறேன்."

"அதற்கு மதுராந்தகி இசைவாளா? அவளுடைய ஆணை...?"

"இசையாவிட்டால் அவள் துரோகியாவாள். அப்பொழுது அவளுக்கும் பாதாளச் சிறைதான் கிடைக்கும். ஆனால் இப்பொழுது இல்லை. தீ என்றதும் வாய் வெந்துவிடாது. பகைநாட்டு இளவரசனே ஆயினும் விக்கிரமாதித்தனைத்தான் மணந்து கொள்வேன் என்று உன் மகள் கூறியிருந்தால், அவள் விருப்பத்துக்கு நாம் குறுக்கே நின்றிருக்கப் போவதில்லை. குந்தளத்தானை மணந்து கொண்ட பிறகு அவள் இந்நாட்டுக்கு எத்தகைய துரோகம் செய்திருந்தாலும் நாம் அதைப் பொருட்படுத்தியிருக்க மாட்டோம். ஏனென்றால் அப்பொழுது அவள் சோழ இளவரசி அல்ல; குந்தள நாட்டு இளவரசி."

"உங்கள் முடிவில் குறுக்கிடவில்லை, அண்ணா; இருந்தாலும் எனக்கு ஓர் ஐயம். நீங்களே விசயாதித்தனுக்குத்தான் வேங்கி நாடு என்று முடிவுறுத்திவிட்ட பிறகு, என் மகள்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அதனை அவனுக்குக் கிடைக்கச் செய்வதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியைத் துரோகச் செயல் என்று எவ்வாறு கூற முடியும்?"

இத்தனை பொழுது சினம் அடங்கி அமைதியாக உரையாடி வந்த சோழதேவர் சீறினார். "வாதம் பேசுகிறாயா வீரராசேந்திரா? அல்லது அரசியல் அறிவுதான் மகள் பாசத்தால் மங்கிப் போய்விட்டதா உனக்கு? இன்று தன் இச்சைக்காக, ஓர் அர்த்தமற்ற ஆணைக்கு எதிர் ஆணை இட்டுவிட்ட காரணத்துக்காக ஒரு பகை நாட்டானுக்குக் காதல் ஓலை அனுப்பிக் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளத் துணிந்த ஒருத்தி நாளைக்கு இந்நட்டையும் அதே முறையில் அடைய முயலமாட்டாள் என்பது என்ன நிச்சயம்? ஏன், இப்பொழுதே அவள் நமது அரசியல் ரகசியங்கள் எத்தனையை அவனுக்கு அம்பலமாக்கியிருக்கிறாளோ, யார் அறிவார்? தவிர அவனைச் சிறையிலிட்டு அவளை வெளியே விட்டு வைத்திருந்தால், அவள் அதிக வன்மம் கொண்டு நமது அந்தரங்கங்கள் அனைத்தையும் குந்தளத்தாருக்கு எழுதி அனுப்பிவிட மாட்டாளா? அரசியல் நெடுநோக்கு வேண்டும், வீரராசேந்திரா, விதையிலிருந்து முளையை அளவிட அறிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் எந்த அரசும் நிலைக்க முடியாது!"

வீரராசேந்திரர் தலையைத் தாழ்த்திக் கொண்டார். சகோதரரின் நெஞ்சகத்தில் ஒரு தலைச் சார்பான நினைவில்லை; நாட்டின் நலம் ஒன்றுதான் அவர் கருத்தில் நிற்கிறது; அதற்குச் சான்று, சொந்த மகளுக்குக் கிட்ட வேண்டிய பெருவாழ்வையே அவர் நாட்டுக்குத் தியாகம் செய்ய முன் வந்திருப்பது என்ற உண்மைகளை உணர்ந்ததும் அந்த இளவல், "நாட்டின் நலமே என் நலமும் அண்ணா; உங்கள் சித்தப்படியே வானவியைப் பாதாளச் சிறையில் தள்ளுங்கள்," என்றார்.

அன்றே சோழதேவர் மகள் மதுராந்தகியை அழைத்து அவளுக்கும் குலோத்துங்கனுக்கும் விரைவில் திருமணம் நடக்கப் போகிறதென்றும், அதன் பிறகு குலோத்துங்கன் இந்நாட்டில் ஒரு சாதாரணப் படைத்தலைவனாக இருப்பானென்றும் அறிவித்தார்.

மதுராந்தகி இதைக் கேட்டதும் சற்றே திடுக்கிட்டாள்; எனினும் அதற்கு இசைவு அளிக்காவிடில் வானவிக்குக் கிட்டிய பாதாளச் சிறையே தனக்கும் கிட்டும் என்பதை உணர்ந்து, "சரி அப்பா; அவ்வாறே செய்யுங்கள்," என்றாள்.

ஆனால் அதன் பிறகு குலோத்துங்கன் அவளைச் சந்தித்து, "அன்று உன் காதலும் ஆணையும் பிரிக்க முடியாதவாறு பிணைந்திருப்பதாகக் கூறினாயே மதுரா! இப்பொழுது என்ன ஆயிற்று?" என்று வினவியபோது, அவள் என்ன சொன்னாள், தெரியுமா?



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“ஒன்றும் ஆகவில்லை. அவை இன்னும் பிரிக்க முடியாதவாறு பிணைந்தே இருக்கின்றன. உங்களை மணந்து இந்தச் சோழ அரியணையில் அமருவதாகத்தான் நான் ஆணையிட்டிருக்கிறேன். இப்பொழுது உங்களை மணக்கப் போகிறேன். சோழ அரியணையில் உங்களுடன் அமரக் காலம் வரும்; அதுவரையில் காத்திருப்பேன்!” என்றாள்.

## முதல் பாகம் - முற்றும்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

# மதுராந்தகியின் காதல்

## மாயாவி

## இரண்டாம் பாகம்

## அத்தியாயம் – 1. பாதாளச் சிறையின் மர்மம்

முதலாம் இராசேந்திர சோழதேவர் வடக்கே கங்கை வரையிலுள்ள நாடுகளை வென்று, தோல்வியுற்ற மன்னர்களின் தலையில் கங்கை நீர் கொண்ட குடங்களை ஏற்றிக்கொணர்ந்து, அந்நீரால் சோழ நாட்டின் பண்டைத் தூய்மையைப் பெருக்கியதோடு, தமது இந்த மகத்தான வெற்றிக்கு ஓர் அழியாச் சின்னமாக கங்கைகொண்ட சோழபுரம் என்ற புதிய தலைநகரை நிறுவிய போது, தலைநகருக்கு இன்றியமையாத பெரிய சிறைக்கூடம் ஒன்றையும் அதனுள்ளே அமைத்தார். உட்கோட்டையின் மையத்தில் சோழகேரளன் மற்றும் முடிகொண்ட சோழன் அரண்மனைகளுக்கு அண்மையில், பெரும் பரப்பில், தனியாக மதிள்சுவர், அகழி முதலிய பாதுகாப்புகளுடன் அமைக்கப்பட்டிருந்த அந்தச் சிறைக்கூடத்தின் உள்ளே மற்றொரு மர்மச் சிறையும் இருந்தது. அதுதான் பாதாளச் சிறை.

பாதாளச் சிறையைப்பற்றி சோழ நாட்டு மக்களிடையே பல பயங்கரக் கதைகள் உலவி வந்தன. அச்சிறைக்குள்ளே கொடிய வனவிலங்குகள் திங்களுக்கு ஒரு தடவையே உணவிடப்பட்டு எப்பொழுதும் கொடும் பசியுடன் இருக்குமாறு வளர்க்கப்படுகின்றன என்றும், ஆதலால் அச்சிறையில் தள்ளப்படுபவர்கள் உடனே அவற்றுக்கு இரையாகி விடுவார்கள் என்றும் ஒரு சிலர் கூறிவந்தனர். வேறு சிலர், “இல்லை; அவ்வாறு ஒன்றும் இல்லை. அச்சிறையில் அடைபட்டவர்களுக்கு இதரச் சிறையில் அடைபட்டுள்ள கைதிகளுக்கு அளிக்கப்படுவது போல் உணவோ, நீரோ அளிக்கப்பட மாட்டா. ஆதலின் அவர்கள் பசியாலும் நீர் விடாயாலும் தவித்து உயிர் விடுவார்கள்,” என்று கூறினர். இன்னும் சிலர், “பாதாளச் சிறையினுள்ளே நிலமே கிடையாது. அது ஒரு நீர் நிலை. முதலைகளும், கொடிய விஷத்தன்மை வாய்ந்த நீர்வாழ்வனவும் நிறைந்தது. எனவே அச்சிறையில் தள்ளப்படுபவர்கள் நேரே அவற்றின் வாயில் விழவேண்டியவர்களே!” என்று நம்பினர்.

இவ்வாறெல்லாம் பலப் பல கதைகள் அச்சிறைச்சலையைப் பற்றி வழங்கி வந்தமைக்கு முக்கிய காரணம், அதனுள்ளே இன்றுவரை யாரும் சென்று பார்த்ததில்லை



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

என்பதுதான். கங்கைகொண்ட சோழபுரம் நிறுவப்பட்ட பின்னர் தலைமைச் சிறைக்காவலராக விளங்கி வந்தவர்களுக்குக்கூட அச்சிறைச்சாலையின் உள்ளே அடங்கியிருந்த மர்மம் தெரியாது. அதற்கு ஒரே வாயில்தான் இருந்தது. அந்த வாயிலின் கனத்த இரும்புக் கதவுகள் எப்பொழுதும் பூட்டப்பட்டே இருந்தன. அப்பூட்டின் திறவுகோலை நாடாளும் மன்னரே வைத்துக்கொண்டிருந்தார். அது மட்டுமின்றி, முதலாம் இராசேந்திர சோழரின் காலந்தொட்டு இன்றளவும் பாதாளச் சிறைவாசத் தண்டனை பெற்று அதனுள்ளே தள்ளப் பட்டவர்களும் யாரும் இல்லை. எனவே, கொடுந்தண்டனைக்கென்றே அமைத்திருப்பதாகக் கருதப்பட்ட அந்தச் சிறைச்சாலையைப் பற்றி மக்கள் உள்ளங்களிலே பயங்கரக் கற்பனைகள் தோன்றி இருந்ததில் வியப்பில்லை.

பாதாளச் சிறை பற்றிய பயங்கர நினைவு நாட்டு மக்கள் உள்ளத்தில் மட்டுமே நிலவி வந்தது என்பதில்லை. அரச குலத்தினரிடையேயும் அது இருந்துதான் வந்தது. ஏன்? அடுத்து பட்டத்துக்கு உரியவரான வீரராசேந்திரர் கூட அதுபற்றிப் பயங்கர நினைவுடனேயே இருந்து வந்தார். ஏனென்றால் அதைப்பற்றிய இரகசியமும் அதன் திறவுகோலும் அவர் ஆளும் மன்னர் ஆகும்போதல்லவா அவருடைய உடைமையாகும்? அதனால்தான் தமது மகளுக்கு அத்தகைய கொடுந்தண்டனை தேவையா என்ற முறையில் அன்று அவர் சோழதேவருடன் சிறிதளவு வாதாடினார். ஆனால் சோழதேவர் நாட்டின் நலம் கருதியே அக்கொடுந் தண்டனையை வானவிக்கு விதிக்க நேர்ந்தது என்பதை விளக்கிய பிறகு அவர் அடங்கிவிட்டாரெனினும், மகளை இவ்வாறு பறிகொடுக்க நேர்ந்ததற்காக அவர் விசனமடையாமல் இல்லை.

வானவியும் தன் வாழ்வு, கனவு அனைத்தும் அன்றோடு சிதைந்தன என்ற நினைவுடனேதான் விக்கிரமாதித்தனுடன் பாதாளச் சிறையிக்குள்ளே புகுந்தாள். ஆயினும் அவளுக்கு ஓர் ஆறுதல் - 'நம் உள்ளம் கவர்ந்தவருடன் தானே உயிர்விடப் போகிறோம்! வாழ்வில் இணைய முடியாமற் போனாலும், சாவிலாவது அவருடன் இணையும் பேறு கிடைத்ததே!'

தங்களுக்குப் பின்னே அக்கொடுஞ்சிறையின் பெருங்கதவுகள் மூடப்பட்டதும், வாழ்வெனும் ஒளியிலிருந்து சாவென்ற இருளின் இரும்புப்பிடியில் மீள இயலாதவாறு சிக்கிவிட்ட திகிலுடன் அவ்விருவரும் சிறிது பொழுது வாயடைத்து நின்றனர். பின்னர் வானவி தன் உள்ளத்தைத் திடப்படுத்திக் கொண்டு, "அன்பே!" என்று அழைத்து,



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

விக்கிரமாதித்தனின் கரங்களைத் தடவிப் பிடித்தாள். பழைய காதற் சந்திப்புக் காட்சிகள் எண்ணத்தில் முகிழ்ந்தன!

விக்கிரமாதித்தன் அப்பொழுது மறுமொழி கூற இயலாத அளவு அதிர்ச்சி அடைந்திருந்தான். அவன் எதிர்பார்த்து வந்தது என்ன? இப்பொழுது நடந்திருப்பது என்ன?

அக்காரிருளில் வானவி மெதுவாக அவனுடைய முகத்தைத் துழாவித் தடவினாள். “என்னால்தான் உங்களுக்கு இத்தகைய பயங்கரச்சாவு!” என்றபோது அவளுடைய குரல் துயரத்தால் தழதழத்தது.

“சாவா?” விக்கிரமாதித்தன் மேலும் அதிர்ந்தான்.

“ஆம்; நம் எதிரே இந்த மையிருளில் சாவுதான் மறைந்து நிற்கிறது. என்ன உருவில் என்பதை நான் அறியேன்!” என்று விடையிறுத்த அவள், பாதாளச் சிறை பற்றி மக்கள் பேசிக்கொள்ளும் கதைகளை அவனுக்கு கூறினாள்.

“வீரனுக்குக் கோழைச் சாவா? சீ! எத்தனை கேடுகெட்ட நாடு உங்கள் நாடு!” என்று விக்கிரமாதித்தன் கொதித்தான்.

“ஆம், கேடுகெட்ட நாட்டில் உதித்த இந்தப் படுபாவி எங்கோ இருந்த உங்களை இங்கு இழுத்து இத்தகைய சாவுக்கு இலக்காக்கிவிட்டேன்,” என்று கதறி அழுதாள் வானவி.

அவளுடைய அழுகை விக்கிரமாதித்தனின் உள்ளத்தைத் துளைத்தது. “அழாதே கண்ணே! சாவைக்கண்டு அழுவது வீரத்துக்கு இழுக்கு. நான் வருந்துவதெல்லாம் இப்படி நம்மைக் கண்காணாமற் சாகடிப்பதை விட கண் முன்னே வாளால் சிதைத்துக் கொன்றிருக்கலாமே என்பதுதான். வா, அவர்கள் கோழைச் சாவை நமக்கு அளித்தாலும் நாம் அதை வீரத்துடன் ஏற்போம்.”

பாதாளச் சிறையின் கதவுகள் திறக்கப்பட்டபோது உள்ளே ஒரு படிக்கட்டுக் கீழ்நோக்கிச் செல்வதை அவர்கள் கண்டிருந்தனர். அந்தப் படிக்கட்டில் இப்பொழுது அவர்கள் இறங்கினர். விக்கிரமாதித்தன் முன் சென்றான். வானவி அவனது தோளைப்பற்றியவாறு ஒரு படி பின்னால் வந்து கொண்டிருந்தாள். எங்கும் ஒரே இருள்; எல்லையற்ற காரிருள். உள்ளே காற்றுப் புக வசதி செய்யப்பட்டிருக்க வில்லையோ, அல்லது பலகாலமாக அச்சிறைச்சாலை பூட்டிக்கிடந்தமையாலோ தெரியாது, சுவாசிக்கும் காற்றுக்கூட வெப்பக் காற்றாகவே இருந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சுமார் ஐம்பது படிகள் இறங்கிய பிறகு திடீரென்று விக்கிரமாதித்தன் பின்னே அடி வைத்து, “வானவி!” என்று கூவினான்.

அவனது குரலின் கலக்கம் வானவியைத் திடுக்கிட வைத்தது. அவள் சட்டென்று அவன் இடுப்பைச் சுற்றிக் கையை வளைத்துக்கொண்டு, “என்ன அன்பே?” என்று திகிலுடன் வினவினாள்.

“மக்கள் பேசிக்கொண்டது மெய்தான், வானவி.”

“நீங்களென்ன சொல்கிறீர்கள்?”

“அடுத்த படியில் நீர் நிறைந்திருக்கிறது. மக்களில் ஒரு சாரார் கருதியவாறு இச்சிறைச்சாலை முதலைகளும் விஷப் பிராணிகளும் நிறைந்த நீர் நிலையைத்தான் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். சரி, ஏதானால் என்ன? நாம் வீரச் சாவு சாகத்துணிந்த பின் அச்சாவு எதனால் ஏற்பட்டால் என்ன?” அவன் மீண்டும் அடுத்த படியில் கால் வைப்பதற்காக உடலை அசைத்தான்.

வானவி அவனைப் பின் பக்கமாக இழுத்தாள். “பொறுங்கள். சாகத்தான் போகிறோம். அதற்கு இத்தனை அவசரம் ஏன்? இங்கேயே சிறிது நேரம் அமர்ந்து உல்லாசமாக உரையாடி விட்டுத்தான் சாவோமே?”

விக்கிரமாதித்தன் கொல்லென நகைத்தான். “சாவின் வாசலில் உல்லாசம் எப்படிப் பிறக்கும், வானவி?” என்று கூறியவன் மறுபடியும் அவள் கையைப்பற்றி இழுத்தவாறு கீழே இறங்கலானான். “இனி சாவு ஒன்றுதான் எனக்கு உல்லாசம் அளிக்க வல்லது,” என்ற சொற்கள் அவனிடமிருந்து வேகத்தோடு உதிர்ந்தன.

ஒன்று, இரண்டு, மூன்று படிகள் அவர்கள் இறங்கிவிட்டார்கள். தண்ணீர் பாதத்திலிருந்து கணுக்காலுக்கு வந்து இப்பொழுது முழங்கால் அளவு வந்துவிட்டது. எந்தக் கணமும் ஒரு முதலையின் கவ்வுதலையோ, நீர்ப் பாம்பு போன்ற விடப்பிராணிகளின் தீண்டுதலையோ எதிர்பார்த்தவாறு நான்காவது படிக்கு நகர வலது பாதத்தைத் தூக்கி வைத்தபோது: எங்கே அந்த நாலாவது படி? “சமதளம் போல் தென்படுகிறதே!” என்றாள் வானவி. அவள் சொற்களில் எதிர்பாராத அமைதி காணப்பட்டது.

விக்கிரமாதித்தன் கூட இப்பொழுது வியப்படைய ஆரம்பித்தான். ‘என்ன, சமதளந்தானா? முழங்கால் அளவு நீர் தேக்கப்பட்டிருக்கும் ஏதாவது ஒரு சிறு நீர்த்தேக்கந்தானா? அல்லது இனிச் சமதளந்தான் என எண்ணி எங்களைத் தெம்புடன் நடக்க வைத்துப் பிறகு திடீரென்று படுகசத்தில் வீழ்த்துவதற்கான சூழ்ச்சி அமைப்பா?



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

எதுவானால் என்ன? இனி அவனும் அவளும் முன் வைத்த காலைப் பின் வாங்கப் போவதில்லை. அல்லது இந்த முழங்காலளவு நீரில் தயங்கி நிற்கவும் போகிறதில்லை. இருந்தாலும் திடீர் வீழ்ச்சியைத் தவிர்க்க, அவன் பாதத்தை நீரின் அடித்தளத்தில் தேய்த்தவாறு நடந்தான்.

சட்டென்று அவனுடைய கால் விரல்கள் எதன் மீதோ மோதி மேலே செல்ல முடியாமல் நின்றன். என்ன அது? சுவரா? இடக்கரத்தால் வானவியின் கரத்தைப் பிடித்திருந்ததால், விக்கிரமாதித்தன் வலக்கரத்தால் தன் முன்னே துழாவிப் பார்த்தான். வெட்ட வெளிதான் தென்பட்டது. பிறகு பாதத்தை மோதி நின்ற இடத்தைத் தடவியவாறே மெதுவாக மேலே உயர்த்தினான். சாண் உயரம் வரை பாதம் அதில் உராய்ந்தவாறே மேலே சென்றது. பின்னர் மீண்டும் இரண்டு சாண் தூரம் ஒரு சமதளம்; மறுபடியும் ஒரு மேடு-விக்கிரமாதித்தனுக்கு இப்பொழுது விளங்கி விட்டது. இதுவும் ஒரு படிக்கட்டு. இது நீர் நிலையிலிருந்து மேலே ஏறுவதற்கானது. அவன் வானவியிடம், "பாதத்தை தூக்கி வை. மேலே ஏறும் படிக்கட்டு," என்று கூறியவாறு மேலே ஏறினான். மறுபடியும் அவர்கள் நான்கு படிகள் மேலே ஏறினார்கள். "நாம் கடந்து வந்தது முழங்கால் அளவு நீர் தேங்கியிருக்கும் குட்டம் போலிருக்கிறது," என்றாள் வானவி. "ஆம், அப்படித்தான் நினைக்கிறேன்!" என்றவாறு அவன் மேலே நடந்தான்.

இரண்டோர் அடிகள்தான் நடந்திருப்பான்; அவன் தலை 'ணங்' என்று எதிலோ மோதியது. வலக்கரத்தால் முன்னால் தடவிப் பார்த்த விக்கிரமாதித்தனிடமிருந்து ஒரு மகிழ்ச்சிக் கூச்சல் பிறந்தது - "கதவு, வானவி! கதவு!"

"கதவா?" வானவியும் மகிழ்ச்சியினால் கூவினாள்.

"ஆமாம்," என்றவாறு விக்கிரமாதித்தனதை மேலும் துழாவினான். அவன் கையில் ஒரு குமிழ் சிக்கியது. அதைச் சுழற்றியதும் கிரீச்சிட்டவாறு பெரும் கதவு ஒன்று திறந்தது. வெளியேயிருந்து கண்ணைப் பறிக்கும் ஒளி!

அந்தத் திடீர் ஒளியினாள் கூசிப்போன கண்கள் பார்க்கும் நிலை அடைந்ததும், அவர்கள் தங்கள் முன்னே அரண்மனையின் ஏதோ ஒரு பகுதியில் இருப்பதைக் கண்டு திகைத்தார்கள்.

ஆம், அது அரண்மனையின் ஒரு பகுதிதான். ஆனால் அந்த அரண்மனை சோழகேரளன் அரண்மனையோ அல்லது முடிகொண்ட சோழன் அரண்மனையோ அல்ல. பயங்கர கற்பனைகளை மக்கள் மனத்திலே படர விட்டிருந்த பாதாளச் சிறையின் அரண்மனை. அங்கே இதர அரண்மனையைப் போலவே எல்லா வசதிகளும் இருந்தன.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

தங்க அறைகள்; அமர்ந்து உரையாடப் பொன்னாசனங்கள் போடப்பட்ட மண்டபங்கள்; படுக்கத் தந்தக் கட்டில்கள்; அவற்றிலே பட்டு மெத்தை, தலையணைகள், குளிக்கத் தடாகங்கள்; உலாவக் காற்றோட்டமுள்ள சாளரங்கள் நிறைந்த முற்றங்கள்; விளையாடச் சொக்கட்டான், அம்மானைக் காய்கள் போன்ற பொருள்கள்; படிக்கப் பல்வேறு ஏட்டுச் சுவடிகள்-இப்படி எல்லாம் இருந்தன.

ஆயினும் அதைச் சிறைச்சலை என்று உணர்த்தக்கூடிய வேறு சில சின்னங்களும் அங்கே காணப்படாமல் இல்லை. குறிப்பாக அதற்கு ஒரே ஒரு வாயில்தான் இருந்தது. அது பூட்டப்படாமல், தேவையான போது திறந்து மூடிக்கொள்ள வசதியாகக் குமிழ்த் தாழுடன் அமைக்கப்பட்டிருந்தாலும், அங்கிருந்து வெளியேறுவதற்குரிய வாயில் பாதாளச் சிறையின் முகப்பு வாயில்தானே? அடுத்ததாக அந்த இடம் எவ்வளவோ காற்றும் ஒளியும் வருமாறு அமைக்கப்பட்டிருந்தாலும், எங்கும் திறந்த வெளி இல்லாது கடும்பாறைகளாலான மேற்கூரை உடையதாக இருந்தது. தவிர, ஒளிக்காகவும் காற்றுக்காகவும் அமைக்கப்பட்டிருந்த சாளரங்கள் மூன்று நான்கு ஆள் உயரத்தில் இருந்ததோடு கனத்த இரும்புக் கம்பிகளை நெருக்கமாகக் கொண்டவைகளாகவும் இருந்தன.

விக்கிரமாதித்தனும் வானவியும் அந்த இடத்தின் இத்தகைய அமைப்பெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு மீண்டும் வாசலுக்கே திரும்பி வந்தார்கள். இப்பொழுது அவர்கள், தாங்கள் சற்றுமுன் தாண்டி வந்தது நீர்க்குட்டம் அல்ல; அது அங்கிருந்த தடாகங்களை நிரப்புவதற்காக அமைக்கப்பட்டிருந்த சிறிய செயற்கை நீரோடை என்பதைக் காண முடிந்தது. அதோடு, அந்த ஓடையில் பொங்கி ஓடிய நீர் அருகில் இருந்த ஓர் இயற்கை ஊற்றிலிருந்து பீறிட்டு வந்ததையும் அவர்கள் கண்டார்கள்.

“இதை நான் எதிர்பார்க்கவில்லை! இதை நான் எதிர்பார்க்கவில்லை!” என்று இந்த அமைப்புகள் எல்லவற்றையும் பார்த்து முடித்ததும் வானவி களிப்பு மிகுதியால் மிழற்றினாள்.

ஆனால் விக்கிரமாதித்தன் சொன்னான்: “மோகினிப் பேய்களைப் பற்றி நீ கேள்வியுற்றிருக்கிறாயா, வானவி? அவை தங்கள் அழகால் மனிதரை மயக்கி இழுத்து அவர்களது உதிரத்தை உறிஞ்சிக் குடித்து விடுமாம். இந்த அரண்மனையும் அத்தகைய மோகினிப் பேய்களைப் போன்றதுதான்.”

“நீங்கள் கூறுவது விளங்கவில்லையே!” என்று புருவத்தை உயர்த்தி அவனை நோக்கினாள் வானவி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"இந்த அரண்மனை நாம் வாழ்வதற்கானதல்ல, கண்ணே. வாழ்வதற் கானதானால் இங்கே நாம் உயிரோடு இருப்பதற்குத் தேவையான உணவுக்கு என்ன வழி செய்யப்பட்டிருக்கிறது? என்று அவன் வினவினான்.

இதைக் கேட்டதும் "ஐயையோ!" என்று அலறினாள் வானவி. "பெரியப்பா நம்மைச் சிறையில் தள்ளுகிறேன் என்று தள்ளினாலும், சாகத் தள்ளவில்லை; வாழத்தான் தள்ளியிருக்கிறார் என நினைத்தேன். ஆனால் பாவி அவர் இங்கும் என் எண்ணத்தைப் பாழாக்கி விட்டார்!"

"இனி அதையெல்லாம் பற்றிப் பேசி என்ன பயன்? நாம் சாவை எதிர்கொள்ள வந்தவர்கள்தாமே? இடையே ஏனோ ஒரு சிறு மயக்கம்!" என்று அவளை அணைத்துத் தேற்றியவாறு உள்ளே கூட்டிச் சென்றான் விக்கிரமாதித்தன்.

அந்தச் சிறைச்சாலை அரண்மனையின் அமைப்பிலே வெளிவாயிலை அடுத்து, வரிசைக்கு ஒன்பது பெருந்தூண்களைக் கொண்ட பெரிய மண்டபம் ஒன்று இருந்தது. முதல் தடவை உள்ளே வந்தபோது அவர்கள் இம்மண்டபத்தை ஆராயவில்லை. இப்பொழுது வானவியை அழைத்துச் செல்கையில், அந்த மண்டபத்தில் வலது சாரியில் இருந்த தூண்களில் ஐந்தாவது தூணுக்கு அருகில் சில பொன்னாசனங்களும், அவற்றின் நடுவே அழகிய வேலைப்பாட்டுடன் விளங்கிய பீடம் ஒன்றின் மீது ஓர் ஓலைச் சுருளும் இருப்பதைக் கண்ணுற்று, விக்கிரமாதித்தன் வானவியை அங்கே இழுத்துச் சென்றான். அந்த ஓலைச் சுருளில் தமிழ் மொழியில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. தமிழில் உரையாட மட்டுமே அறிந்திருந்த அவன் அவ்வோலைச் சுருளை வானவியிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னான். அது அவளுக்கு எழுதப்பட்டிருந்த ஓலைதான். ஆனால் அதை எழுதியிருந்தவர்...!

"மகளே வானவி, பாதாளச் சிறையில் பயங்கரக் கற்பனைகள் இதுகாறும் உன் மனத்தைவிட்டு அகன்றிருக்கும். அதோடு உன் பெரிய தந்தை ஆளும் மன்னர் என்ற விறைப்பில் ஓரவஞ்சனையாகத் தமது மகளை மட்டும் காதலனுடன் களித்து வாழ விட்டு விட்டு, நம்மைக் காதலனுடன் சாவை நாட விரட்டிவிட்டார் என்ற தவறான கருத்தும் இப்பொழுது மாறியிருக்கும். மகளே, அரசப் பதவியில் பல காரியங்களைப் பல நோக்கத்தோடு ஆராய்ந்து செயல் புரிய வேண்டியிருக்கிறது. நீங்கள் விளையாட்டுப் போக்காக ஏதோ ஆணைகள் இட்டு அவற்றை நிறைவேற்றவும் துணிந்து விட்டீர்கள். ஆனால் அதனால் நாடு கேடு அடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது என் பொறுப்பில்லையா? நீ மட்டும் இன்னும் சிறிது காலம் செயல் முறையில் இறங்காது



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இருந்திருந்தால் உன் ஆணைகள் என் மூலம் நிறைவேறியிருக்கும். ஏனென்றால் உன் ஆணைகள் சோழநாட்டைப் பிறர் கைப்பற்றிவிடாதிருப்பதற்கான ஆணைகள். ஆதலால் நாட்டைக் காக்க நானே அதைச் செய்திருப்பேன். ஆனால் நீ அவசரப்பட்டுவிட்டாய். உன் செயலுக்கு நம் நாட்டின் பகைவனையே துணை நாடி, அவனை ஒரு பொய்யோலையுடன் இங்கு வரச் செய்து விட்டாய். அக்குற்றத்திற்கு, அவனுக்கும் உனக்கும் தண்டனை வழங்கியாக வேண்டியது என் கடமையாயிற்று. ஆனால் அதே சமயம் உன் செயல் இந்நாட்டுக்கு நன்மை செய்வதாகவே இருந்ததால், உன் தண்டனை பெயரளவில் தண்டனையாகவும், செயலளவில் உன் இன்ப வாழ்வுக்கு அதிக இடையூறு விளைவிக்காததாகவும் அமையுமாறு செய்ய வேண்டியவனானேன். ஆதலால்தான், வெளியோர் பயங்கர நரகமாகக் கருதியிருக்கும் இந்தப் பாதாளச் சொர்க்கபுரிக்கு உன்னை உன் உள்ளம் கவர்ந்தவுடன் அனுப்பினேன்.

இதை நான் செய்ததற்கு மற்றொரு காரணம் உண்டு. விக்கிரமாதித்தன் உன் காதலனே ஆயினும், அவன் இந்நாட்டின் பகைவர்களில் ஒருவன், அவன் வழியே விசயாதித்தனுக்கு வேங்கி அரியணை கிட்ட நீ முயன்றிருக்கிறாய். அம்முயற்சியில் வெற்றி பெறுவதற்காக நீ அவர்களுக்கு நம் நாட்டின் அரசியல் இரகசியங்களை அம்பலப்படுத்தல் கூடும். அரசன் என்ற முறையில் அதற்கு நான் இடமளிக்க முடியாது. எனவேதான். நீங்கள் காதலர்களாகக் களித்து வாழ வகை செய்து, அதே போது உங்களுடைய வெளியுலகத் தொடர்புகளைத் துண்டிக்கவும் வழி வகுத்தேன். எங்கள் நோக்கமும், மைத்துனர் நரேந்திரருக்குப் பிறகு விசயாதித்தனை வேங்கி அரியணையில் அமர்த்த வேண்டும் என்பதுதான். எனினும் அவன் குந்தள நாட்டோரின் பிடியிலிருந்து விடுபட்டுச் சோழ நாட்டுக்கு உட்பட்டவனாய் அங்கு ஆட்சி செய்ய இசையாவிடில் நாங்கள் அவனை அவ்வரியணையில் கணங்கூட இருக்க விடமாட்டோம். ஆதலால் உங்கள் இருவரின் விடுதலைக் காலம் இப்பொழுது வேங்கி நாட்டின் வருங்கால அரசியல் அமைப்பைப் பொறுத்து இருக்கிறது. அது நமது நாட்டுக்கு உகந்த விதத்தில் அமையும் நாளில் நீயும் உன் காதலனும் பாதாளச்சிறையிலிருந்து விடுதலை பெறுவீர்கள்.

இனி உங்களுடைய வசதிகளைப் பற்றிச் சில செய்திகள். இந்த ஓலை இருக்கும் இடத்தை அடுத்துள்ள வலது வரிசை நடுத்தூண்தான் உங்களுக்கும் வெளி உலகுக்கும் இடையேயுள்ள ஒரே தொடர்பு. அந்தத் தூணின் அடிப்பகுதியில் சிறிய கதவு ஒன்று இருக்கிறது. அதைத் திறந்தால், உள்ளே நாள்தோறும் உங்களுக்குத் தேவையான உணவும் உடையும் காணப்படும். உணவுக்கும் உடைக்கும் புறம்பாக உங்கள்



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வாழ்க்கைக்குத் தேவையானவை எவையேனும் இருந்தால், அவற்றை அவ்வப்போது ஓர் ஓலையில் எழுதி அத்தூணின் உட்புறம் வைத்துக் கதவை மூடிவிட்டால் போதும். மறுநாளே அவை உங்களுக்குக் கிடைத்துவிடும்.

இங்ஙனம்,
நடுநிலையில் சிறிதும் தவறாத
உன் பெரிய தந்தை,
இராசேந்திரன்."

## அத்தியாயம் – 2. விடுதலையும், அதன் பின் வந்த விளைவும்!

**வா**னவியையும், குந்தள விக்கிரமாதித்தனையும் கங்கை கொண்ட சோழப்புரத்துப் பாதாளச் சிறையிலே பதுக்கி வைத்துக்கொண்டு காலமெனும் புள்ளினம் இருமுறை சிறகு உதிர்த்து விட்டது. வெளி உலக நிகழ்ச்சிகள் தெரியாமல், உண்பதும் உறங்குவதும், உல்லாசமாகப் பேசிச் சிரித்து விளையாடுவதுமாய் அக்காதலர்கள் அந்தப் பாதாள உலகிலே நாட்களைத் தள்ளினார்கள். வெளியே மதுராந்தகியும் குலோத்துங்கனும் மணவினையில் ஈடுபட்டு, அவர்களும் உவகையுடன்தான் காலம் தள்ளி வந்தார்கள். அன்றைய நிலையில் அவ்விரு பெண்களும் தங்கள் ஆணைகளை மறந்து விட்டவர்கள் போலவே காணப்பட்டார்கள். அரசியல் என்பதுதான் கொந்தளிக்கும் கடல் ஆயிற்றே... அதிலே எப்பொழுது எப்படிச் சூறாவளி தோன்றும் என்பதை யார் அறிவார்? இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் சோழநாட்டின் அரசியலிலே அடுக்கு அடுக்காகச் சில நிகழ்ச்சிகள் நடந்தன. அவை இப்பெண்களின் உள்ளத்திலே உறங்கிக் கொண்டிருந்த ஆணை நினைவைத் தட்டி எழுப்பிவிட்டன.

அந்த நிகழ்ச்சிகளுக்கு ஆரம்பமாக அமைந்தது வேங்கி மன்னர் இராச நரேந்திரன் மறைவு. ஒரு தடவை தம்மை அணுக முயன்ற காலதேவனை விரட்டி அடித்துவிட்ட அவரை இத்தடவை அவன் பலமாகவே பற்றி இழுத்துச் சென்றுவிட்டான். எடுத்த எடுப்பிலே கடுமையான நோய்க்குள்ளான அவர் நான்கே நாட்களில் உலகிலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டுவிட்டார்.

மதுராந்தகிக்கும் குலோத்துங்கனுக்கும் திருமணத்தை நடத்தி வைத்து, மருமகனைச் சோழநாட்டின் சிறிய படை ஒன்றின் தலைவனாக்கிய உடனேயே சோழதேவர் விசயாதித்தனுக்கு ஓர் இரகசிய ஓலை அனுப்பினார். அவன் வேங்கி நாட்டைச் சோழ



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

நாட்டுக்கு உட்பட்ட நாடாக ஆண்டுவர இணங்கினால் தமது மைதுனரின் மறைவுக்குப் பிறகு அவனையே அந்நாட்டின் மகிபனாக்குவதாக அவர் தமது திட்டத்தை அவ்வோலையில் விளக்கியிருந்தார். சோழதேவர் எதிர்பார்தவாரே விசயாதித்தன் உடனே அதற்கு இணக்கம் தெரிவித்து மறு ஓலை அனுப்பியிருந்தான். எனவே நரேந்திரருக்கு பிறகு அவனை வேங்கி அரசுக் கட்டிலில் அமர்த்தி விடுமாறு அந்நாட்டின் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்த சோழப் படைத் தலைவருக்கு இரகசியத் தாக்கீதும் சென்றிருந்தது. ஆதலால் இப்பொழுது நரேந்திர தேவர் காலமானதும், எவ்விதத் தொல்லையுமின்றி விசயாதித்தன் வேங்கி நாட்டில் முறையாகப் பட்டம் சூடிக் கொண்டான்.

ஆனால் இதையெல்லாம் பார்த்துக்கொண்டு குந்தள வேந்தன் ஆகவமல்லன் வாளா இருந்தானா என்றால், ‘ஆம்’ என்றே சரித்திரம் கூறும். ஆயினும் அவன் அப்படி வாளா இருந்ததற்கு இரண்டு முக்கியமான காரணம் - அவனுடைய கண்ணுக்குக் கண்ணான மகன் விக்கிரமாதித்தன் சோழர்களால் சிறைப்படுத்தப் பட்டிருந்தான். ‘வேங்கிக்கும், சோழ மண்டலத்துக்கும் இடையேயுள்ள அரசியல் பிணைப்பு குலையாதிருப்பதற்கு அவன் ஒரு பிணையாகச் சிறையிடப்பட்டிருக்கிறான். விசயாதித்தன் குந்தள உறவை முறித்துக் கொண்டு சோழர்களுக்கு அடங்கிய குறுநில மன்னர்களில் ஒருவனாக வேங்கி அரியணையில் ஏறும் வரையில் அவனுக்கு விடுதலை கிடையாது’ என்ற வரையில் ஆகவமல்லனின் ஒற்றர்கள் அவனுக்குச் செய்தி கொணர்ந்திருந்தார்கள். ஆதலால் மகனின் விடுதலைக்காக வேங்கி நாடு மீண்டும் சோழர் பக்கமே சாய்வதை அவன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று.

இரண்டாவது காரணம் இன்னும் முக்கியமானது. முடக்காற்றுப் போர் குந்தளப்படை முழுவதையுமே விழுங்கி விட்டதால், முன்பே பொருளாதார நிலையில் சரிந்திருந்த ஆகவமல்லன் அந்நிலையைச் சீர் செய்த பிறகே புதுப்படை ஒன்றைத் திரட்ட முடியும் என்ற நிலையில் இருந்தான். தொடர்ந்து நடத்திய பல போர்களினால் நாட்டில் பஞ்சமும் வறட்சியும் மிகுந்து விட்டதால் குடிமக்களைக் கசக்கிப் பிழியவும் வழியில்லாமல் இருந்தது. ஆதலால் இன்னும் சில காலம் எந்த விதமான போரிலும் ஈடுபடாமல் இருந்தால்தான் நாட்டையே அழிவிலிருந்து மீட்க முடியும் என்பதை உணர்ந்து, தனது தாயாதிகளின் நாடு மீண்டும் சோழர்களின் கைக்கே போனபோது, அவன் உள்ளக் கொதிப்போடு அதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சொன்ன சொல்லை நிறைவேற்றத் தவறாதவர்கள் சோழர்கள். அன்று வானவிக்கு அனுப்பிய ஓலைப்படி, விசயாதித்தன் தங்களுக்கு உட்பட்டவனாக வேங்கி அரசை ஏற்றுக் கொண்டதும், சோழதேவர் வானவியையும் விக்கிரமாதித்தனையும் பாதாளச் சிறையிலிருந்து விடுதலை செய்து விட்டார். ஆனால் இங்கேயும் அவர் தமது அரசியல் தந்திரம் ஒன்றைக் கையாளாமல் இல்லை. இரண்டாண்டு காலம் காதலனுடன் தனித்து வாழ்ந்துவிட்ட வானவியை விடுதலைக்குப் பின்னர் அவர் அவனுக்கே மணமுடித்து வைத்துக் குந்தள நாட்டுக்கு அனுப்பிவிடவில்லை. "இதுகாறும் பகைவர்களாக இருந்த இரு அரச குடும்பத்தினரிடையே புது நட்பையும், புத்துறவையும் ஏற்படுத்த இருக்கும் திருமணம் இது. ஆதலால் இது முறைப்படித்தான் நடைபெற வேண்டும். கல்யாணபுரம் சேர்ந்து உன் தந்தையை எங்களுக்குத் திருமண ஓலை அனுப்பச்செய், என்று உரைத்து விக்கிரமாதித்தனை அனுப்பிவிட்டு வானவியை இரகசியக் கண்காணிப்புடன் சோழ நாட்டிலேயே நிறுத்திக்கொண்டார்.

பகைவர்கள் என்றென்றும் பகைவர்களாகவே இருக்க வேண்டும் என்பதில்லை. இந்த திருமணத்தின் மூலம் குந்தள நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் இடையே நட்புறவு நிலவுமானால் நிலவட்டுமே என்பது சோழதேவர் இப்படிச் செய்ததற்கு ஓர் அரசியல் காரணம். மற்றோர் அரசியல் காரணம், ஒருகால் ஆகவமல்லன் இன்னும் நம் பகைவனாகவே இருக்க விரும்பினால் திருமண ஓலை அனுப்ப மாட்டான். அதே சமயம் இரண்டு ஆண்டுகள் இனித்து வாழ்ந்த சுவை இளைஞனான விக்கிரமாதித்தனை அடிக்கடி வானவியை நாடி வரச் செய்யும். கவர்ச்சி நம்மிடம் இருந்தால் அவனை நம் கைப்பாவையாக ஆட்டி வைத்துக் கொண்டிருக்கலாம் என்பது அவர் கொண்டிருந்த கருத்து.

இறுதியில் சோழதேவரின் இரண்டாவது கருத்துத்தான் நிலைத்தது. விக்கிரமாதித்தன் விடுதலை பெற்றுத் தன் நாடு சேர்ந்து ஏறக்குறைய ஓராண்டு ஆகியும் அவனுக்குச் சோழ இளவரசி வானவியைத் திருமணம் செய்து கொடுக்குமாறு கேட்டு ஆகவமல்லன் திருமண ஓலை அனுப்பவே இல்லை. 'அனுப்பாவிடில் என்ன? அவன் மகனைத் தூண்டில் போட்டு இழுக்கும் கவர்ச்சிதான் நம்மிடம் இருக்கிறதே!' என்று கவலையற்று இருந்தார் சோழதேவர். ஆனால்...?

மனிதர் திட்டங்கள் வகுக்கலாம்; அவற்றை நிறைவேற்ற முயற்சிகளும் செய்யலாம். ஆனால் அம்முயற்சிகளுக்கு வெற்றியையோ, தோல்வியையோ அளிப்பவன் இறைவன் அல்லவா? மானுடரின் ஒவ்வொரு செயலுக்கும் அவன் ஒரு நோக்கம் வெகுத்துக்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கொண்டிருப்பானே, அதன்றோ இறுதியில் நடைபெறும்? அவ்வாறேதான் இங்கும் நடைபெற்றது. திடீரென்று ஒருநாள் சாவு சோழதேவரைக் கவ்விக்கொண்டு போய், அவர் என்ன நோக்கத்தோடு வானவியை விக்கிரமாதித்தனுக்கு மணமுடித்து வைக்காமல் இங்கே நிறுத்திக்கொண்டார் என்பதை எவருக்குமே தெரியாமற் செய்துவிட்டது!

சோழதேவரின் மறைவுக்குப் பின்னர், முன்பே இளவரசுப் பட்டம் கட்டப்பட்டிருந்த வீரராசேந்திரர் மகுடாபிஷேகம் செய்து கொண்டார். அந்த முடிசூட்டு விழாவின் போது, விக்கிரமாதித்தன் ஏராளமான பரிசப் பொறுள்களுடனும், தன் தந்தை கைப்பட வரைந்த திருமண ஓலையுடனும் வானவியைப் 'பெண் கேட்க' அரசர்குரிய விருதுகளோடு வந்தான். அவன் இந்த ஓராண்டு காலமாக இங்கு வராதிருந்ததற்கும் காரணம் இருந்தது. முன்பே நாம் உரைத்தவாறு குந்தளநாடு அப்போது சீர்கெட்ட நிலையில் இருந்தது. தவிர, விக்கிரமாதித்தனின் மூத்த சகோதரனான (இரண்டாம்) சோமேசுவரன், தந்தை ஆகவமல்லருடன் சிறிது பிணக்குக் கொண்டு உள்நாட்டுக் கலகம் ஒன்றை ஏற்படுத்தும் அழிவுப் பாதையிலே சென்று கொண்டிருந்தான். அவற்றையெல்லம் ஒருவாறு சீர்செய்யுமுன் தன் திருமணத்தைப் பற்றி விக்கிரமாதித்தன் தந்தையிடம் எவ்வாறு உரைக்க முடியும்? நிலைமை அண்மையில்தான் ஒருவாறு சீர்திருந்தியது. சோமேசுவரன் அழிவுப் பாதையில் போகாமல் விலகி வந்தான். நாடும் ஓரளவு சுபிட்சம் பெற்றது. அதன் பிறகு தந்தையிடம் தன் காதலைப் பற்றிக்கூறி, அவருடைய திருமண ஓலையைப் பெற்றுக்கொண்டு சோழ நாட்டுக்கு வந்தான் விக்கிரமாதித்தன்.

ஆனால் இவையெல்லாம் வீரராசேந்திரருக்கு எவ்வாறு தெரியும்? அவருடைய மனப்போக்கே சற்று விநோதமானது. அவருக்குத் தமது மூத்த சகோதரர் கூறுவதுதான் தெய்வ வாக்கு; அவர் செய்வதுதான் நியாயமான செயல். இல்லாவிட்டால், இரண்டாண்டுகள் ஓர் ஆடவனுடன் தனியிடத்தில் வாழ்ந்துவிட்ட தமது மகளை அவனுக்கு மணமுடித்து வைத்து அனுப்பாமல் இங்கேயே நிறுத்தி வைத்துக் கொண்டதைக் கண்டு வாய் திறவாது இருந்திருப்பாரா? அப்பொழுது வீரராசேந்திரர் முடிவுறுத்திக்கொண்டது இதுதான்: 'அரசியல் காரணங்களுக்காக வானவி விக்கிரமாதித்தனின் மனைவி ஆகக்கூடாது என்பது அண்ணாவின் எண்ணம்போலும்; அதனால் தான் அவர் இவர்களைப் பிரித்து வைத்துவிட்டார்!'

இத்தகையா கருத்துக் கொண்டிருந்ததால், ஆகவமல்லனின் திருமண ஓலையை வீரராசேந்திரர் ஏற்று கொள்ளவில்லை. "என் மகளை என் நாட்டின் பகைவரின் மகனுக்கு மணம் செய்து கொடேன்!" என்று முடிவாகக் கூறிவிட்டார். வானவியின்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இறைஞ்சல்களையும், விக்கிரமாதித்தனின் வினயமான விளக்கங்களையும் அவர் கவனம் செய்யவே இல்லை. விக்கிரமாதித்தன் ஏமாற்றத்துடனும், அவமான உணர்ச்சியுடனும், உள்ளக் கொதிப்புடனும் வந்த வழியே திரும்பினான்.

அப்பொழுது விக்கிரமாதித்தன், சோழ நாட்டின் எல்லையைத் தொட்டவாறு இருந்த வனவாசி, நுளம்பாடி போன்ற குந்தள நாட்டின் பகுதிகள் சிலவற்றின் எல்லைக் காவலனாக ஆகவமல்லனால் நியமிக்கப் பட்டிருந்தான். இப்பகுதிகளை அடைந்த விக்கிரமாதித்தன் தனக்கு விளைவிக்கப்பட்ட அவமானத்தின் காரணமாக, தனக்கு அண்மையில் சோழநாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய கங்கபாடி நாட்டைக் கைப்பற்றிக் கொள்ள முயன்றான். *இச்செய்தி அறிந்த வீரராசேநிதிரர் உடனே பெரும்படை ஒன்றுடன் அங்கே விரைந்து சென்று விக்கிரமாதித்தனை வென்று, அவனையும் அவனது படையையும் கங்கபாடிக் களத்திலிருந்து துங்கபத்திரை ஆற்றுக்கு அப்பால் துரத்திவிட்டுத் திரும்பினார்.

(*S.I.I.VOL.III, NO.20)

ஆனால் இது மேலைச் சளுக்கர்கள் மீண்டும் சோழர்களுக்குத் தொல்லை கொடுப்பதற்கு ஒரு துவக்கமாகவே ஆயிற்று. வீரராசேந்திரர் நாடு திரும்பிய ஒரு திங்கள் ஆகுமுன்பே, வேங்கியிலிருந்து திடுக்கிடும் செய்தி ஒன்று வந்தது:

"வேங்கி நாட்டைத் தங்கள் வசம் ஆக்கிக் கொள்வதற்கு மீண்டும் குந்தளத்தார் முயற்சி செய்யத் துவங்கியுள்ளனர்! வேங்கியை முற்றுகையிடும் பொருட்டு வனவாசியில் குந்தளத்தாரின் பிரதிநிதியாக இருந்த மாதண்ட நாயகன் சாமுண்டராயன் ஒரு பெரும் படையுடன் சென்று கொண்டிருக்கிறார்!"

## அத்தியாயம் – 3. வேங்கியில் நடந்த விஷமம்

"**சோ**ழ அரியணையில் உங்களுடன் அமரக் காலம் வரும்; அது வரையில் காத்திருப்பேன்!" என்றாள் மதுராந்தகி.

"என் ஆணைகள் நிறைவேறி, அன்புக்குரிய உங்களோடு கல்யாணபுரத்தில் வாழ ஆயிரங்கோடி காலமானாலும் காத்திருப்பேன்!" என்றாள் வானவி.

ஆனால், சோழ-வேங்கி நாடுகளின் சரித்திரப் போக்கையே மாற்றி விடுவதாக ஆணைகளிட்ட அந்த இளமங்கையர் இருவரும் காத்திருந்தனரா? இல்லை; தங்கள் ஆணைகள் நிறைவேறும் காலம் தங்களை நோக்கி வரும் வரையில் அவர்கள் வாளா



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இருக்கவில்லை; அக்காலத்தைத் தங்களை நோக்கி இழுக்கும் பணியில் அவ்விருவரும் மறைமுகமாக அவ்வப்போது ஈடுபட்டுக் கொண்டுதான் இருந்தனர்.

ஆணையைப் பற்றிய வரையில் தனக்கு மகத்தான வெற்றி கிட்டி விட்டதாகவே கருதியிருந்தாள் வானவி. ஆம், குலோத்துங்கனுக்குச் சோழ அரியணை மட்டுமின்றி, வேங்கி அரியணையும் கிட்டாமல் செய்வதாகத் தானே அவள் ஆணையிட்டிருந்தாள்? அந்த ஆணைதான் இப்பொழுது முற்றிலும் நிறைவேறி விட்டதே? வேங்கி அரசுக்கட்டிலில் விசயாதித்தனை அமர்த்தி விட்டார்கள் சோழர்கள்; குலோத்துங்கனோ, ஒரு சாதாரணப் படைத் தலைவனாகச் சோழ நாட்டுக்கு ஊழியம் புரிந்து கொண்டிருந்தான். தன் ஆணை தனது முயற்சியால் நிறைவேறியது என்று அவள் பெருமைப் பட்டுக்கொள்ள முடியாதுதான். அதற்காக அவள் இரண்டாண்டு காலம் பாதாளச் சிறைவாசம் செய்ய வேண்டியிருந்தது என்பதும் மெய்யே. தவிர, எவனை அவள் காதலித்தாளோ, அவனுடன் ஈராண்டுகள் தனித்து வாழ்ந்திருந்த போதிலும், இப்போது அவனை மணக்க முடியாத நிலையைச் சோழ அரசியல் ஏற்படுத்தியிருந்ததையும் அவள் மறுக்க முடியாது. ஆயினும் இக்குறைபாடுகளையெல்லாம் ஈடு செய்யும் வகையில் தன் ஆணை நிறைவேறி விட்டதே என்று பெருமை அடைந்திருந்தாள் வானவி. மேலும், இப்பொழுது அவள் முன்பிருந்த சாதாரண வானவியா என்ன? சோழ நாட்டின் இளவரசி. முன்பு எத்தகைய அகந்தையுடன் மதுராந்தகி சோழகேரளன் அரண்மனையில் வாழ்ந்து வந்தாளோ, எத்தகைய அதிகாரங்களையும் சலுகைகளையும் பெற்றிருந்தாளோ, அவை அனைத்தையும் பெற்று, அவள் வாழ்ந்த அதே சோழகேரளன் அரண்மனையில் வாழ்ந்து வருபவள். (அவ்வப்போது அரசு செலுத்தும் மன்னரும் அவரது குடும்பத்தினரும் சோழகேரளன் அரண்மனையில் வாழ்வதென்றும், இதர அரச குடும்பத்தினர் அனைவரும் முடிகொண்ட சோழன் அரண்மனையில் வசிப்பதென்றும் சோழர்களிடையே ஒரு மரபு இருந்தது.) ‘திமிர் கொண்ட அந்த மதுராந்தகி இப்போது அந்தத் திமிரெல்லாம் கரைந்து, தனது செல்வாக்கையெல்லாம் இழந்து ஒரு சாதாரண அரச குடும்பத்துப் பெண்ணாக முடிகொண்ட சோழன் அரண்மனையின் ஒரு பகுதியில் ஒடுங்கி வாழ்கிறாள்’ என்று ஏளனத்துடன் எண்ணி அடிக்கடி தனக்குள்ளே நகைத்துக் கொள்வாள் வானவி.

இந்நிலையில்தான் அரண்மனையில் ஒருநாள் இச்சகோதரியரிடையே ஒரு சந்திப்பு நிகழ்ந்தது. சோழ மன்னராக முடிசூட்டப்பட்ட பின்னர், முதல் முதலாக வீரராசேந்திர தேவரின் பிறந்த நாள் அந்நாடெங்கும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சோழகேரளன் அரண்மைனையில் அன்று ஒரே கோலாகலம். முடிகொண்ட சோழன்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அரண்மனையில் வாழ்ந்த அரச குடும்பத்தினர் எல்லோரும் அன்று அங்கே கூடியிருந்தனர். காலையில் மாமன்னர் உட்பட அரசகுலத்து ஆண்-பெண்கள் அனைவரும் சோழேச்சுரன் ஆலயத்துக்குச் சென்று இறைவழிபாடு செய்து திரும்பினர். பின்னர் அந்தணர்கள் வேள்வித் தீ வளர்த்து மன்னர்பிரானுக்கு நீண்ட ஆயுளை அருளுமாறு எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக் கொண்டனர். இந்த வைதீகச் சடங்குகள் முடிவுற்ற பிறகு, அரண்மனையின் ஆட்சி மண்டபத்தில் மாமன்னரும், அவரது பட்டதரசி அருமொழிநங்கையும் இராசேந்திர சோழ மாவலி வாணராயன் அரியணையில் அமர்ந்திருக்க, அரசகுலத்து ஆண்-பெண்கள், அதிகாரிகள், இவ்விழாவுக்கெனவே வந்திருந்த குறுநில மன்னர்கள், மற்றும் முக்கியமான நகர மாந்தர் முதலானோர் தங்கள் தங்களுக்கெனப் போடப்பட்டிருந்த ஆசனங்களின் வீற்றிருந்தனர்.

ஆம்; அப்போது, நாட்டுக்கு உழைப்பவர்களுக்கு மன்னர் பரிசில் அளித்துப் பாராட்டும் வைபவம் நடந்து கொண்டிருந்தது. யார் யாருக்கு, என்ன பரிசு வழங்குவது என்பது முன்பே கலந்து ஆலோசிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருந்த படியால், திருமந்திர ஓலைக்காரர் வானவன் பல்லவரையன் முறைப்படி ஒவ்வொருவராகப் பெயர் சொல்லி அழைக்க, அவர்கள் எழுந்து வந்து மன்னரை வணங்கித் தங்களுக்குரிய பரிசிலைப் பெற்றுச் சென்று கொண்டிருந்தனர். இவ்வரிசையில், அப்போது சோழநாட்டின் படைத் தலைவர்களில் ஒருவனாக விளங்கிய குலோத்துங்கனும் அழைக்கப்பட்டுப் பரிசு வழங்கப்பட்டான்.

குலோத்துங்கன் பரிசைப் பெற்றுத் திரும்பிக் கொண்டிருக்கையில், ஆட்சி மண்டபத்து உப்பரிகையில் அமர்ந்திருந்த வானவி அருகிலிருந்த மதுராந்தகியின் செவிகளில் படுமாறு ஏளனமாகச் சிரித்துவிட்டுத் தன் தோழி பங்கையற்கண்ணியிடம், "பார்த்தாயா பங்கையா, வேங்கி அரியணையிலும் சோழ அரியணையிலும் ஒருங்கே அமரப்போகிற வீர மகன். சோழ மன்னரின் ஆயிரம் படைத்தலைவர்களில் ஒருவனாக வந்து பரிசில் பிச்சை வாங்கிச் செல்வதை?" என்றாள்.

மதுராந்தகியின் உள்ளத்தை வேலாகத் தாக்கியது இந்தத் தூற்றல். ஆயினும் அப்போது அவள் ஒன்றும் கூறவில்லை. அன்று நடுப்பகல் உணவுக்குப் பிறகு வானவியின் விடுதிக்குச் சென்று, "காலையில் என்ன சொன்னாய், வானவி?" என்று கேட்டாள்.

"உன் ஆணையில் நீ தோற்றுவிட்டதையும், என் ஆணையில் நான் வெற்றி பெற்றுவிட்டதையும் சொன்னேன்!" என்றாள் வானவி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"உன் ஆணையில் வெற்றி பெற்றுவிட்டதாக நினைத்துக்கொள். அது பற்றி எனக்கு ஒன்றும் இல்லை. ஆனால் என் ஆணையில் நான் தோற்றுவிட்டதாக நினைத்துக் கொண்டு இனியேனும் இப்படி ஏதேனும் பிதற்றலை வெளியிடாதே, சகோதரி."

"என்ன? உன் ஆணை தோற்கவில்லையா?"

"ஆமாம்: அது தோற்கவில்லை."

"தோற்கவில்லையானால், எங்கே உன் கணவனுக்கு வேங்கி அரியணையும் சோழ அரியணையும்?"

"கிட்டும் வானவி; விரைவில் கிட்டும். அது கிட்டும் வரையில், ஒரு தாற்காலீக அமைப்பை நம்பி உன் ஆணைக்கு வெற்றியும், என் ஆணைக்குத் தோல்வியும் கிட்டிவிட்டதாக நீ கருதினால், அது உன் மதியின்மையையே காட்டும்."

வானவி எள்ளி நகைத்தாள்: "திறமையாகப் பேசுகிறாய் மதுராந்தகி. இப்படியே ஆயுள் உள்ள அளவும் 'என் ஆணை வெற்றியடையப் போகிறது; வெற்றியடையப் போகிறது; இப்போது ஏற்பட்டிருப்பது ஒரு தாற்காலீக அமைப்பு' என்று சொல்லியே தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் ஏமாற்றி விடலாம் என்று பார்க்காதே. எந்த ஆணைக்கும் ஒரு காலவரை உண்டு என்பதை அறிவாயா நீ?"

"உண்டு; அதை உணர்ந்து ஆணையிட்டபோதே நான் காலவரையறையையும் கூறியிருக்கிறேன். என் கணவருடன் ஒரு நாளேனும் சோழ அரியணையில் அமர்ந்து காட்டுகிறேன் என்று கூறியிருக்கவில்லையா? 'காட்டுகிறேன்' என்ற அந்தச் சொல்லின் முன்னே 'வானவியாகிய உனக்கு,' என்பது மறைந்து நிற்பதைத் தமிழ் கற்றுள்ள நீ அறிந்திருப்பாய். ஆதலால் நீ உயிரோடிருக்கும் வரையில் என் ஆணைக்குக் கால எல்லை உண்டு. அதுவரையில் வெற்றி உனக்குக் கிட்டிவிட்டதாக இறுமாப்பு அடைய உனக்கு உரிமையில்லை.

வானவிக்கும் மதுராந்தகியின் கூற்றிலிருந்த உண்மை விளங்காமல் இல்லை. ஆம், தாங்கள் இருவரின் ஆணைகளுக்குமே காலவரை தங்களது ஆயுட்காலந்தான் என்பது விளக்கப்பட்டதும், தன் வெற்றிக் களிப்புத் தரைமட்டமாகி விட்டதே என்று அவளுக்கு மதுராந்தகியின் மீது காரணமற்ற கோபம் வந்தது. ஆதலால் அவள் விவாதப் பொருளைவிட்டு வேறுவிதமாக மதுராந்தகியைத் தாக்கலானாள். "சீ! கேவலம் ஒரு படைத்தலைவனின் மனைவியான உனக்கு ஆளும் மன்னர் மகளின் உரிமை பற்றிப் பேச என்னடி அருகதை இருக்கிறது?" என்று சீறினாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மதுராந்தகியும் கோபம் அடைந்தாள். "ஆளும் மன்னரின் மகள் என்ற பெருமையெல்லாம் ஒருத்தி ஒருவனின் மனைவியாகும் வரையில்தான் வானவி; அதை நீ நினைவில் வைத்துக் கொண்டிருந்தாயானால் இத்தனை அகந்தையுடன் பேச மாட்டாய்."

"நான் இதுவரையில் யாருடைய மனைவியாகவும் ஆகவில்லை. அப்படி ஆகும் வரையில்..."

இப்பொழுது மதுராந்தகி நகைத்தாள்: "ஆம், மனைவியாகவில்லை; ஆசைநாயகியாக இரண்டாண்டு காலம் அவனுடன் தனித்து வாழ்ந்தாய்! மானம் இழந்தவளே! உனக்கு வாய் திறந்து பேசவும் நா எழுகிறதே?" என்று அருவருப்பைச் சிந்திவிட்டுத் திரும்பி நடந்தாள் அவள்.

காலையில் வானவியின் இழிந்துரையால் மதுராந்தகி எத்தனை துயரடைந்தாளோ அதற்கு இப்போது இரண்டத்தனை அடைந்தாள் வானவி. ஆம், சோழ அரசியல் சதுரங்கத்தில் அவளை ஒரு காயாக வைத்து விளையாடி விட்டார் காலஞ்சென்ற இராசேந்திர சோழ மன்னர். வானவியோ, விக்கிரமாதித்தனோ, பாதாளச் சிறையில் வாழ்ந்த காலையில் உடற் காதல் கொண்ட உன்மத்தர்களாகி விடவில்லை. இருந்தாலும் காதலர்களான இளம் ஆடவனும் பெண்ணும் பிறர் கண்களில் படாமல் தனித்து வாழ்ந்தார்கள் என்றால் உலகம் அவர்களை உடல் தொடர்பு கொள்ளாதவர்களாகக் கருதுமா? கருதாது என்பது தெரிந்திருந்தும், 'சிறை மீண்டு வந்த தங்களுக்குத் திருமணத்தை நிகழ்த்தி வைக்காது, முறையான திருமணம் நடக்க வேண்டுமென்று தன் காதலனை நாட்டுக்கு விரட்டிவிட்டார் அந்தப் பாழாய்ப்போன பெரியப்பா. அவர் முறைபடி திருமணம் பேச வருவதற்குள் பெரியப்பா காலமாகி விட்டார். தன் தந்தையோ மகளின் வாழ்வு பாழாவதைக்கூடச் சிந்திக்காமல் மணம் பேச வந்தவரைப் பழித்துத் திருப்பியனுப்பி விட்டார். இவ்வளவும் நடந்திருக்கையில், இந்த மதுராந்தகி மட்டும் என்ன? நாடு முழுவதுமே தன்னைச் சற்று இழிவாகத்தானே கருதியிருக்கும்?'

இப்படிப்பட்ட சிந்தனைகள் தோன்றிய பிறகு வானவிக்கு, தான் மதுராந்தகியைவிட வாழ்க்கை நிலையில் பன்மடங்கு கீழே இருக்கிறோம் என்ற அவமான உணர்ச்சி மேலிட்டது. இத்தனை காலம் சும்மா இருந்தது போல் இனி இருக்கலாகாது; இந்தச் சோழ நாடு எப்படியேனும் நாசமாய்ப் போகட்டும்; நாம் நம் காதலருடன் இரகசியத் தொடர்பு கொண்டு, மெல்ல இங்கிருந்து நழுவிவிட வேண்டும் என்ற துணிவு பிறந்தது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அக்காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் பிற நாட்டாரின் ஒற்றர்கள் மாறுவேடங்களில் திரிந்து கொண்டே இருப்பார்கள். அவர்களுடைய நோக்கம், தங்கள் நாட்டுக்கு எதிராக இங்கே ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதைக் கண்டறிந்து அவை பற்றி உடனுக்குடனே தகவலனுப்புவது. இப்பணிக்காக அவர்கள் உயிராபத்தான செயல்களில் கூட ஈடுபடுவதுண்டு. பல்வேறு வேடங்களில் பல்வேறு இடங்களுக்குச் சென்று செய்திகளை அறிய முயலுவதுண்டு. அவ்வாறு ஒரு சமயம் குந்தள ஒற்றன் ஒருவன் சேரநாட்டுச் சல்லாத் துணி வர்த்தகனாக சோழகேரளன் அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். சல்லாத் துணி என்பது அக்காலத்தில் முதியோர் அணிய விரும்பாத மிக மென்மையான ஒருவகைத் துணி. ஆதலால் பட்டத்தரசியான அருமொழி நங்கை அவற்றில் நாட்டம் கொள்ளவில்லை. “உனக்கு ஏதேனும் பிடித்திருந்தால் வாங்கிக்கொள், மகளே,” என்று அவள் வானவியிடம் கூறிவிட்டு அந்தப்புரத்துக்குச் சென்றுவிட்டாள்.

வானவி தனக்கு விருப்பமான சில துணிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றின் விலைக்குரிய பொற்காசுகளை அந்த வர்த்தகனிடம் கொடுத்தாள். அதை அவன் கைநீட்டி வாங்கியபோது, வானவியின் கூரிய விழிகள், வர்த்தகனின் வலது புயத்தில் பச்சை குத்தப்பட்டிருந்த சில எழுத்துக்களைக் கண்டுவிட்டன. அவை தெலுங்கு மொழியில் இருக்கவே அவளுக்குச் சட்டென, ‘இவன் ஒருகால் குந்தள நாட்டு ஒற்றனாக இருப்பானோ?’ என்ற ஐயம் ஏற்பட்டது. எனவே, புறப்பட இருந்த அந்த வர்த்தகனை அவள் நிறுத்தி அவனிடம் பக்குவமாகப் பேச்சுக் கொடுத்தாள். வானவி தங்கள் இளவரசர் விக்கிரமாதித்தரின் காதலி என்பதை அந்த ஒற்றன் அறிவானாதலால், அங்கே தாங்கள் இருவரும் மட்டுமே இருக்கிறோம் என்ற மிதப்பில் தன்னைக் காட்டிக் கொண்டான். உடனே வானவிக்கு அவன் மூலம் காதலனுக்கு ஓர் ஓலை அனுப்பலாமென்ற நினைவு தோன்றியது. அவ்வாறே அன்று அவள் அவனைத் தன் விடுதிக்கு அழைத்துச் சென்று விக்கிரமாதித்தனுக்கு ஓலை எழுதிக் கொடுத்தனுப்பினாள். வந்தவன் குந்தள ஒற்றன் என்பதோ, அவனிடம் தான் ஓலை கொடுத்து அனுப்பியதோ யாருக்குமே தெரியாது என்றுதான் வானவி நினைத்திருந்தாள், ஆனால் அவற்றினையெல்லாம் மறைந்திருந்து கவனித்துக் கொண்டிருந்தாள் ஒருத்தி. அவள் வேறுயாருமல்ல; மதுராந்தகிதான்!

சல்லாத் துணி வர்த்தகனின் வேடத்தில் வந்த குந்தள ஒற்றனிடம் வானவி ஓலை கொடுத்து அனுப்பியதைக் கண்ட பிறகு மதுராந்தகி என்ன செய்தாள்? அவள் அப்போது சோழகேரளன் அரண்மனைக்கு எதற்காக வந்தாள்? இவ்விவரங்களைத் தெரிந்து கொள்ளுமுன், நாம் இப்போது வேங்கி நாட்டின் நிலையச் சிறிது தெரிந்து கொள்வோம்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கோதாவரி-கிருஷ்ணை ஆறுகளுக்கு உள்ளடங்கிய பிரதேசமே அன்று வேங்கி நாடாகத் திகழ்ந்தது. அக்காலத்தில் அதைத்தான் ஆந்திரநாடு என்றும் அழைத்தனர். பிரபல சீன யாத்ரீகர் யுவான் - சுவாங் அதனை *'விங்கில நாடு' என்று குறிப்பிட்டிருக்கிறார். கோதாவரி மாவட்டத்தில் எல்லூருக்கு வடக்கே வேகி என்றும், பெத்த வேகி என்றும் இன்று அழைக்கப்படும் கிராமந்தான் அன்று புகழ்பெற்ற வேங்கி நகராக விளங்கியது.

(*வாட்டர்ஸ் எழுதிய யுவான்சுவாங் நூல்-இரண்டாம் பாகம். பக்கம்-210)

(**Indian Antiquary Vol.XX-பக்கம் 95.)

கல்யாணபுரத்தில் ஆட்சி செலுத்தி வந்த மேலைச் சளுக்கர்களின் தாயாதியரே கீழைச் சளுக்கர்கள் என்று முன்பு நாம் கண்டிருக்கிறோம். இவர்கள் புத்தரின் வமிசத்தவர்கள் என்று செல்லூர்ச் செப்பேடுகள் கூறுகின்றன. பல தலைமுறைகளுக்குப் பிறகு கீர்த்திவர்மன் என்ற சளுக்கிய மன்னருக்கு மகனாகப் பிறந்த குப்ஜ-விஷ்ணுவர்த்தனன் என்ற மன்னனே கீழைச் சளுக்கிய வமிசத்தைத் தோற்றுவித்தவன். கீழைச் சளுக்கிய நாடு நிறுவப்பட்ட ஆண்டு கி.பி. 626-16.

ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுகளுக்குப் பிறகுதான் கீழைச்சளுக்கிய மன்னர் குலத்துக்கும் சோழ மன்னர் குலத்துக்கும் இடையே மணவினைப் பிணைப்பு ஏற்பட்டது. கி.பி. 1013-14ல், சோழ நாட்டை இராசராச சோழதேவர் ஆண்டுவந்த போது, கீழைச் சளுக்கிய இளவரசர்களான சக்திவர்மன், விமலாதித்தன் என்பார், தெலுங்குச் சோழனான சடாசோட வீமன் என்பவனிடம் தங்கள் நாட்டை இழந்துவிட்டுச் சோழ மண்டலத்தில் அடைகலம் புகுந்தனர். அப்போது இராசராச சோழனின் புதல்வி குந்தவை அந்த இளவரசர்களில் ஒருவனான விமலாதித்தன்பால் காதல் கொண்டாள். அதை அறிந்த சோழதேவர் அவர்களுக்குத் திருமணத்தை நடத்தி வைத்து, தெலுங்கு வீமனுடன் போரிட்டு அவனை வென்று கீழைச் சளுக்கிய நாட்டை இச்சகோதரர்களுக்கு மீட்டுக் கொடுத்தார். அது தொட்டு வேங்கி நாடு சோழ நாட்டின் ஆட்சிக்கு உட்பட்ட நாடாகவே இலங்கி வந்தது. இந்தக் குந்தவைக்கும் விமலாதித்தனுக்கும் பிறந்தவர் தான் நமது குலோத்துங்கனின் தந்தை இராசராச நரேந்திரர் என்று நாம் முன்பே கண்டிருக்கிறோம்.

இராசராச நரேந்திரர் ஏறக்குறைய நாற்பதிரண்டு ஆண்டுகள் வேங்கியை ஆண்டார். விமாலாதித்தனுக்கு மாதவம்மா என்று மற்றொரு மனைவியும் இருந்தனள். அவளுக்குப் பிறந்தவனே விசயாதித்தன். இராசராச நரேந்திரர் வேங்கி மன்னராக முடிசூட்டப்பட்டது தொட்டே அவருக்கும் விசயாதித்தனுக்கும் வேங்கி அரியணை



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

காரணமாகப் பகைமை ஏற்பட்டது. கி.பி.1030ல் விசயாதித்தன் வேங்கி நாட்டின் கீழைக் கோடியிலிருந்த சிறு பகுதி ஒன்றைக் கைப்பற்றிக் கொண்டு, அங்கே ஓர் அரசை நிறுவி, மேலைச் சளுக்கர்களின் உதவியுடன், வேங்கி முழுவதற்குமே மன்னனாகி விட இடைவிடாது முயன்று வந்தான். ஆனால் சோழர்களின் பக்கபலம் இருந்த வரையில் இராசராச நரேந்திரரை அரியணையிலிருந்து அசைக்க முடியவில்லை. இறுதியில் *கி.பி.1062-63ல், இராசராச நரேந்திரரின் மறைவுக்குப் பிறகு அந்தச் சோழர்களின் ஆணைப்படிதான் அவன் வேங்கி நாடு முழுவதற்கும் அரசனாக முடிந்தது.

(*விசயாதித்தன் வேங்கி மன்னனான காலத்தை 1060-61, 1061-62, 1062-63 என்று ஆதார நூல்கள் வெவ்வேறு விதமாகக் குறிப்பிடுகின்றன. இக்கதையைப் பற்றியவரை நான் 1062-63 என்றே எடுத்துக் கொண்டுள்ளேன்.)

1018-19ல், விமலாதித்தர் இறந்தபோது, விசயாதித்தன் இளங்கோப் பருவத்தில் இருந்ததாக ஆதார நூல்கள் கூறுகின்றன. அந்த இளங்கோப் பருவத்தைப் பதினாறு வயதுக்கு மேற்பட்ட பிராயம் என்று கொண்டால், 1062-63ல் வேங்கிமன்னனான போது விசயாதித்தனுக்கு அறுபது வயதுக்கு அதிகமாகவே ஆகியிருக்க வேண்டும். தான் முதுமை அடைந்துவிட்டதன் காரணமாகவோ தெரியாது, வாழ்நாளெல்லாம் ஏங்கி, முயற்சி செய்து அடையப்பெற்ற அரியணையில் அவன் முழுமையாக ஓராண்டுகூட அமர்ந்து ஆட்சி செலுத்தவில்லை. அதற்குள்ளாகவே, தன் மைந்தன் இரண்டாம் சக்திவர்மனுக்கு நாட்டை முடிசூட்டி வைத்து விட்டான்.

விசயாதித்தைன் இவ்வாறு செய்ததற்கு வேறோர் அந்தரங்கக் காரணமும் இருந்தது. அண்மைக்காலம் வரையில் அவனுக்கு இந்த அரியணையைக் கிட்டச் செய்யச் சோழர்களுடன் பல போர்களில் ஈடுபட்டுப் பலவிதக் கஷ்ட- நஷ்டங்களுக்கு உள்ளானவர்கள் குந்தளத்தார். ஆனால் விசயாதித்தனோ, சோழர்கள் அந்த அரியணையைத் தனக்குத் தருவதாகக் கூறியதும் குந்தளத்தாரை உதறிவிட்டுச் சோழர்களின் கீழ் ஒரு சிற்றரசனாக வேங்கியை ஆளத் துவங்கி விட்டான். இது குந்தளத்தாருக்கு கொதிப்பை ஏற்படுத்தும்; அவர்கள் விரைவில் வேங்கி மீது படையெடுத்து வருவார்கள் என்பதை விசயாதித்தன் எதிர்பார்த்தே இருந்தான். அவனுக்குத் தனது போராற்றல் மீது துளியளவும் நம்பிக்கை கிடையாது. அதோடு தன்னைவிட முதியோனான ஆகவமல்லன் மட்டுமின்றி, அவனுடைய மைந்தர்களாகிய சோமேசுவரன், விக்கிரமாதித்தன், சயசிம்மன் ஆகிய மூவருங்கூடப் போர்க் கலைத்துறையில் வல்ல ஆண் சிங்கங்கள் என்பதையும் அவன் அறிவான், ஆதலால்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவர்கள் திடீரென வேங்கி மீது படையெடுத்தால் சோழர்களின் உதவி வரும்வரையில் கூடத் தன்னால் தாக்குப் பிடிக்க முடியாது என்று அவன் எண்ணினான். வேங்கி நாடு குந்தளத்தார் கைக்குப் போய்விடாதவாறு, சோழப்படைகள் உதவிக்கு வரும் வரையில் போரை நீடிக்கச் செய்யும் ஆற்றல் வாய்ந்தவன் தன் மகன் சக்திவர்மன் ஒருவனே என்பதையும் விசயாதித்தன் உணர்ந்திருந்தான்.

ஆனால் மகனின் உதவி தந்தைக்குக் கிடைப்பதில் ஒரு சிக்கல் இருந்தது. நம் குலோத்துங்கனைப்போல் சக்திவர்மன் சிறுவயதிலிருந்தே கல்யாணபுரத்தில் தங்கிப் போர்க்கலை பயின்றவன். ஆதலால் குலோத்துங்கனுக்கு எவ்வாறு சோழ நாட்டிடம் பற்று ஏற்பட்டிருந்ததோ, அவ்வாறு சக்திவர்மனுக்கும் குந்தள நாட்டின் மீது குன்றாத பற்று ஏற்பட்டிருந்தது. சோழர்களின் கீழ் சிற்றரசனாக இருக்க இணங்கித் தன் தந்தை வேங்கியைப் பெற்றதை அவன் சிறிதும் ஒப்பவில்லை. என்னவோ தந்தையைப் பின்பற்றி வந்தானேயன்றி, குலோத்துங்கன் கிழானடிகளுக்கு ஆணையிட்டுக் கொடுத்தது போல், இவனும் குந்தள நாட்டுக்கு எதிராக வாளெடுக்க முடியாது என்று தன் தந்தையிடம் கூறி, எந்நிலையிலும் தன்னை அந்தத் துரோகச் செயலைச் செய்ய வற்புறுத்துவதில்லை என்ற வாக்குறுதியை அவரிடமிருந்து பெற்றுக் கொண்ட பிறகுதான் வேங்கிக்கு வந்தான்.

இதுதான் சிக்கல்; இதற்காகத்தான் விசயாதித்தன் திணறினான். ஆயினும் கடைசியில் அவன் இதற்கு ஒரு வழி கண்டான். அந்த வழிப்படித்தான், மகனை உடனே வேங்கி மன்னனாக்கினான். 'ஆமாம், இனி நாடே அவனுடையதாகி விட்டது. அது பறிபோவதை அவன் பார்த்துக் கொண்டிருப்பானா?' என்று நினைத்தான் அந்த அசட்டுத் தந்தை.

ஆனால் சக்திவர்மன் வேங்கி அரசை ஏற்றுக்கொண்டதன் நோக்கமே வேறு. அவன் அதைக் குந்தளத்தாருக்கு அடங்கிய நாடாகச் செய்து விடவேண்டுமென்ற நோக்கத்துடனே ஏற்றுக் கொண்டான். எனவே, தனது முடிசூட்டு விழா முடிந்ததுமே அவன் குந்தள மன்னன் ஆகவமல்லனுக்கு ரகசிய செய்தி ஒன்று அனுப்பினான், "இனி வேங்கி, சோழ நாட்டின் பகுதியாக இருக்க முடியாது; இருக்கக் கூடாது. அது குந்தள நாட்டின் பகுதியாகத்தான் இருக்க வேண்டும். என்னை ஆளாக்கிவிட்ட நாட்டுக்கு அம்மட்டு நான் கடமைப்பட்டுள்ளேன். ஆனால் என் நாட்டை நானே உங்களிடம் ஒப்படைப்பதற்குக் குந்தகமாகச் சோழர்கள் இங்கே தங்களது சிறிய படை ஒன்றை நிறுத்தியுள்ளார்கள். வேங்கியின் சிறிய படையும் சோழப்படைக்கு அடங்கியதாகவே



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இருக்கிறது. ஆதலால் நீங்கள் வேங்கியின் மீது ஒரு திடீர்ப் படையெடுப்புச் செய்து அந்தச் சோழப்படையை அழித்துவிட்டு இந்நாட்டை உங்களதாக்கிக்கொள்ள வேண்டும்." இதுதான் சக்திவர்மன் அனுப்பிய செய்தியின் சாரம். இச்செய்தி கிடைத்ததுமே, குந்தள மன்னன் ஆகவமல்லன் செயற்படத் தொடங்கினான். ஆனால் கல்யாணபுரத்தில் அப்போது பெரும் அளவில் படைகள் இருக்கவில்லை. தலைநகரில் இருந்த படைகளையெல்லாம் ஆகவமல்லன் தன் மகன் விக்கிரமாதித்தன் சோழ நாட்டின் பகுதியான கங்கபாடியைக் கைப்பற்றிக்கொள்ள முயன்றபோது அதற்கு உதவுவதற்காக நுளம்பாடிக்கு அனுப்பியிருந்தான். நுளம்பாடிக்கு அருகில் வனவாசியில் இருந்த அவர்களது மாதாண்ட நாயகன் சாமுண்டராயனும் கங்கபாடிப் படையெடுப்புக்கு உதவுவதற்காகச் சென்றிருந்தான். எனவே ஆகவமல்லன் தானே நுளம்பாடிக்குப் புறப்பட்டுச் சென்று, அங்கிருந்த படைகளையெல்லாம் சாமுண்டராயனின் தலைமையில் வேங்கிக்கு அனுப்பிவிட்டு வந்தான்.

இந்த ஏற்பாடுகள் அனைத்தும் மிக இரகசியமாகச் செய்யப்பட்டன. ஏனென்றால், இதற்குமுன் அவர்கள் வேங்கிப் படையெடுப்புச் செய்த போதெல்லாம் சோழ நாட்டிலிருந்து பெரும் படை உதவிக்கு வந்து அவர்களைத் தோல்வியுறச் செய்தது. இத்தடவையும் அம்மாதிரி நிகழக்கூடாது என்றே ஆகவமல்லன் நேரில் வந்து படையெடுப்பு ஏற்பாடுகளைக் காதும் காதும் வைத்தாற்போல் செய்துவிட்டுப் போனான்.

ஆனால் இத்தடவையும் அவர்கள் முயற்சி விழலுக்கு இறைத்த நீராகத்தான் ஆயிற்று. இந்த ரகசியப் படையெடுப்புச் செய்தி உரிய காலத்தில் கங்கைகொண்ட சோழபுரத்தை எட்டிவிட்டது. ஆனால் அது சோழ ஒற்றர் மூலமோ அல்லது, வேங்கி ஒற்றர் வாயிலாகவோ எட்டவில்லை; ஆகவமல்லனின் அன்புக்கு உகந்த மகன் விக்கிரமாதித்தன் மூலந்தான் எட்டியது.

ஆம், அரசியலில் காதல் கலக்கும் போதெல்லாம், அது குடம் பாலில் துளி விடம் கலந்ததற்கு ஒப்பாகத்தான் ஆகிவிடுகிறது. அன்று முதல் இன்று வரையிலுள்ள சரித்திர ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் இதற்கு எண்ணற்ற சான்றுகளைக் காணலாம். சாமுண்டராயனை வேங்கிக்கு அனுப்பிவிட்டு ஆகவமல்லன் கல்யாணபுரத்துக்குத் திரும்பிய அன்றுதான், சோழநாட்டில் சுற்றிக்கொண்டிருந்த ஒற்றன் வானவியின் ஓலையுடன் விக்கிரமாதித்தனிடம் வந்து சேர்ந்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

## அத்தியாயம் – 4. குடம் பாலில் துளி விஷம்

**ம**துராந்தகி இயற்கையாகவே பேரழகு வாய்ந்தவள். இருந்தாலும், இயற்கை அழகு வாய்ந்தவர்களும் செயற்கைப் பொருள்கள் மூலம் தங்கள் அழகுக்கு அழகு செய்துகொள்ளாமல் இருப்பதில்லையே! குறிப்பாக, வண்ண வண்ண ஆடைகளை அணிய வேண்டும்; பொன்னும் மணியும் இழைத்த ஆபரணங்களைப் பூண வேண்டும் என்று ஆவல் கொள்ளாத பெண்டிர் யார்தான் இருக்கின்றனர்? அதிலும் மதுராந்தகி சோழ அரசர் குலத்துப் பெண்; எந்த ஆடையானாலும் எந்த அணியானாலும் விரும்புவதை வாங்கிக்கொள்ளும் சுதந்திரம் பெற்றவள். ஆதலால், அன்று சோழ கேரளன் அரண்மனைக்குச் சேரத்துச் சல்லாத்துணி வர்த்தகன் ஒருவன் வந்துள்ளான் என்ற செய்தியை அங்கு சென்று வந்த முடிகொண்ட சோழன் அரண்மனைச் சேடி ஒருத்தி வந்து அறிவித்ததும், அவள் அவ்வரண்மனைக்கு ஓடோடியும் வந்தாள்.

வந்தவள் நேரே அந்தப்புரத்துக்குச் சென்று தன் சிற்றன்னை அருமொழி நங்கையிடம் "சேரத்து வர்த்தகன் எங்கே இருக்கிறான்?" என்று வினவினாள். "முன் மண்டபத்தில் அவனைக் காணவில்லையே? அங்குதானே வானவி அவனை நிறுத்தி வைத்துக்கொண்டு தனக்குத் தேவையான துணிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தாள்?" என்றாள் சிறிய பிராட்டியார். 'சரி, நாம் வருவதற்குள் வானவி தனக்குத் தேவையானவற்றை வாங்கிக்கொண்டு வர்த்தகனை அனுப்பி விட்டாள் போலும்!' என்று நினைத்துக்கொண்டு மதுராந்தகி திரும்பினாள்.

அவள் முன் மண்டபத்துக்கு வந்ததும் அங்கிருந்த பணிப்பெண்ணிடம், அந்த வர்த்தகன் எப்பொழுது புறப்பட்டுச் சென்றானென்பதை வினவினாள். "வர்த்தகன் இன்னும் போகவில்லை, இளவரசி. வானவன் மாதேவியார் அவனைத் தமது விடுதிக்கு அழைத்துச் சென்றுள்ளார்கள்!" என்றாள் அப்பணிப்பெண். உடனே மதுராந்தகி அங்கே புறப்பட்டுச் சென்றாள். இரண்டொரு நாட்களுக்கு முன்தான் அவளுக்கும் வானவிக்கும் முன் அத்தியாயத்தில் கூறிய விவாதம் நிகழ்ந்தது. அன்று வானவியை "மானமிழந்தவள்" என்று பழித்துவிட்டுத் திரும்பியிருந்ததை மறந்து, சல்லாத் துணியின் மீதுள்ள ஆவலால், கிட்டத்தட்ட அவளுடைய விடுதி வாயில் வரையில் வந்துவிட்டாள் மதுராந்தகி. ஆனால் பிறகு அவளுக்கு இரண்டு நாட்களுக்கு முன் தங்களிடையே நிகழ்ந்த சண்டை நினைவுக்கு வரவே, வாயில் அருகிலேயே மறைவாக நின்றுவிட்டாள், 'வர்த்தகர் வெளியே வரட்டும்; அவரை அழைத்துக்கொண்டு நமது அரண்மனைக்கே போய்விடலாம்' என்ற நினைவுடன்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஆனால் சில பொழுதுக்குப் பின் உள்ளே நிகழ்ந்த இரகசியப் பேச்சு மதுராந்தகியின் கவனத்தை ஈர்த்தது. வானவிக்கும் அவ்வர்ததகனுக்கும் இடையே நிகழ்ந்த அந்த இரகசிய உரையாடல் மதுராந்தகிக்கு மிகத் தெளிவாகக் கேட்டதால், அவன் குந்தள ஒற்றன் என்பதையும், வானவி அவன் வழியே தன் காதலன் விக்கிரமாதித்தனுக்கு ஓலை அனுப்பப் போகிறாள் என்பதையும் அவள் தெரிந்து கொண்டாள்.

விரும்பியிருந்தால் அவள் அந்த ஒற்றனை மிக எளிதாகச் சிக்க வைத்திருக்கலாம். வானவிக்கும் அவனுக்கும் இடையே அரசியல் சம்பந்தமான உரையாடல் நிகழ்ந்திருந்தால் மதுராந்தகி அவனைச் சிக்க வைத்தே இருப்பாள். ஆனால் வானவி அவனிடம் தன் காதலன் தன்னைக் கைவிட்டு விட்டதாக மட்டுமே குறைப்பட்டுக் கொண்டதால், பரந்த உள்ளம் கொண்ட மதுராந்தகி, காதலனைப் பிரிந்து வாடும் அப்பெண் தன் எதிரியாகிவிட்டிருந்த போதிலும், அவள் அவனை அடையும் முயற்சிக்குத் தடை விளைவிக்க விரும்பவில்லை. அவள் உடனே தன் அரண்மனைக்குத் திரும்பிவிட்டாள். ஆனால் அன்றிரவு தன் கணவர் குலோத்துங்கனிடம் மட்டும் அரண்மனைக்குள்ளே குந்தள ஒற்றர்களின் நடமாட்டம் இருப்பதை இலேசாகக் கோடி காட்டினாள்.

சோழ நாட்டின் படைத் தலைவர்களில் ஒருவனாக விளங்கிய குலோத்துங்கனால் இந்த ஒற்றர் நடமாட்டச் செய்தியை மதுராந்தகியைப்போல் ஒரு சிறிய நிகழ்ச்சியாகக் கருத முடியவில்லை. அவன் அப்போது நகரப் பாதுகாப்புப் படையின் தலைவனாக இருந்தான். ஆதலால் உடனே கோட்டைக்குள்ளே வரும் ஒவ்வொர் அயல் நாட்டாரையும் இனி மிகுந்த கவனத்துடன் பரிசோதிக்க வேண்டும் என்று காவற்படையினருக்குக் கட்டளை பிறப்பித்தான். இந்தக் கட்டளையின் விளைவாகத்தான் சாமுண்டராயன் பெரும்படை ஒன்றுடன் வேங்கியை நோக்கிச் சென்று கொண்டிருந்த செய்தி வெளியாயிற்று.

நுளம்பாடியில் குந்தள இளவரசன் விக்கிரமாதித்தன் வானவியின் ஓலையைப் படித்து மிகவும் மனம் வருந்தினான். அவ்வோலையில் அவள், சோழ நாட்டில் தன்னை எல்லோரும் மானமிழந்த பரத்தையென்று மிகவும் இழிவாகத் தூற்றுவதாகவும், அந்த இழிவைத் தன்னால் இனிப் பொறுக்க முடியாதென்றும், ஆதலால் எவ்வழியிலாவது தன்னைச் சோழ நாட்டிலிருந்து அழைத்துச் சென்றுவிட வேண்டுமென்றும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருந்தாள்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஆனால் விக்கிரமாதித்தன் பகை நாட்டுப் பெண்ணான தன் காதலியை இரகசியமாகக் கடத்திச் சென்று அதன் நிமித்தம் ஒரு போர் நிகழ இடமளிக்க விரும்பவில்லை. எந்த வீரராசேந்திரன், தன்னுடன் இரண்டாண்டுகள் தனித்து வாழ்ந்த மகளைத் தனக்கு முறையாக மணமுடித்து வைக்க முடியாதென்று மறுத்து அவமானப்படுத்தினானோ, அந்த வீரராசேந்திரனே அவளை மணந்துகொள்ளுமாறு தன்னைக் கெஞ்சும் நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று துணிவு கொண்டிருந்தான். அதற்குரிய காலம் விரைந்து வந்து கொண்டிருப்பதாகவும் அவன் கருதினான். வேங்கி நாடு குந்தள நாட்டோடு இணையும்போது சோழ நாட்டின் வலிமை குன்றிவிடுவதோடு தங்கள் நாடு வலிமையில் மேம்பட்டு விடுமென்றும், அதன் பிறகு சோழ நாட்டின் மீது படையெடுத்துச் சென்று ஒரே போரில் அதனை அடிபணியச் செய்து, வீரராசேந்திரன் வானவியைத் தன் காலடியில் கொண்டுக் கிடத்தி, “இதோ உங்கள் பொருள்; உங்கள் மனைவி!” என்று கெஞ்சச் செய்துவிடலாமென்றும் அவன் மனக்கோட்டைகள் கட்டியிருந்தான்.

மனமுடைந்து ஓலை அனுப்பியிருந்த காதலிக்கு விக்கிரமாதித்தன் விவரங்களை விளக்கி, “அன்பே, அன்று ‘உங்களுடன் கல்யாணபுரத்தில் வாழ ஆயிரங்கோடி காலமானாலும் காத்திருப்பேன்’ என்றாய். உன்னை ஆயிரங்கோடி காலம் காத்திருக்கச் செய்ய மாட்டேன். இன்னும் ஓரிரு ஆண்டுகள் மட்டும் காத்திரு; போதும். குந்தளத்தாரின் மதிப்பை உணர்ந்து உன் தந்தையே உன்னை எனக்கு மணமுடித்துத் தருவார். அதற்கான முயற்சிகள் வெற்றி தரும் வழியில் நடந்து கொண்டிருக்கின்றன. வேங்கி நாட்டு அரசன் சக்திவர்மனின் வேண்டுகோளுக்கு இணங்கி எங்கள் திறமைமிக்க மாதண்ட நாயகர் சாமுண்டராயர் பெரும் படையுடன் இன்று வேங்கியை நோக்கிச் சென்றுள்ளார். விரைவில் வேங்கி எங்கள் வசம் ஆகிவிடும். பிறகு உன் தந்தையின் கொட்டம் அடங்க அதிக காலம் ஆகாது,” என்று குறிப்பிட்டு மறு ஓலை ஒன்றை அந்த ஒற்றன் வழியாகவே அனுப்பி வைத்தான்.

ஆனால் இடையில் குலோத்துங்கன் சோழ நாட்டில் செய்து விட்டிருந்த அயல்நாட்டார் பரிசோதனை ஏற்பாட்டின் காரணமாக, கங்கை கொண்ட சோழபுரத்து உட்கோட்டைக்குள்ளே முன்போல் எளிதாகச் சென்றுவிட முயன்ற அந்தக் குந்தள ஒற்றன் பிடிபட்டான். சற்றும் எதிர் பாராதபடி அவன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதால் விக்கிரமாதித்தன் வானவிக்கு அனுப்பியிருந்த ஓலையைக் காவற்படையினர் கைப்பற்றிக் குலோத்துங்கனுக்கு அனுப்பிவிட்டனர். குலோத்துங்கன் அக்கணமே சோழதேவரிடம்



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவ்வோலையைக் கொண்டுபோய்க் காட்ட, அவர் பெரும்படை ஒன்றுடன் வேங்கியை நோக்கிக் கிளம்பி விட்டார்.

அன்று மட்டும் அந்த ஓலை சோழர்கள் கையில் சிக்கியிராவிட்டால் சோழநாட்டின் பிற்காலச் சரித்திரமே மாறிப் போயிருக்கும். ஆம், அவர்களுக்குக் குந்தளத்தாரின் வேங்கிப்படையெடுப்பு, அந்நாடு அவர்கள் கைவசமான பிறகுதான் தெரிய வந்திருக்கும். விக்கிரமாதித்தன் நினைத்தவாறு வேங்கி நாடு குந்தளத்தாரின் கைக்கு வந்திருந்தால் சோழர்களின் வலுவில் ஒரு பகுதி குன்றி விட்டிருக்கும்; குந்தளத்தாரின் கை ஓங்கியும் இருக்கும். ஆனால் கிடைத்தற்கரிய அந்த அரிய வாய்ப்பை, சரித்திரத்தின் போக்கையே மாற்றிவிட இருந்த அந்த நிகழ்ச்சியை, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அந்த ரகசியத்தைக் காதல் பித்தில், காதலிக்குத்தானே அறிவிக்கிறோம் என்ற மிதப்பில், விக்கிரமாதித்தன் வெளிப்படுத்தப் போக, நிலைமையே தலைகீழாகிவிட்டது. எனவே, அரசியலில் காதல் குறுக்கிடும்போது, அது குடம் பாலில் துளி விடமாகக் கலந்து அத்தனையையும் விடமாக்கி விடுகிறது என்று கூறியதில் தவறு என்ன இருக்கிறது?

கார் மேகம் திருண்டு வருவது போலவும், கடல்நீர் பொங்கி வழிவது போலவும், இமயமொத்த மலை ஒன்று இடம் பெயர்ந்து நகருவது போலவும், பெரும்படை ஒன்றுடனும் சொல்லவொண்ணாச் சீற்றத்துடனும், வீறுகொண்டு வேங்கியை நோக்கி விறைந்து வந்த வீரராசேந்திரார், சாமுண்டராயனின் தலைமையில் இயங்கிய குந்தளப் படையை வேங்கி நாட்டுக்கு அருகில் சந்தித்துக் கடும் போர் புரிந்தார்.

நிலைமை முற்றிவிட்டதைக் கண்ட சக்திவர்மன் வெளிப்படையாகக் குந்தளத்தாருடன் சேர்ந்துகொண்டு சோழரைத் தாக்க முற்பட்டான். அவன் தந்தை விசயாதித்தனோ சோழர்களின் கடலனைய படையைக் கண்டு கதிகலங்கி, வீரராசேந்திரரிடம் சரணடைந்து, தன் மகனுக்கு வேங்கியை முடிசூட்டிய தவறுக்காகத் தன்னை மன்னிக்கும்படி கெஞ்சினான்.

போர் மும்முரமாக நடந்தது. குந்தளத்திலிருந்து ஆகவமல்லனும், அந்நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் பிரதிநிதிகளாக இருந்து வந்த அவனுடைய மக்கள் சோமேசுவரன், விக்கிரமாதித்தன், சயசிம்மன் ஆகியோரும், மற்றும் அவர்களது தண்ட நாயகர்களான கேசவன், கேத்தரையன், மாரயன், போத்தரையன், இரேச்சயன் போன்ற பலரும் வேங்கிக்கு விரைந்து வந்து போரில் கலந்து கொண்டனர்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சோழர் படையில் மாமன்னர் வீரராசேந்திரர், குலோத்துங்கன், கங்கைகொண்ட சோழ தன்மபாலன், வீரராசேந்திர காராளை விழுப்பரையன் போன்ற படைத்தலைவர்களும் போரிட்டனர்.

குந்தளப்படையை சாமுண்டராயனே முன்னின்று நடத்தினான். சோழப்படை மாமன்னர் வீரராசேந்திரரின் தலைமையில் இயங்கியது. குந்தளத்தார் வழக்கப்படி வீரம் குன்றாதவாறுதான் போரிட்டனர். ஆயினும் போர்க்கலையில் வல்ல சோழர்கள் முன் அவர்கள் வீரம் எடுபடவில்லை. போர் ஆரம்பமாகி இரண்டொரு நாட்கள் ஆவதற்குள்ளே வீரராசேந்திரரின் கணைக்கு இலக்காகி மடிந்தான் குந்தள மாதண்டநாயகன் சாமுண்டராயன். அவன் வீழ்ந்ததும் குந்தளப்படையும் நிலை குலைந்து போயிற்று. அதனை ஒன்று சேர்த்து மீண்டும் போர் செய்ய முன் வந்தான் விசயாதித்தனின் மகனான சக்திவர்மன். ஆனால் அன்றே வீரராசேந்திரரின் வாளுக்கு அவனும் பலியானான்.

வீரராசேந்திரர் அன்று அந்த ரணகளத்தில் ருத்ரமூர்த்தியாகவே விளங்கினாரென்று ஏடுகள் கூறுகின்றன. தமது கணைக்கு இலக்காகி மடிந்த குந்தள மாதண்டநாயகனின் தலையை, அவர் இன்னும் ஆத்திரம் தீராமல் தமது வாளாலேயே துண்டித்து எறிந்தார் எனவும், குந்தளத்தாரின் பாசறைகளை முற்றுகையிட்டு அங்கிருந்தவர்கள் அனைவரையும் சிறை செய்ததோடு, அம்முற்றுகையின் போது சிக்கிக்கொண்ட சாமுண்டராயனின் மகளும், குந்தளப் படைத் தலைவனான இருகையனின் மனைவியுமான நாகலி என்ற பேரழகியின் மூக்கைச் சிதைத்து அவமதித்தனன்* என்றும் ஆராய்ச்சி ஏடுகள் அறிவிக்கின்றன.

(*S.I.I.VOL.III PAGE 34 & 66)

இவ்வாறு வீரராசேந்திரர் தமது ஆட்சிக் காலத்தில் மேலைச் சளுக்கியர்களுடன் நிகழ்த்திய இரண்டாவது போர் அவருக்கு அளப்பரிய வெற்றியுடன் முடிவுற்றது. இந்தப் போரிலிருந்து வீரராசேந்திர தேவர் ஓர் எச்சரிக்கைக் குறிப்புப் பெற்றார். அதாவது, தமது மூத்த சகோதரர் வேங்கி பற்றிக் கையாண்ட அரசியல் தந்திரம் வெற்றி பெறவில்லை! விசயாதித்தன் தங்களுக்குக் கீழ்ப்படிந்தவனாக வேங்கியை ஆள இணங்கி இறுதியில் மோசம் செய்துவிட்டான்! தனது முதுமைப் பிராயம் காரணமாக மகனுக்கு இந்நாட்டை முடிசூட்டுவதாக நடித்து, அவன் வழியே குந்தளத்தார் கைக்குப் போக வகை செய்துவிட்டான்!



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

உண்மையில் நடந்தது என்னவோ அவ்வாறு அல்லவாயினும், நிகழ்ச்சிகள் விசயாதித்தனுக்கு எதிராகவே அமைந்துவிட்டன. ஆதலால் போர் முடிந்த பிறகு, இனி வேங்கி நாட்டை முன்போல் தானே ஆண்டுவருவதாக அவன் வேண்டிக் கொண்டபோது, சோழதேவர் அதற்கு இணங்கவில்லை. வேங்கி அரியணையில் முறையாக அமர வேண்டிய குலோத்துங்கனே இனி அங்கே அமர்ந்து ஆட்சி செலுத்த வேண்டும் என்று அவர் விரும்பினார். காலஞ்சென்ற தமது சகோதரர் இராசேந்திர தேவரின் கருத்துக்கு மாறாக, வெளிப்பகையை விட உட்பகை அத்தனை கொடிதல்ல என்று கருதினார். எனவே அவர் குலோத்துங்கனை அழைத்துத் தமது கருத்தை வெளியிட்டார்.

ஆனால் இதைக் கேட்டதும் குலோத்துங்கனுக்கு தன் மனைவி மதுராந்தகியின் ஆணை நினைவுக்கு வந்தது. தங்கள் திருமணத்துக்கு முன் அவள் கூறிய சொற்கள் எதிரொலித்தன - “சோழ அரியணையில் உங்களுடன் அமரக் காலம் வரும்; அதுவரையில் காத்திருப்பேன்!” என்றாள் அவள். மனைவி மீது தான் கொண்டிருந்த காதலை நினைத்தபோது அவனுக்குத் தன்மீதே நம்பிக்கை குன்றியது. ‘இன்று வேங்கி அரியணையை ஏற்றுக் கொண்டால், காலம் செல்லச் செல்ல அவள் என்னைக் கரையாய்க் கரைப்பாள். ஒருகால், அத்தை கிழானடிகளிடம் கூறியுள்ள உறுதி மொழியையும் புறக்கணித்து, நான் என்னை வளர்த்து ஆளாக்கிவிட்ட நாட்டுக்கு எதிராக வாளெடுக்க நேரிட்டாலும் நேரிட்டுவிடும். துரோகச் செயலுக்கு எதற்காக விதை விதைத்துக் கொள்ள வேண்டும்?’ என்று எண்ணினான்.

தவிர, அவனது சிறிய தந்தை விசயாதித்தனும் கைகளைப் பற்றிக்கொண்டு மன்றாடினான். “குலோத்துங்கா, யாரை மகனென்று கருதி முதுமைப் பிராயத்தில் எனக்குக் கிட்டிய இந்த அரியணையைத் தத்தம் செய்து கொடுத்தேனோ, அந்தப் பாவி என்னை மோசம் செய்து தன்னையும் அழித்துக்கொண்டான். எனக்கு இனி நீ தான் மகன். இந்த மகனிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். உயிரோடு இருக்கப் போகும் இன்னும் சில காலத்துக்காவது என்னை இந்நாட்டின் மணிமுடி தரித்து இருக்கச் செய், மகனே. என் மனைவி, முதுமை நிறைந்த உன் சிற்றன்னை மாதவ மகாதேவியின் *ஆணையாகக் கூறுகிறேன். இனி நான் என்றென்றும் சோழர்களின் உண்மையான பிரதிநிதியாகவே விளங்குவேன்.”

(*Journal of the Andhra Historical Research Society (JARS) Vol.V page 47)

இறுதியில் குலோத்துங்கன் தன் உள்ளத்துப் பீதியையும், தனது சிறிய தந்தையின் உண்மையான விருப்பத்தையும் வீரராசேந்திர தேவரிடம் கூறி, “அவரே இந்நாட்டை



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஆண்டுவர அநுமதி வழங்க வேண்டும்," என்று கேட்டுக் கொண்டான். அந்நாட்டுக்கு உரியவனின் வேண்டுகோளே அதுவாயின் சோழ தேவர் அதனை எவ்வாறு மறுதலிக்க முடியும்? விசயாதித்தனை விளித்து, அவனுக்குக் கண்டிப்பான எச்சரிக்கை விடுத்து, நாட்டை அவனிடமே ஒப்படைத்துவிட்டுக் கங்கை கொண்ட சோழபுரம் திரும்பினார்.

தலைநகரை அடைந்த வீரராசேந்திரர் இம்மாதிரியான விஷமத்தனத்துக்கு இனியும் இடமளிக்கக் கூடாதென்று கருதி, தமது மகள் வானவியையும் அழைத்து எச்சரித்தார்.

"பகை நாட்டு இளவரசனுக்கு உன்னை ஒருபோதும் மணம் செய்து கொடுக்க மாட்டேன். நாட்டின் நலம் கருதி, நீ அந்த விக்கிரமாதித்தனை இனி மறந்துவிட வேண்டும். என் கட்டளையை மீறி, இனி அவனுக்கு இது மாதிரி ஓலை ஏதேனும் அனுப்பித் தொடர்புகொள்ள முயன்றாயானால், முன்பு இரண்டாண்டுகள் மட்டுமே வாழ்ந்த பாதாளச் சிறையில் வாழ்நாள் முழுவதும் தனிமையில் வாட நேரிடும்!" என்று முன்னறிவிப்புச் செய்தார். அதோடு அவர், வானவி - விக்கிரமாதித்தன் தொடர்புக்குத் துணை நின்ற அவளுடைய அந்தரங்கத் தோழி பங்கையற்கண்ணியை அரசாங்கப் பணியிலிருந்து தள்ளி விட்டார். தமது மூத்த மகன் மதுராந்தகனுக்கும் இதில் கைகலப்பு உண்டு என்பது தெரிய வந்ததால், அவனுக்குச் சோழேந்திரன் என்ற பட்டம் வழங்கி, தொண்டை மண்டலத்தில் அரசப் பிரதிநிதியாக இருந்து ஆட்சி செய்து வருமாறு அனுப்பிவிட்டார்.*

(*தன்றிருப் புதல்வனாகிய மதுராந்தகனை வாளேந்துதானைச் சோழேந்திரனென்று எண்டிசை நிகழ எழில் முடிசூட்டித் தொண்டைமண்டலங் கொடுத்தருளி... (S.I.I. Vol.V-No.976))

இவ்வாறு பகைநாட்டுடன் ஏற்பட்டிருந்த கூடாநட்பை அடியோடு அழித்து விட்டதாகக் கருதி இறுமாந்திருந்தார் சோழமன்னர் வீரராசேந்திர தேவர். ஆனால் அது அழிந்ததா, அல்லது வளர்ந்ததா?

## அத்தியாயம் – 5. தோல்வியில் வெற்றி

**வீ**ரம் செறிந்த நாடு சோழ நாடு. போர்க்களத்தில் உயிரைத் துரும்பாக நினைத்து, நாட்டின் நலமே பெரிதென வாளெடுத்துச் சமர் செய்யும் ஆண்களிடம் மட்டுந்தான் அன்று வீரம் இருந்தது என்றில்லை. வீட்டிலே இருந்த பெண்டிரும் வீர மனப்பாங்கு கொண்டவர்களாகவே இருந்தார்கள். அவர்களுடைய சொல்லிலும், செயலிலுங்கூட



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வீரம் கொடி கட்டிப் பறந்தது. ஆயிரக்கணக்கான போர்வீரர்களில் ஒருவனாகச் சென்று வெற்றி வீரனாகத் திரும்பும் மைந்தனையோ, கணவனையோ, அல்லது உடன்பிறந்தானையோ சோழ நாட்டுப் பெண்டிர் எத்தனை மகிழ்ச்சியோடு ஆத்திமாலை சூடி, மங்கள நீர் சுற்றித் திலகமிட்டு வரவேற்றனரோ, அவ்வாறே தோல்வியுடன் திரும்பும் அவர்களை ஏறெடுத்துப் பாராத அளவு வீர உணர்ச்சி அவர்களிடம் மிகுந்திருந்தது.

சோழப் படையினர் எல்லாப்போர்களிலுமே வெற்றியுடன் திரும்பினர் என்று சொல்வதிற்கில்லை. அவர்கள் தோல்வியை மருவித் திரும்பியிருந்ததும் உண்டு. ஆனால் அப்படித் திரும்ப வேண்டிய நிலை ஏற்படும் போது, அவர்களுக்கு அத்தோல்வியால் ஏற்படும் அவமானத்தைவிட, வீட்டுப் பெண்டிரின் முகத்தில் எப்படி விழிக்கப் போகிறோம் என்ற கவலையே பெரிதாக இருக்கும். சில வீர மகளிர், தோல்வியுடன் திரும்பிய கணவனைக் கணவனென்றும் பாராமல், வீட்டுக்குள்ளேயே வர விடாமல் கதவைத் தாழிட்டுக் கொண்டுவிடுவார்களாம். இன்னும் சிலர் மீண்டும் பொருது கொண்டு சென்று வெற்றிவாகை சூடி வரும் வரையில் தங்களைத் தீண்டுவதில்லை என்று ஆணையிடச் செய்த பிறகே கணவன்மார்களை வீட்டுக்குள்ளே விடுவார்களாம்.

இவற்றையெல்லம் பார்க்கும்போது, சோழப் படையினரிடையே வீரத்தை வளர்க்கக் காரணமாக இருந்தவர்கள் அந்நாட்டு மகளிர்தான் என்று கூசாமல் சொல்லிவிடலாம். இப்படிப்பட்ட வீரம் வளர்த்த மகளிர் சாதாரணக் குடிமக்களிடையேதான் இருந்தார்கள் என்று கருதிவிடக் கூடாது. அரசகுல மாதர்கள்கூட இவ்வாறுதான் விளங்கினார்கள்.

ஆனால் இப்போது நம் கதையில் இந்த வழக்கத்துக்கு மாறான செயல் ஒன்றைக் காணப் போகிறோம். அதாவது, வெற்றிக்கொண்டு திரும்பிய கணவனுக்குச் சோழ நாட்டுப் பெண் ஒருத்தி தோல்விக்குரிய வரவேற்பை அளித்தாள். ஆம், நமது கதைத்தலைவி மதுராந்தகிதான்! ஆனால் அது எப்படிப்பட்ட வரவேற்பு? எதற்காக?

ஏமாற்றத்துக்கும் ஓர் எல்லை உண்டு. அந்த எல்லையை அது மீறிவிடும்போது, உள்ளம் சிதறித்தான் போய்விடுகிறது. அந்த உள்ளச் சிதறல்கள் கனல் பொறிகளாக எதிரே நிற்பவரைச் சுட்டெரிக்கின்றன. அவர்களுக்கும் தனது ஏமாற்றத்துக்கும் தொடர்பு உண்டா, அவர்கள் அதற்கு எவ்வகையிலாவது உதவினார்களா என்று கூட அந்தப் பொறிச் சிதறல்கள் கவனிப்பதில்லை. அயலார் பாடே இப்படியானால், எதிரே நிற்கும் ஆள் ஏமாற்றத்துக்கு முழுப் பொறுப்பாளியாகவே இருந்து விட்டால், கேட்கவா



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வேண்டும்? இதுதான் உலக வழக்கு. ஆனால் இந்நிலைக்கு உள்ளானபோது, மதுராந்தகி என்ன செய்தாள்?

எப்பொழுதும்போல் இத்தடைவையும் வேங்கிப் போரில் வெற்றி கொண்டு திரும்பிய சோழப்படை சோழகங்கன் ஏரிகரையில் தண்டிறங்கி இருப்பதாக முன்னாள் இரவு கங்கைகொண்ட சோழபுரத்துக்குச் செய்தி வந்தது. வீரராசேந்திரர் அரசை ஏற்ற பிறகு நிகழ்த்திய முதலாவது பெரும்போர் இது. ஆதலால் மறுநாள் காலையில் வெற்றிப்படை வரவேற்புச் சிறப்பான முறையில் நடைபெற வேண்டுமென்று நகரெங்கும் பறையறிவிக்கப்பட்டது.

இந்தச் செய்தி, அதாவது தனது சிறிய தந்தையின் தலைமையில், தன் கணவரைப் படைத் தலைவர்களில் ஒருவராகக் கொண்டு பொருது சென்ற படை வெற்றி முரசு கொட்டித் திரும்பும் செய்தி, மற்றவர்களை விட மதுராந்தகியைத்தான் மகிழ்ச்சிக் கடலில் அதிகமாக ஆழ்த்தியது.

‘கணவர் தனது ஆணையை நிறைவேற்ற முடியாது என்று கூறியிருந்ததை அவள் மறந்துவிடவில்லை. ஆனால் அந்த ஆணை நிறைவேறாமற் செய்துவிட வேண்டுமென்று தந்தையே தனக்குத் தீங்கு இழைக்கும் முறையில் வேங்கி அரசைத் தன் கணவரின் தாயாதிக்கு வழங்கியபோது மதுராந்தகி ஏன் வாய் திறவாதிருந்தாள் என்றால், அதற்குக் காரணம் உண்டு. அவள் அரசியலில் அதிகமாகத் தலையிட்டவள் இல்லையெனினும், தந்தைக்கு இருந்த அரசியல் மதிநுட்பம் அவருடைய உதிரம் ஓடிய மகளிடமும் ஓரளவு இல்லாமற் போய்விடவில்லை. வேங்கி அரசை ஏற்றுள்ள விசயாதித்தன் வெறும் கோழை என்பதைத் தன் அத்தை அம்மங்கை தேவியும், கணவன் குலோத்துங்கனும் பலதடவை கூறக்கேட்டிருக்கிறாள். அதோடு, குந்தள ஆகவமல்லன் வேங்கியைத் தங்கள் நாட்டுடன் இணைத்துக்கொள்ள எத்தனை விடாமுயற்சியுடன் இருந்து வருகிறான் என்பதையும் அவள் அறிவாள். இந்நிலையில் வேங்கிநாடு ஒரு கோழையின் கைக்கு வந்திருக்கும் தருணத்தை ஆகவமல்லன் நழுவ விட்டுவிடுவானா? ஒருகாலும் மாட்டான். தருணம் பார்த்து அதைக் கவ்விக் கொள்ளவே முயலுவான்; கவ்விக் கொண்டாலும் கொண்டு விடுவான். அப்போது சோழர்கள் சும்மா இருப்பார்களா? அவர்கள் போரிட்டு வேங்கியை மீட்கத்தான் மீட்பார்கள். அப்படி மீட்ட பிறகு, இனியாவது எல்லைக் கேந்திரமாக விளங்கும் அந்நாடு திறமையற்றவர்களிடம் இருக்கக் கூடாது என்பது அவர்களுக்குத் தோன்றாமல் இராது. அது தோன்றி, இனி யாரை அங்கே ஆளச் செய்வது, அல்லது குறைந்தது ஒரு மாதண்டநாயகனாக இருந்து அந்நாட்டைப்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

பாதுகாத்து வரச் செய்வது என்ற வினா எழும்போது, திறமைசாலியும், உரிமையாளருமான தனது கணவரின் நினைவு அவர்களுக்கு எழவே செய்யும். அதுபோது, தானும் சிறிது தூண்டுகோல் போட்டால் தன் கணவரின் நாடு அவருக்கே கிட்டி விடும். நாடு கிட்டி, அவரைத் தனது ஆணைக்கு உதவத் தயார் செய்வது அத்தனை பெரிதல்ல...!' இவ்வாறு எண்ணியிருந்தாள் அப்பேதை. அதன் காரணமாகத்தான் அன்று தங்கள் திருமணத்துக்கு முன் கணவன் தன்னைக் குத்திக் காட்டுவதுபோல், "என்ன ஆயிற்று உன் ஆணை?" என்று கேட்டபோது அவள், "என் ஆணை அப்படியேதான் இருக்கிறது. அதை நிறைவேற்றிக்கொள்ளக் காலம் வரும்; அதுவரையில் காத்திருப்பேன்!" என்று தயக்கமின்றி உரைத்தாள்.

நினைத்தவாறே, வேங்கிப் போர் பெரிய அளவில் மூண்டபோது, அதற்கு உதவ ஆளும் மன்னருடன் தன்னை ஆண்டவரும் பொருதுகொண்டு சென்றபோது, "காலம் வந்துவிட்டது; குறைந்த அளவு தொடங்கியாவது விட்டது," என்று அவள் மகிழ்ச்சி கொண்டாள். அவளுக்குத் தெரியும், என்னதான் ஆகவமல்லனோ, அவன் மக்களோ, அன்றி அவர்களது புதிய படைத்தலைவன் சாமுண்டராயனோ சீற்றத்துடன் போரிட்டாலும் சோழப்படையே வெற்றி அடையும் என்பது. ஆதலால் அவ்வெற்றியும், தான் நினைத்தவாறு கிட்டி விட்டதாகச் செய்தி வந்தபோது அவளுடைய உள்ளம் மகிழ்ச்சியினால் துள்ளிக் குதித்தது.

அதே சமயம், வெற்றிக்குப் பின் என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளும் ஆவலும் மதுராந்தகிக்கு ஏற்பட்டது. அதல்லவா அவளுக்கு முக்கியம்? செய்தி கொணர்ந்த தூதனுக்கு அவள் தன் கழுத்திலிருந்த மணிமாலை ஒன்றைப் பரிசாக வழங்கப்போனாள். வெற்றிச் செய்தி கொண்டுவரும் தூதர்களுக்கு அத்தகைய பரிசில்களை பெரிதும் எதிர்பார்பார்கள். பேராவலோடும் பெருமகிழ்ச்சியோடும் பெற்றுக் கொள்வார்கள். ஆனால் இது என்ன? இந்தத் தூதன் மதுராந்தகி அளித்த பரிசிலைப் பெற்றுக்கொள்ளத் தயங்குகிறானே?

"வாங்கிக்கொள் வீரனே, எங்கள் உளம் குளிரும் செய்தி கொணர்ந்த உனக்குக் கனகாபிடேகம் செய்தாலும் தகும்," என்றாள் அருகில் நின்ற லோகமகாதேவியார் - காலஞ்சென்ற இராசமகேந்திரரின் மனைவி.

"வேண்டாம் தாயே. பரிசிலை நீங்கள் யாரேனும் அளித்தால் தலை வணங்கிப் பெற்றுக் கொள்ளுவேன். ஆனால் வேங்கிப் பிராட்டியின் கையால் பரிசிலைப் பெற



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இத்தடவை இந்த எளியோன் கொடுத்து வைக்கவில்லை," என்று தலை குனிந்து உரைத்தான் அந்த வீரன்.

"ஏன் வீரனே? ஏன்?" என்று அங்கே குழுமியிருந்த முடிகொண்ட சோழன் அரண்மனைவாசிகள் அனைவரும் ஒரு குரலில் குழம்பினர்.

"இந்த வெற்றி சோழநாட்டுக்கு மகத்தான வெற்றிதான், தாயே; ஆனால் வேங்கிக்கு அது மீண்டும் ஒரு தோல்வியே!"

"நீ சொல்வதன் பொருள் என்ன?" என்று உள்ளம் பதறக் கேட்டாள் மதுராந்தகி.

"ஆம், வேங்கிப் பிராட்டியாரே. நமது மன்னர்பிரான் அந்நாட்டை வென்று உரியவரிடம் வழங்கிய போது அவர் அதனை மறுதளித்துத் தனது சிறிய தந்தைக்கே மீண்டும் கொடுக்கச் செய்துவிட்டார்!" என்று தொடங்கி வேங்கியில் நடந்தவை அனைத்தையும் விளக்கினான் அவ்வீரன்.

இதைக் கேட்டபோதில், மதுராந்தகியின் மகிழ்ச்சியெல்லாம் மண்ணோடு மண்ணாகியது; அவளுடைய கையிலே சுழன்ற மணிமாலையும் மண்ணைக் கவ்வச் சென்றது. ஆம்; வீரன் கூறியது உண்மையே! இந்த வெற்றி சோழ நாட்டினருக்கு வெற்றி. ஆனால் வேங்கி நாட்டானை மணந்து வேங்கிப் பெண்ணாகிவிட்ட அவளுக்குத் தோல்விதானே? அவளுக்கு மட்டுமா தோல்வி? அவளுடைய ஆணைக்கும் மற்றோரு படுதோல்வி!

அன்று சோழகேரளன் அரண்மனை முன் நடந்த வெற்றிப்படை வரவேற்பைக் காண அவள் வரவில்லை. பின்னர், தன் கணவர் முடிகொண்ட சோழன் அரண்மனைக்குத் திரும்பு முன் ஓடோடி வந்து அவருக்கு ஆத்தி மாலை சூடி, மங்கள நீர் சுற்றித் திலகமிட்டு வரவேற்கவில்லை. அவள் ஏமாற்றத்தில் மூழ்கி, முடிகொண்ட சோழன் அரண்மனையிலிருந்த தங்கள் விடுதியில் படுக்கையில் படுத்து, பிறந்து சில திங்களே ஆகியிருந்த தங்கள் இரண்டாவது மைந்தன் மும்முடிசோழனை அருகில் கிடத்தியவாறு அழுது கொண்டிருந்தாள். ஆனால் அவள் தன் படுக்கை அறையின் கதவை மூடிக் கொண்டிருக்கவில்லை. திறந்துதான் வைத்திருந்தாள்; அதோடு ஒவ்வொரு கணமும் கணவனை எதிர்நோக்கிக் காத்தும் இருந்தாள்.

குலோத்துங்கனும், நாடு திரும்பியதும், மனைவி தனக்கு அளிக்கப்போகும் வரவேற்பு எத்தகையதாக இருக்கும் என்பதை ஓரளவு ஊகித்தே இருந்தான். கைக்கு வந்த நாட்டை உதறிவிட்ட செய்தி இதுகாறும் அவளுக்கு எட்டியிருக்கும் என்பது அவனுக்குத் தெரியுமாதலால், வெற்றிப்படை வரவேற்பின்போது சோழ கேரளன் அரண்மனைமுன்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கூடியிருந்த பெண்டிரிடையிலோ, அன்றி, அரண்மனையின் மேன்மாடத்திலோ அவளைக் காணாதது அவனுக்குத் திகைப்பளிக்கவில்லை. அவ்வாறே முடிகொண்டசோழன் அரண்மனைக்குத் திரும்பியபோது அங்கும் தன்னை வரவேற்க அவள் இல்லாதது அவனுக்கு வியப்பளிக்கவில்லை. தவிர, இதனால் அவன் அவமானமோ, மனவருத்தமோ கூட அடையவில்லை. ஆனால், மனைவியின் இந்தப் புறக்கணிப்பு, இந்தப் பதுங்கல், தன் மீது பாயப் போவதன் அறிகுறி என்பதை அறிவான். அந்தப் பாய்ச்சலைத் தவிர்க்க முடியாது என்பதும் அவனுக்குத் தெரியும்.

முடிகொண்ட சோழன் அரண்மனைக்கு வந்ததும் அவன் முறைப்படி தனது அத்தைகளான கிழானடிகள், திருலோக்கியமுடையாள், லோகமகாதேவி ஆகியோரை அவரவர்கள் அந்தப்புரங்களுக்குச் சென்று வணங்கி, வாழ்த்தைப் பெற்றுக்கொண்டு மனைவியின் அந்தப்புரத்துக்கு வந்தான். அங்கு ஒருபால் சேடி ஒருத்தியுடன் விளையாடிக்கொண்டிருந்த தனது மூத்தமைந்தன் கங்கசோழனைத் தூக்கி எடுத்து முத்தமாரி பொழிந்து, அவனைப் புசங்களில் சுமந்தவாறு மதுராந்தகியின் படுக்கை அறைக்கு வந்தான். அறைக்கதவு மூடப்பட்டிருக்கும் என்று எண்ணியிருந்த அவனுக்கு அது திறந்து கிடந்தது சிறிது வியப்பைத்தான் அளித்தது.

அறையில் பொன்முலாம் பூசப்பட்டிருந்த கட்டிலில் படுத்திருந்த மனைவியை நெருங்கி, “கண்ணே!” என்று குரல் கொடுத்தான் குலோத்துங்கன்.

எரியும் தீயைக் கிளறிவிட்டதும் திடீரென எழும் அதன் கொழுந்தைப்போல், மனைவியின் சீற்றத் தீயின் கொழுந்தை எதிர்பார்த்த குலோத்துங்கனைத் திகைக்கச் செய்தது மதுராந்தகி செய்த செயல். அவள் குபீரென்று எழுந்தாள். ஆனால் சீற்றத்தின் தோற்றமே அவளிடம் இல்லை. இத்தனை நேரமாகக் குமுறிய அழுகையெல்லாம் அவளிடமிருந்து எங்கே போய்விட்டது? கண்ணீர்க்கறை நன்கு தெரிந்தபோதிலும் அவளுடைய முகத்திலே ஒருவித மலர்ச்சி அல்லவா பரவியிருக்கிறது? இது என்ன விந்தை!

ஆம்; மதுராந்தகி விந்தைப் பெண்தான். அந்த விந்தைப் பெண் செய்த அடுத்த விந்தைச் செயல் என்ன தெரியுமா? கட்டிலுக்கு அருகில் ஓர் ஆசனத்தின்மீது ஏதோ பொருள்கள் பட்டுத் துணியால் மூடி வைக்கப்பட்டிருந்தன. அவள் எழுந்ததும், அந்த ஆசனத்துக்குச் சென்று பட்டுத் துணியை விலக்கினாள். ஒரு பொன் தட்டில் மங்கள நீரும், அருகே ஓர் ஆத்திமாலையும் இருந்தன. ஆத்திமாலையை எடுத்துக் கணவனுக்குச்

சூட்டினாள். மங்கள நீரை மும்முறை சுற்றி அவனுக்குக் கண்ணேறு கழித்தாள். பிறகு அந்நீரால் அவனுக்குத் திலகமிட்டு, அவனுடைய பாதத்தில் தலை சாய்த்து வணங்கினாள்.

குலோத்துங்கனுக்கு ஏற்பட்ட வியப்பில், அவளுக்கு ஆசி கூறவேண்டியதைக் கூடக் கணப்பொழுது மறந்துவிட்டான். அவன் எண்ணி வந்தது என்ன? இங்கே நடப்பது என்ன?

"கண்ணே!" அவன் கையிலிருந்த மூத்த மகனைத் தரையில் இறக்கிவிட்டு மனைவியை வாரி எடுத்து அணைத்துக் கொண்டான். போர்க்கவசம் பூண்ட அந்தப் பரந்த மார்பினில் அழுந்திய முகத்தை நிமிர்த்தாமலே நெடுநேரம் இருந்தாள் மதுராந்தகி.

"அன்பே! என் ஆருயிரே!" என்று அவளை இன்னும் ஆரத் தழுவி மெய்ம்மறந்தான் அவன்.

தந்தையும் தாயும் இவ்வாறு நீண்ட பொழுது ஒன்றாகி நின்றது அந்தப் பாலகன் கங்கசோழனுக்கு அச்ச மூட்டியதோ, என்னவோ? அவன், "அம்மா! அப்பா!" என்று விளித்து அவர்களை நினைவுலகுக்குக் கொணர்ந்தான்.

கணவனின் அன்புப் பிடியிலிருந்து விடுபட்டு மகனைத் தூக்கி உச்சி மோந்தாள் மதுராந்தகி. பிறகு அவனைக் கட்டிலில் உட்கார்த்திவிட்டு, உறங்கிக் கொண்டிருந்த இளைய மகன் மும்முடிச் சோழனை எழுப்பி, "உன் தந்தை வந்திருக்கிறாரடா, கண்ணே, எழுந்திரு," என்று கூறியவாறு அவனை எடுத்துக் கணவனிடம் கொடுத்தாள். பின்னர் அந்த வியப்புறு மங்கை, கொண்டவனைக் கட்டிலில் அமர்த்தி அவனுடைய போர்க்கவசங்களை அகற்றிவிட்டு, உண்ணப் பழங்களும், பருகப் பாலும் கொடுத்து உபசரித்தாள்.

குலோத்துங்கன் பேச வாயிழந்தவனாய், அவள் ஆட்டி வைத்த பாவையாக ஆடிக்கொண்டிருந்த அந்தத் தருணத்தில், மதுராந்தகியின் பெண்மை விழித்துக்கொண்டு செயற்படத் துவங்கியது. அவள் தன் இரு மக்களையும் கணவனின் மடியில் அமர்த்தி, "குழந்தைகளுக்கு ஆசி கூறுங்கள்," என்றாள்.

குலோத்துங்கன் வியப்புடன் அவளை நோக்கி, "இது என்ன புதிய நடைமுறையாக இருக்கிறதே, மதுரா?" என்று வினவினான்.

"பெற்ற குழந்தைகளுக்குப் பிறப்பித்தவர் ஆசி வழங்குவது புதுமையா?" என்று எதிர்வினா ஒன்றை விடுத்தாள் அந்த வீரப்பெண்.

"என் சேய்களுக்கு என் ஆசி என்றும் உள்ளதுதானே, கண்ணே?"

"உண்மையாக உண்டா?"



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"இது என்ன கேள்வி, மதுராந்தகி...?

"அப்படியானால் என் காது குளிர அதை ஒரு தடவை கூறுங்கள்."

"என்னவென்று ஆசி வழங்க வேண்டும்?"

"உங்கள் மக்களின் நலன் உங்களுக்குத் தெரியாதா? அவர்களுக்கு அந்த நலன்கள் கிட்டுமாறு, கிட்டச்செய்வதாக ஆசி அளியுங்களேன். இதைக்கூட ஒருத்தி சொல்லித் தரவேண்டுமா?"

"சொல்லித்தர வேண்டியதில்லை. ஆனால் நீ எதையோ உள்ளத்தில் கொண்டு, இன்று புதிதாக இவர்களுக்கு ஆசி வழங்கச் சொல்கிறாய். உன் உள்ளத்தில் இருப்பதைச் சொல். அதையே என் ஆசியாக வழங்குகிறேன்."

"ஆமாம், என் உள்ளத்தில் ஒன்று இருக்கத்தான் இருக்கிறது. நேற்றுவரை நான் தன்னலமே உருவாக இருந்தேன். அதற்குத் தங்களைக் கருவியாக்கிக் கொள்வதிலேயே கருத்தாக இருந்தேன். இன்றுதான் என் மனக்கண்கள் திறந்தன. நமக்கு இரு மைந்தர்கள் இருப்பதும், அவர்களது வருங்கால நலனே இனி நமது நலன் என்றும் உணர்ந்தேன். ஆதலால், நான் மாறிவிட்டதைப்போல் உங்களையும் மாறச் செய்ததை உறுதி செய்து கொள்ளவே இன்று இவர்களுக்கு ஆசி கூறுமாறு வேண்டிக் கொண்டேன்."

"சொல் கண்ணே, என் மக்களின் நலனுக்காக எதையும் நான் உறுதியாகச் செய்வேன்."

"செய்வீர்களா?"

"பெற்ற செல்வங்களின் விஷயத்தில் நான் அத்தனை இரக்கமற்றவனாக இருப்பேன் என்று நீ ஐயமுறுகிறாயா?"

"அப்படியானால், வேங்கி அரசகுலத் தோன்றல்களாகிய அவர்களுக்கு அந்நாட்டைக் கிட்டச்செய்வதாக ஆசி வழங்குங்கள்."

"மதுராந்தகி! இது என்ன மதுராந்தகி?" குலோத்துங்கன் சட்டென்று பின்னடைந்தான்.

"ஏன்? நான் உங்களால் இயலாததைச் செய்யுமாறு கேட்டுவிட்டேனா?"

"ஆம்; சோழப் படைத்தலைவனான நான் வேங்கி அரியணையை என் மைந்தர்களுக்குக் கிட்டச்செய்வதாக எவ்வாறு ஆசி வழங்க முடியும்?"

"முடியும். அதனால்தான் கேட்டேன்."

"எப்படி முடியும்?"



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“மீண்டும் எப்பொழுதாவது அது உங்களுக்கு வழங்கப்பட்டால், இந்தப் பச்சைக் குழந்தைகளை நினைத்துக் கொள்ளுங்கள். இவர்களும் உங்களைப்போல் அந்நாட்டின் பட்டத்துக்கு உரியவர்கள் என எண்ணிக் கொள்ளுங்கள். நீங்கள் அரசை மறுத்துப் படைத் தலைமையை ஏற்றதைப்போல், இவ்விருவரும் செய்தாலன்றி, ஏன் செய்கிறார்கள் என்று வைத்துக் கொண்டாலுங்கூட, அப்படிச் செய்யும் வரையில், அவர்களது உரிமையைப் பாதுகாத்து அவர்களுக்கு வழங்க வேண்டியது தந்தையாகிய உங்கள் கடமை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். உணர்ந்து அதன் பொருட்டாவது, வலியக் கிடைப்பதை மறுப்பதில்லை என்று உறுதி கொண்டீர்களானால், ஏன் இவர்களுக்கு நான் விரும்பியவாறு ஆசி வழங்க முடியாது?”

“என் அன்பே! நான் இப்போது எனக்காக எதையும் கோரவில்லை. உங்களுக்காகவும் கோரவில்லை. நம் மைந்தர்களுக்காகக் கோருகிறேன். அவர்களுக்குரிய உரிமையை வழங்க முடியாவிட்டாலும், பறித்தவர்கள் என்ற பழிச்சொல்லுக்கு நாம் இலக்காகக் கூடாது என்பதற்காகவே இறைஞ்சுகிறேன். வேங்கிநாடு உங்கள் மைந்தர்களுக்குக் கிட்ட வேண்டும் என்பதற்காக நீங்கள் வாளெடுத்துப் போர் செய்ய வேண்டாம். நாளை ஒருநாள் மீண்டும் அந்நாடு சோழநாட்டின் பிடியிலிருந்து நழுவும்போல் இருந்தால், சோழநாட்டுக்காக போர் செய்வீர்கள் அல்லவா? அந்தப் போரில் வெற்றி கிட்டியதும், அந்நாடு உங்களுக்கு வழங்கப்படுமானால் இத்தடவை மறுத்ததுபோல் மறுத்துவிடாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் என் கோரிக்கை. ‘தந்தை என்ற முறையில் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையை மறக்காமல், அடுத்த தடவை வேங்கி எனக்கு வழங்கப்பட்டால் உங்களுக்காக ஏற்றுக்கொள்ளுவேன்’ என்று கூறி இந்தப் பஞ்சைகளுக்கு ஆசி கூறுங்கள்.”

உணர்ச்சி வசப்பட்டு விட்டதால் மதுராந்தகிக்குக் கண்டம் அடைத்துக் கொண்டது; கண்களில் கண்ணீர் பொங்கி விட்டது.

அந்தக் கண்ணீரோ, அல்லது மக்களுக்குத் தான் ஆற்ற வேண்டிய கடமையோ, ஏதோ ஒன்றுதான் குலோத்துங்கனின் உள்ளத்தைக் கரைத்திருக்க வேண்டும். “ஆகட்டும், கண்ணே!” என்று மனைவியை அணைத்துக் கொண்ட அவன், பின்னர் அவ்வாறே தன் மைந்தர்கள் கங்க சோழனுக்கும், மும்முடி சோழனுக்கும் ஆசி வழங்கினான்.

வீம்பும் குரோதமும் நிறைவேற்ற முடியாத செயல்களை அன்பு எளிதாக நிறைவேற்றிவிடும் என்பது எத்தகைய உண்மை! ஆம், அன்பினால் தோல்வியிலே



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வெற்றி கண்டுவிட்டாள் மதுராந்தகி. அவளுடைய ஆணை, நிறைவேற்றப்படும் போக்கிலே முதல் அடி எடுத்து வைத்து விட்டது!

## அத்தியாயம் – 6. சிவபோத அடியார்

**வா**ழ்வில் எத்தனையோ தோல்விகளை மனிதர் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அது எந்தவிதமான தோல்வியாக இருந்தாலும் சரி, அதற்குள்ளானவர்களைத் தாக்காமல் இருப்பதில்லை. ஆனால் அந்தத் தாக்குதல்கள் எல்லாவற்றிலும் மிகக் கொடுமையான தாக்குதலை அளிக்கக்கூடிய தோல்வி ஒன்று உண்டென்றால் அது காதல் தோல்விதான் என்று கூசாமல் கூறமுடியும். அது ஓரளவு உண்மையுந்தான். ஏனென்றால் இளம் பிராயத்தில் மற்றெல்லாவற்றையும்விட, காதல்தான் அவர்களுக்கு வழிபடும் இறைவனாக விளங்குகிறது. அந்த வழிபாட்டில் தோல்வியடைந்தால் அவர்கள் உள்ளம் உடைந்து போகாமல் என்ன செய்யும்? அத்தகைய உள்ளச் சிதறலின் காரணமாகப் புத்தி பேதலித்துப் போவோர் கூட உண்டு. பேதை வானவியின் அறிவும் அவ்வாறுதான் பேதலித்துப் போய்விட்டது. அது தானாகப் பேதலித்தது என்று கூறுவதுகூடத் தவறு. அவளே வரவழைத்துக் கொண்டாள் என்றுதான் சொல்லவேண்டும்.

எப்படியானால் என்ன? வானவிக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. பைத்தியம் என்றால், சாதாரணப் பைத்தியமா, என்ன? மிகப் பெரிய பைத்தியம். அபாயகரமான பைத்தியங்கூட. அன்று ஒருநாள் மாமன்னர் வீரராசேந்திர தேவர் வேங்கிப் போரை முடித்துக்கொண்டு திரும்பியதும், “இனி குந்தள விக்கிரமாதித்தனுடன் தொடர்பு கொண்டால், பழைய பாதாளச்சிறையில் நீ வாழ்நாள் முழுவதும் உழல நேரிடும்,” என்று எச்சரித்தார் அல்லவா? அதே பாதாளச்சிறையில் இல்லாவிட்டாலும், சோழகேரளன் அரண்மனையில் ஒரு தனி அறையில் சிறை வைக்கும் அளவுக்கு வானவியின் பைத்தியம் முற்றிப்போயிருந்தது. ஆம், எப்பொழுது பார்த்தாலும் ஒரே கூச்சல், ஒரே பிரலாபம். யார் எதிர்ப்பட்டாலும் அவர்களைத் திட்டுவது, அடிப்பது, கடிப்பது போன்ற அபாயச் செயல்கள்; அரண்மனையில் ஒரு நல்ல பொருள் இல்லாமல் உடைப்பது; அந்தப்புரத்திலுள்ள மாதர்களின் பெட்டிகளைக் குடைந்து, விலையுயர்ந்த துணிமணிகளையெல்லாம் வெளியே எடுத்துப் போட்டுக் கிழிப்பது; அல்லது எரிப்பது; இப்படிப்பட்ட செயல்களையெல்லாம் செய்ய ஆரம்பித்து விட்டதால், அவளைச் சிறையில்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அடைப்பதுபோல் ஓர் அறையில் தள்ளிப் பூட்டச் செய்வதையன்றி வேறு வழி இருக்கவில்லை சோழதேவருக்கு.

சோழநாட்டு இளவரசிக்குப் பைத்தியமென்றால் அதற்குச் செய்யப்படும் வைத்தியத்துக்கு ஒரு கங்கு-கரை இருக்குமா? சோழநாட்டின் சிறந்த மருத்துவர்களெல்லாம் வந்து பலவகை மருந்துகளைக் கொடுத்து வானவியின் பைத்தியத்தைப் போக்க முயன்றனர்; மந்திர தந்திரங்களில் வல்லவர்கள் வந்து, பேயென்றும் பைசாசமென்றும் சொல்லி, பூசைகள் போட்டு, வேப்பிலை அடித்து அதை விரட்டிவிட முயன்றனர். ஆனால் இவர்கள் எவராலும் அந்தப் பைத்தியத்தை அசைக்கமுடியவில்லை. அரசாங்கப் பொருட்சாலையிலுள்ள பொருள்கள் விரயமானதுதான் மிச்சம்; வைத்தியம் செய்ய வந்தவர்கள் வானவியின் கையால் அடியும், பல்லால் கடியும் பெற்றுக் கொண்டதுதான் மிச்சம். அவளுடைய பைத்தியம் என்னவோ நாள்தோறும் அதிகரித்துக் கொண்டேதான் போயிற்று.

மருந்தும், மந்திரமும் பயனளிக்காமற் போய்விடவே, மனவசிய வல்லுநர் பலர் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் நோயின் உண்மைக் காரணத்தைக் கண்டறிந்துவிட்டனர். ஆயின் அவர்கள் சொன்ன சிகிச்சையைச் செய்ய மாமன்னர் உடன்படவில்லை. மனவசிய வல்லுநார்கள் வானவியின் பைத்தியம் காதல் பைத்தியமென்றும், அது தெளிய வேண்டுமென்றால், அவள் காதலித்த காளையையே அவளுக்குக் கடிமணம் புரிந்து வைக்க வேண்டுமென்றும் அறிவித்தனர். ஆனால் வானவி காதலித்த காளை பகைநாட்டு இளவரசன் அல்லவா? அதிலும் ஒருதடவை திருமண ஓலையுடன் வந்து அவரால் விரட்டப்பட்டவன் அல்லவா? அவனுக்குத் தமது மகளை மணம் செய்து வைக்கச் சோழதேவர் எங்கணம் மனம் கொள்ளுவார்? தவிர, ஒரு தடவை விரட்டியடித்தவனைக் கெஞ்சி அழைத்து மகளை மணந்துகொள்ளுமாறு வேண்டினால், சோழ நாட்டின் பெருமை என்னாகும்?

ஆதலின் சோழதேவர், தொண்டை மண்டல அரசப் பிரதிநிதியாக இருந்த தமது மூத்த மைந்தன் மதுராந்தகனுக்கும், பாண்டி மண்டலத்தில் அரசப் பிரதிநிதியாக இருந்த இளைய மைந்தன் கங்கைகொண்ட சோழனுக்கும் *ஓலைகள் அனுப்பி, அம்மண்டலங்களில் வானவியின் பைத்தியத்தைப் போக்கக் கூடியவர்கள் யாரேனும் இருந்தால் அழைத்து வருமாறு செய்தி விடுத்தார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

(*திண்டறல் மைந்தனாகிய கங்கைகொண்ட சோழனை ஏழுயர் யானைச் சோழ பாண்டியெனென்று ஈண்டுயர் மணிமுடி இசைபெறச் சூட்டி பாண்டி மண்டலங் கொடுத்தருளி... (S.I.I. Vol.V-No.976).)

அவ்வாறே சோழ பாண்டியன் என்ற அபிடேகப் பெயருடன் பாண்டி மண்டலத்தில் சோழநாட்டின் பிரதிநிதியாக இருந்த கங்கைகொண்ட சோழன் அங்கிருந்து மருத்துவர்களும், மந்திரவாதிகளும் அடங்கிய ஒரு சிறு படையைத் திரட்டிக் கொண்டு சோழ நாட்டுக்கு வந்தான். ஆனால் அவர்களும் தங்கள் வல்லமை முழுவதையும் காட்டிச் சில திங்கள் முயன்றும் வானவியின் பைத்தியத்தைத் தெளிவிக்க முடியவில்லை; தோல்வியுடன் திரும்பிச் சென்றனர்.

அடுத்ததாக மதுராந்தகனை எதிர்பார்த்தார் சோழதேவர். ஆனால் இரண்டு திங்களுக்கு அதிகமாகியும் அவன் யாரையும் அழைத்துக் கொண்டு வரவும் இல்லை; தந்தையின் ஓலைக்கு மறுஓலை அனுப்பவும் இல்லை. மாமன்னருக்கு மகளைப்பற்றிய கவலையே பெருங்கவலையாகிவிட்டது. என்னதான் பைத்தியமாக இருந்த அவளை அடைத்துப் போட்டுப் பிறருக்கு அவளால் தீங்கு ஏற்படாதவாறு பாதுகாப்புச் செய்துவிட்டாலும், அரண்மனையில் இப்படி ஒரு பைத்தியத்தை வைத்துக் கொண்டிருப்பது அரசகுடும்பத்துக்கு இழுக்கல்லவா? சோழ நாட்டுக்கே ஓர் அவமானமில்லையா? நாட்டின் அவமானம் நாடாளும் மன்னருக்கு மட்டும்தானா? அவர் மக்களுக்கும் உரித்தானதில்லையா? இது ஏன் மதுராந்தகனுக்குத் தோன்றவில்லை? 'சிறிதும் பொறுப்பற்றவனாகத் தன் ஓலைக்கு மறுமொழிகூட அனுப்பாது வாளா இருக்கிறானே?...'

சோழதேவருக்குத் தமது மூத்த மைந்தன் மீது அளவற்ற சினம் உண்டாயிற்று. அவன் தனக்கு அடங்கி நடப்பதில்லை; தனது கட்டளைகளுக்கு உரிய மதிப்பு அளிப்பதில்லை என்ற மனக்குறை அவருக்கு எப்போதுமே உண்டு. இத்தடவை அது உச்ச நிலையை அடைந்துவிட்டது. உடனேயே அவர் மகனை எச்சரிப்பதுபோல் மற்றோர் ஓலையைத் தொண்டை மண்டலத்துக்கு அனுப்பினார்.

இந்த ஓலைக்கு மதுராந்தகனிடமிருந்து மறுமொழி வந்தது. ஆயினும் அது சோழதேவருக்கு முற்றிலும் திருப்தி அளிக்கும் விடையாக இருக்கவில்லை. அவனுடைய தந்தைக்கு அடங்காத் தன்மை அதில் நன்கு பிரதிபலிக்கத்தான் செய்தது. அவன் எழுதியிருந்தான்: "செய்வதையும் செய்துவிட்டு நீங்கள் என்மீது சினம் கொள்வதில் பொருள் இல்லை. வானவிக்குப் பைத்தியம் ஏற்பட நீங்களே முற்றிலும் காரணமாக



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இருந்தீர்கள். அவள் விக்கிரமாதித்தன் மீது கொண்டிருந்த அளவற்ற காதலையும், அவனோடு ஈராண்டு காலம் தனித்து வாழ்ந்ததையும் சற்றேனும் எண்ணிப் பாராமல், பெரிய தந்தை இராசேந்திர தேவர் அவனுக்கு அளித்திருந்த உறுதிமொழியையும் புறம்படுத்தி, குந்தளத்து இளவரசன் முறையாகத் திருமண ஓலையுடனும், அரசாங்க வரிசைகளுடனும் வந்தபோது அவமதித்து விரட்டினீர்கள். இந்தக் காதல் தோல்விதான் அவளுக்கு சித்தக் கலக்கத்தை உண்டாக்கியிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி அதைப் போக்க, அவளை விக்கிரமாதித்தனுக்கு மணம் செய்து வைப்பது ஒன்றுதான் வழி என்று உளக்கலை வல்லுநர்கள் கூறியதையும் மனத்தில் கொள்ளாமல், இன்னும் மருத்துவம் என்றும், மாந்தரிகம் என்றும் பொருளையும், காலத்தையும் விரயம் செய்யத் துணியும் உங்கள் நோக்கம் எனக்குச் சற்றும் விளங்கவில்லை.”

முடங்கல் மேலும் தொடர்ந்தது:

“நான், ஆளும் மன்னராகிய உங்களுக்கு அடங்கியவன் என்பது மெய்தான். ஆயினும் தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்க முயலும் உங்கள் தவற்றை எடுத்துக் காட்டவேண்டியதும் என் கடமை என்று தோன்றியதால் இதை எழுதலானேன். தவறு இருப்பின் பொறுத்தருள்க. பணத்துக்கும் பரிசிலுக்கும் ஆசைப்பட்டு மருத்துவர்களிடையே யிருந்தும், மந்திர தந்திரங்கள் கற்றவர்களிடையேயிருந்தும், ஒரு பெரும்படை திரண்டு வரச் சித்தமாக இருக்கிறது. ஆயினும் அத்தகைய சோற்றுப்படையை திரட்டிவர நான் விரும்பவில்லை. உங்கள் மன நிறைவுக்காக ஒன்று வேண்டுமானால் செய்கிறேன். இங்கே சிவபோத அடியார் என்றொரு துறவி இருக்கிறார். குழந்தைப் பிராயத்திலேயே துறவை ஏற்று இமயத்தில் பலகாலம் தவமியற்றிய பின்னர் இப்போது உலக மக்களுக்குத் தமது தவத்தின் திறனால் நன்மைகள் பயக்க அவர் நாடுதோறும் சுற்றி வருவதாக மக்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவர் சிலநாட்கள் திருநீறு மந்திரித்துக் கொடுத்தால் எந்தவிதமான உடல் நோயும், எந்தவிதமான மனநோயும் நீங்கி விடுவதாகவும் கூறுகிறார்கள். இதெல்லாம் எத்தனை தூரம் மெய்யோ, நான் அறியேன். ஆயினும் பாராட்டத் தகுந்த பண்பு ஒன்று அவரிடம் இருக்கிறது. தமது உதவிகளுக்கு உணவையன்றி வேறு எதையும் அவர் ஊதியமாகப் பெற்றுக்கொள்வதில்லை. அத்துறவியை அழைத்து வரட்டுமா? உங்கள் ஓலை கண்டு ஆவன செய்கிறேன். அதோடு அவருடைய வருகையால் நல்ல பயன் கிட்டினாலும் சரி, தீய பயன் கிட்டினாலும் சரி, அதற்கு நான் எவ்வகையிலும் பொறுப்பாக மாட்டேன் என்பதையும் முதலிலே கூறிவிட விரும்புகிறேன்.”



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மகனின் ஓலையைப் படித்ததும் சோழதேவருக்கு முன்னிலும் அதிகமான சினம் ஒருபுறம் எழுந்ததெனினும், துறவிகளிடம் அவருக்கு ஏற்பட்டிருந்த மட்டற்ற பக்தியால் மகளின் மனநோயை இறைவனது அருளைப் பெற்றவர்களால் நிச்சயம் போக்கிவிட முடியும் என்ற உறுதியும் மற்றொருபுறம் எழுந்து மகிழ்ச்சியை அளித்தது. சிவபோத அடியாரை உரிய மரியாதைகளுடன் அழைத்து வருமாறு அன்றே அவர் மதுராந்தகனுக்கு மறுஓலை அனுப்பினார்.

சில நாட்களுக்குப் பிறகு அத்துறவியுடன் கங்கைகொண்ட சோழபுரம் வந்தடைந்தான் மதுராந்தகன், அடியாரைப் பார்த்ததும் சோழ தேவருக்கு அங்கமெல்லாம் பூரித்தது. அத்தனை அருள்வடிவாக அவர் தோற்றமளித்தார். வயதின் முதிர்ச்சியை அவருடைய வெண்ணிறச் சடை முடியும், அடர்ந்து வளர்ந்து முகத்தில் பாதியை மூடியிருந்த மீசை-தாடியும் எடுத்துக்காட்டிய போதிலும், தவவலியால் உரம் பெற்றிருந்த உடற்கட்டு இளமையையே பிரதிபலித்தது. சிவபோத அடியாரை துறவிகளுக்குறிய மரியாதையுடன் வரவேற்று, ஆசனத்தில் அமர்த்தி பாத பூஜைகள் செய்து வணங்கிப் பணிவுடன் தமது குறையை வெளியிட்டார் வீரராசேந்திரர்.

“எல்லாம் அவன் செயல்; எல்லாம் வேலன் செயல். நம்மிடம் என்ன வல்லமை அப்பா இருக்கிறது? உலகை ஆளும் இறைவன் உன் மகளுக்கு எவ்வழி விதித்திருக்கிறானோ, அவ்வழிதான் யாவும் நடக்கும். இருப்பினும் ஒரு மண்டல காலம் நான் அவளுக்குத் திருநீறு மந்திரித்துக் கொடுக்கிறேன். இறைவனின் திருஉள்ளம் இரங்குகிறதா பார்க்கலாம்!” என்றார் சிவபோத அடியார்.

பின்னர் வானவியை அடைத்துப் போட்டிருக்கும் அறைக்குத் தம்மை அழைத்துப் போக பணிந்தார் அவர். அங்கு சென்றதும் “கதவைத் திறவுங்கள்!” என்றார்.

“இப்பொழுது வேண்டாம், அடிகளே. நான் முதலில் கவசமணிந்த இரு வீரர்களை அறையின் உள்ளே அனுப்பி அவளுடைய கை-கால்களைப் பிணைத்துவிட்டு வரச்செய்கிறேன். தொடர்ந்து விலங்கிட்டுருந்ததன் காரணமாக அவளுடைய கைகளிலும், கால்களிலும் புண் ஏற்பட்டு விட்டமையால் நேற்றுதான் அவற்றை அகற்றச் செய்தேன். விலங்கிடாமல் இருக்கும்போது தாங்கள் உள்ளே செல்வது அபாயமாகும்!” என்றார் வீரராசேந்திரர்.

சிவபோத அடியார் கல கலவென நகைத்தார். அவர் தமது திருநீற்றுப் பையிலிருந்து பிடி திருநீற்றைக் கையிலெடுத்துக் கொண்டு “உங்களுடைய இரும்பு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

விலங்குகளைவிட வலிமை வாய்ந்தது அப்பனே இது. அச்சமின்றிக் கதவைத் திறக்க கட்டளையிடு!" என்றார்.

சோழ வேந்தருக்கு உள்ளூரப் பயந்தான். இருந்தாலும் அந்தப் பெரியாரின் சொற்களுக்கு மதிப்பளிக்க வேண்டி, கதவைத் திறக்கப் பணிந்தார். கதவு திறக்கப் பட்டதோ, இல்லையோ, 'வீல்' என்று கத்தியவாறு இரையைக் கவ்வ வரும் வனவிலங்கைப் போல அடியாரை நோக்கிப் பாய்ந்து வந்தது பைத்தியம். அடியார் "சிவோகம்! சிவோகம்" என்று இறைவனை விளித்தவாறு கையிலிருந்த திருநீற்றை வானவியை நோக்கி ஊதினார்.

கூடியிருந்தோர் வியந்து நிற்க மறுகணம் பைத்தியம் தனது ஆர்ப்பாட்டம் எல்லாம் அடங்கிச் செயலற்று நின்றது. அவளை அப்படியே அவளின் படுக்கைக்கு அழைத்துசென்று படுக்க வைத்துவிட்டு அறைக்கு வெளியே திரும்பிவந்தார் சிவபோத அடிகள். "அப்பனே, என்னப்பன் சிவன் அருள்புரிவான் என்றே தோன்றுகிறது. நீங்கள் அனைவரும் போகலாம். நான் இன்றிலிருந்தே என் மந்திரிப்பைத் தொடங்கி விடுகிறேன்," என்றார்.

அவருடைய திருநீற்றின் திறமையைக் கண்டு மெய் மறந்தவர்களாய் யாவரும் திரும்பிச் சென்றனர். அவர்கள் சென்ற பிறகு, சிவபோத அடியார் வானவியை அடைத்திருந்த அறைக்குள்ளே வந்து கதவை உட்புறம் மூடித் தாழிட்டார். மறுகணம், "என் அன்பே!" என்று தாவி வந்து அவரை அணைத்துக் கொண்டாள் வானவி!

## அத்தியாயம் – 7. யார் இந்தத் துறவி

"என் அன்பே!" என்று வானவி தாவி வந்து அணைத்துக் கொண்ட துறவி யார் என்பதை வாசகர்கள் இதற்குள் ஊகித்திருப்பார்கள். வேறு யாராக இருக்க முடியும்? அவளுடைய உள்ளம் கவர்ந்த கள்வன் குந்தள விக்கிரமாதித்தன் தான்! இல்லையா?

ஆனால் இது என்ன? அந்தத் துறவி ஏன் அவளைப் பிடித்து அப்பால் தள்ளுகிறார்? அவருக்கு அவள் மீது கோபமா? அல்லது, பைத்தியக்காரியின் கோலத்தில் அவள் தன்னை அணைத்ததை அவர் விரும்பவில்லையா? ஆம், காதலன் தன் அணைப்பை உதறத் தனது இந்தக் கோலந்தான் காரணமாக இருக்க வேண்டுமென்று வானவி கூட ஊகித்து விட்டாள்!



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவள் நகைத்தாள். ஆனால் இந்த நகைப்பு, கடந்த சில திங்கள்களாக அவள் நகைத்து வந்த பைத்தியக்காரியின் நகைப்பல்ல. இது உள்ளத்தின் உவகையினால் பிறந்த நகைப்பு; ஊடலின் துவக்கச் சின்னமான நகைப்பு. நகைத்தவாறே அவள் பேசினாள்: "ஆம், அன்பே! என் கோலத்தைக் காண எனக்கே சகிக்கவில்லை. ஆயின் என் செய்வது? இந்தக் கோலம் பூண்டு இத்தனை ஆட்டம் ஆடியிராவிட்டால், உங்களை இங்கே காணக் கொடுத்து வைத்திருப்பேனா? அதிருக்கட்டும்; நீங்கள் மட்டும் என்ன? இப்போது மாறனின் தோற்றத்தை நிகர்ப்பதாகத்தான் நினைப்போ? ஐயோ! காணச்சகிக்க வில்லையே, இந்தத் தாடியும், மீசையும்! எங்கே, மதிவழியும் உங்கள் மலர் முகத்தை ஒருமுறை காணட்டும்," என்று கொஞ்சிய அவள், சட்டென்று சிவபோதரின் தாடியைப் பற்றி இழுத்தாள்.

அது பொய்த்தாடிதானே? ஆதலால் அவள் கையோடு வந்து விட்டது. ஆனால், அந்தத் தாடிக்குள்ளே மறைந்திருந்தது யார்....?

"குலோத்துங்க அத்தான்!" என்று வீறிட்டாள் வானவி.

குலோத்துங்கன் நகைத்தான். வானவி சற்றுமுன் கொஞ்சலாக நகைத்தாளே, அதற்கு நேர் மாறான குரோத நகைப்பு இது!

அவன் நகைக்கத்தான் நகைப்பான். சோழநாட்டின் மாமன்னர் துவக்கம் மக்கள் ஈறாக யாவரையும் ஏமாற்றிவிட நினைத்தாள் இந்தப் பெண். இப்பொழுது அவன் அவளையே ஏமாற்றிவிட்டான். பின் அவனால் நகைக்காமல் இருக்க முடியுமா? நன்றாக நகைக்கட்டும்; நகைத்துக்கொண்டே இருக்கட்டும். இடையே, நாம் இவையெல்லாம் எப்படி நடந்தது என்பதைக் காண்போம்.

காதல் தோல்வி, வாழ்வில் மற்றெந்தத் தோல்வியையும் விடக் கடுமையானது; அதனால் மனமுடைந்து அறிவு பேதலித்துப் போவோரும் உண்டு என்று முன் அத்தியாயத்தில் படித்தோம். அதோடு வேறொன்றும் படித்தோம்- வானவிக்குப் பிடித்திருந்த பைத்தியம் அவளாகவே வரவழைத்துக் கொண்டது என்று! அப்படிச் சொல்லப்பட்டிருந்ததன் காரணம் இப்பொழுது உங்களுக்கு விளங்கியிருக்கும்.

காதல் தோல்வி சிலரைப் பைத்தியத்தில் கொண்டு விடுகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் கோழை உள்ளம் படைத்த ஆண்-பெண்களைத்தான் அது எளிதாகப் பற்றிக்கொள்ளும். வானவியைப் போன்ற திடசித்தம் படைத்தவர்களைப் பற்றிவிடலாமென்று நினைத்த தானால், அந்தப் பைத்தியத்துக்கே பைத்தியம் பிடித்திருக்க வேண்டும்.


Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஆம், திடமான மனம் படைத்தவர்கள் அத்தனை எளிதில் பேதலிப்புக்கு உள்ளாகிவிட மாட்டார்கள். அவர்கள் இம்மாதிரி இக்கட்டான நிலையில் முன்னைவிடத் தீவிரமாகச் சிந்திப்பார்கள். மலைபோன்ற இக்கட்டாயினும் அதைப் பனிபோல் கரையச் செய்ய வழி காண்பார்கள். துணிச்சலுடன் செயற்படுத்த முனைவார்கள். வானவியும் அவ்வாறுதான் செய்தாள்.

இத்தடவையும் தனது காதலனின் நாடு சோழ நாட்டிடம் தோல்வியுற்றது அவளைப் பெரிய ஏமாற்றத்தில் ஆழ்த்தியது. தனக்கு விடிவு பிறக்கக் குந்தள நாட்டின் வெற்றியைத்தான் அவள் பெரிதும் நம்பியிருந்தாள். சாதாரண வெற்றிகூடப் போதாது; சோழர்களை அடிபணியச் செய்யும் வெற்றியாக அது இருக்க வேண்டும் என்று அவள் விரும்பினாள். அப்படிப்பட்ட வெற்றியைக் குந்தளத்தார் பெற்றால்தான், 'என் காலடியில் வந்து வீழ்ந்து, "என் மகளை மனைவியாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று உன் தந்தையைக் கெஞ்சச் செய்வேன்; அதுவரையில் பொறுத்திரு' எனத் தன் காதலன் ஓர் ஓலையில் அறிவித்திருந்த மொழி மெய்யாக முடியும் என்று அவள் திடமாக நினைத்தாள். ஆனால் அவளுடைய காதலனின் நாட்டுக்கோ இத்தடவையும் வெறும் வெற்றிகூடக் கிடைக்கவில்லை.

அது மட்டுமா? அவளுடைய தந்தைகூட அவளைக் கடுமையாக எச்சரித்து விட்டார் - 'இனி அந்த விக்கிரமாதித்தனை உள்ளத்தால் நினைத்தாலும் முன்பு ஈராண்டுகள் மட்டுமே உழன்ற பாதாளச் சிறையில் ஆயுள் உள்ள அளவும் தனிமையில் உழல நேரிடும்' என்று.

ஆனால், இந்தப் பயமுறுத்தலுக்கு வானவி அஞ்சிவிடவில்லை. அல்லது, 'இப்படித் தோல்வி மேல் தோல்வி அடைந்துவரும் குந்தளத்தார் இனி வெற்றி பெறுவது எப்போது? நாம் நம் காதலனை அடைவது எப்போது?' என்று அவள் மனம் தளர்ந்துவிடவும் இல்லை. ஆனால் இதுவரையில் குந்தளத்தார் என்றாவது சோழநாட்டாரைப் போரில் முறியடிக்கக் கூடும் என்று நம்பியிருந்த அவள் இப்பொழுது அந்த நம்பிக்கை குன்றப் பெற்றாள். ஆதலால், காதலனை மணந்து அவரோடு நிரந்தரமாக வாழ, தானே வழி காணத்துணிந்தாள். அதற்கான வழியைப் பற்றி அவள் தீவரமாகச் சிந்தித்து வந்த போதுதான் அரண்மனையில் அந்நிகழ்ச்சி நடந்தது.

சோழ கேரளன் அரண்மனையில் வானவியின் தாய்க்குப் பணிப்பெண்ணாக இருந்தாள் தேமொழி என்ற இளம் பெண். அவளுடைய தந்தை வினயபாலத்தேவர் என்பார் சோழப் படைப்பகுதி ஒன்றின் தலைவர். நாட்டு மக்களிடையே நல்ல



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

செல்வாக்கு உடையவர். அவருடைய ஒரே மகள் தேமொழி. அண்மையில் அவளை மற்றொரு படைத்தலைவரின் மைந்தனுக்கு மணமுடித்து வைக்கக் கூட அவர் முடிவு செய்திருந்தார். ஆனால், இத்திருமணம் முடிவு செய்யப்பட்ட சில நாட்களுக்கெல்லாம் தேமொழிக்குத் திடீரென அறிவு பேதலித்து விட்டது.

வினயபாலத்தேவர் கலங்கிப்போனார். என்னென்னவோ சிகிச்சைகள் எல்லாம் நடந்தன. ஒன்றிலும் அவளுடைய பைத்தியம் தெளியவில்லை. இறுதியில் உளக்கூர் அறிஞர்களை அவர் கலந்தாலோசித்தார். அவர்கள் தேமொழியின் வாழ்க்கை வரலாறு அனைத்தையும் கேட்டறிந்து கொண்ட பின், அவளுக்கு அறிவு பேதலித்து விட்டதன் காரணத்தையும், அதற்குரிய சிகிச்சையையும் திட்டவட்டமாக அறிவித்து விட்டனர். ஆம், அவள் சோழகேரளன் அரண்மனையில் பணியாற்றி வந்த வேங்கிலன் என்ற இளம் காளையைக் காதலித்து வந்தாள். ஆனால் அவன் தகுதியில் தாழ்ந்தவன். ஆதலால், அவனை அவளுக்கு மணமுடித்து வைக்க இயலாதெனக் கூறிவிட்டு, வினயபாலத்தேவர் தமது தகுதிக்கேற்ற மற்றொரு படைத்தலைவரின் மகனை அவளுக்கு மணாளனாகத் தேர்ந்தெடுத்தார். இந்தக் காதல் தோல்விதான் தேமொழியின் பைத்தியத்துக்குக் காரணமெனவும், அவள் விரும்புகிறவனையே மணம் செய்து வைத்தாலன்றி அவளுடைய பைத்தியம் அகலாதென்றும் உளவியல் வல்லுநர்கள் அறிவித்ததும், வேறு வழியின்றி அவ்வாறே செய்து வைத்தார் வினயபாலத்தேவர். தேமொழியின் பைத்தியமும் உடனே தெளிந்துவிட்டது.

இந்த நிகழ்ச்சி சட்டென்று வானவிக்கு வழி காட்டியது. நாமும் இதே வழியைக் கையாண்டால் என்னவென்று அவள் நினைத்தாள். அவளுடைய நினைவுக்கு உரமளிக்க அப்போது அவளுடைய அருமைத் தம்பி மதுராந்தகனும் தொண்டை மண்டலத்திலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்துக்கு வந்து சேர்ந்தான்.

மதுராந்தகனின் மனப்போக்கைப் பற்றி இங்கே நாம் சிறிது விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். மாமன்னர் வீரராசேந்திர தேவர் தமது இளைய மைந்தன் கங்கை கொண்ட சோழனுக்கே இளவரசுப் பட்டம் கட்டி, தமக்குப் பின் அவனையே இந்நாட்டை ஆண்டுவரச் செய்ய வேண்டுமென்று கருதும் அளவுக்கு அவருடைய மூத்த மைந்தனான மதுராந்தகன் தந்தையை மதிக்காத தனயனாகத் தலையெடுத்திருந்தான். தம் கண்முன் அவன் நடத்திய அதமச் செயல்களைக் காணப் பொறுக்காமலே அவர் அவனை, ‘எங்கேனும் போய் எப்படியேனும் அழிந்து போகட்டும்’ என்று தொண்டை மண்டலத்துக்கு அனுப்பி விட்டிருந்தார். தந்தை தன்மீது கொண்டிருந்த கருத்தை மதுராந்தகனும் நன்கு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அறிந்தே இருந்தான். ஆயினும் முறையாகத் தனக்குக் கிட்ட வேண்டிய சோழமாவலி வாணராயன் அரியணை தம்பிக்குப் போவதை அவன் விரும்பவில்லை. ஆதலால், அவன் இப்போது சோழ நாட்டுக்கு எதிராக எந்த விதமான சதி வேண்டுமானாலும் செய்து அரியணையைத் தான் அடைந்துவிட வேண்டுமென்று துணிந்திருந்தான்.

அவனுடைய இந்தக் கருத்துக்கு ஆதரவு தந்தாள் வானவி. தான் குந்தள விக்கிரமாதித்தனின் மனைவியாகி விட்டால், மதுராந்தகனையே சோழ அரியணையில் அமரச் செய்து விடுவதாக அவள் வாக்களித்திருந்தாள். எனவே, சகோதரி விக்கிரமாதித்தனை அடைய உதவுவது அவனுடைய கப்பாடாயிற்று. இந்நிலையில்தான் அந்தச் சகோதர-சகோதரியின் தொடர்பை உணர்ந்து, அதைத் தகர்த்தெறியும் பொருட்டும் மதுராந்தகனைத் தொண்டை மண்டலத்துக்கு அனுப்பிவிடத் துணிந்தார் சோழதேவர்.

ஆயினும், என்னதான் மாதண்ட நாயகனாக்கித் தலைநகரிலிருந்து தள்ளி விட்டிருந்தாலும், மாமன்னர் ஆண்டுக்கு ஒரு முறை மகனை நாட்டுக்கு அழைக்க வேண்டியே இருந்தது - அதாவது, அவருடைய பிறந்த நாள் விழாவின்போது, அப்போதுதான் சோழநாட்டின் பிரதிநிதிகளாகப் பல்வேறு மண்டலங்களில் நியமிக்கப்பட்டிருப்பவர்கள் அம்மண்டலத்தில் தண்டல் செய்த திரைப் பொருள்களுடன் மன்னரைக் காண வருவது வழக்கம். அவ்வாறு தான் இத்தடவை தொண்டை மண்டலத்திலிருந்து சோழத் தலைநகருக்கு வந்திருந்தான் மதுராந்தகன்.

மன்னரின் பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு அவன் தன் சகோதிரியைத் தனியே சந்தித்தான். வானவி விக்கிரமாதித்தனை அடைய தான் கண்ட வழியை அறிவித்தாள். மதுராந்தகனுக்கும் அது நல்ல வழியென்றே தோன்றியது. ஆயினும் அவன் ஐயம் ஒன்றை வெளியிட்டான். “நீ பைத்தியமாக நடிப்பதெல்லாம் சரிதான், அக்கா. மருத்துவர்கள் உனக்கு சிகிச்சை செய்து தோல்வியுற்ற பின், தந்தை உளவியல் வல்லுநர்களிடம் ஆலோசனை கேட்பார் என்பதும் எதிர்பார்க்கக் கூடியதே. அவர்களும் உன்னைக் குந்தள இளவரசருக்கு மணமுடித்து வைப்பது ஒன்றுதான் வழி என்று கூறுவார்களென்பதும் சாத்தியமானதே. ஆனால் அத்தனைக்குப் பிறகும் தந்தை அதற்கு இணங்கவில்லை யென்றால்...?” என்று அவன் வினவினான்.

“அவ்வளவு பரிவுகூட அப்பாவுக்கு என்பால் இல்லை என்பது வெளியானால், பைத்தியம் தானாகவே நீங்கிவிட்டது போல் நான் சரியாகிக் கொள்கிறேன். முயன்று பார்ப்பதில் தவறில்லையே?” என்றாள் வானவி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இந்த அடிப்படையில்தான் வானவி பைத்தியமானாள். மருத்துவர்களை ஏமாற்றிவிட்டு உளவியல் வல்லுநர்களின் ஆராய்ச்சிக்கு வந்த வானவி, அவர்கள் தான் எதிர்பார்த்த கருத்தையே வெளியிட்டதும், தன் தந்தை மேலே என்ன செய்யப் போகிறார் என்பதை அறிய ஆவலுடன் காத்திருந்தாள். அரண்மனையிலுள்ள எல்லோரையுமே ஏமாற்றிக் கொண்டிருந்த காரணத்தால், தந்தையின் மனப்போக்கு எப்படி இருக்கிறது என்பதை எவரிடமும் அவளால் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியவில்லை. தவிர, அவளுடைய பயங்கர நடிப்பால் சாதாரண சேடிப் பெண்கள் கூட அவளை நெருங்கப் பயந்தனர்.

இந்நிலையில் ஒரு நாள் யாரும் அருகில் இல்லாதபோது அவளை அடைத்திருந்த விடுதிக்கு சோழப் படை வீரன் ஒருவன் வந்து, ஓர் ஓலையை கம்பிக் கதவின் இடை வழியாக வீசி, "இது தொண்டை மண்டலத்திலிருந்து இளையதேவர் உங்களுக்கு அனுப்பியுள்ள ஓலை. படித்துவிட்டு அதில் எழுதியிருக்கிறவாறு நடந்து கொள்ளுங்கள்," என்று கூறிவிட்டு விரைந்து சென்றான்.

வானவி அவ்வோலையைப் படித்தாள். அது மதுராந்தகன் அனுப்பியிருந்த ஓலைதான்: அதில் அவன் எழுதியிருந்தான்:

"சகோதரி, நான் ஐயமுற்றவாறே தந்தை முடிவு செய்துவிட்டார். என்ன நேரிட்டாலும் உன்னைப் பகை நாட்டானுக்கு மணம் செய்து கொடுப்பதில்லை என்று அவர், இங்கிருந்து மருத்துவர்களையும் மந்திரவாதிகளையும் அழைத்து வருமாறு எனக்கு ஓலை அனுப்பியுள்ளார். இந்த வாய்ப்பை நான் நமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறேன். இன்று நான் குந்தள இளவரசருக்கு ஓர் அவசர ஓலை அனுப்பியிருக்கிறேன். அதன்படி அவர் நேரே தொண்டை மண்டலத்துக்கு வருவார். இங்கே அவரை இமயத்திலிருந்து திரும்பியுள்ள துறவி என அறிமுகப்படுத்தி, துறவுக் கோலத்திலேயே அங்கு அழைத்து வருவேன். பின்னர் சிகிச்சை என்ற சாக்கில் நீங்கள் சில காலமாவது சந்தித்து அளவளாவலாம். இது ஒன்றுதான் இந்நிலையில் நான் உனக்கு செய்யக் கூடியது. ஆதலால், உன் இதயம் கவர்ந்த இமயத்துத் துறவி வரும்வரையில் நீ உன் பைத்திய வேடத்தைக் கலைத்துக் கொண்டு விடவேண்டாம்.

இவ்வாறு,
மதுராந்தகன்."

இப்படி எல்லாம் அவர்கள் திட்டப்படியே நடந்தன. ஆனால் இதில் குலோத்துங்கன் எவ்வாறு வந்து குறுக்கிட்டான்? அது மற்றொரு சுவையான நிகழ்ச்சி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வயதாலோ, ஆற்றலாலோ, அல்லது அநுபவாத்தாலோ எவரும் நுண்ணறிவு பெற்றுவிட முடியாது. எதையும் ஊடுருவி முன்னோட்டமிடும் அத்தன்மை மனிதருக்கு இயற்கையாக அமைவது. பிறப்பில் அத்தன்மை வாய்க்கப் பெறாதவர்கள் இறப்பு வரையில் அதைப் பெற முடியாது. சோழ அரச பரம்பரையிலே அத்தகைய நுண்ணறிவு படைத்தவர்களும் இருந்தார்கள்; இல்லாதவர்களும் இருந்தார்கள். இரண்டாம் இராசேந்திர சோழதேவர் மிகுந்த நுண்ணறிவு படைத்தவர். அதனைப் பயன்படுத்தி எந்தச் செயலையும் ஆய்ந்து நோக்கித்தான் அவர் முடிவு செய்வார். ஆனால் வீரராசேந்திரரோ நுண்ணறிவு வாய்க்கப் பெறாதவர். ஆதலால் அவர் செய்யும் முடிவுகள், ஆற்றல் அல்லது அநுபவத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும். இப்போது அவர் செய்த முடிவையே அலசிப் பார்ப்போமே?... தனக்கு அடங்காதவன் என்று கிட்டத்தட்ட நாடு கடத்தியது போல் வேறோரு மண்டலத்துக்கு அனுப்பிவிட்டிருந்த மகனிடம், 'அவனுக்கு மிகவும் உகந்தவளாக விளங்கிய ஒருத்தியின் சிகிச்சை பொருட்டு முக்கியமான பணி ஒன்றை ஒப்படைக்கிறோமே; இதில் அவன் ஏதாவது சூது-வாது செய்ய மாட்டானா' என்று அவர் சிந்தித்திருக்க வேண்டாமா? அதைச் சிந்திக்காமல் செயற்படத் தொடங்கியது ஒன்றே அவர் நுண்ணறிவு அற்றவர் என்பதற்குச் சான்றாகி விடவில்லையா?

ஆனால் மாமன்னர் நுண்ணறிவு வாய்க்கப் பெறாதவராக இருந்த போதிலும், சோழநாட்டின் தவப்பயனாக அங்கே மிகுந்த நுண்ணறிவு வாய்ந்தவன் வேறொருவன் இருந்தான். அவன் தான் நமது குலோத்துங்கன். வானவிக்கு மெய்யாகவே பைத்தியம் பிடித்திருக்கக்கூடுமா என்று முன்பே அவன் ஐயமுற்றான். அந்த ஐயம் காரணமாகவும், தனது நுண்ணறிவின் பயனாகவும், சோழதேவர் மகளின் சிகிச்சைக்குத் தொண்டை மண்டலத்திலிருந்து மருத்துவர்களையும், மந்திரவாதிகளையும் அழைத்து வருமாறு மதுராந்தகனுக்கு ஓலை விடுத்ததும் அவன் விழித்துக் கொண்டான். பாதுகாப்புப் படையின் தலைவனாக இருந்தமையால் தொண்டை மண்டலத்திலிருந்து யார் வந்தாலும் தன் அனுமதியின்றி கோட்டைக்குள்ளே விடவேண்டமென்று அவன் உடனே ஒரு கட்டளை பிறப்பித்தான்.

ஒரு திங்களுக்கு முன் ஒரு நாள் இரவு இரண்டாம் சாமத்தில் உட்கோட்டையின் கிழக்கு வாயில் காவலன் ஒருவன் குலோத்துங்கனிடம் வந்து, தொண்டை மண்டலத்திலிருந்து இளவல் மதுராந்தக தேவர் மாமன்னருக்கு அனுப்பியுள்ள ஓலை ஒன்றுடன் வீரன் ஒருவன் வந்துள்ளதாக அறிவித்தான். குலோத்துங்கன் உடனே கீழைக்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கோட்டை வாயிலுக்கு சென்றான். “இப்போது இரண்டாம் சாமத்தின் பிற்பகுதி ஆகிவிட்டது. மன்னரவர்கள் துயில் கொண்டிருப்பார்கள். வீரனே, நீ என்னுடன் வந்து முடிகொண்ட சோழன் அரண்மனையில் இரவைக் கழித்துவிட்டு, காலையில் மன்னரைக் காணப் போகலாம்,” என்று அவனைத் தன்னுடன் அழைத்துச் சென்றான்.

நள்ளிரவில் அந்த வீரன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது குலோத்துங்கன் அவன் தங்கியிருந்த விடுதிக்குச் சென்று அவன் அறியாதவாறு அவன் உடைகளைப் பரிசோதித்தான். அவனுடைய மேலங்கிப் பையில் மாமன்னருக்குரிய ஓலை இருந்தது. அந்த ஓலையில்தான் மதுராந்தகன் சிவபோதத் துறவியாரைப் பற்றிக் குறிப்பிட்டு அவரை அழைத்துவர மன்னரின் கட்டளையைக் கோரியிருந்தான். உடனேயே குலோத்துங்கனின் நுண்ணறிவு வேலை செய்து, இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று ஊகித்து விட்டது. அவன் அவ்விரனின் உடைகளை இன்னும் நுணுக்கமாகப் பரிசோதித்தபோது, அருகில் கழற்றி வைக்கப்பட்டிருந்த அவனுடைய தலைப்பாகையில் ஓர் ஓலை நறுக்குச் செருகி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான். அதுதான் வானவிக்கு மதுராந்தகன் அனுப்பியிருந்த ஓலை. அதைப் படித்து, அவனும் வானவியும் திட்டமிட்டுச் செய்துவரும் சூழ்ச்சிகளை அறிந்தான் குலோத்துங்கன்.

அந்த ஓலையை அவன் அப்படியே மாமன்னரிடம் கொண்டுக் காட்டி எல்லாவற்றையும் அம்பலமாக்கியிருக்க முடியும். ஆனால் அவனுடைய நுண்ணறிவு அதற்கு இடமளிக்கவில்லை. ஏனென்றால் அது தந்தைக்கும் மகனுக்கும் இடையே இருக்கும் தொடர்பை அடியோடு துண்டித்து, மதுராந்தகனைச் சோழநாட்டின் நிரந்தரப் பகைவனாக்கிவிடும். குலோத்துங்கனின் பரந்த உள்ளம், சோழ அரச குடும்பத்துக்குள்ளே பகைமை ஏற்படச் செய்ய விரும்பவில்லை. மாமன்னர் அறியாதவாறு வானவிக்கும் மதுராந்தகனுக்கும் ஒரு பாடம் கற்பித்து அவர்களை நல்வழிப் படுத்தவே அவன் விரும்பினான். ஆதலால் அவன் அவ்வோலையை எடுத்த சுவடு தெரியாமல் தலைப்பாகையில் செருகி வைத்துவிட்டுச் சென்று விட்டான்.

இப்பொழுது, விக்கிரமாதித்தன் துறவி வேடத்தில் கங்கைகொண்ட சோழபுரத்துக்கு வரப்போகும் நாளை அவன் ஆவலுடன் எதிர் நோக்கியிருந்தான். அந்நாள் வந்தது. சிவபோதரை அரசாங்க மரியாதைகளுடன் வரவேற்க தலைநகர் தடபுடல் பட்டுக் கொண்டிருந்த அந்நேரத்தில், குலோத்துங்கன் சில படைவீரர்களுடன் நகர எல்லைக்கு விரைந்து சென்றான். வேடதாரி விக்கிரமாத்திதனும் மதுராந்தகனும், தனித்தனியே வெவ்வேறு இரதங்களில் வந்தது, குலோத்துங்கன் வகுத்திருந்த


Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

திட்டத்துக்கு வசதி செய்து கொடுத்தது. மன்னர் பிரான் சோழ கேரளன் அரண்மனை முகப்பில் சிவபோதத் துறவியாரை வரவேற்கப் பெரிய ஏற்பாடுகள் செய்திருந்தார். நகர எல்லையில் துறவியாரின் இரதத்தை நிறுத்தி வைத்துக்கொண்டு தமக்குத் தகவல் அனுப்புமாறும், தாம் அவரை வரவேற்கத் தயாராகக் காத்திருப்பதாகவும் குலோத்துங்கனுக்குக் கட்டளை பிறப்பித்திருந்தார்.

குலோத்துங்கன் இக்கட்டளையையும் தனது திட்டத்துக்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டான். ஊர் எல்லையில் காத்திருந்த அவன், துறவியாரும் மதுராந்தகனும் ஏறி வந்த இரதங்கள் அங்கே வந்ததும், அவற்றை நிறுத்தினான். மதுராந்தகனிடம் சென்று, "மாமன்னர் தங்களை முன்னதாக வந்து துறவியாரின் வருகையைத் தமக்கு அறிவிக்கச் சொன்னார். துறவியாரை வரவேற்கப் பெரிய ஏற்பாடுகள் அரண்மனையின் முகப்பில் செய்யப்பட்டுள்ளன. சோழதேவரே அவரை நேரில் வரவேற்கப் போகின்றார். ஆகையால் துறவியாரின் இரதத்தை அரை நாழிகைப் பொழுது இங்கே நிறுத்திக் கொண்டு பின்னர் அரண்மனைக்கு அனுப்பப் பணிந்துள்ளார்," என்றான்.

மதுராந்தகன் நகரை நோக்கிச் சென்றதும், குலோத்துங்கன் சில வீரர்களுடன் சிவபோதரின் இரதத்தில் ஏறி அவனைச் சிறை செய்து, அவனுடைய புனை வேடத்தைக் கலைக்கச்செய்து அப்பொருள்களைக் கைப்பற்றிக் கொண்டான். பின்னர், அந்த வேடதாரியை இரகசியமாக சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப் பணித்துவிட்டு, அவனிடமிருந்து பறித்த புனைவேடப் பொருள்களைத் தான் அணிந்து கொண்டு சிவபோதராக உருமாறி இரதத்தில் அமர்ந்து கொண்டான். விக்கிரமாதித்தனும், குலோத்துங்கனும் ஏறக்குறைய ஒரே வயதும் ஒரே மாதிரியான உடல் அமைப்பும் பெற்றிருந்ததால், மதுராந்தகனால் கூட இந்த ஆள்மாற்றத்தைக் கண்டுகொள்ள முடியவில்லை.

குலோத்துங்கனின் நகைப்புத் தீர்ந்தது; அவன் உள்ளத்திலிருந்து வெடிப்புப் பிறந்தது. "வல்லவனுக்கு வல்லவன் இந்த வையகத்தில் உண்டு, இளவரசி. அற்ப உடலின்பத்துக்காக பல திங்கள் பைத்தியமாக நடிக்கவும், நாட்டின் பகைவனை மாறுவேடத்தில் வரவழைக்கவும் உங்களுக்கு வெட்கமாக இல்லையா? காதலுக்காக நீங்கள் பிறந்த நாட்டையே காட்டிக் கொடுக்கத் தயங்க மாட்டீர்கள் என்று தங்கள் தந்தையார் கருதியிருப்பதில் தவறு என்ன இருக்கிறது?" என்று அவன் சினம் கனிய வினவினான்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வானவி தலை குனிந்து நின்றாள். பாதாளச் சிறையில் ஆயுள் உள்ள அளவும் தனிமையில் வாட வேண்டிய பயங்கர நிலையை எண்ணி அவளது உள்ளம் கலங்கிக் கொண்டிருந்தது. அவள் வாய் திறக்க வழியின்றி கற்சிலையாக நின்றாள்.

குலோத்துங்கனே மீண்டும் பேசினான்: "நடந்தது நடந்துவிட்டது. இனியேனும் நல்லதனமாக நடப்பதாக வாக்குறுதி கொடுங்கள். உங்களுக்கும், அந்தக் கோழை விக்கிரமாதித்தனுக்கும் மாமன்னரிடம் இறைஞ்சி மன்னிப்புப் பெற்றுத் தருகிறேன்."

ஆனால் கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா? திமிர் பிடித்தவர்களை என்றாவது அடிபணியச் செய்ய முடியுமா? தான் ஏமாற்றப்பட்டதை எண்ணி இதுவரையில் தலைகுனிந்து நின்ற வானவி, 'மன்னிப்பு' என்ற சொல்லைக் கேட்டதும் வெகுண்டாள். "தேவையில்லை; எனக்காக யாரும் மன்னிப்புக் கோரத் தேவையில்லை. வருவதை எதிர்கொள்ள நானும் என் காதலரும் சித்தமாக இருக்கிறோம்!" என்றாள் அவள்.

குலோத்துங்கன் அவளுக்கு நன்மை செய்யவே விரும்பினான். இன்னுங் கூட அவளுடன் வாதாடி, நன்மை தீமைகளை எடுத்துரைத்து, நாட்டுக்குத் தீங்கு செய்யும் பணிகளில் இனி ஈடுபடுவதில்லை என வாக்குறுதி பெற்றுக்கொண்டு, மாமன்னரிடம் இந்த ஒருமுறை மட்டும் தனக்காக அவர்களை மன்னித்து விட மன்றாடத்தான் எண்ணினான். திறமைசாலியான அவன் மாமன்னரிடம் மகத்தான செல்வாக்குப் பெற்றிருக்கும் அவன் அதைச் சாதித்தும் இருப்பான். ஆனால் அதற்குள் அவனே எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்து விட்டது.

அவனும், வானவியும் இருந்த விடுதியின் கதவு வேகமாகத் தட்டப்பட்டது. "குலோத்துங்கா! கதவை உடனே திற!" என்ற சிம்ம கர்ஜனை வெளியே கேட்டது.

குலோத்துங்கன் ஓடிச் சென்று கதவின் உட்தாழை நீக்கினான். கதவு படீரென்று திறந்தது. வெளியே மாமன்னர் வீரராசேந்திர தேவர் உருவிய வாளுடன் நின்றார்.

## அத்தியாயம் – 8. மீண்டும் பாதாளச் சிறை! மீண்டும் போர்!

**வீ**ரராசேந்திரரின் உடலிலிருந்த உதிரமெல்லாம் முகத்துக்கு ஏறியிருந்தது. பெயருக்கேற்ப வீரக்களை ததும்பும் அந்த முகம் இபோது அனலென எரிந்தது. கதவு திறக்கப்பட்டதுதான் தாமதம்; "எங்கே அந்தத் துரோகி? மகளென்ற உருவிலே என் மானத்தைப் பறிக்க வந்துள்ள அந்த மாயாஜாலக்காரி எங்கே?" என்று அவர் உள்ளே பாய்ந்தார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மன்னரை அங்கே கண்டபோது குலோத்துங்கன் திகைப்படைந்தான். 'நான் சிவபோத அடிகளாக வேடம் பூண்டதோ, விக்கிரமாதித்தனைக் கைது செய்து சிறைக்குக் கொண்டு போகப் பணிந்ததோ வீரராசேந்திரருக்குத் தெரியாதே? பின் எவ்வாறு அவர் என்னைப் பெயர் சொல்லி அழைத்தார்? வானவியைத் துரோகி என்று குறிப்பிட்டார்?' என்று குழம்பினான் அவன். பின்னர் அவர் அதை அறியும் வண்ணம் எதிர்பாராத நிகழ்ச்சி ஏதோ நிகழ்ந்திருக்கிறது என்பதைக் கணத்தில் ஊகித்தவனாகக் காரியத்தில் கண்ணானான். உள்ளே பாய்ந்து வந்த சோழதேவர் அக்கணமே வானவியின் தலையைத் துண்டித்துவிடுவார் போலிருந்ததால், அவன் சட்டென்று அவர் வழியை மறித்தவாறு முன் வந்து வணங்கிவிட்டு "மன்னரவர்கள் மன்னிக்க வேண்டும்; அடியேனின் வேண்டுகோளுக்குக் கணநேரம் செவி சாய்த்து அருளவேண்டும்," என்றான் பணிவுடன்.

ஆனால் வீரராசேந்திரரின் சினம் கடுஞ்சினமாக இருந்தது. "வழியை விடு, குலோத்துங்கா. என் மதிப்பையும், இந்தச் சோழ அரச குடும்பத்தின் மதிப்பையும், மாபெரும் இந்நாட்டின் மதிப்பையும் மங்கச்செய்துவிட்ட இந்த மாசை என் கைகளாலேயே வெட்டிக் களைய வேண்டும்," என்று இடிபோன்ற குரலில் கூவினார் அவர்.

"அரசே! காலைக் கவ்வும் அணியைக் கழற்றி எறிந்துவிடு என்பார்கள் ஆன்றோர்கள். உங்கள் காலனி, உங்களது காலைக் கடித்தால் அதனை கழற்றி வீசுவதை விட்டு, 'மகளைக் கொன்ற மன்னன்' என்ற கறையைச் சுமக்க நினைக்கிறீர்களே?"

"நீ என்ன சொல்கிறாய், குலோத்துங்கா?" என்று வீரராசேந்திரர் சிறிது சினம் தணிந்தவராய் வினவினார்.

"சீழை உள்ளே வைத்துக்கொண்டிருக்கு மட்டும் அது வேதனை தந்து கொண்டுதானிருக்கும். சோழ நாடு செய்த தீவினைப் பயனால் அதனைச் சீழாகச் சூழ்ந்து வேதனைப்படுத்தி வருகிறாள் தங்கள் மகள். நான் இப்போது புண்ணைக் கீறி விட்டுவிட்டேன். இனி இச்சீழைத் தயைசெய்து அவள் காதலனுடன் இந்நாட்டிலிருந்து வெளியேற்றிவிட்டு நிம்மதியுடன் இருங்கள்."

"என்ன சொன்னாய்? என் மகளைச் சோழ நாட்டின் நிரந்தரப் பகைவனுக்கு மனைவியாக்குவதா? அது ஒரு காலும் நடக்காது, குலோத்துங்கா!"

"மாமன்னர் அப்படிச் செய்ய மனம் கொண்டாலும் இனி அதைச் செய்ய முடியாது, சேனாதிபதி. தாங்கள் சிறை செய்யுமாறு பிடித்துக்கொடுத்த பகைநாட்டு இளவரசன்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

தன்னை நடத்தி வந்த வீரர்களைக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டான்!" என்றார் அருகில் நின்ற உள்நாட்டுப் படைத்தளபதி காராளனை விழுப்பரையர்.

"என்ன? பகைவன் தப்பி விட்டானா?" என்று வீரிட்டான் குலோத்துங்கன். இப்போது அவனுக்குத் தனது இரகசியச் செயல்கள் மாமன்னருக்கு எவ்வாறு எட்டியது என்பது விளங்கிவிட்டது.

அவனுடைய அலறலுக்கு மறுமொழியாக வந்தது அங்கே நின்று கொண்டிருந்த வானவியின் ஏளன நகைப்பு. "அவருடைய வீரத்தை இப்பொழுதாவது மாமன்னர் வீரராசேந்திர தேவர் அவர்கள் உணர்ந்து கொள்ளட்டும்," என்றும் அவள் கூவினாள்.

அவளுடைய சிரிப்பு அங்கு நின்றவர்களின் உள்ளத்தில் நெருப்பைக் கிளப்பிற்றென்றால், தொடர்ந்து அவள் வெளியிட்ட கூவல் அந்த நெருப்புக்கு நெய் வார்த்தது. மாமன்னர் மீண்டும் வாளை உயர்திக்கொண்டு அவளை நோக்கிக் கிளம்பினார்.

ஆனால், இப்போதும் குலோத்துங்கன் அவரைத் தடுத்தான். "மன்னர் மன்னவா! பெண்ணைக் கொன்ற பாவத்தை இந்தச் சோழநாடு சுமக்கக் கூடாது. உங்களை இறைஞ்சி அவர்களை இணைத்து வைத்து இந்நாட்டிலிருந்து வெளியேற்றிவிட நினைத்தேன் நான். யானை தன் தலையிலேயே மண்ணை அள்ளிப் போட்டுக்கொண்டது. இருந்தாலும் பெண்பால் ஒருத்தியைக் கொல்வது தங்களது வீரத்துக்கு இழுக்காகும். இவளை, ஒன்று இந்நாட்டிலிருந்தே விரட்டி விடுங்கள்; அல்லது முன்போல் பாதாளச் சிறையில் உழலச்செய்யுங்கள்!" என்றான் அவன்.

"நாட்டிலிருந்து விரட்டவா? விரட்டி இவள் அந்தக் கோழையின் நாடு சென்று அவனுடன் களித்து வாழவா? மாட்டேன், குலோத்துங்கா; என் உயிர் உள்ள வரையில், நாட்டின் நலத்துக்காக அன்றி, அப்படி ஒரு செயலைச் செய்ய மாட்டேன். சற்று முன்தான் இந்தச் சதிக்கு உதவியதற்காக என் மகன் என்ற கொள்ளியைப் பாதாளச்சிறைக்கு அனுப்பினேன். இவளும் அவனுடன் அங்கே போகட்டும்! யாரங்கே? தளபதி விழுப்பரையராரே, இழுத்துச் செல்லுங்கள் இவளை!" என்று கூறிவிட்டு அங்கே நிற்கக்கூடப் பிடிக்காதவர்போல் திரும்பிச் சென்று விட்டார் சோழதேவர்.

இவ்வாறு வானவி காதலனுடன் களித்திருக்கக் கையாண்ட வழி அவளுக்குப் படுதோல்வியுடன் முடிந்தது. நுணலும் தன் வாயால் கெடும் என்றவாறு நாடாளும் மன்னரின் மகளாகச் சோழகேரளன் அரண்மனையில் செல்வாக்குடன் வாழ்ந்து வந்த அவள், இப்போது வெளியுலகின் வாடையே வீசாத பாதாளச் சிறையில் மீண்டும்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

புகுந்தாள். தான் மட்டுமா புகுந்தாள்? முன்பு துணைக்குக் காதலனை இட்டுச் சென்றாள்; இப்பொழுது துணைக்கு உடன் பிறந்தவனை இழுத்துக் கொண்டு விட்டாள். ஆனால், இதற்காக அவளோ, மதுராந்தகனோ, சிறிதளவும் வருந்தவில்லை. காதலனை அடைய அவளும், இச்சோழநாட்டை அடைய அவனும் எத்தகைய கஷ்டங்களை வேண்டுமானாலும் மேற்கொள்ளச் சித்தமாக இருந்தனர்.

விதியும் அவர்களுக்கு உதவியது என்றே சொல்ல வேண்டும். இல்லாவிடில் சோழநாடு மீண்டும் (வீரராசேந்திரரின் ஆட்சியில் மூன்றாவது முறையாக) குந்தள நாட்டை நோக்கிப் போர்க்கொடி உயர்த்திச் செல்வானேன்?

ஆம்; பாதாளச் சிறையில் தள்ளப்பட்டிருந்தும், சிறிதும் அவமான உணர்ச்சி கொள்ளாமல், வானவியும் மதுராந்தகனும் அமைதி கொண்டுவிட்டனர். ஆயின் வீரராசேந்திரரால் அவ்வாறு இருக்க முடியவில்லை. அவருடைய வீர உதிரம் இந்தச் சூழ்ச்சியால் கொதித்தது. குந்தளத்தாரை அடியோடு ஒழித்து, இத்தகைய மறைமுகச் சூழ்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்காமல் தம்மால் அமைதி அடைய முடியாதென்று, அன்றே அரசவையைக் கூட்டி அவர் அறிவித்துவிட்டார். சோழப்படையினரோ எப்போதும் போர்த்தினவு எடுக்கும் தோள்களைப் படைத்தவர்களாயிற்றே! உடனே போர் தொடுப்பதென்று முடிவு செய்யப்பட்டு விட்டது. சோழதேவரின் போர்ச்சாத்து ஓலை ஒன்றுடன் தூதன் ஒருவன் கல்யாணபுரத்தை நோக்கி விரைந்தான்.

இப்போர் கி.பி.1064-ல் நடந்ததாகச் சரித்திர ஏடுகள் கூறுகின்றன. இதனை ‘கூடல் சங்கமத்துப் போர்’ என்று அவை அறிவிக்கின்றன. கிருஷ்ணை மற்றும் துங்கபத்திரை ஆறுகள் கூடும் இடமே கூடல் சங்கமம். வழக்கம்போல் கடலனைய படையுடன் வீரராசேந்திரர் இப்போரில் கலந்துகொண்டு, சோழப்படை அனைத்தையும் தாமே முன்நின்று நடத்தினார்.

சளுக்கியர்களும் இத்தடவை மாபெரும் படை ஒன்றுடன் வந்து வீரத்துடன் போரிட்டனர். வீரராசேந்திரரின் கல்வெட்டு ஒன்றே, குந்தளத்தாரின் படையை, “வடகடலென வகுத்த அத்தானையைக் கடகளிறென்றால் கலக்கி...” என்று குறிப்பிடுகிறது.

போர் மிகத் தீவிரமாக நடந்தது. ஆயினும் இறுதியில் வெற்றி என்னவோ சோழர்களுக்குத்தான். *இப்போரில் மேலைச் சளுக்கர்களின் மிக முக்கியமான தண்டநாயகர்கள் கேசவன், கேத்தரையன், மாரயன், போத்தரையன், இரேச்சயன் ஆகியோர் கொல்லப்பட்டனர். படைத்தலைவனான மதுவணனும், மற்றும்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

விக்கிரமாதித்தன், சயசிங்கன், அவர்களது தந்தை ஆகவமல்லன் ஆகியோரும் இத்தடவையும் புறங்காட்டி ஓடினர்.

(*Ep.Ind.Vol.XXI No. 38)

இத்தடவையும் வீரராசேந்திரர் போர்வெறி மிகக் கொண்டார். பகைவரைப் புறங்காட்டி ஓட்டியதோடு நில்லாமல், அவர் அவர்களது பாசறையை முற்றுகையிட்டு ஆகவமல்லனின் மனைவியரையும், குந்தள நாட்டின் பட்டத்து யானையாகிய புட்கப்பிடியையும், அவர்களது வராகக் கொடியையும் கைப்பற்றினார்.

கூடல் சங்கமத்துப் போரில் கிட்டிய வெற்றிதான் வீரராசேந்திரர் தமது ஆட்சிக் காலத்தில் பெற்ற பெரும் வெற்றியாகும். இதுபற்றி அவரை, *"குந்தளத்தாரைக் கூடல் சங்கமத்து வென்ற கோனபயன்..." என்று கலிங்கத்துப் பரணியும், #"சங்கமத்துக் கொள்ளும் தனிப்பரணிக்கெண்ணிறந்த துங்கமத யானை துணித்தோனும்" என்று விக்கிரமசோழன் உலாவும், $"பாடவரிய பரணி பகட்டணிவீழ் கூடலார் சங்கமத்துக் கொண்டகோன்..." என்று இராசராச சோழன் உலாவும் வாழ்த்துகின்றன.

(*இராசபாரம்பரியம். பா-29.)

(# வரிகள் 42-44)

($ வரிகள் 49-50)

இவ்வாறு கரை கடந்த வெற்றியுடன் திரும்பிய வீரராசேந்திரர் இந்தப் போருடன் குந்தளத்தார் மீண்டும் தலையெடுக்க இயலாதவாறு ஒழிந்துவிட்டார்கள் என்று இரும்பூது எய்தித் தலைநகர் அடைந்ததும், இதுவரையில் எந்தச் சோழ மன்னரும் செய்து கொண்டிராத அளவு விமரிசையாக விசயாபிடேகம் செய்து கொண்டார்.

மாமன்னர் கருதியவாறு குந்தளத்தாருக்கு இது தலையெடுக்க முடியாத பெரிய தோல்விதான். வெறும் தோவியோடு நின்றிருந்தால் அவர்கள் மன அமைதி பெற்றிருப்பார்கள். ஆனால் வீரராசேந்திரரோ, அவர்கள் உள்ளத்தை முள்ளாகக் குத்தும் ஒரு பேரவமானத்தை நிகழ்த்திவிட்டு வந்திருந்தாரே? குந்தள அரியணையில் ஆகவமல்லனுடன் அமர்ந்திருக்க வேண்டிய பட்டத்தரசி உள்பட அவன் மனைவியர் அனைவரையும் சிறைப் பிடித்து வந்துவிட்டாரே? மன்னர், மனைவியரை இழந்துவிட்டு வாளா இருந்தாலும், அவர்கள் பெற்ற மக்கள் தங்கள் அன்னையர் பகையரசனிடம் சிறையிருப்பதையோ, அன்றி அவனுக்கு அடிமையாக உழைப்பதையோ விரும்புவார்களா? தங்களைப் பெற்ற வயிறு அங்கே பற்றி எரிந்து கொண்டிருக்கும்

என்பதை அவர்கள் உணரவில்லையானால், அவர்களை மக்கள் என்பதைவிட மாக்கள் என்று சொல்வதல்லவா பொருந்தும்?

அந்த இளம் உதிரங்களின் கொதிப்பு, தோல்வியில் மூழ்கியிருந்த நாட்டு மக்களுக்கும், குந்தள மன்னன் ஆகவமல்லனுக்கும் உள்ளத்திலே நெருப்பூட்டியது. அதன் பயனாக கூடல் சங்கமத்துப் போர் முடிந்த சில திங்கள்களுக்குள்ளாகவே, குந்தளத் தூதன் ஒருவன் போர்ச் சவால் ஓலை ஒன்றுடன் கங்கைகொண்ட சோழபுரத்தை நோக்கி விரைந்தான். "நீ உன் பெயருக்கேற்ப வீரம் பொருந்திய மன்னனாக இருந்தால், மீண்டும் அதே கூடல் சங்கமத்தில் இன்றைக்கு ஒரு திங்களுக்குள் எங்கள் படையைச் சந்தித்து வெற்றி கொள்ள வேண்டும்!" என்று சவால்விட்டது அந்த ஓலை.

## அத்தியாயம் – 9. ஊழ்வினையின் ஊடாடல்

குந்தள மன்னன் ஆகவமல்லனின் சூளுரை தாங்கிய போர்த் திருமுகத்துடன் அந்நாட்டுத் தூதன் கங்காகேத்தன் என்பான் கங்கைகொண்ட சோழபுரத்தை வந்தடைந்த அன்று, உள்நாட்டு நடவடிக்கைகளை அறியும் பொருட்டு வீரராசேந்திர தேவர் தற்செயலாக அரசவையைக் கூட்டியிருந்தார். நாட்டு மக்களின் நலத்தில் கண்ணும் கருத்தும் கொண்ட சோழ மன்னர்கள் பொருது கொண்டு போகாத காலங்களில், திங்களுக்கு ஒரு தடவை இம்மாதிரி அரசவையைக் கூட்டுவதுண்டு. அப்போது உள்நாட்டு அரசியல் பற்றிய எல்லா விவரங்களையும் அந்த அந்தப் பிரிவுக்குரிய தலைவர்கள் மன்னரிடம் அறிவிப்பார்கள். தேவையான இடங்களில் அவருடைய ஆலோசனைகளைக் கோருவார்கள். தங்கள் கருத்துக்களையும் தெரிவிப்பார்கள். திங்கள் தோறும் கூட்டப் பெறும் இக்கூட்டங்களில் பெரும்பாலும் உள்நாட்டு விஷயங்களே விவாதிக்கப்படுமாயினும், எந்த விஷயத்திலும் பலருடைய பலதரப்பட்ட கருத்துக்களை அறிந்து ஆய்ந்து செயல்படும் பண்புடைய சோழ மன்னர்கள், உள்நாட்டு அதிகாரிகள் மட்டுமின்றி இதர அரசியல் அதிகாரிகள், படைத்தலைவர்கள் போன்றோரையும் அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்க அழைப்பதுண்டு. அவ்வாறேதான் அன்றையக் கூட்டமும் கூட்டப்பட்டிருந்ததால், குந்தள தூதன் வந்த போது அரசவையில் சோழநாட்டின் படைத்தலைவர்கள், அரசியல் அதிகாரிகள், உடன் கூட்டத்து அதிகாரிகள், குறுநில மன்னர்களில் சிலர் ஆகியோர் கூடியிருந்தனர்.

கங்காகேத்தன் கொணர்ந்த ஓலையைப் படித்த சோழதேவர் வாய்விட்டு நகைத்தார். "அமைச்சர்களே! படைத்தலைவர்களே! குறுநில மன்னர்களே! இந்த வேடிக்கையைப் பார்த்தீர்களா? நாம் இப்போதுதான் அடித்துப் போட்டுவிட்டு வந்த குந்தள அரவம் மீண்டும் நெளிந்து, தலை தூக்கிச் சீறுகிறது!" என்று கூறிவிட்டு மீண்டும் வயிற்றைப் பிடித்துக்கொண்டு சிரித்தார்.

"ஆகவமல்லன் என்ற அந்த மண்ணுண்ணிப் பாம்பா?" என்று வியந்தார் அரசியல் அதிகாரிகளில் ஒருவரான இராசேந்திர மூவேந்த வேளான்.

"ஓலையில் என்ன செய்தி விடுத்திருக்கிறான் அரசே?" என்று வினவினார் திருமந்திர ஓலை வானவன் பல்லவரையன்.

"இதோ, நீங்களே அதனைப் படித்துப்பாருங்கள், அவையோருக்கும் படித்துக் காட்டுங்கள்," என்று வீரராசேந்திரர் அவ்வோலையை அவரிடம் கொடுத்தார்.

பல்லவரையன் அதைப் படித்ததும் அவையிலே ஒரு கொதிப்பு உண்டாயிற்று. மற்றவர்களது கொதிப்பை விட உள்நாட்டுப் படைத் தலைவன் குலோத்துங்கனின் கொதிப்பு அதிகமாக இருந்திருக்க வேண்டும். அவன் தன்னையே மறந்து கத்தத் தொடங்கிவிட்டான்: "என்ன திமிர் அந்தச் செத்த பாம்புக்கு? *நான்கு முறை முதுகெலும்பை ஒடித்துங்கூட இன்னும் அவன் திமிர் ஒடுங்கவில்லையா? மன்னர் மன்னவா! இத்தடவை அந்த நச்சரவத்தை உருவின்றி நசுக்கிக் குழியிலிட்டுப் பொசுக்கி விட வேண்டும்!"

(*வீரராசேந்திரரின் ஆட்சிக் காலத்தில் சோழர்களுக்கும் குந்தளத்தாருக்கும் இடையே நிகழ்ந்த நான்காவது போர் கி.பி.1066-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கிருஷ்ணை ஆற்றின் கரையிலோ, துங்கபத்திரை ஆற்றின் கரையிலோ நிகழ்ந்திருக்க வேண்டுமென்றும், அதிலும் குந்தளத்தார் பெரும் இழப்புக்குள்ளாகிச் சோழர்களிடம் தோற்றோடினாரென்றும் சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன. நாம் நமது கதையுடன் நெருங்கிய தொடர்புடைய போர்களை மட்டுமே கண்டு செல்வதால், இப்போரை விட்டுவிட்டு அப்பால் வந்திருக்கிறோம்.)

குலோத்துங்கன் உரையை முடிக்கவில்லை; அதற்குள் அவையிலே கர்ச்சனை போன்ற நகைப்பொலி ஒன்று கேட்டது. மாமன்னர் வீரராசேந்திரர் அரியணையில் அமர்ந்திருக்கும் அவையிலே இத்தனை பெருங்குரலில் சிரிக்கச் சோழநாட்டில் பிறந்த எந்த ஆண்மகனுக்கும் துணிவு வந்திராது. ஆனால் இங்கே சிரித்தவன் சோழ நாட்டன்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அல்லன். இவன் அயல் நாட்டான். ஆம், சூளோலை கொணர்ந்த தூதன் கங்காகேயன்தான் நிறுத்தாமல் சிரித்துக்கொண்டிருந்தான்.

சற்று முன் வீரராசேந்திரர் சிரித்த ஏளன நகைப்புக்கு எதிர் நகைப்பைச் சிந்துவதுபோல் அவன் நெடுநேரம் கோரமாகச் சிரித்தான். பிறகு தானே அடங்கிச் சொல்லலானான்: “அரசே! உங்கள் வாய் வீச்சைக்கேட்க நான் ஓலை கொண்டுவரவில்லை. வாள் வீச்சுக்குச் சவால் கொடுத்து வந்திருக்கிறேன். என்னை முன் நிறுத்தி எங்கள் மன்னரை இழிவாகப் பேசுவதை இனியும் என்னால் பொறுக்க முடியாது. எங்கள் மன்னரின் ஓலைக்கு மறுமொழி அளித்துவிட்டால் நான் போய்விடுவேன்; பிறகு நீங்களும் உங்கள் அதிகாரிகளும் வயிற்றைப் பிடித்துக்கொண்டு சிரியுங்கள்; வாய்கிழியப் பேசுங்கள்; அல்லது வேறு என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்!...”

அவன் தூதுவனாக வந்திராவிட்டால் அங்கேயே அவனுடைய தலையை உருளச் செய்திருப்பார்கள் சோழப் படைத்தலைவர்கள். அவர்கள் கைகள் என்னவோ, கங்காகேத்தனின் இறுமாப்பு நிறைந்த சொற்களைச் செவிமடுத்த கணத்தில், இடுப்பில் தொங்கிய வாளுறையை நோக்கித்தான் தாவின. ஆனால் அவன் தூது வந்திருப்பவன் என்ற நினைவு எழுந்ததால் அவர்கள் செயலிழந்து, மாமன்னர் என்ன பதிலிறுக்கப் போகிறார் என்பதை ஆவலுடன் கவனிக்கலாயினர்.

மன்னர் முகத்திலும் கடுஞ்சினத்தின் அறிகுறிகள் தென்பட்டன. ஆனால் அவரும் அவன் தூதன் என்பதை எண்ணித் தமது சினத்தை அடக்கிக் கொண்டார். பிறகு அமைதியான குரலில் அவர் சொன்னார்: “தூதனே! சோழர் குலம் போருக்கு அஞ்சாக் குலம். அதிலும் சவால்ப் போர் என்றால் அவர்களுக்குச் சக்கரைப் பொங்கலுக்குச் சமம். போ, போய் உங்கள் மன்னரிடம், அவர் விரும்பிய அதே கூடல் சங்கமத்தில், அவர் விரும்பிய அதே அடுத்த திங்கள் ஆறாம் நாளில் அவருடைய நமனாகிய நாங்கள் அவரை எதிர்கொள்ளக் காத்திருப்போம் என்று சொல்!”

கங்காகேத்தன் மீண்டும் நகைக்கத் தொடங்கியபோது குலோத்துங்கனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலவில்லை. அவன் உடைவாளை உருவிக்கொண்டு தூதன் மீது பாய முயன்றபோது, “நில், குலோத்துங்கா!” என்று அவனை அமர்த்தினார் சோழதேவர். பிறகு அவர் கங்காகேத்தனை நோக்கி, “குந்தள தூதனே! ஓலைக்கு மறுமொழி கோரினாய்; தந்தோம். பின்னும் ஏன் இந்த நகைப்பு?” என்று வினவினார்.

“இத்தடவை யாருக்கு யார் நமனாகப் போகிறார்கள் என்பதை நினைத்த போது என்னால் சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியவில்லை, அரசே. என்னை மன்னித்துக்கொள்க,” என்றான் கங்காகேத்தன்.

“அதன் முடிவைக் கடந்த காலப் போர்கள் சொல்லும்; இப்போது நீங்கள் விரும்பியவாறு நிகழப்போகும் இந்த ஐந்தாவது சமரும் சான்று தரும். தூதனுக்கு அளித்த மரியாதையைக் காத்துக்கொண்டு நீ விரைவில் இங்கிருந்து செல்.”

“வணக்கம் அரசே!” என்று கூறிவிட்டு அவையிலிருந்து அகன்றான் கங்காகேத்தன்.

அவனுடைய விறைப்பான சொற்களையும், செருக்கு மிகுந்த நடையையும் கண்டு வியந்து நின்றனர் அவையிலுள்ளோர். தூதனின் தலை மறைந்ததும் குலோத்துங்கன் பேசலுற்றான்: “நல்லவேளை, மன்னர் மன்னவா! எங்கே நீங்களே இப்போரில் கலந்து கொள்வதாகக் கூறிவிடுவீர்களோ என்று பயந்தேன்?” என்றான் அவன்.

“நீ என்ன சொல்கிறாய் குலோத்துங்கா?” என்று கேட்டார் சோழதேவர்.

“நான்கு முறை உங்களிடம் மண் கவ்விய அந்த மகாவீரனை அடக்க ஐந்தாவது முறையும் நீங்கள் செல்வது உங்கள் வீரத்துக்கு இழுக்கு, அரசே. கட்டளையிடுங்கள்; அடியேன் ஒரு சிறு படையுடன் போய் அந்த அரை உயிர் அற்பப் பிராணியை அரைக்கணத்தில் அழித்துவிட்டு வருகிறேன்.”

வீரராசேந்திரருக்கும் இதே கருத்துத் தோன்றியிருக்க வேண்டும். அவர் குலோத்துங்கனுக்கு மறுமொழி கூறாமல் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டதைக் கண்டதும், மாமன்னரின் தலைமை அரசியல் அதிகாரியான சயசிங்க குலகால விழுப்பரையர், “அரசே, ஒரு வேண்டுகோள்,” என்று பணிவுடன் எழுந்து நின்றார்.

“சொல்லுங்கள் விழுப்பரையரே!”

“உள்நாட்டுப் படைத் தலைவர் குலோத்துங்கனின் வீரத்திலும் போர்த்திறனிலும் எனக்கு அளவற்ற உறுதிப்பாடு உண்டு. தாங்கள் கட்டளையிட்டால், அவர் அதை அப்படியே நிறைவேற்றி வெற்றியுடன் திரும்புவார் என்பதிலும் அடியேனுக்கு ஐயம் இல்லை. ஆயினும் குந்தளத்தாருக்குத் திடீரென இத்தனை துணிவும் ஆண்மையும் எப்படிப் பிறந்தன என்பதை நாம் சிறிது ஆய்ந்தறிந்த பின், இப்போரை யார் முன் நின்று நடத்துவது என்பதை முடிவு செய்வது நலமெனக் கருதுகிறேன்.”

“ஆம், மன்னர் மன்னவா! இதில் ஏதேனும் சூழ்ச்சி இருக்குமோவென நான் அஞ்சுகிறேன்,” என்றார் மற்றோர் அரசியல் அதிகாரியான இராசேந்திர மூவேந்தர் வேளான்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

“சூழ்ச்சியாம், சூழ்ச்சி!... அந்த அற்பப் பதர்கள் என்ன சூழ்ச்சி செய்துவிடப் போகிறார்கள்? அப்படியே செய்தாலும், அதனை உடைத்தெறிந்து நாட்டுக்கு வெற்றியுடன் திரும்புவேன்; கவலை சிறிதும் வேண்டாம், அரசியல் அதிகாரிகளே!” என்று உறுதியுடன் உரைத்தான் குலோத்துங்கன்.

“பொறு, குலோத்துங்கா!” என்று குறுக்கிட்டார் வீரராசேந்திரர். “அதிகாரிகள் கூறுவதில் பொருள் இருக்க வேண்டுமென்றே நானும் நினைக்கிறேன். வீரத்தால் வீழ்த்த முடியாத இந்த வீரராசேந்திரனைச் சூழ்ச்சியால் சுருட்டிவிட அவர்கள் இச்சூளோலையை அனுப்பியிருப்பதும் இயல்பே. இல்லாவிடில் நேற்றுவரை இல்லாத துணிவு இன்று அவர்களுக்கு எங்கிருந்து பிறந்தது?”

ஆம், அங்கு கூடியிருந்த பெரும்பாலோர் உள்ளமும் அப்போது அதே வினாவைத்தான் எழுப்பியிருந்தது-ஆகவமல்லனுக்கு இந்தத் துணிவு எங்கிருந்து பிறந்தது? எப்படிப் பிறந்தது? எதன் அடிப்படையில் பிறந்தது?

இந்த வினாக்களுக்கு விடை பகர்வதேபோல், அப்போது அங்கே ஒரு குரல் கேட்டது. “அடைக்கலம், சோழதேவா! அடியேன் உங்கள் அடைக்கலம்!”

யாவரின் கண்களும் குரல் வந்த திசையை நோக்கின. நெடும்பயணக் களைப்பால் உடல் சோர, ஆடையெல்லாம் அழுக்கேறியிருக்க, இருகைகளையும் தலைக்கு உயரே தூக்கி வணங்கியவாறு மாமன்னரை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தான் வேங்கி மன்னனான விசயாதித்தன்.

அவன் நிலையைக் கண்டு மனம் கலங்கிய குலோத்துங்கன், சோழ தேவரை முந்திக்கொண்டு, “என்ன நேர்ந்தது சிறிய தந்தையே? உங்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது?” என்று வினவினான்.

வீரராசேந்திரரின் பாதங்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்த விசயாதித்தன், “மன்னர் மன்னவா! வேங்கி பறிபோய் விட்டது, ஆகவமல்லனின் மைந்தன் விக்கிரமாதித்தன் திடீரென ஒரு பெரும்படையுடன் வந்து, சோழப் பாதுகாப்புப் படையையும், வேங்கிப் படையையும் வென்று, அரியணையைப் பறித்துக்கொண்டு என்னை அடித்துத் துரத்தி விட்டான்!” என்று கதறினார்.

“என்ன?” கூடியிருந்தோர் எழுப்பிய வியப்புக் குரலால் அவையே கிடுகிடுத்தது. இப்போது அவர்கள் எல்லோருக்கும் குந்தளத்தாருக்குத் திமிர் ஏறியிருந்ததன் காரணம் விளங்கிவிட்டது. அவர்கள் நெடுங்காலமாக கண்ணி வைத்திருந்த வேங்கிநாடு கைவசமாகி விட்டதல்லவா?



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவையில் எழுந்த ஆரவாரம் சிறிது அடங்கியதும் சோழதேவர் சிங்கமாகக் கர்ச்சித்தார்: "ஆ! அத்தனை வீரர்களாகி விட்டார்களா குந்தளத்தார்? பார்த்து விடுகிறேன் அவர்கள் வீரச் செருக்கை இத்தடவை!" என்று முகம் சிவக்கச் சிலிர்த்த அவர், குலோத்துங்கனிடம் "குலோத்துங்கா! உன் விருப்பப்படி உன்னையே கூடல் சங்கமத்துக்கு அனுப்பலாமோ என்று சற்றுமுன் நினைத்தேன். ஆனால் இனி அதைப்பற்றி நினைப்பதற்கில்லை. பல தலைமுறைகளாகச் சோழநாட்டின் பகுதியாக விளங்கி வந்த வேங்கி என் ஆட்சிக் காலத்தில் நம் பகைவர்கள் கைக்குப் போயிருக்கையில், அதை மீட்கும் பணியில் நான் நேரடியாக ஈடுபடாவிட்டால் இந்தச் சோழ அரியணைக்கே இழுக்கு, மருகா! சோழ நாடு அடுத்து ஈடுபடும் போரை நீயே முன்னின்று நடத்த வாய்ப்பளிக்கிறேன். இப்போது நமது படைத்தலைவர்களில் ஒருவனாக நீயும் புறப்படு!" என்று சொல்லி, "புறப்படுங்கள் படைத் தலைவர்களே! உங்கள் தினவெடுத்த தோள்களுக்கு இதோ ஓர் அரிய விருந்து வந்திருக்கிறது. உங்கள் படைகளைத் திரட்டிக்கொள்ளுங்கள், விரைவாக. நாளையன்று பகலில் சோழநாட்டின் பெரும் படை இந்த வீரராசேந்திரன் தலைமையில் கூடல் சங்கமத்தை நோக்கிச் செல்ல வேண்டும்!" என்று முடித்தார்.

குறிப்பிட்ட நாளன்று, தனது உள்நாட்டுப் பாதுகாப்புபடைத் தலைமைப் பொறுப்பை தன் உதவி படைத்தலைவர் விக்கிரம பராக்கிரம தேவரிடம் ஒப்படைத்துவிட்டு, போர்ப்படைப் பிரிவு ஒன்றுக்குத் தலைமை தாங்கி, அப்படையை இதரப் படைகளுடன் சோழகேரளன் அரண்மனை முகப்புத் திடலில் அணிவகுத்து நிறுத்திவிட்டு, அத்தையரிடமும் மனைவியிடமும் விடைபெற வந்தான் குலோத்துங்கன். வயதில் மூத்தோர்களான அத்தையாரை வணங்கி ஆசி பெற்றுக்கொண்ட பின், அவன் மதுராந்தகியின் அந்தப்புரத்துக்கு வந்தான்.

அந்தப்புர வாயிலில் தான் மட்டுமின்றி, தனது மைந்தர்களான கங்கசோழனுடனும், மும்முடிச் சோழனுடனும் கணவன் வருகையை எதிர் நோக்கிக் காத்திருந்தாள் மதுராந்தகி. அன்றைய நாளை தன் வாழ்வையே மாற்றி அமைக்கப் போகிற நாளாகக் கருதி இருந்தாள் அவள். ஆம், ஏறக்குறைய மூன்றாண்டுகளாக அவள் எதிர்பார்த்திருந்த வாய்ப்பு இப்போது வந்திருக்கிறது. இடையே சோழர்கள் எத்தனையோ போர்களில் ஈடுபட்டனர். அவற்றில் சில போர்களில் குலோத்துங்கனும் கலந்து கொண்டு நாட்டுக்கு வெற்றியைத் தேடித் தந்தான். ஆனால் மதுராந்தகிக்கு, அவளுடைய ஆணைக்கு, வெற்றி அளிப்பவையாக அவை அமையவில்லையே! அந்தப் போர்களில் ஒன்று கூட வேங்கி



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

பொருட்டு நிகழ்ந்த போராக இருக்கவில்லையே! குந்தளத்தார் மீண்டும் வேங்கியை நோக்கிப் பாய வேண்டும்; அதன் நிமித்தம் சோழர்கள் அவர்களுடன் போரிடவேண்டும்; அப்போருக்குப் பின்னர் தனது சிறிய தந்தையின் மனக்கண் திறக்க வேண்டும். "இவ்வாறு நாம் அடிக்கடி வேங்கி பொருட்டுப் படை திரட்டிச் செல்ல வேண்டியிருப்பதன் காரணம், அங்கே கையாலாகாதவன் ஒருவன் ஆட்சி செலுத்துவதே ஆகும். இத்தொல்லை தீர வேண்டுமானால் குலோத்துங்கனையே வேங்கியை ஆண்டுவரச் செய்ய வேண்டும்," என்று அவருக்குத் தோன்றினால் அல்லவா, அவள் தனது ஆணைக்குரிய வெற்றிப் படியில் முதலதைக் கடந்தவள் ஆவாள்? இப்படி எண்ணியிருந்த அவள், இடையே நிகழ்ந்த ஒவ்வொரு போரும் வேங்கிப் போராக இல்லாமல் வெறும் போராக இருப்பதைக் காணுந்தோறும், 'குந்தளத்தார் அடியோடு செயலிழந்து போய்விட்டார்களோ? வேங்கிக்கு இனி நாம் ஏங்கிப் பயனில்லை என்று ஆய்ந்தோய்ந்து போய்விட்டார்களோ?' என்றெல்லாம் கலங்கத் தொடங்கினாள்.

இவ்வாறு அவளை நெடுநாள் கலக்கிய பிறகு, இப்போது அவள் எதிர்பார்த்தே இராத வகையில், வேங்கியை அவர்கள் கைப்பற்றிக் கொண்டு விசயாத்தித்தனையும் விரட்டி விட்டார்கள் என்ற செய்தி வந்தால் அவள் மகிழ்ச்சி அடைய மாட்டாளா? அதோடு, வேங்கியை மீட்க உடனடியாகப் போர் நிகழப் போகிறது. அதுவும் சாதாரணப் போரல்ல; ஒரு சவால்ப் போர். அதில் கலந்து கொள்ளும் முக்கியமான படைத் தலைவர்களுள் ஒருவராகத் தன் கணவரும் அழைக்கப் பட்டிருக்கிறார் என்றும் அறிந்தாளென்றால், தன் ஆணை நிறைவேறும் நாள் இனி அதிகத் தூரத்தில் இல்லை என்று அவள் களிப்படைய மாட்டாளா?

அந்தக் களிப்போடும், கணவர் மூன்றாண்டுகளுக்கு முன் தனக்கு அளித்துள்ள வாக்குறுதியை நினைவூட்டி அனுப்ப வேண்டும் என்றுந்தான் அவள் அப்போது தன் மைந்தர்களோடு காத்திருந்து, விடை பெற வரப்போகும் கணவனை எதிர்நோக்கியிருந்தாள்.

குலோத்துங்கன் வந்தான். பொருது கொண்டு செல்லும் கணவனுக்கு அளிக்க வேண்டிய வழியனுப்பு நடைமுறைகளை முறைப்படி செய்தாள் மதுராந்தகி. பிறகு ஒதுங்கி நின்று கொண்டிருந்த மைந்தர்கள் இருவரையும் அருகில் அழைத்து, "அப்பா போருக்குப் போகிறார், குழந்தைகளே! அவர் வெற்றியுடன் திரும்ப வேண்டுமென்று இறைவனை வேண்டிக்கொள்ளுங்கள்." என்றாள் முகத்தில் ஒரு குறுநகையுடன்.

மூத்த மைந்தன் கங்கசோழனும், இப்போது மூன்று வயதைக் கடந்து விட்டிருந்த இளைய மைந்தன் மும்முடி சோழனும், தங்கள் மழலை மாறாக்குரலில், “சோழேச்சுரா! எங்கள் அப்பா நாட்டுக்கு வெற்றியும் எங்களுக்கு நாடும் கொண்டு திரும்பி வரட்டும்!” என்று ஒருசேரக் கூறியதும், குலோத்துங்கன் உள்ளம் மலரச் சிரித்தவாறு மனைவியைச் செல்லமாகக் கன்னத்தில் தட்டி, “குறும்புக்காரி! எத்தனை நாட்களாகப் பயிற்சி அளித்துக் குழந்தைகளை இப்படிச் சொல்லத் தயாரித்து வைத்தாய்?” என்றான் உவகையுடன்.

பிறகு அவன் தன் இரு செல்வங்களையும் இரு புஜங்களிலும் தூக்கிக் கொண்டு, “சோழேச்சுரன் அருள் பாலித்தால் அவ்வாறே செய்கிறேனடா என் கண்களே!” என்று கூறி அவர்களுக்கு முத்தமீந்து கீழே இறக்கிவிட்டான்.

பின்னர் அவன் சோழகேரளன் அரண்மனைக்குத் திரும்பிச் சென்ற போது மதுராந்தகி தன் கனவு நினைவாகப் போகும் நாள் அதிக தூரத்தில் இல்லையென்று மீண்டும் ஒரு முறை இறுமாப்புடன் நினைத்துக் கொண்டாள். ஆனால்- ஊழ்வினை என்று ஒன்று இருக்கிறதே, அது நம் எண்ணங்கள் எல்லாவற்றையும் அப்படி அப்படியே நடக்க விட்டு விடுகின்றதா? சிலபோது, நாம் நினைத்தே இராத நிகழ்ச்சிகளை இடையே புகுத்தி நமது எண்ணங்களில் மண்ணடித்து விடுகிறதே? மதுராந்தகியின் எண்ணத்திலும் அவ்வாறு மண்ணடிக்கும் நிகழ்ச்சி ஒன்று இரண்டு நாட்களுக்குப் பின் நிகழ்ந்தது.

## அத்தியாயம் – 10. கைக்கு எட்டியது

**வீ**ரராசேந்திரரின் தலைமையில் கூடல் சங்கமத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சோழநாட்டின் பெரும்படை, இரண்டு நாள் பயணத்துக்குப் பின் ஒரு மாலையில் வழியில் இருந்த ஆறு ஒன்றன் கரையில் இரவுத் தங்கலுக்காகத் தண்டிறங்கியது. அப்போது ஆதவன் மேல் திசையில் ஆழவில்லை. கூடாரங்கள் அடிக்கப்பட்டு, மன்னர் மற்றும் முக்கிய அதிகாரிகள் தங்குவதற்கு இட வசதி செய்த பிறகு, படையின் உணவுத் தயாரிப்புப் பிரிவு ஆற்றின் மணற்பரப்பில் பெரிய பெரிய பாண்டங்களில் படையினருக்கான இரவு உணவு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தது.

அப்போது கோடைக் காலமாதலால், ஆற்றில் அவ்வளவாக நீர் இல்லை. இவர்கள் இறங்கியிருந்த கரையின் எதிர்க்கரை ஓரமாகத்தான் சிறிதளவு தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. மற்றபடி இருபுறங்களிலும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் ஒரே மணற்பரப்புத்தான். ஆற்றின் இரு மருங்கிலும் மரங்களடர்ந்த சோலை.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

உணவு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வீரன் ஒருவன் திடீரென்று ஆற்றின் மேற்க்குத் திசையை நோக்கிக் கையை நீட்டி, “அதோ பாருங்கள்! அதோ பாருங்கள்!” என்று கூக்குரலிட்டான். வேலையில் ஈடுபட்டிருந்தோர் அனைவரும் திடுக்கிட்டு, அவன் கையைக் காட்டிய இடத்தை நோக்கினர். அங்கே இவர்கள் இறங்கியிருந்த கரையோரமாக மரங்களுக்கு உயரே புழுதிப்படலம் ஒன்று தெரிந்தது.

படையின் உணவுப் பிரிவுத் தலைவர், அன்று கங்கை கொண்ட சோழபுரத்தில், இப்போது அவர்கள் சென்றுகொண்டிருந்த போரைப்பற்றி விவாதம் நிகழ்ந்தபோது உடன் இருந்தவர். ஆகவமல்லன் ஒருகால் சூழ்ச்சியில் இறங்கியிருக்கலாமோவென அன்று அவையில் சிலர் ஐயமுற்றது இப்போது அவருக்கு நினைவுக்கு வந்தது. பெரும் புழுதிப்படலம் கிளம்பியிருப்பதால் ஏதோ ஒரு படைதான் வந்துகொண்டிருக்க வேண்டுமென்று ஊகித்துவிட்ட அவர், அப்படை ஒருகால் ஆகவமல்லனோ, அவனது மைந்தர்களோ திரட்டிவரும் படையாக இருக்கலாம்; ஒருபுறம் நம்மைக் கூடல் சங்கமத்தை நோக்கிச் செல்ல விடுத்து, மறுபுறம் தலைநகரை முற்றுகையிட அவன் சூழ்ச்சி செய்து, அதற்காக வந்து கொன்டிருக்கலாம் என்று கருதினார், எனவே அவர் உடனே ஆற்றின் கரையில் அமைக்கப்படிருந்த மாமன்னரின் பாசறையை நோக்கி விரைந்து, அவரிடம் இச்செய்தியை அறிவித்தார்,

சோழதேவர் அவருடைய ஐயப்பட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. “வருவது பகைவரின் படையாக இருந்தால், சோழநாட்டில் இவ்வளவு தூரம் உள்ளேறி வரும் வரையில் நமது ஒற்றர்கள் வாளா இருந்திருக்க மாட்டார்கள். ஆதலால், அது நமது குறுநில மன்னர்கள் யாராவது, கூடல் சங்கமத்துப் போரில் நமக்கு உதவுவதற்காக இட்டு வந்துகொண்டிருக்கும் படையாகவே இருக்கும்,” என்று அவர் கூறினார்.

ஆனால் இவர்கள் இருவரின் ஊகத்தையும் பொய்ப்பித்துவிட்டது வந்த படை. அது இவர்கள் நினைத்தவாறு பெரும்படையல்ல; சுமார் நூறு வீரர்கள் அடங்கிய மிகச் சிறிய படை. அதோடு அதை நடத்தி வந்தவர் சோழநாட்டின் கீழ் ஒரு குறுநில மன்னரைப்போல் ஆட்சி செய்து திறை செலுத்தி வந்த கடாரத்து மன்னர்.

வீரராசேந்திர தேவரது தந்தையாகிய கங்கைகொண்ட சோழன் தமது ஆட்சிக் காலத்தில் கடல் கடந்து ஸ்ரீவிஜய ராச்சியத்தின் மீது படையெடுத்துச் சென்று, கடாரத்து அரசனாகிய சங்கிராம விசயோத்துங்கவர்மனைப் போரில் வென்று, பின்னர் அம்மன்னனுகே அந்நாட்டை அளித்து, அதைச் சோழநாட்டுக்குத் திறை செலுத்தும் ஒரு சிற்றரசாக்கிவிட்டு வந்திருந்தார். ஏறக்குறைய நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இப்போது கடாரத்தரசன் தன் நாட்டைப் பகைவர்பால் இழந்துவிட்டான். சோழரை அடைக்கலம் சார்ந்து அந்நாட்டைத் தனக்கு மீட்டுத் தருமாறு கேட்டுக் கொள்ளவே, அவன் கடல் கடந்து வந்துகொண்டிருந்தான்.

இவ்விவரங்களை அறிந்த வீரராசேந்திரர் தமது பாசறையிலேயே ஓர் அரசவை கூட்டி, கடார மீட்சி பற்றிய தமது கருத்தை வெளியிட்டார். தமது முன்னோர்கள் போர் செய்து சோழ நாட்டுடன் சேர்த்த நாடுகளில் ஒன்றைக்கூடத் தமது ஆட்சிக் காலத்தில் இழக்க மாமன்னர் விரும்பவில்லை. ஆதலால் இப்போது மேற்கொண்டிருக்கும் வேங்கி மீட்புப் படையெழுச்சி எத்தனை முக்கியத்துவமும், உடனடியாகக் கவனிக்க வேண்டியதும் ஆனதோ, அவ்வாறே கடார மீட்சியும் அவசரமும், அவசியமும் வாய்ந்ததென அவர் கருதினார். ஆனால் குந்தளத்தாரின் சூளுரையை ஏற்றுக்கொண்டு போர் செய்யச் செல்லும் தாம், கடாரப் படையெழுச்சியில் கலந்து கொள்ள இயலாதிருந்ததால் வேறு யாரை இம்மகத்தான பொறுப்பை ஏற்கச் செய்யலாமென்பதை ஆலோசிக்கவே அவர் அப்போது அவை கூட்டினார்.

இங்கேதான் ஊழ்வினை தன் விளையாட்டைப் புரிந்தது. கூடியிருந்தோர் அனைவரும் ஒருமனதாகக் குலோத்துங்கன்தான் இதற்கு ஏற்றவன் என்று தெரிவித்தனர். சோழதேவருக்கும் அன்று அரசவையில் குலோத்துங்கனுக்குத் தாம் அளித்த வாக்குறுதி நினைவுக்கு வந்தது. “சோழநாடு அடுத்து ஈடுபடும் போரை நீயே முன்னின்று நடத்த வாய்ப்பளிக்கிறேன்,” என்று அவர் கூறியிருக்கவில்லையா? ஆதலால் அவர் வேறு சில படைத் தலைவர்களையும், ஒரு படைப்பகுதியையும் அழைத்துக் கொண்டு கடாரத்தை மீட்டுக் கொடுத்துவிட்டு, அப்படியே ஒரு திக்குவிஜயமும் செய்து வருமாறு குலோத்துங்கனை அனுப்பிவிட்டார்.

இதனால் என்ன நேர்ந்தது என்பதைப் பின்னால் காண்போம். இப்போது நாம் கூடல் சங்கமத்துப் போரைத் தொடர்வோம்.

வீரராசேந்திரரும் அவரது மாபெரும் சோழப்படையும் ஆகவமல்லன் குறிப்பிட்டிருந்த நாளுக்கு முன்பே கூடல் சங்கமத்தை வந்தடைந்து அதற்கு அணித்தாக இருந்த கரந்தை என்னும் இடத்தில் அவன் வருகையை எதிர்பார்த்திருந்தனர்.

போர்த் திருமுகத்தில் குறிக்கப்பெற்றிருந்த நாள் வந்தது. ஆனால் குந்தளப் படையைக் காணவில்லை. மறுநாள், அதற்கு மறுநாள் என்று ஒரு திங்கள் வரையில் கரந்தையிலேயே காத்திருந்தனர். அப்போதும் ஆகவமல்லனையோ, அவன் மைந்தர்களையோ, அல்லது அவர்களது படையையோ காணவில்லை.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சோழதேவர் இதனால் பெருஞ்சினம் அடைந்தார். அப்போது அவர்கள் தங்கியிருந்த கரந்தை இடம் இரட்டப்பாடி நாட்டில் சளுக்கியர்களுக்கு உட்பட்ட பகுதிக்கு அண்மையில் இருந்தது. அப்பகுதியில் தேவநாதன், சித்தி, கேசி என்ற மூன்று குந்தளத் தலைவர்கள் இருந்தனர். வீரராசேந்திரர் அவர்களைப் போருக்கு அழைத்து, தோற்றுப் புறமுதுகு காட்டி ஓடும்படி செய்தார். அப்பகுதியில் பல இடங்களில் எரியூட்டிச் சாம்பலாக்கினர். ஆகவமல்லனைப் போல் ஓர் உருவம் அமைத்து, அதன் கழுத்தில் கண்டிகை பூட்டி, அவனும் அவன் மக்களும் ஐந்துமுறை தமக்கஞ்சிப் புறமுதுகு காட்டி ஓடியதை ஒரு பலகையில் எழுதச் செய்து அதனை அவ்வுருவத்தின் மார்பில் தொங்கவிட்டு, இன்னும் பற்பல அவமானங்களும் செய்வித்தார். கடைசியில் துங்கபத்திரை ஆற்றின் கரையில் வெற்றித்தூண் ஒன்றை நிறுவிவிட்டு, “நீ கைப்பற்றியிருக்கும் வேங்கியை மீட்காமல் நாடு திரும்பேன்; வல்லவனாகில் வந்து காத்துக்கொள்!” என்று செய்தி சொல்லி அனுப்பிவிட்டு வேங்கியை நோக்கிச் சென்றார்.*

(*S.I.I., Vol.III, No.30.)

இப்படி வேங்கியை நோக்கி வீறுகொண்டு சென்ற வீரராசேந்திரரைக் கிருஷ்ணை ஆற்றின் கரையில் குந்தளத் தண்ட நாயகர்களான சனநாதன், இராசமய்யன், திப்பரசன் என்போர் வந்து மேலே செல்லாமல் தடை செய்தனர். இருதரப்பாருக்கும் இப்போது விஜயவாடா என விளங்கும் நகருக்கு அருகில் பெரும்போர் நிகழ்ந்தது. ஒரே நாள் போரில் அவர்களை ஓடி ஒளியச் செய்தார் வீரராசேந்திரர். பின்னர் அவர் கோதாவரி ஆற்றைக் கடந்து, கலிங்கம், சக்கரக்கோட்டம் ஆகியவற்றுக்கு அப்பால் சென்று வேங்கியை அணுகினார்.

வேங்கியிலும் ஒரு குறுகிய காலப்போரே நிகழ்ந்தது. அதிலும் ஆகவமல்லனோ அவன் மைந்தர்களோ கலந்துகொள்ளவில்லை. மிக எளிதாகத் தாம் பாசறையைவிட்டு அகலாமலே வேங்கியை மீட்டுவிட்டார் சோழ தேவர். பிறகு...?

பிறகு நடந்ததைக் காணுமுன், சூளோலை அனுப்பிய ஆகவமல்லனோ அவன் மைந்தர்களோ, *ஏன் சங்கமத்துக்குப் போர் செய்ய வரவில்லை; ஏன் அவர்கள் வேங்கியைக் காக்கவும் வரவில்லை என்பதைக் காண்போம் நாம்.

(*இதுபற்றிச் சரித்திர நூல்கள் மாறுபட்ட கருத்துக்களைத் தருகின்றன. நான் விக்கிரமாங்க தேவசரிதத்தில் கூறப்பட்டுள்ள செய்தியை ஆதாரமாக எடுத்துக் கொண்டுள்ளேன். (அதிகாரம் 4-வரிகள் 44-68.))



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இதையும் ஊழ்வினைப் பயன் என்றுதான் சொல்ல வேண்டும். பல ஆண்டுகளாகப் பல போர்கள் செய்தும் மீட்க முடியாத வேங்கியை, திக்குவிசயம் செய்யச் சென்ற ஆகவமல்லனின் இரண்டாம் மைந்தன் விக்கிரமாதித்தன் ஒரு கணத்தில் தன்னடிமைப்படுத்தி அங்கே தங்கள் பிரதிநிதி ஒருவரை அமர்த்திவிட்டு, தன் நாட்டை மேலும் வலுப்படுத்துவதற்காகச் சக்கரக்கோட்டத்தை நோக்கிச் சென்றான். அவன் இந்தத் திக்குவிசயத்தை மேற்கொண்டதன் காரணமே விரைவில் குந்தள நாட்டைச் சோழநாட்டுடன் போர் தொடுக்கும் அளவுக்கு வலுப்படுத்தி, வீரராசேந்திரரைத் தோற்கடித்து, தன் காதலி வானவியைக் காலடியில் கொண்டுக் கிடத்திக் கெஞ்சச் செய்ய வேண்டும் என்பதுதான். இதனால்தான் அவன் பலகாலத்துக்குப் பின் தங்களுக்குக் கிட்டிய வேங்கியில்கூட அமர்ந்திராமல், சக்கரக் கோட்டத்தை நோக்கிச் சென்றான்.

வேங்கி தங்கள் வசமாகிவிட்டது என்றறிந்ததும், ஆகவமல்லனும் பெரும் களிப்படைந்தான். சோழரைத் தோற்கடிக்க வேண்டும் என்ற ஆவல் மைந்தனைவிட அவனுக்கு அதிகமாக இருந்தது. ஆதலால் அவன் அவர்களுக்குச் சூளுரைத் திருமுகம் ஒன்றை உடனே அனுப்பிவிட்டு, சோழப்படையைச் சந்தித்து வெற்றி கொள்ளத் தன் படையைத் திரட்டலானான். இந்நிலையில் ஊழ்வினை வலியால் அவனுக்குத் திடீரெனச் சுரநோய் ஒன்று உண்டாயிற்று. எத்தனையோ மருத்துவங்கள் செய்தும் அந்நோய் தணியவில்லை. நோயின் துன்பமும், குறித்த நாளில் சோழரைக் கூடல் சங்கமத்தில் சந்திக்க முடியாமற் போய்விட்டதே என்ற ஏக்கமும் வாட்டியதால், அவன் குருவர்த்தி என்ற இடத்துக்குப் போய், துங்கபத்திரை ஆற்றில் * தன்னை மூழ்கடித்துக் கொண்டான்.

(* Ep. Ind.Vol.VIII.SK.136.)

விக்கிரமாதித்தனுக்கோவெனில் தந்தை சோழர்களிடம் சவால் விட்ட செய்தியும், அவர் மரணமடைந்த செய்தியும் மிகத் தாமதமாகவே கிட்டின. அவன் சக்கரகோட்டத்தை வென்று அடிமைப்படுத்திவிட்டுக் கிருஷ்ணை ஆற்றின் கரைக்கு வந்தபோது தான், அச்செய்திகளும், அவற்றோடு வேங்கி பறிபோய்விட்ட செய்தியும் வந்தன. ஆதலால், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போய்விட்டதே என்று வருந்தி அடுத்த நடவடிக்கையைப் பற்றிச் சிந்திப்பதை அன்றி, அந்நிலையில் அவனால் ஏதும் செய்ய முடியவில்லை.

இப்போது நாம் வேங்கிக்குத் திரும்பி வந்து அங்கே நடந்ததைக் கவனிப்போம்.

வேங்கி மீட்கப்பட்டதும், அதனை மீண்டும் தானே அடையத் துடித்தான் கிழவன் விசயாதித்தன். ஆனால் வீரராசேந்திரரும், இதர சோழத்தலைவர்களும், அந்நாட்டை



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மீண்டும் அக்கோழையிடம் ஒப்படைத்துத் தொல்லை வருத்திக் கொள்ள விரும்பவில்லை. அதை, அதற்குரிய குலோத்துங்கனிடந்தான் ஒப்படைக்க வேண்டுமென்று யாவரும் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் என்ன துரதிர்ஷ்ட்டம்! குலோத்துங்கன் அப்போது அங்கே இல்லையே! அவன் கடாரத்தை நோக்கியல்லவா சென்றிருந்தான்! அது மட்டுமா? கடாரத்து மீட்சிக்குப் பிறகு திக்விஜயம் செய்து வருமாறும் அவனைப் பணித்திருந்தாரே சோழதேவர்? அவன் அவற்றை முடித்துக் கொண்டு திரும்ப எத்தனை ஆண்டுகள் ஆகுமோ?

அதுவரையில் வேறு யாரையாவது தங்களது பிரதிநிதியாக நியமித்துவிடலாம் என்று அரசியல் அதிகாரிகள் ஆலோசனை கூறினர். ஆனால் அதிலும் ஒரு தொல்லை இருப்பதை வீரராசேந்திரர் உணர்ந்தார். விசயாதித்தனுக்கு நாடில்லை என்று விரட்டி விட்டால், அந்த மானமற்றவன் மீண்டும் குந்தளத்தாரைச் சரணடைவான். அவர்கள் மூலம் வேங்கியைக் கைப்பற்றிக்கொள்ள முயலுவான். எதற்கு வீண் தொல்லை? இந்தக் கிழமே குலோத்துங்கன் திரும்பி வரும் வரையில் நாட்டை ஆண்டுவிட்டுப் போகட்டும் என்று இறுதியாக முடிவுறுத்திய சோழதேவர், அவ்வாறே அவனை வேங்கி அரியணையில் மீண்டும் அமர்த்திவிட்டுச் சோழநாடு திரும்பினார்.

பாவம், மதுராந்தகிக்கும், இதனால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலை ஏற்பட்டது என்பதை அவளையன்றி வேறு யார் அறிவர்?

## அத்தியாயம் – 11. கள்ளனும் காப்பானும்!

**பா**தாளச் சிறையில் தள்ளப்பட்ட வானவியும், மதுராந்தகனும் என்ன ஆனார்கள் என்பதை இப்போது பார்ப்போம்.

வானவிக்கு இது இரண்டாவது முறையாகக் கிட்டிய சிறைவாசம். ஆனால் முன்னர் அவள் இந்தப் பாதாளச்சிறையில் இருந்தபோது, அதைச் சிறைவாசமாகவே கருதவில்லை. ஏனென்றால் அப்போது அவளுடன், அவள் உள்ளம் கவர்ந்த குந்தள விக்கிரமாதித்தனும் இருந்தான். ஆதலால் அப்போது அவர்களுக்கு இன்பச் சிறையாகவே இருந்தது. தவிர, அச்சமயம் அவர்களது சிறைவாசத்துக்கு ஒரு காலவரையும் வகுக்கப்பட்டிருந்தது.

ஆனால் இப்போது அதே சிறை அவளுக்குத் துன்பச் சிறையாக இருந்தது. எவனுடன் முன்பு இங்கே பொழுதை இனிதாகக் கழித்தாளோ, அவனை அடைய முயன்ற



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

குற்றத்துக்காக இப்போது அவள் சிறைப்படுத்தப் பட்டிருந்தாள்- அதிலும் இனித் தன் காதலனை என்றுமே காண இயலாதவாறு- தனது ஆயுளின் காலவரையே சிறைவாசத்தின் காலவரையாக! 'பெயரளவில் சிறைச் சாலை என்றிருந்தாலும் ஓர் அரண்மனையின் வசதிகளில் பெரும்பாலானவை கொண்ட இந்தப் பாதாளச் சிறைக்கு மாறாக, ஒரு வசதியும் இல்லாத சிறையில் அடைத்திருந்தாலும் நான் மனநிறைவு அடைந்திருப்பேனே?' என்று அவள் நாள் தோறும் புலம்புமாறு அத்தனை கொடிதாகத் தோன்றியது இத்தடவை கிட்டிய சிறைவாசம். ஆம், ஈராண்டுகள் அவளை இன்பவாரிதியில் தள்ளிய இடமல்லவா இது? இங்குள்ள ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு பகுதியும் அவளுக்கு அந்த இன்ப நாட்களின் நினைவை எழுப்பி, "அனைத்தையும் இழந்து விட்டோமே!" என்று ஏங்கச் செய்தன.

வானவி இவ்வாறு துன்புற்றிருக்க, மதுராந்தகன் வேறொரு முறையில் உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தான். சிறையில் தள்ளுமாறு தான் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று அவன் கருதினான். பகைநாட்டானான விக்கிரமாதித்தனைச் சிவபோதர் வேடத்தில் அரண்மனை வரையில் அழைத்து வந்தது எத்தனை பெரிய இராசத் துரோகம் என்பதை அவன் சிறிதும் எண்ணிப் பார்க்கவில்லை. "நான்தான் முதலிலே எச்சரித்திருந்தேனே- 'சிவபோதரின் வருகையால் ஏற்படும் நன்மை-தீமைகளுக்கு நான் எவ்வகையிலும் பொறுப்பாக மாட்டேன்!' என்று. அதைச் சிறிதும் கவனத்தில் வைத்துக்கொள்ளாமல், அவரை அழைத்து வருமாறு அப்பாதானே பணித்தார்? அப்படியும் அவர் அரண்மனைக்கு உள்ளேகூட வரவில்லையே? அதற்குள் அந்த வஞ்சகன் குலோத்துங்கன் எப்படியோ எங்கள் திட்டத்தை அறிந்து அவரைச் சிறை செய்துவிட்டானே? இவ்வாறெல்லாம் நடந்திருக்கையில் எந்த அரசியல் நீதியின் அடிப்படையில் எனக்குத் தண்டனை விதித்தார்?" என்று அவன் கொதித்தான்.

தந்தை இக்குற்றத்துக்காகத் தனக்கு இத்தகைய கடுந்தண்டனை அளித்திருப்பார் என்று அவனால் கருதவே முடியவில்லை. அவன் உள்ளம் இதற்கு வேறு காரணந்தான் கண்டது. 'அப்பாவுக்கு என்றுமே என்மீது வெறுப்பு. தமக்குப் பின் இச்சோழ அரியணையில் நான் அமருவது அவருக்குப் பிடிக்கவில்லை. எனவே தமது குற்றத்துக்கு எனக்கு ஆயுள் தண்டனை வழங்கி இங்கே தள்ளிவிட்டு, தம்பி கங்கைகொண்ட சோழனை அரியணையில் அமர்த்தச் சூழ்ச்சி செய்து விட்டார்' என்று அவன் திண்ணமாக நினைத்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இதை அவன் வானவியிடம் கூறியபோது, அவளுக்கும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. 'தமது அரசியல் சொக்கட்டானில் எங்களைக் காய்களாக வைத்து ஆடிவிட்டார் அப்பா. நானாவது பெண். ஆனால் அரசுரிமையுள்ள இவனை ஆயுள் முடியச் சிறையில் தள்ளியது அவர் செய்த மகத்தான கொடுமைதான்' என்று அவளும் கருதினாள். அதே போதில் வேறொரு நினைவும் எழுந்து அவள் உள்ளத்தைக் கசக்கிப் பிழிந்தது. ஆம், மதுராந்தகனுக்கு இத்தண்டனைகிட்ட அவள்தானே அடிப்படைக் காரணமாக இருந்தவள்? இந்த நினைவு எழுந்த போது, "ஐயோ! நாம் எப்படி அழிந்து போனாலும், இவனாவது தனது அரசுரிமையைப் பெறச்செய்துவிட வேண்டும்!" என்று தீவிரமடைந்தாள் அவள்.

ஆனால் எப்படி அதைப் பெறச்செய்வது? அவர்களோ, வெளி உலகத் தொடர்பற்ற இடத்தில் அடைபட்டிருக்கின்றனர். ஆதலால் நேர் வழியில் தந்தையின் அநீதியை எடுத்துரைத்து நியாயம் கோர வழியில்லை. எனவே அதற்குக் குறுக்கு வழிதான் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. அதற்கு குறுக்கு வழிகள் கூடப் பல இருக்கவில்லை. ஒன்றே ஒன்றுதான் இருந்தது. அதாவது: 'இந்தச் சிறையிலிருந்து மதுராந்தகனை எப்படியாவது தப்பிச் செல்லச் செய்துவிடுவது. அவன் இங்கிருந்து வெளியேறி நேரே குந்தள நாட்டுக்குப் போய்விட்டால் போதும். விக்கிரமாதித்தர் எவ்வழியிலேனும் அவனுக்கு இச்சோழநாட்டின் அரசுரிமை கிட்டச் செய்துவிடுவார். தானும், தனது இறுதி இச்சை அது என்று ஓர் ஓலை எழுதி மதுராந்தகனிடமே கொடுத்தனுப்பிவிட்டால், அவர் தமது உயிரைக் கொடுத்தாவது அவனை இவ்வரசுக் கட்டிலில் அமர்த்தியே தீருவார். ஆனால் அவனை இங்கேயிருந்து தப்பச் செய்வது எங்கனம்?'

நல்லவேளையாக இந்த முடிவுக்கு வந்த உடனேயே வானவிக்குத் தனது பாட்டியாரான வானவன் மாதேவி சிறுவயதில் சொல்லியிருந்த செய்தி ஒன்று நினைவுக்கு வந்தது. அக்காலத்தில் வானவன் மாதேவியார் தன் மைந்தர்களின் குழந்தைகளுக்குத் தங்கள் முன்னோர்களின் பெருமைகளைப்பற்றிக் கதை கதையாகச் சொல்வாள். ஒருநாள் அவள் இந்தக் கங்கைகொண்ட சோழபுரத்தைத் தனது கணவரான முதல் இராசேந்திர சோழர் நிறுவிய பெருமையைப்பற்றிச் சொல்லிவிட்டு அவருடைய முன்னோர்கள் தஞ்சையிலும், பழையாறையிலும், காஞ்சியிலும், இதுபோல் பல அரண்மனைகளைக் கட்டியதைப்பற்றி விவரித்தாள். அப்போது, அங்கெல்லாங்கூட அவர்கள் பல நிலவறைச் சிறைச்சாலைகளை அமைத்திருந்தனரென்றும், அவற்றுக்குப் பல இரகசிய வாயில்கள் உண்டென்றும் குறிப்பிட்டிருந்தாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இதுதான் இப்பொழுது வானவியின் நினைவுக்கு வந்தது. 'அப்படியானால் இந்தச் சிறைச்சாலைக்கும் நமது பாட்டனார் ஏதாவது இரகசிய வாயிலை அமைத்துத்தான் இருக்க வேண்டும். நாங்களோ இங்கே உண்பதும் உறங்குவதுமாக வீண்பொழுதுதான் போக்கிக் கொண்டிருக்கிறோம். சிறிது முயற்சி எடுத்துக்கொண்டு இரகசிய வாயில் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விட்டால் மதுராந்தகன் மட்டுமின்றி, நானுங்கூட அதன் வழியாக வெளியேறி நேரே குந்தள நாட்டுக்குப் போய்விடலாமே' என்று அவள் எண்ணம் சென்றது.

தனது எண்ணத்தை அவள் மதுராந்தகனிடம் வெளியிட்டாள். அன்று தொட்டு அவனும் அவளும் இரகசிய வாயிலைக் கண்டு பிடிப்பதில் தீவிரமாக முனைந்தனர். இரவில் பயன்படுத்துவதற்காக அவர்களுக்கு நாள் தோறும் எண்ணெயும் திரியும் இடப்பட்ட சில விளக்குகள் சிறையின் மேல்தளத்திலிருந்து வருவதுண்டு. அந்த விளக்குகளைப் பகல் நேரத்தில் பயன்படுத்தி அந்த பெரிய சிறைச்சலையின் இருண்டுகிடந்த எல்லைச் சுவர்களை அவர்கள் மிக நுணுக்கமாக ஆராய்ந்தனர். ஆனால் பல நாட்கள் பல முறை அச்சுவர்களை மீண்டும் மீண்டும் துழாவியும், இரகசிய வாயில் இருப்பதற்கான அறிகுறி எங்குமே தென்படவில்லை.

இது அவர்களுடைய மீண்ட நம்பிக்கையை மீண்டும் மாண்டுவிடச் செய்தது. ஆயினும் இருவரும் முற்றும் ஊக்கம் குன்றிப் போய்விடவில்லை. தாங்கள் தப்பிச் செல்ல வேறு ஏதேனும் வழி இருக்கிறதா என்று சிந்தித்தனர். சிறைச்சாலையின் எல்லைச்சுவர்களில் காற்றும் ஒளியும் வரும் பொருட்டு ஆங்காங்கு சில பலகணிகள் அமைக்கப் பட்டிருந்தன. ஆனால் அவை இரண்டு-மூன்று ஆள் உயரத்துக்கு மேலே இருந்ததோடு, எளிதில் பெயர்க்க முடியாத கனத்த இரும்புக்கம்பிகள் பொருத்தப்பட்டவைகளாகவும் இருந்தன. முதலில் அவ்வளவு உயரத்தை அவர்கள் எட்ட முடியாது. எட்டினாலும், கம்பிகளை அகற்றுவதென்பது நினைக்க முடியாத செயல்.

ஆதலால் வானவி இதையும் விட்டு விட்டு, வேறு ஏதேனும் வழி இருக்கிறதா என்று ஆலோசித்தாள். சிறைச்சாலையின் மேல் தளத்திலிருந்து தங்களுக்குத் தேவையான உணவு, உடை போன்ற பொருள்கள் வரும் மண்டபத்துத் தூணைப்பற்றிச் சட்டென்று அவளுக்கு நினைவு வந்தது. 'அந்தத் தூண்தான் தங்களுக்கும் வெளி உலகுக்கும் இடையேயுள்ள ஒரே தொடர்பு என்றபோதில், அதையே தாங்கள் வெளியேறும் வழியாக்கிக் கொள்ள முடியுமா என்று ஏன் பார்க்கலாகாது?'



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவள் உடனே அதன் ஆராய்ச்சியில் ஈடுபட்டாள். பாதாளச் சிறையின் மண்டபத்திலிருந்த தூண்கள் எல்லாம் சுமார் மூன்றடி விட்டமுடைய பருமனான தூண்களே. அவற்றுள் ஒன்றின் வழியாகத் தங்களுக்குத் தேவையான பொருள்கள் மேலேயிருந்து வருவதால், அத்தூண் உள்ளே குழல் போன்ற அமைப்புடையதாகவே இருக்க வேண்டும். அதோடு அதன் உச்சிப் பகுதியில் திறந்து மூடும் கதவுடைய ஒரு வாயிலும் இருக்கவேண்டும். பாதாளச் சிறையின் தரைமட்டம் மேல்தளத்திலிருந்து ஏறக்குறைய முப்பது முழம் கீழே இருந்தது. ஆதலால் தங்களுக்குத் தேவையான பொருள்களை தூணின் மேல்வாயில் வழியாகக் கீழே போட்டுவிட மாட்டார்கள். அப்படிப் போடுவதாக இருந்தால் உணவுப் பண்டங்கள் சிதறிப் போய்விடாவா? தங்களுக்கு வந்த உணவுப் பொருள்கள் ஒருநாள்கூடச் சிந்தவோ, சிதறவோ செய்யாததால், மேலே இருந்து யாரோ இறங்கி வந்து அவற்றை வைத்துவிட்டுப் போகிறார்கள் என்றுதான் ஊகிக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு நாள் தோறும் யாராவது வருவதாக இருந்தால், அவர்கள் இறங்குவதற்கான படிக்கட்டு ஒன்று தூணின் உட்புறத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி ஒரு படிக்கட்டு இருக்குமானால் அதையே தாங்கள் மேலே போகப் பயன்படுத்திக் கொள்ளலாமே?...

மேல்தளத்திலிருந்து அனுப்பப்பட்டு வந்த பொருள்களை இவர்கள் எடுத்துக் கொள்ளுவதற்காகத் தூணின் கீழ்ப்பகுதியில் கதவிட்ட வாயில் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்த வாயில் வழியாக ஒருவர் படுத்தவாறு உள்ளே நுழைய முடியும். உட்புறம் சென்றுவிட்டால் தூணின் உண்மையைப் பற்றித் தெரிந்து கொண்டு விடலாம்.

வானவி இதைத் தம்பியிடம் கூறியபோது அவன் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான். அவன் அன்றே தூணின் உட்புறத்தில் நுழைந்து பார்த்தான். ஆனால் என்ன ஏமாற்றம்? அங்கே இவர்கள் எதிர்பார்த்தவாறு படிக்கட்டு ஒன்றும் இல்லை.

"அப்படியானால் நமக்குரிய பொருள்கள் எப்படி இங்கே அனுப்பப்படுகின்றன என்பதைக் கண்டறிய வேண்டும், தம்பி!" என்றாள் அவள்.

மறுநாள் அவர்கள் அதைக் கண்டறிய முனைந்தனர். வழக்கமாக காலையில் விழித்தெழுந்ததும் அவர்கள் தூணின் கதவைத் திறப்பார்கள். உள்ளே அவர்களுடைய அன்றாடத் தேவைகள் வைக்கப்பட்டிருக்கும். அவை விடியுமுன்புதான் கீழே அனுப்பப்படுவதாக இருக்க வேண்டும். ஏனென்றால் சில நாட்கள் சில உணவுப் பொருள்கள் சூடுகூட ஆறாமல் இருந்ததை அவர்கள் கண்டிருந்தார்கள். ஆதலால்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அதிகாலையில் எழுந்து தூணின் கதவைத் திறந்து போட்டுக் கொண்டு காத்திருந்து பார்த்தால் உணவு போன்ற பொருள்கள் கீழே வரும் மர்மம் விளங்கிவிடும்.

அவ்வாறே ஒருநாள் மதுராந்தகன் தூணடியில் காத்திருந்தான். விடிவதற்குக் கிட்டதட்ட நான்கு நாழிகை பொழுதிருக்கும்போது, தூணின் உட்புறத்தில் மெல்லிய ஒலி ஒன்று கேட்டது. அவன் தலையை உள்ளே நுழைத்துப் பார்த்தான். நூல் ஏணி ஒன்று மேலேயிருந்து தொங்கவிடப்பட்டிருந்தது. அதன் வழியாகக் காவலன் உடை அணிந்திருந்த ஒருவன் கீழே இறங்கிக்கொண்டிருந்தான். அதே உடை அணிந்த வேறோருவன் மேலேயிருந்தவாறு ஒரு தீப்பந்தத்தின் உதவியால் இறங்கியவனுக்கு ஒளி காட்டிக் கொண்டிருந்தான். தீப்பந்தத்துடன் இருப்பவனும், முன்னவனைத் தொடர்ந்து கீழே இறங்கி வருகிறானா என்று சிறிது நேரம் காத்திருந்து பார்த்தான் மதுராந்தகன். ஆனால் அவன் கீழே இறங்கவில்லை. அவன் காட்டிய ஒளி சிறிது தொலைவே வீசியதால், இறங்கி வந்து கொண்டிருந்தவன் பின்னர் இருளில் மறைந்து விட்டான்.

மதுராந்தகன் சட்டென்று தூணின் உட்புறத்திலிருந்து வெளியே வந்து, அதன் கீழ்த்தளக் கதவை மூடிவிட்டு, வானவியிடம் சென்று இந்த விவரங்களை அறிவித்தான். பிறகு அவர்கள் இரண்டு-மூன்று நாட்கள் வரையில் மிக நுட்பமாகச் சிந்தித்து, தாங்கள் வெளியேறுவதற்கு ஒரு துணிகரமான திட்டம் வகுத்தனர்.

மறுநாள் அத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. அன்று அதிகாலையில் உணவுப் பொருள்களைக் கொண்டு வருபவன் இறங்குவதற்காக நூல் ஏணி கீழே விடப்பட்டதும் மதுராந்தகன் தூணின் வாயில் வழியாக உள்ளே சென்று ஓர் ஓரமாகத் தரையோடு தரையாகப் படுத்துக் கொண்டான். வழக்கப்படி ஒரு காவலன் மட்டும் அன்றைய உணவு உடை போன்றவை அடங்கிய ஒரு பையை முதுகில் கட்டிக் கொண்டு நூல் ஏணி வழியே இறங்கி வந்தான். கீழே ஒரே இருளாக இருந்ததால், மதுராந்தகன் படுத்திருந்ததை அவனால் கண்டு கொள்ள முடியவில்லை. கீழே இறங்கித் தனது முதுகுச் சுமையை அவிழ்த்து வைத்துக் கொண்டிருந்த போது, அவனுடைய உடைவாளைச் சட்டென்று உருவி எடுத்துவிட்டான் மதுராந்தகன். பின்னர் அவன் பொருள்களை வைத்துவிட்டு எழுந்ததும், மதுராந்தகன் இடக்கையால் அவன் வாயை மூடியவாறு வலக்கையிலிருந்த உடைவாளால் வேகமாகக் குத்தினான். அக்கணமே அந்தக் காவலாளன் உயிர் பிரிந்துவிட்டது. பின்னர் மதுராந்தகன் தூணின் கதவைத் திறந்து வெளியே வந்து, காவலனின் உடலை வெளியே இழுத்துப் போட்டான். சடுதியில் அவனுடைய உடைகளைக் கழற்றித் தான் அணிந்து கொண்டு, பெருமிதத்துடன் அருகில் நின்ற



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சகோதரியிடம், "நமது திட்டத்தின் முதல் வேலை வெற்றிகரமாக முடிந்து விட்டது, அக்கா. அவ்வாறே இரண்டாவது வேலையையும் முடித்துக்கொண்டு திரும்புவேன். நீ தயாராக இவ்வாயிலடியிலே காத்திரு," என்று கூறிவிட்டு, மீண்டும் தூணுக்குள்ளே நுழைந்து நூல் ஏணி வழியாக மேலே ஏறத் தொடங்கினான்.

கீழே கொன்று போட்டுவிட்டு வந்த காவலனின் தலைப்பாகையைக்கூட மிகக் கவனமாக அவனைப்போலவே சுற்றிக் கொண்டிருந்த போதிலும், மேலே காத்திருந்த காவலன் பந்தத்தின் ஒளியில் தன்னை அடையாளம் கண்டுவிடாதிருக்கும் பொருட்டு முகத்தைத் தாழ்த்திக் கொண்டே அவன் மேலே ஏறினான். ஆனால் அவனுடைய இந்த முன்னெச்சரிக்கைக்குத் தேவையே ஏற்படவில்லை. ஏனென்றால், மேலே இருந்த காவலன், மதுராந்தகன் கடைசிப் படியை எட்டு முன்பே தீப்பந்தத்துடன் எழுந்து அப்பால் சென்று விட்டான். செல்லும்போதே அவன், "என்ன அண்ணே, இத்தினி பொழுதாக்கிட்டே? குளிருக்கு அடக்கமா கீழே போய் ஒரு தூக்கம் போட்டிட்டியா? சரி, சரி, ஏணியை உருவி எடுத்துப் போட்டுட்டுக் கதவை மூடிக்கிட்டு வா; பொழுது ஆகுது," என்று கூறியதைக் கேட்டபோது மதுராந்தகனுக்கு நிம்மதி மட்டுமின்றி, சிரிப்பும் வந்தது.

இத்தனை வாய்ப்புக் கிடைத்தால் போதாதா அவனுக்கு? அவன் ஒரே தாவில் மேலே வந்தான். முன்னால் பந்தத்துடன் நடந்து கொண்டிருந்த வீரன் மீது பின்புறமாகப் பாய்ந்தான். முன்னவனைத் தாக்கியது போலவே, இவனுடைய வாயையும் ஒரு கையால் மூடியவாறு மறு கையால் கத்தியை உடலில் பாய்ச்சினான். பின்னர் நூல் ஏணி வழியாகக் கீழே இறங்கி, இவனுடைய ஆடைகளைக் கழற்றி வானவியிடம் கொடுத்து அணிந்து வரச்சொன்னான்.

சற்றைக்கெல்லாம் அவளும் மற்றொரு காவலனாக உருமாறித் திரும்பி வந்தாள். இருவரும் ஒருவர் பின் ஒருவராக நூல் ஏணி வழியே ஏறி மேலே இருந்த சிறைச்சாலையை அடந்தனர். அப்போது பொழுது புலர இன்னும் இரண்டு-மூன்று நாழிகை இருந்தது. சிறை வாயிலைக் காத்து நின்ற வீரர்கள், இவர்களை வழக்கமாக அரண்மனை உணவுச் சாலையிலிருந்து உணவு கொண்டு வந்து வைத்துவிட்டுத் திரும்புகிறவர்கள் என்று கருதிவிட்டதால், நிறுத்தி ஆள் மாறாட்டத்தை அறிந்து கொள்ளாமல், வெளியே போக விட்டு விட்டனர். சகோதரியும் சகோதரனும், ஆயுள் அளவும் உழல வேண்டியிருந்தும், மதிநுட்பத்தால், தப்பி வெளியே வந்து நகர எல்லையைத் தாண்டி நடக்கலாயினர். அவர்கள் சோழநாட்டுக் காவல் படையினரின் உடையில் இருந்ததால், உட்கோட்டை,



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வெளிக்கோட்டை வாயில்களைக் காவல் புரிந்து நின்ற வீரர்களும் அவர்களை நிறுத்தவோ, பரிசோதிக்கவோ இல்லை!

## அத்தியாயம் – 12. வியப்புறு திருப்பம்!

ஆகவமல்லனின் எதிர்பாராத மரணத்தால் விக்கிரமாதித்தன் பல்வேறு தொல்லைகளுக்கு உள்ளானான். ஆம், அவனுடைய திட்டங்கள் அனைத்தையுமே கிட்டத்தட்ட நிலைகுலையச் செய்துவிட்டது அச்சாவு.

வீரனான விக்கிரமாதித்தனின் திட்டங்கள் பலப் பல. ஆயினும் அவை ஒன்றோடொன்று தொடர்புடையவை; ஒரே குறிக்கோள் உடையவை. இளங்கோப் பருவத்தில் போர்க்கலைப் பயிற்சியை முடித்த நாளிலிருந்தே அந்த வீரனின் உள்ளத்தில் "நம் நாட்டைப் பலமுறை போரில் புறங்காண வைத்த சோழர்களை நம் ஆயுட்காலத்தில் ஒரு முறையாவது புறங்காணச் செய்ய வேண்டும்," என்ற எண்ணம் ஏற்பட்டிருந்தது. ஆனால் அது அப்போது ஓர் ஆவலாக, வெறும் வெறியாக இருந்ததேயன்றி, அவன் அதைத் தனது கடமைகளில் ஒன்றாகக் கருதவில்லை.

ஆனால் சோழநாட்டு இளவரசியின் காதலைப் பெற்று, அவளை முறையாக மணந்துகொள்ள அரசகுல வரிசைகளுடன் சென்றபோது அடைந்த அவமானம், "எந்த வானவியை எனக்கு மணம் முடிக்க இயலாது என்று இந்த வீரராசேந்திரன் விரட்டி அடித்தானோ, அவளை அவனே என் காலடியில் கொண்டுக் கிடத்துமாறு அந்நாட்டைப் போரில் முறியடிக்க வேண்டும்," என்பதை அவனுடைய உறுதிப் பாடாகவும், அதுவே அவன் தன் காதலிக்கு ஆற்ற வேண்டிய கடமையாகவும் ஆக்கிற்று. அதிலும் தன் காதலி தன்னைக் காண வேண்டிப் பல இன்னல்களைப் பொறுத்துக் கொண்டு, பல காலம் பைத்தியமாக நடித்துத் தன்னைச் சோழநாட்டுக்கு மாற்றுருவில் வரவழைத்தபோது, அம்முயற்சி வெளிப்பட்டு, தான் சிறைப்பட்டுத் தப்பி ஓடவும், அவளும் அவளுக்கு உதவிய அவள் தம்பியும் ஆயுள் சிறைவாசம் அடையவும் நேரிட்டதிலிருந்து, அவன் தனது இதர அரசியல் அலுவல்களையெல்லம் மறந்துவிட்டு, தனது வாக்குறுதியை நிறைவேற்றுவது ஒன்றையே கடமையாகக் கொண்டான்; அதற்காகப் பல திட்டங்களையும் வகுத்தான்.

சோழநாட்டுடன் அதுவரை நிகழ்த்தியிருந்த போர்கள் ஒன்றில் கூடத் தங்களுக்கு வெற்றி கிட்டாதது விக்கிரமாதித்தனின் நுண்ணறிவுக்கு ஒரு புத்தொளி அளித்திருந்தது. 'அதாவது, இனி தான், தனது தந்தை, தனது சகோதரர்கள், தங்கள் படை ஆகியோர்

மட்டுமே அவர்களுடன் போரிட்டுப் பயனில்லை. சோழர்களைப் போலவே தாங்களும் முதலில் பல சிற்றரசுகளை வென்று தங்களுக்கு அடங்கியதாக்கிக் கொள்ள வேண்டும். பிறகு அந்தக் குறுநில மன்னர்களையும், அவர்களது படைகளையும் சேர்த்துக்கொண்டுதான் சோழர்களுடன் போர் தொடுக்க வேண்டும். எல்லவற்றுக்கும் மேலாக அவர்களது போர் அரணாகவும், எல்லைக் கேந்திரமாகவும் விளங்கி வரும் தங்களது அண்டை நாடான வேங்கியை எப்படியாவது கைப்பற்றிக் கொள்ள வேண்டும்; இவ்விரண்டையும் செய்தால்தான் தாங்கள் அவர்களை வெற்றி கொள்ள முடியும்; தான் தனது காதலிக்கு அளித்துள்ள உறுதிமொழியையும் நிறைவேற்ற முடியும்' என்று அவன் முடிவுறுத்தினான். எனவே இதற்கேற்ற திட்டங்கள் பலவற்றை வகுத்துக் கொண்டு அவற்றை நிறைவேற்ற ஒரு திக்குவிசயத்தை மேற்கொண்டான்.

நினைத்தவாறு வேங்கியை அடிபணியச் செய்தான். வேறு சில சிற்றரசுகளையும் அடிமைப்படுத்தினான். இன்னும் பல சிறு நாடுகளை குந்தளத்துக்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டியிருந்தது. அப்பணியை மேற்கொண்டிருந்த போதுதான் அவன் எதிர்பாராதது நிகழ்ந்துவிட்டது.

வேங்கி கிட்டிய வெற்றிக் களிப்பின் அவன் தந்தை அவசரப்பட்டுச் சோழநாட்டைப் போருக்கு அழைத்துச் சூளோலை அனுப்பி விட்டார். அந்தப் போராவது நிகழ்ந்ததா? போதாத வேளை அவரை நோய்க்குள்ளாக்கி வாழ்வை முடித்துக் கொள்ளச் செய்துவிட்டது; மீண்டும் வேங்கி சோழர் வசமாகிவிட்டது.

பலகால முயற்சிக்குப் பின்னர் கைவசமான அந்நாடு பறிபோய் விட்டதைப் பற்றிக்கூட விக்கிரமாதித்தன் வருந்தவில்லை. ஆனால் தனது முயற்சிகளுக்கெல்லாம் ஊக்கமளித்து வந்ததோடு, தாய்நாட்டைப் பற்றிய கவலையே தனக்கு இல்லாமல் செய்திருந்த தந்தையை இழந்தது அவனுக்குப் பெருத்த கவலையையும், மனத் தொல்லையையும் அளித்தது. இனி அவன் தாய்நாட்டுக் கவலையின்றி இருக்க முடியாது. ஏனென்றால், அவனுக்கு மூத்தவனும், தந்தைக்குப் பின்னர் குந்தள அரியணை ஏற இளவரசாக முடிசூட்டப்பட்டிருந்தவனுமான இரண்டாம் சோமேசுவரன் நெறி தவறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு நாட்டு மக்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டிருந்தான். எனவே, தந்தையின் மறைவுக்குப் பிறகு மக்கள் அவனை அரியணை ஏற விடாமல் குழப்பம் செய்வார்களோ என்று அவன் கவலைப்பட வேண்டியிருந்தது. அதற்காக அரசைத் தான் ஏற்றுக் கொள்ளலாமென்றால் அண்ணன் கலகம் செய்வான்; தனது திக்குவிசயத்தைத் தொடர முடியாதவாறு தொல்லை கொடுத்துக் கொண்டே இருப்பான்;



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஆதலால் நாட்டு மக்களை அமைதிப்படுத்தி அண்ணனுக்கே முடிசூட்டு விழா நடத்தி வரும் பொருட்டு, தந்தையின் ஈமக்கடன்களைச் செய்து முடித்ததும், அவன் நேரே கல்யாணபுரத்துக்குச் சென்றான்.

அங்கே போய், மக்களுக்குச் சோமேசுவரன்பால் நம்பிக்கை பிறக்கச் செய்து, அவனுடைய முடிசூட்டு விழாவைச் சிறப்பாக நடத்தி வைத்தான். *பிறகு, மேலும் ஒரு திங்கள் கல்யாணபுரத்திலேயே தங்கியிருந்து, அண்ணன் ஆட்சிமுறையை நன்கு கடைப்பிடிப்பான் என்பது உறுதியான பின்னர், தம்பி சயசிம்மனை அண்ணனுக்கு உதவுவதற்காக நாட்டிலே விட்டுவிட்டுத் தான் மட்டும் திக்குவிசயத்தைத் தொடங்கினான்.

(*கி.பி. 1068 ஏப்ரல் 11-ம் நாள் Ep.Ind.Vol.XXV. பக்கம்: 249)

ஆனால் இப்போதும் அவன் தொல்லை இன்றித் திக்குவிசயம் செய்ய இயலவில்லை. கல்யாணபுரத்திலிருந்து புறப்பட்டுச் சில திங்கள் ஆகுமுன்பே சயசிம்மன் அவச்செய்தி ஒன்றுடன் அவனைத் தேடி வந்தான். சோமேசுவரன் மீண்டும் தவறான நெறிகளில் ஈடுபட்டு விட்டானென்றும், அவனால் நாட்டு நங்கைகளுக்கு ஏற்படும் தொல்லை மக்களை மறுபடியும் கொதிப்படையச் செய்திருக்கிறதென்றும், அவனை நல்வழிப்படுத்த தான் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பயனற்றவை ஆயினவென்றும் அவன் வருத்தத்தோடு உரைத்தான்.

சுவர் இருந்தால் அல்லவா சித்திரம் தீட்டலாம்? உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டால் சோழர்கள் தருணம் பார்த்துக் குந்தளத்தையே வாய்க்குள்ளே போட்டுக்கொண்டு விடுவார்களே? எனவே விக்கிரமாதித்தன் தம்பியுடன் மீண்டும் நாட்டுக்குப் புறப்பட்டான். இத்தடவை மக்களை மன அமைதி பெறச்செய்வது கடினந்தான் என்று நினைத்துக் கொண்டே அவன் வந்தான். ஆனால் அவன் நினைத்தே இராத வேறொன்று, நாட்டை நெருங்கிக் கொண்டிருக்கையில் நிகழ்ந்தது.

கல்யாணபுரத்துக்குச் சில காதத்தொலைவு இருக்கையில், சோமேசுவரனின் படையொன்று அவர்களை எதிர்கொண்டு தடுத்து நிறுத்தியது. நாட்டுக்குள்ளே வர முயன்றால் அவர்கள் இருவரையும் கைது செய்யுமாறு மன்னர் கட்டளையிட்டிருப்பதாக அப்படையின் தலைவன் அறிவித்தான். சினங்கொண்ட விக்கிரமாதித்தன் அச்சிறுபடையை அங்கேயே தோற்றோடச் செய்தான். பின் 'இவ்வளவு துணிந்துவிட்ட அண்ணனுடன் இப்போது பிணக்குக் கொள்வது தவறு; உள்நாட்டுக் குழப்பத்தால் ஏற்படும் அழிவைவிட இப்பிணக்கால் ஏற்படும் அழிவே பெரிதாக இருக்கும்' என்பதை



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஆய்ந்தறிந்து, நாட்டை இப்போதைக்கு மறந்துவிட்டுத் தனது திக்குவிசயத்தைத் தொடர்ந்தான்.

இப்போது தாய்நாட்டின் துணை இல்லாமையால் விக்கிரமாதித்தனும் சயசிம்மனும் தாங்கள் முன்பே அடிமைப்படுத்தியிருந்த அரசர்கள் அனைவரையும், அவர்களது படையுடன் திக்குவிசயத்தில் கலந்து கொள்ளுமாறு ஓலை அனுப்பினர். அதோடு, புதிதாக வெல்லும் நாடுகளின் மன்னர்களையும், அவர்களது படைகளையும் அவ்வப்போது தங்கள் படையுடன் சேர்த்துக் கொண்டனர். முன்பே அவர்களிடம் குந்தள நாட்டுப் படையில் ஒரு பெரும்பகுதி இருந்தது. இப்போது எண்ணற்ற சிற்றரசர்களின் சிறு சிறு படைகளும் சேர்ந்துவிடவே, பல துளி பெருவெள்ளமாவது போல் குந்தளப் படையும் ஒரு பெரும் படையாகிவிட்டது.

சோழர்களை வென்றுவிடும் அலவுக்குப் படைபலம் பெற்றதும் சகோதரர்கள் இருவரும் திக்குவிசயத்தை நிறுத்திவிட்டுச் சோழ நாட்டின் மீது படையெடுப்புச் செய்யத் திரும்பினர். அவர்கள் இடைதுறை நாடுவழியாக வந்து துங்கபத்திரை ஆற்றைக் கடந்து நுளம்பாடியைத் தாண்டி, கங்கபாடியை நெருங்கிக் கொண்டிருக்கையில், கங்கைகொண்ட சோழபுரத்துப் பாதாளச் சிறையிலிருந்து தப்பி, கால்நடையாகவே குந்தள நாட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த வானவியையும், மதுராந்தகனையும் சந்தித்தனர்.

போதிய உணவும் உறக்கமும் இன்றிப் பல திங்கள் வழி நடந்து உடல் நலிந்து தன்னைத் தேடி வந்துள்ள காதலியைக் கண்டதும் வீரனான விக்கிரமாதித்தனின் கண்களில்கூடக் கண்ணீர் பெருகியது. ஆயினும் அந்த உண்மை வீரன் அவளை அப்படியே ஏற்றுக்கொண்டு விடவில்லை. “அன்பே! உன்னை உன் தந்தையாரே அழைத்துவந்து எனக்கு மணமுடித்து வைக்கச் செய்வதாக அன்றொருநாள் உன் முன் ஆணையிட்டேன். அது நிறைவேறும் காலம் நெருங்கி வந்துவிட்ட பிறகு, ‘என் மகளைச் சிறையிலிருந்து தப்பி வரச் செய்து, மணந்துகொண்டான், கோழை!’ என்ற அவச் சொல்லுக்கு இடமளிக்க மாட்டேன். இதோ, இந்தக் கடலனைய படை இன்னும் சில நாட்களில் காஞ்சி வழியே சோழ நாட்டில் புகுந்து அதைச் சூறையாடப் போகிறது; உன் தந்தையின் கொட்டத்தை அடக்கப் போகிறது. அதுவரையில் நீ இந்த விக்கிரமாதித்தனின் மனைவியாக முடியாது; சோழ நாட்டு இளவரசியாகவே எங்களுடனே இருப்பாய்!” என்றான்.

காதலனின் வீரம் செறிந்த பேச்சைக் கேட்டுத் தளர்ச்சியடையவில்லை வானவி; மாறாக, பூரிப்பே அடைந்தாள். அவன் சேர்த்து வந்திருந்த பெரும்படையை அவள் ஒரு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

தடவை பார்த்தாள்; அவளுடைய மார்பகம் பூரிப்பால் விம்மியது. அவன் இட்ட ஆணை மட்டுமின்றி, தான் மதுராந்தகி முன் இட்ட ஆணைகளும் இனி எவ்விதத் தடையுமின்றி நிறைவேறிவிடும் என்று அவள் பெருமிதம் கொண்டாள். காதலனின் இச்சைப்படி அவனைக் கைப்பிடிக்கக் காத்திருக்க இணங்கினாள்.

இடையே, விக்கிரமாதித்தனும் சயசிம்மனும் பெரும்படை சேர்த்துக்கொண்டு சோழநாட்டைத் தாக்க வரும் செய்தி ஒற்றர்கள் வழியே வீரராசேந்திர தேவரை எட்டியது. மகளும், மகனும் சிறையிலிருந்து தப்பிவிட்ட செய்தியை அறிந்தபோதே, அவர்கள் பகை நாட்டுக்குத்தான் ஓடிப்போயிருப்பார்கள் என்று ஊகித்து அவர் மனம் கொதித்துக் கொண்டிருந்தார். இப்போது படையெடுப்புச் செய்தியும் வரவே, அவருடைய உள்ளம் கொழுந்து விட்டெரியும் வேள்வித் தீ ஆயிற்று. சோதனைபோல், அப்போது சோழ நாட்டின் சிறந்த படைத்தலைவர்களில் பெரும்பாலோர் நாட்டில் இல்லை. குலோத்துங்கனைத் திக்குவிசயம் செய்ய வெளிநாட்டுக்கு அனுப்பியிருந்தது போலவே, இதர முக்கியமான படைத்தலைவர்களையும் அவர் ஆங்காங்கு அனுப்பியிருந்தார். அவர்களுக்குச் செய்தி அனுப்பி வரவழைக்கப் போதிய காலம் இல்லை. இருந்தாலும் வீரராசேந்திரர் இதற்காகத் தயங்கிவிடவில்லை. இருக்கிற படைகளையும், படைத்தலைவர்களையும் அழைத்துக்கொண்டு, குந்தளத்தாரை சோழ நாட்டின் எல்லையையே நெருங்கிவிடாமல் விரட்டிவிட வேண்டுமென்ற வீறுடன் வடக்கு நோக்கிப் பயணப்பட்டார்.

இருதரப்புப் படைகளும் காஞ்சியில் சந்தித்தன. விக்கிரமாதித்தனின் படைப்பலத்தைப் பற்றி வந்த செய்திகள் வீரராசேந்திரருக்குத் திகிலளிப்பனவக இருந்தன. இருந்தாலும், வீரப் போரிட்டு மடிவோமேயன்றி இவர்களுக்குப் புறமுதுகு காட்டி ஓட மாட்டோமென்ற தீவிரத்துடன் இருந்தார் அவர். போருக்கு நாள் குறிப்பிடப்பட்டது. நாளைக்குப் போர்; இன்று வியப்புக்குரிய திருப்பம் ஒன்று நடந்தது.

குந்தளப் படையில் அந்நாட்டுக்காக உயிரையும் கொடுக்கச் சித்தமாக இருந்த குறுநில மன்னர்கள் பலர் இருந்த போதிலும், அவர்களிடையே சமாதானத்தை விரும்பிய மன்னர்களும் ஓரிருவர் இருந்தனர். அவர்களில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர், கோவா நகரத்தைச் சேர்ந்த கடம்பர்குல மன்னர் முதல் சயகேசி என்பார். ஏதோ விக்கிரமாதித்தனுக்குக் கீழே அரசாளும் குறுநில மன்னராக ஆகிவிட்டமையால், அவனுடைய கட்டளைக்கு அடங்கித் தமது படையுடன் இப்போரில் கலந்துகொள்ள வந்திருந்தாரேயன்றி, முதலாம் சயகேசிக்கு இவ்விரு நாடுகளுக்கும் இடையே இருக்கும்


Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

நெடுநாள்ப் பகையைப் போக்கி நட்புறவு ஏற்படுத்த வேண்டும் என்ற பேராவல் பலகாலமாக இருந்து வந்தது. வீரராசேந்திரர் முன்னின்று வானவியை விக்கிரமாதித்தனுக்கு மணமுடித்து வைத்துவிட்டால் இப்போரைத் தவிர்த்து விடலாம் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

ஆதலால் அவர், போருக்கு முன்னாள் மாறுவேடம் புனைந்து சோழர்களின் பாசறைக்குச் சென்று வீரராசேந்திரரைச் சந்தித்தார். படைப் பலத்தில் அவர் இப்போது தாழ்ந்திருப்பதையும், அதனால் ஏற்படவிருக்கும் தோல்வியையும் அவருக்கு விளக்கினார். பின்னர் இப்போரின் காரணத்தை வெளியிட்டு, "உங்கள் சகோதரர் இரண்டாம் இராசேந்திர தேவர் உயிரோடிருந்த வரையில், பகை நாட்டார் என்றென்றும் பகை நாட்டாராகவே இருக்க வேண்டுமென்ற தேவையில்லை; தருணம் வாய்த்தால் பகைவரையும் நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டும் என்ற கருத்துக் கொண்டிருந்தார். உங்கள் முன்னோரான இராசராச சோழர் கூட வேங்கி நாட்டுடன் இருந்த பகையைப் போக்கிக்கொள்ளத் தமது மகள் குந்தவையை அந்நாட்டு இளவரசன் விமலாதித்தனுக்கு மணம் முடித்து வைத்து இரு நாடுகளிடையேயிருந்த பலகாலப் பகையைப் போக்கிக் கொண்டார். அவ்வாறே நீங்களும் உங்கள் மகளை விக்கிரமாதித்தனுக்கு மணம் முடித்து வைத்து இப்போரைத் தவிருங்கள். இரு நாடுகளும் கொள்வினையால் ஒன்றுபட்டதாகுங்கள். நீங்களாக முன் வந்து இதைத் செய்யாவிட்டால்கூட விக்கிரமாதித்தன் - வானவி திருமணம் நடக்கத்தான் போகிறது; அவள் அவன் வசம் இருக்கிறாள் என்பதை மறந்து விடாதீர்கள்," என்று பலவாறு கரைத்தார்.*

(*Bombay Gazzette, Vol. I, Part II பக்கம். 567.)

வீரராசேந்திரரும் சூழ்நிலையை ஒட்டி இந்தச் சமாதான உடன்படிக்கைக்கு இணங்க வேண்டியதாயிற்று. சில நாட்களுக்குப் பின்னர் துங்கபத்திரை ஆற்றின் கரையில் விக்கிரமாதித்தன் - வானவி திருமணத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தார் அவர். பின்னர், இப்போது மருமகனாகிவிட்ட விக்கிரமாதித்தன் நாடின்றி இருக்கலாகாதென, அவனுடைய பெரும்படை, தமது பெரும்படை ஆகியவற்றுடன் குந்தள நாட்டின் ஒரு பகுதியாகச் சோமேசுவரன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இரட்டபாடி ஏழரை இலக்கத்தின் மீது பொருது கொண்டு சென்று, சோமேசுவரனை அப்போரில் வென்று நாட்டைவிட்டே ஓடச் செய்தார். பிறகு தமது கையினாலேயே மருமகனுக்குக் கல்யாணபுரத்தில் முடிசூட்டி வைத்துவிட்டு, மூத்த மகன் மதுராந்தகனோடு கங்கைகொண்ட சோழபுரம் திரும்பினார்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

என்னதான் ஒரு போரைத் தவிர்த்து, சமாதானமுறையில் பகைவர்களை நண்பர்களாகவும், உறவினர்களாகவும் ஆக்கிக் கொண்டாலும், வீரராசேந்திரருக்கு இது தமக்கு ஏற்பட்ட பெருந்தோல்வியாகவே பட்டது. அந்த வேதனையை எவ்வளவு முயன்றாலும் அவரால் மறக்கவே முடியவில்லை. இந்த மனத்துன்பம் முதுமையை எட்டிக்கொண்டிருந்த அவருடைய உடலைப் பெரிதும் பாதித்தது. நாடு திரும்பிய சில நாட்களுக்குள்ளே அவர் நோய்ப் படுக்கையில் விழுந்துவிட்டார். எந்த மருத்துவமும் பயன்படாமல் கி.பி.1070-ஆம் ஆண்டின் முற்பகுதியில் அவர் உயிர் துறந்தார்.

தமது எட்டாண்டு ஆட்சிக்காலத்தில் சோழப்பேரரசை விரிவு படுத்தாவிட்டாலும், தமது முன்னோர் சேர்த்து வைத்த பகுதிகளை இழக்காததோடு, பல தலைமுறைகளாகப் பகைவர்களாக இருந்த குந்தளத்தாருடன் நட்புறவு பெற்ற பெருமை வீரராசேந்திரருக்கு உண்டு. அந்தப் பெருமை மட்டும் அவருக்கு பின்னும் நீடித்திருந்ததானால், வானவி முன் மதுராந்தகி இட்ட ஆணைகள் நிறைவேற்றப்படாமலே போயிருக்கும். ஆனால் அவள் ஆணை நிறைவேற வேண்டும்; அதிலும் யாரும் எதிர்பாராத வழியில் ஓராண்டுக்குள் நிறைவேற வேண்டுமென்று இருந்ததால்தான், வீரராசேந்திரர் இத்தனை விரைவில் இவ்வுலகிலிருந்து விடை பெற்றுக்கொண்டார் போலும்!

### இரண்டாம் பாகம் முற்றிற்று



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

# மதுராந்தகியின் காதல்

## மாயாவி

## மூன்றாம் பாகம்

## அத்தியாயம் – 1. இறுதி விருப்பம்

**வீ**ரராசேந்திரரின் மரணத்துக்கு மனநோய்தான் காரணமென்று கண்டோம். ஆனால் அந்த மனநோய்க்குக் காரணம், பல்லாண்டுகளாகத் தோற்றோடச் செய்துவந்த குந்தளத்தாரிடம் ஒரு சமரச உடன்படிக்கைக்கு வர நேர்ந்ததே என்ற ஏக்கம் மட்டுமன்று; அதற்கு வேறு சில காரணங்களும் இருந்தன. முதல் காரணம்: சோழ நாட்டின் வருங்காலத்தைப் பற்றி அவர் கொண்ட கவலை. அவருக்குப் பின் சோழ அரியணை ஏற உரிமை பெற்றிருந்தவன் மதுராந்தகனே. மதுராந்தகனையன்றி வீரராசேந்திரருக்கு வேறு சில மைந்தர்களும் இருந்தனர். ஆனால் அவர்கள் பட்டதரசியின் மக்களல்லர். சோழகுல மரபுப்படி பட்டதரசியின் மக்களே நாட்டின் அரசுரிமை பெற்றவர்கள். எனவே மதுராந்தகன் ஒருவனே அப்போது சோழநாட்டின் அரசுக்கட்டிலில் அமரும் தகுதி பெற்றவனாக இருந்தான்.

ஆயினும் அவனுடைய போக்கு வீரராசேந்திரருக்குச் சிறிதளவு கூடப் பிடிக்கவில்லை என்பதோடு, அவனுடைய நடவடிக்கைகளும் குடிமக்கள் விரும்பத்தக்க வகையில் இருக்கவில்லை. ஏன்? அவனை அரியணையில் அமர்த்தினால், குந்தள நாட்டில் ஆகவமல்லனின் மறைவுக்குப் பிறகு திறமையற்ற இரண்டாம் சோமேசுவரனை அரியணையில் அமர்த்திய போது நிகழ்ந்த உள்நாட்டுக் குழப்பம் போல் இங்கும் நிகழ்ந்துவிடுமோ என்றுகூட அவர் கவலை கொண்டார். இதனால்தான் குலமரபுப்படி தமது ஆயுட்காலத்திலே மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டாமல் அவர் இருந்தார்.

ஆனால் இப்போது தமது காலம் நெருங்கி விட்டதென்பது அவருக்கு நன்றாகத் தெரிந்து விட்டது. இந்நிலையில் என்ன செய்வதென்று அவர் மிகவும் குழம்பினார். தமது மூத்த சகோதரர்களான இராசேந்திரருக்கோ பட்டத்துரிமை உடைய மைந்தர்கள் இருந்திருந்தால், கூசாமல் அவர்களை அரியணையில் ஏற்றியிருப்பார். ஆயின், இராசாதிராசரோ மக்களே இன்றி உயிர் நீத்தார்; இராசேந்திரருக்குப் பல மைந்தர்கள் இருந்தும், அவர்களில் ஒருவர் கூடப் பட்டத்தரசியின் மக்களில்லை. மதுராந்தகிதான் பட்டத்தரசியின் புதல்வி. ஆனால் பெண்பாலருக்குப் பட்டத்துரிமை வழங்கும் மரபு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அன்று மன்னர்களிடையே கிடையாது. 'இப்படி எல்லா வழிகளும் அடைபட்டு, இந்த உதவாக்கரையே கீர்த்தி பெற்ற இந்தச் சோழமாவலி வாணராயன் அரியணையில் அமரும் தகுதி பெற்றிருக்கிறானே; இவனிடம் எப்படி நாட்டை ஒப்படைப்பது?' என்று அவர் இடைவிடாமல் குழம்பினார். இந்தக் குழப்பமும் கவலையும் வேறு வீரராசேந்திரரின் ஆயுட்காலத்தைக் குறைப்பதற்கு உதவின.

மற்றோரு மனப்புண்ணும் மாமன்னருக்கு இருந்தது. அது வெளியாருக்கு அதிகமாகத் தெரியாது. ஆனால் மன்னரின் மனத்தை அரிக்க அதுவும் காரணமாக இருந்தது. பிறர் அறியாத அந்த இரகசியம் இதுதான்: மன்னரின் அகவாழ்வு மிகவும் துன்பமயமாக இருந்தது. கொள்ளிக்கட்டைகளைப் போன்ற இரு மக்களை ஈன்ற பட்டத்தரசி அருமொழி நங்கை நாட்டுக்கும், அரசகுலத்துக்கும் அவர்கள் சூட்டிவரும் இழிபெயர்களைச் சிறிதும் மனத்தில் கொள்ளாமல், அவர்களுக்கு மேலும் மேலும் செல்லம் கொடுத்துக் கெடுத்து வந்தாள். அவர்களை இவ்வாறு வளர்ப்பது நல்லதல்ல என்று வீரராசேந்திரர் எடுத்துக் கூறினால் அவள் சீற்றம் அடைந்தாள். தன் மக்கள் மீது அவருக்குப் பற்றில்லை என்று குற்றம் சாட்டினாள். தன் சக்களத்தி மக்களிடமே அவர் பற்றுக் கொடிருப்பதாக அடிக்கடி இடித்துரைத்தாள். வானவி முதல் தடவை பாதாளச் சிறையில் தள்ளப்பட்டபோது அருமொழி நங்கை அரண்மனையையே இரண்டு படுத்தி விட்டாள். தன் மைத்துனர் இராசேந்திரரிடம் தானே போய், இது நியாயமா என்று கேட்கப் போவதாகக்கூடப் புறப்பட்டுவிட்டாள். அன்று அவளைத் தடுத்து நிறுத்துவது வீரராசேந்திரருக்குப் பெரும் பாடாகிவிட்டது. இறுதியில் தாமே மன்னரிடம் சென்று மகளின் விடுதலைக்கு இறைஞ்சுவதாகக் கூறிய பிறகுதான், அவள் சிறிதளவு அமைதி அடைந்தாள்.

ஆனால் இராசேந்திரர் வானவியைச் சிறையிலிட்டு விட்டு அதற்குத் தக்க காரணமும் காட்டிவிட்டபோது அவள் வாய் அடைத்துப் போயிற்று. ஆயின் சீற்றம் சிறிதும் தணியவில்லை. அந்தச் சீற்றத்தையெல்லம் கணவர் மீதே திருப்பினாள். அவருடைய இல்லற வாழ்வை அமைதியற்றதாக்கினாள். இரண்டாண்டுகளுக்குப் பிறகு வானவி விடுதலை அடைந்த போது அருமொழி நங்கை ஒருவாறு சீற்றம் தணிந்தாள். "நாடெனும் சொக்கட்டானில் பெண்களைப் பகடையாடும் இந்தப் பாழும் நாட்டிலிருந்து உனக்கு விடுதலை கிடைத்துவிட்டது, மகளே! இனி நீ உன் உள்ளம் கவர்ந்தவனோடு குந்தள நாடு சென்று இன்பமாக வாழலாம்!" என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, வானவிக்கும் விக்கிரமாதித்தனுக்கும் இப்போது திருமணம் இல்லை என்று இராசேந்திரர்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கூறிவிட்ட ஏமாற்றமான செய்தி வந்தது. இராசேந்திரர் விக்கிரமாதித்தனைத் திருமண ஓலையுடன் வரச் சொல்லியிருக்கிறார் என்ற செய்தியை அவள் அறிந்திருந்தால் ஆறுதல் அடைந்திருப்பாள். ஆனால் அவர்தான் அச்செய்தியைத் தமது உள்ளத்துக்குள்ளேயே புதைத்துக்கொண்டு இறந்துவிட்டாரே?

எரியும் கொள்ளியிலே எண்ணெயை ஊற்றியது போலாயிற்று, அதன் பிறகு விக்கிரமாதித்தன் தன் தந்தையின் திருமண ஓலையுடன் வந்தபோது வீரராசேந்திரர் அவனை அவமதித்து விரட்டி விட்டது. அன்றுதொட்டு அவள் கணவருடன் பேசுவதையே நிறுத்தி விட்டாள். வீரராசேந்திரருக்கு மற்ற மனைவியரை விட அருமொழி நங்கையிடந்தான் அதிகமான அன்பும், காதலும். இருந்தாலும் நாட்டின் நலத்துக்காக அவர் மனைவியின் விருப்பத்துக்கு மாறாக நடக்கத்தான் வேண்டியிருந்தது; மனைவியின் உறவைத் தியாகம் செய்ய வேண்டித்தான் இருந்தது. ஆனால் அந்தத் தியாகம் அவருடைய உள்ளத்தை எத்தனை தூரம் பாதித்தது என்பதை அவர் ஒருவரே அறிவார். இப்படிப்பட்ட நிலையில் அவரே தமது மகளை மட்டுமின்றி, பட்டத்தரசியின் மற்றோரு மகவான மகனையும் ஆயுள் தண்டனை வழங்கிப் பாதாளச் சிறையில் தள்ள நேர்ந்ததென்றால் அரண்மனையில் அன்று எவ்வளவு அல்லோல கல்லோலம் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம்.

ஆனால் வானவியை விக்கிரமாதித்தனுக்கு மணமுடித்து வைத்த பிறகாவது அருமொழி நங்கை கணவருடன் இல்லற வாழ்வில் ஈடுபட்டிருந்தால், வீரராசேந்திரர் இதுவரை தாம் அடைந்து வந்த மனத்துயரையெல்லம் மறந்திருப்பார். ஆனால் அதன் பிறகும் அருமொழி நங்கை அவருடன் முகம் கொடுத்துப் பேசவில்லை. மன்னர் நோயுற்ற போதுகூட அவருக்குப் பணிவிடை புரிய வரவில்லை. தான் வராதிருந்தது மட்டுமல்ல; மன்னரின் இதர மனைவியரையும் அவரை நெருங்க விடாமல் தடை செய்தாள். மனைவியர் பலர் இருந்தும் பணிவிடைக்குப் பணிப்பெண்கள் படுக்கை அருகில் வந்து நிற்கும்போது வீரராசேந்திரரின் உள்ளம் வெதும்பிப் போகும். 'சீ! இது என்ன சாரமற்ற வாழ்க்கை!' என்ற வெறுப்பு ஏற்படும். ஆகவே இதுவும் அவருடைய மரணத்தை மிக வேகமாக அருகில் நெருக்கியது.

நாள் ஆக ஆக, மன்னரின் ஏக்கமும் கவலையும் தாபங்களும் பெருகி, அவரது நோயையும் பெருக்கின; அவருக்கு மிகுந்த விரக்தியையும் ஏற்படுத்தின. "சாவை எதிர்நோக்கியிருக்கும் நிலையில்கூட என்னைக்காண வராத இந்த மனைவி மக்களுக்கா நான் கடமை என்ற பெயரில் நன்மை செய்ய முயல வேண்டும்? இவர்களைவிட



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

நாட்டின்மீது கருத்துடைய ஒரு பாமரனுக்கு அரியணையும், இந்த அரண்மனை வாழ்வும் கிட்டச் செய்தால் நாடாவது நன்மை அடையுமே!" என்ற அளவுக்கு அவருக்கு அவர்களிடம் வெறுப்பு ஏற்பட்டு விட்டது.

அப்போது மன்னரின் கடைசி நாட்கள். சிலபோது அவர் நினைவடையும் போதெல்லாம் அரண்மனையைச் சார்ந்த யாராவது தன்னைக் காண வந்திருக்க மாட்டார்களா என்ற ஏக்கத்துடன் அவருடைய கண்கள் எங்கும் துழாவும். சில போது, மனைவியரின் பெயர்களைக் கூறிக்கூடப் பரிதாபமாக அலறுவார். ஆனால், அருமொழி நங்கை, அரண்மனையைச் சார்ந்த எல்லோரிடமும், அவரைப் பார்க்கப்போயோ, அல்லது அவருடன் உரையாடியோ தொல்லை கொடுக்கக் கூடதென்று மருத்துவர்கள் அறிவித்திருப்பதாகக் கூறி நிறுத்தி விட்டிருந்ததால் எவருமே அவரைக்காண வரவில்லை. இந்நிலையில் ஒரு நாள் முன்னிரவில் மன்னர் நினைவு பெற்றுக் கண் விழித்தபோது, தமது மஞ்சத்துக்கு அருகில் கண்ணீர் ததும்பும் கண்களுடன் மதுராந்தகி நிற்பதைக் கண்டார்.

உள்ளத்தில் எழுந்த அன்பெல்லாம் வார்த்தைகளில் இழைய, "மகளே! உனக்காவது இந்த அபாக்கியனைக் காண வரவேண்டும் என்று தோன்றியதே; அதற்காகப் பெருமை அடைகிறேன்," என்றார் மாமன்னர் தொண்டை அடைக்கும் குரலில்.

மதுராந்தகியால் அவருடைய கோலத்தைக் காணப் பொருக்க முடியவில்லை. "சிற்றப்பா! சோழ நாட்டின் மன்னரான உங்களுக்கா இந்நிலை?" என்று அவருடைய மெலிந்த மார்பின் மீது முகத்தைப் புதைத்துக் கதறி விட்டாள் அவள். பிறகு, "அப்படியானால் அரண்மனையிலிருந்து யாருமே உங்களைக் காண வரவில்லையா?" என்று அவள் வியப்புடன் வினவினாள். வெளியார்களான தங்களைத்தான் மன்னரைக் காண வந்து தொல்லை கொடுக்க வேண்டாம் என்று தனது சிற்றன்னை அருமொழி நங்கை தடை செய்திருக்க வேண்டும்; அவளும் மன்னரது மனைவியரான இதர சிற்றன்னையரும் அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்க வேண்டும் என்று மதுராந்தகி இதுவரையில் கருதியிருந்தாள். ஆனால் இன்று இங்கே வந்து, அவர் தனித்து விடப்பட்டிருந்ததையும், தொடர்ந்து அவர், "உனக்காவது இந்த அபாக்கியனைக் காண வர வேண்டும் என்று தோன்றியதே?" என்று கூறியதையும் கண்டபோது மதுராந்தகி மன்னரது நிலையை ஒருவாறு ஊகித்து விட்டாள்.

நோயால் வாடிய மாமன்னர் தேம்பினார். "கண்ணே! அவர்கள் என்னைப் பழிக்குப் பழி வாங்குகிறார்கள். என் பொல்லாத முன்வினைப் பயன், எனக்குச் சுற்றமும்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சூழும் அளவற்று இருந்தும், ஒரு வாய்த் தண்ணீருக்குக்கூட அரண்மனைப் பணிப்பெண்களைத்தான் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. அதற்காக நான் வருந்தவும் இல்லை; கவலை கொள்ளவும் இல்லை, மதுரா! ஆனால் என்னை வாட்டும் கவலை வேறொன்று இருக்கிறது. அதை உள்ளன்போடு என்னை நேசிக்கும் யாரிடமாவது சொல்ல வேண்டுமென்று தவித்துக்கொண்டிருந்தேன். சொல்ல முடியாமலே இறந்து விடுவோமோ என்றும் அஞ்சிக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக நீ இன்று வந்து விட்டாய். உட்கார் மகளே, உட்கார்ந்து நான் சொல்லப் போவதைக் கவனமாகக் கேள்," என்றார் அவர்.

மதுராந்தகி மஞ்சத்தில் அவருடைய காலருகில் அமர்ந்து, உதிரமற்று உலர்ந்து போயிருந்த பாதங்களை மென்மையாக வருடிக்கொண்டே, "சொல்லுங்கள் சிற்றப்பா," என்றாள்.

வீரராசேந்திரர் சிறிது பொழுது அவளுடைய விசனம் தோய்ந்த முகத்தை, விழிகளைக்கூட அசைக்காமல் நோக்கிக் கொண்டிருந்தார். பிறகு கண்களை இறுக மூடிக்கொண்டு சொல்லலானார்: "மகளே! நமது மூதாதையான விசயாலய சோழ தேவர் இந்தச் சோழப் பேரரசை நிறுவிய காலந்தொட்டு, இந்நாட்டை ஆண்டு வந்த ஒவ்வொரு மன்னரும் அதனைப் பெருக்குவதிலே கண்ணும் கருத்துமாக இருந்து வந்திருக்கிறார்கள். ஆனால் மகளே, இந்தப் பாவிமட்டும் அதன் அழிவுக்கு விதையூன்றிவிட்டுப் போகும் துர்ப்பாக்கியத்தைப் பெற்றுள்ளேன். ஆம் கண்ணே, உன் தம்பி மதுராந்தகனின் கைக்கு இந்நாடு போவதும் ஒன்றே; ஓர் அழிவரக்கன் கைக்குப் போவதும் ஒன்றே அல்லவா?"

மாமன்னர் இத்துடன் நிறுத்திவிட்டு மூடியிருந்த கண்களைத் திறந்து மதுராந்தகி தன் வினாவுக்கு என்ன விடை தரப் போகிறாள் என்பதை ஆவலுடன் நோக்கினார். ஆனால் அவள் அவருடைய வினாவுக்கு விடை பகராமல், "ம்... மேலே சொல்லுங்கள் சிற்றப்பா," என்றாள்.

ஆனால் வீரராசேந்திரர் விட்டுகொடுக்காமல், "என் ஊகம் தவறா, மகளே?" என மீண்டும் வினவினார்.

"தம்பியின் அரசியல் திறனைப்பற்றி நான் என்ன கண்டேன் சிற்றப்பா?"

"மதியூகியான உனக்கு அது தெரிந்துதான் இருக்கும், மதுரா. ஆனால் என் முன் என் மகனின் திறமையைக் குறைத்துப் பேச அஞ்சுகிறாய், அப்படித்தானே? போகட்டும்; நான் வேறொன்று கேட்கிறேன்; அதற்காவது விடையளிப்பாயா? மகளே! உன் கணவனின் நாட்டை உன் தந்தையே ஏதோ அரசியல் காரணத்துக்காக உங்களுக்கு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இல்லையென்று ஆக்கிவிட்டார். தமது அந்த அரசியல் நோக்கம் தவறு என்பதை அவர் இன்று உயிரோடிருந்தால் அறிந்திருப்பார். ஆனால் அதை அறியும் வாய்ப்பு எனக்குத்தான் கிட்டியது. உடனே நான் விழித்துக்கொண்டு, இச்சோழ நாட்டின் எல்லைப் பாதுகாப்புக் கேந்திரமாக வேங்கி விளங்க வேண்டுமென்றால், அது ஒரு கோழையின் கையில் இருக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்து, அந்நாட்டுக்குரிய உன் கணவனுக்கு அதனை வழங்கினேன். ஆயின் அவன் அதை மறுத்துவிட்டுத் தன் சிறிய தந்தைக்கே மீண்டும் கொடுக்கச் செய்தான். அந்தக் கோழை அதை மற்றொரு முறை இழந்துவிட்டு ஓடி வந்தான். அப்போதே நான் தீர்மானித்து விட்டேன், இனியும் அக்கோழையை வேங்கி அரியணையில் அமர்த்தலாகாது என்று."

"ஆனால் மீண்டும் அவரைத்தானே அந்த அரியணையில் உட்கார்த்திவிட்டு வந்திருக்கிறீர்கள், சிற்றப்பா?" என்று மதுராந்தகி குறிக்கிட்டுக் கேட்டாள்.

உலர்ந்து வெடித்திருந்த தமது உதடுகளை விரித்து மாமன்னர் சிரித்தார். பின்னர் சொன்னார்: "எனக்குத் தெரியும் மகளே, அதற்காக நீ என்மீது அளவற்ற சினம் கொண்டிருப்பாயென்பது. ஆனால் மதுரா, அது ஒரு தாற்காலீக ஏற்பாடு. திக்குவிசயம் சென்றிருக்கும் குலோத்துங்கன் சோழநாடு திரும்பிய பிறகு நாட்டை அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று கட்டளையிட்டே வேங்கியில் விசயாதித்தனை உட்கார்த்தியிருக்கிறேன்."

"உண்மையாகவா, சிற்றப்பா?" மதுராந்தகியின் முகமலர் சட்டென மலர்ந்தது. ஆம், கூடல் சங்கமப் போர் வேங்கியை மீட்பதற்காக நடக்கப் போகிறது என்று அறிந்தவுடனே, அவள் தன் ஆணை நிறைவேறப் போகும் நாள் இனி அதிக தூரத்தில் இல்லை என்று களிப்படைந்தாள் அல்லவா? அந்தக் களிப்பு, வேங்கி நாடு மீண்டும் விசயாதித்தனுக்கே வழங்கப்பட்டு விட்டது என்ற செய்தி வந்தபோது பெருத்த ஏமாற்றமாக மாறியது. ஏனென்றால் அது ஒரு தற்காலிக ஏற்பாடு என்பது கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்த எவருக்கும் தெரியாது. அந்த ஏற்பாடு நடந்தபோது உடனிருந்த சோழநாட்டுப் படைத்தலைவர்கள் பலர் அப்போது கங்கை கொண்ட சோழபுரத்தில்தான் இருந்தனர். ஆனால் அரசியல் நோக்கங்களையும், செயல்களையும் அவர்கள் யாரிடமும் வெளியிடுவது கிடையாது. வேங்கியை மிட்ட பிறகு அங்கே சோழநாட்டின் பிரதிநிதி ஒருவரையோ, அல்லது மாதண்டநாயகர் ஒருவரையோ வீரராசேந்திரர் நியமித்துவிட்டு வந்திருந்தாரானால், தன் கணவர் திக்குவிசயத்தை முடித்துக் கொண்டு திரும்பியதும் அந்நாடு அவருக்கு வழங்கப்படலாம் என்ற அற்ப



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

நம்பிக்கையாவது மதுராந்தகிக்கு இருந்திருக்கும். நேர்மாறாக, ஒரு நாட்டை ஆளும் தகுதி சிறிதும் இல்லையெனப் பலதடவை மெய்ப்பித்திருந்த தனது சிறிய மாமனுக்கே நாடு மீண்டும் வழங்கப்பட்டதைக் கண்டதும், ‘சிற்றப்பாவும் நமது ஆணையை மனத்தில் கொண்டுதான் இவ்வாறு செய்துவிட்டார்’ என்றே தவறாகக் கருதி விட்டாள். எனவே இப்போது தன் கருத்துத் தவறு என்பது தெரிய வந்ததும் அவளுடைய அகத்தில் தோன்றிய மலர்ச்சி முகத்தில் வெளிப்பட்டது.

வீரராசேந்திரர் ஓரக் கண்ணால் அவளுடைய முக மலர்ச்சியைப் பார்த்துப் புன்னகை பூத்தார். “ஆமாம், கண்ணே,” என்று கூறிவிட்டு அவர் தொடர்ந்தார்: “இதைச் செய்ததன் மூலம் என் ஆயுளிலே ஒரு நல்ல செயலைச் செய்த மன நிறைவை அடைந்திருக்கிறேன். அரசியல் என்பது ஒரு சொக்கட்டான் விளையாட்டு, மதுரா. அதிலே மன்னர்கள் தவறுவது ஒரு சாதாரண நிகழ்ச்சி. அப்படித்தான் உன்னுடைய தந்தை வேங்கி விஷயத்தில் தவறிவிட்டார். அவருடைய தவற்றை என் ஆட்சிக் காலத்தில் திருத்தி விட்டேன். உங்களுக்கு உரிய நாட்டை உங்களுக்கே கிடைக்கச் செய்துவிட்டேன். அதற்குக் கைமாறாக நீங்கள் என் கடைசி விருப்பம் ஒன்றை நிறைவேற்றி வைக்க வேண்டும்.”

“சொல்லுங்கள் சிற்றப்பா; உங்கள் விருப்பம் ஏதாக இருந்தாலும் அதை நாங்கள் நிறைவேற்றி வைக்கிறோம்.”

“மகளே! இந்தச் சோழநாடு உதவாக்கரையான என் மைந்தன் மதுராந்தகன் கைக்குப் போவதை இனித் தவிர்க்க முடியாது. அவனுடைய போக்கும், திறமையற்ற தன்மையும் நீங்கள் அறியாததல்ல. ஆதலால் அவன் முடிசூடிக்கொண்ட பிறகு பகைவர்கள் இந்நாட்டைக் கவ்விக்கொள்ள ஓடோடியும் வருவார்கள். உன் கணவன் குலோத்துங்கன் இந்நாட்டின் படைத் தலைவர்களில் ஒருவனாகவே வருங்காலத்திலும் இருப்பானாகில் நான் கவலை கொள்ள மாட்டேன். ஆனால் நீங்கள் வேங்கிக்குப் போய் விடுவீர்கள். அதனால்தான் இந்த வேண்டுகோளை இப்போது விடுக்கிறேன். மகளே! சோழநாடு உன் தாய்நாடு. உன் கணவனை வளர்த்த நாடு. அந்த நாடு ஒரு போதும் பகைவர்கள் கைக்குப் போய்விடாமல் நீங்கள்தான் பாதுகாக்க வேண்டும். ஊழ்வினைப் பயனால் இப்போது கொள்வினை மூலம் உறவு கொள்ள நேர்ந்துள்ள குந்தளத்தாரைப் பற்றித்தான் நான் பெரிதும் கவலை கொள்கிறேன். இந்தத் திறமையற்ற மதுராந்தகனைத் துரத்திவிட்டு சோழநாட்டின் அரியணையில் விக்கிரமாதித்தன் அமர முயலலாம். ஏனென்றால் பல தலைமுறைகளாக அவர்களுக்கு வளம்பெற்ற இந்நாட்டின் மீது ஒரு கண்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இருக்கிறது. அதை நடக்கவிடாமல் நீங்கள் கண்காணிக்க வேண்டும். குலோத்துங்கன் இங்கிருந்தால் இதையெல்லாம் அவனிடமே சொல்லியிருப்பேன். அவன் இல்லாத காரணத்தாலும், அவன் திரும்பும்வரையில் உயிரோடிருப்பேனோ என்ற ஐயம் எனக்கு இருப்பதாலும், அவனிடம் கூற வேண்டியவைகளை உன்னிடம் சொல்கிறேன். மதுரா! வேங்கி நாடு மூன்று தலைமுறைகளாகச் சோழ நாட்டின் ஒரு கிளையாக இருந்து வருகிறது. மூன்று தலைமுறைகளாக நாம் ஒரே குடும்பத்தினராகவும் இருந்து வருகிறோம். ஆதலால், தேவை ஏற்பட்டால் இந்நாட்டு அரியணையில் குலோத்துங்கன் அமர்ந்தாலும் அமரலாம்; ஆனால் ஒரு குந்தளத்தான் அமர்ந்துவிடக் கூடாது. இந்த என் இறுதி விருப்பத்தை உன் கணவனைக்கொண்டு நிறைவேற்றி வைக்கச் செய்வாயா, மகளே?”

மதுராந்தகியால் தன் செவிகளையே நம்ப முடியவில்லை. என்ன? சோழ நாட்டுக்குத் தன் கணவன் மகிபன் ஆனாலும் ஆகலாம்; சிற்றப்பாவின் முறை மருமகனான விக்கிரமாதித்தன் அமரக் கூடாதா? இதுவா சிற்றப்பாவின் விருப்பம்? அவரது இறுதி வேண்டுகோள் இதுவா? அவள் தன் ஐயத்தைப் போக்கிக் கொள்ள, “என்ன சொன்னீர்கள், சிற்றப்பா?” என்று கேட்டாள்.

“வேங்கி மன்னனாகப் போகும் குலோத்துங்கனே சோழநாட்டுக்கும் மன்னன் ஆனாலும் ஆகலாம்; ஒரு குந்தளத்தானோ, அல்லது வேறு அயல்நாட்டானோ இந்த அரியணையில் அமரக்கூடாது. அமர நீங்கள் விடக்கூடாது, என்றேன் மகளே!...”

கரும்பு தின்னக் கூலியா வேண்டும்? “உங்கள் விருப்பம் அதுவானால், அதை நிறைவேற்றுவது எங்கள் கடன், சிற்றப்பா!” என்றாள் மதுராந்தகி. அதே போதில், ‘இறைவன் தான் என் ஆணை நிறைவேற இவ்வாறு வழி வகுத்துக் கொடுத்திருக்கிறார்’ என்று அவள் உள்ளம் அவரை மனதார வாழ்த்தியது.

## அத்தியாயம் – 2. மதி மயக்கம்

இப்போது கங்கைகொண்ட சோழபுரத்தை விட்டு நமது கவனத்தைச் சற்றே கடாரத்தின் பக்கம் திருப்புவோம்.

போதிய படைப் பலத்துடன் கடாரத்தை வந்தடைந்த குலோத்துங்கன் இரண்டொரு நாட்களிலே அந்நாட்டைப் பகைவர்களிடமிருந்து மீட்டு அதன் பழைய மன்னருக்கு அளித்தான். பின்னர் தனது திக்குவிசயத்தைத் தொடங்கி அண்டை நாடுகளான



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

தமாலிங்கம், இலங்காகோசம், மாயிருடிங்கம், தக்கோலம் ஆகிய நாடுகளைச் சோழ நாட்டுக்கு அடிமைப் படுத்திவிட்டு மாபப்பாளம் என்னும் நாட்டுடன் போர் தொடுப்பதற்காக அந்நாட்டின் எல்லைக்குச் சிறிது தொலைவுக்கப்பால் வந்து தன் படையுடன் தண்டிறங்கினான்.

குலோத்துங்கன் மாசற்ற வீரன்தான். ஆனால் போர் ஒன்றையே குறியாகக் கொண்டு வாழ்க்கை இன்பங்களை மறந்துவிடுபவனல்ல. ஆதலால், பல திங்களாகப் போர் செய்து வந்துள்ள படையினருக்குச் சிறிது ஓய்வும், கேளிக்கைகளுக்கு வசதியும் செய்து கொடுக்கும் நினைவுடன் இங்கே சில நாட்கள் தங்க முடிவு செய்தான். வீரர்களுக்குச் சுவைமிக்க உணவு, காலையிலும் மாலையிலும் பல்வேறு பந்தய விளையாட்டுக்கள், பகலில் பிரியம்போல் எங்கு வேண்டுமாயினும் சுற்றி வருவதற்கு அனுமதி, இரவில் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள், ஆகிய எல்லாம் அப்போது கிட்டின.

குலோத்துங்கனும் பாசறைக்குள்ளே தங்கியிருந்து விடவில்லை. அவனும் சுதந்திரமாக, எவருடைய பாதுகாப்பும் இன்றித் தன்னந்தனியாகக் குதிரையேறி நாடு நகரெல்லாம் சுற்றினான். தாங்கள் தங்கியிருந்த தக்கோல நாட்டு மக்களுடன், அவர்களில் ஒருவனாகக் கலந்து பழகினான். ஒருநாள் நடுப்பகலில் அவன் குதிரையேறித் தக்கோலத் தலைநகரைச் சுற்றி வந்து கொண்டிருந்த போது, அங்குள்ள அங்காடியில் (கடைவீதியில்) ஓரிடத்தில் பெருங்கூட்டம் கூடியிருப்பதைக் கண்டு குதிரையை ஒரு மரத்தடியில் கட்டிவிட்டு அங்கே சென்றான். வட்ட வடிவமாக நின்று கொண்டிருந்த அக்கூட்டத்தின் நடுவில் பேரழகு வாய்ந்த இளமங்கை ஒருத்தி, இனிய இசை ஓசையுடன் நடனமாடிக் கொண்டிருந்தாள். அவளுடைய நடனத்தை விட, குயிலின் குரலில் அவள் இசைத்த பாடல்கள் அவனைப் பெரிதும் கவர்ந்தன. இந்த இசையைத் தனது படையினர் கேட்டு மகிழ வேண்டுமென்று விரும்பிய குலோத்துங்கன், நிகழ்ச்சி முடியும் வரையில் காத்திருந்து, பிறகு அப்பெண்ணை அணுகி, அவள் தன்னுடன் வந்து ஓர் இசை-நடன நிகழ்ச்சியை நடத்தித் தர இயலுமா என்று கேட்டான்.

அப்பெண் குலோத்துங்கனின் கேள்விக்கு விடையளிக்காமல், வைத்த கண் மாறாமல் அவனையே நோக்கிக் கொண்டிருந்தாள்.

“ஐயா! தாங்கள் யார்?” என்று தயங்கியவாறே வினவினாள் அப்பெண்.

“நான் குலோத்துங்கன்; சோழ நாட்டுப் படைத்தலைவன்.”

“சோழ நாட்டுப் படைத்தலைவரா?” அப்பெண்ணின் கண்கள் வியப்பால் விரிந்தன. “என் பேறே பேறு!” என்று கூறிய அவள் உடனே புறப்படத் தயாராகி விட்டாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அன்றிரவு சோழநாட்டுப் படை தண்டிறங்கியிருந்த இடத்தில் அந்தத் தக்கோலத்து நங்கையின் ஆடல் பாடல் நிகழ்ச்சி இரவு நெடும் பொழுது நடந்தது. அந்நிகழ்ச்சியில் மெய் மறந்துவிட்ட படையினர், அப்பெண்ணை இன்னும் சில நாட்கள் தங்கச் செய்து, தங்களுக்குத் தொடர்ந்து இசை விருந்து அளிக்கச் செய்ய வேண்டுமென்று குலோத்துங்கனைக் கேட்டுக் கொண்டனர்.

குலோத்துங்கனையும் அவளுடைய கலாவல்லமை மிகவும் கவந்துவிட்டது. அவன் அவள் இன்னும் சில நாட்கள் தங்களுடன் தங்குமாறு கேட்டுக் கொண்டான். அப்பெண்ணும் இணங்கினாள். நிகழ்ச்சிகள் ஏழு நாட்கள் தொடர்ந்து நடந்தன. ஏழு நாட்களும் அவள் இசையின் ஏழு பிரிவுகளில் அவர்களுக்கு விருந்தளித்தாள். ஏழாம் நாள் இரவு நிகழ்ச்சிகள் முடிந்ததும் குலோத்துங்கன் அவளுக்குப் பல பரிசில்களை அளித்து, 'ஏழிசை வல்லபி' என்ற சிறப்புப் பட்டத்தையும் வழங்கினான்.

ஏழிசை வல்லபி மறுநாள் தக்கோலத் தலைநகருக்கு திரும்புவதாக இருந்தது. அன்றிரவு முழுவதும் குலோத்துங்கனுக்கு உறக்கம் பிடிக்கவில்லை. அவளுடைய இசை வல்லமை மட்டுமின்றி, பேரெழிலும் அவனைக் கிறக்கம் கொள்ளச் செய்தன. எவ்வளவு முயன்றும் அவனால் அவளுடைய எழிலுருவைத் தன் மனத்திரையிலிருந்து அழிக்க முடியவில்லை. கலாவல்லபியான அவளைத் தன் மனைவியாக்கிக் கொண்டால் என்ன என்ற எண்ணம் அவனுடைய நெகிழ்ந்த நெஞ்சில் ஒவ்வொரு தளிராக விட்டு வளர்ந்தது.

இறுதியில், மறுநாள் காலையில் ஏழிசை வல்லபி அவனிடம் விடைபெற வந்தபோது குலோத்துங்கன் தன் கருத்தை வெளியிட்டே விட்டான்.

இதைக் கேட்டதும் அப்பெண் நாணிக் கண் புதைத்தாள். பின்னர், "உங்களைக் கணவராகப் பெற நான் பெரும்பேறு செய்திருக்கவேண்டும், சேனாபதி. ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில்தான் நமது திருமணம் நடக்க முடியும்!" என்றாள்.

"என்ன நிபந்தனை? சொல் வல்லபி. எதுவாக இருந்தாலும் நிறைவேற்றுகிறேன்," என்று தேனுண்டு மயங்கிய வண்டைப்போல் மிழற்றினான் குலோத்துங்கன்.

"சேனாபதி! தங்களை நான் மணக்க வேண்டுமானால், தாங்கள் என்றும் என்னைப் பிரிவதில்லை என்று வாக்குறுதி தர வேண்டும்."

"உன்னைப் பிரிவதா? இனியா? என் உயிரைப் பிரிந்தாலும் பிரிவேன்; உன்னைப் பிரிய நானே நினைத்தாலும் இனி முடியாது, கண்மணி! என் போர்க்கலை மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். நீயாக என்னைப் பிரிந்தாலன்றி, அல்லது விதி நம் இருவருள் ஒருவரின் உயிரைப் பிரித்தாலன்றி, நம்முடைய பிரிவு ஏற்படாது, வல்லபி!"



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அழகு மயக்கத்தில் ஏழிசை வல்லபியின் கையைப் பிடித்து ஆணையடித்துக் கொடுத்தான் குலோத்துங்கன்.

## அத்தியாயம் – 3. சூழ்ச்சி உருவாயிற்று!

**ம**துராந்தகி தன் சிற்றப்பா வீரராசேந்திரரை மரணப்படுக்கையில் சந்தித்துத் திரும்பிய அன்றிரவே அவர் இறந்துவிட்டார். அரசியல் கௌரவங்களோடு அவரது ஈமச்சடங்குகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. வீரராசேந்திரர் வீரம் செறிந்த மன்னராக விளங்கியது மட்டுமல்ல; நாட்டு மக்களிடம் நல்லன்பு கொண்டவராகவும் விளங்கி வந்தமையால் சோழநாடு முழுவதுமே மன்னரது மறைவையொட்டி மூன்று நாட்கள் துக்கம் கொண்டாடியது. குமறிக் கொந்தளிக்கும் கடல் சில போது எவ்வித அசைவுமின்றிப் பேரமைதியுடன் விளங்குமே, அதுபோன்றுதான் அப்போது இருந்தது சோழநாடு. வீட்டு வாயில்களை அலங்கரிக்கும் கோலங்களில்லை; வீடுகளுக்கு எந்தவிதமான அலங்காரங்களும் இல்லை. மக்களும் நல்லாடைகளை உடுத்தவில்லை. கடை-கண்ணிகள், வர்த்தக நிலையங்கள், அரசாங்க அலுவலகங்கள் எல்லாமே அம்மூன்று நாட்களும் விடுமுறையை மேற்கொண்டன.

நகரங்கள் இப்படி இருந்தால், மன்னர் வசித்த இடமான அரண்மனையைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? அங்கே ஒரே அழுகை ஓலந்தான். வீரராசேந்திரருக்குப் பல மனைவியர்; பல மக்கள். அது மட்டுமல்ல; அவர் தமது உடன்பிறந்தான் மனைவியரிடத்திலும், அவர்களது மக்களிடத்திலும் மாறாத பற்றுக் கொண்டவர். ஆதலால் அவர்களையும் அவரது மறைவு ஆழ்ந்த பெருந்துயரில் ஆழ்த்தியது. இது காரணமாக சோழகேரளன் அரண்மனையை மட்டுமின்றி முடிகொண்ட சோழன் அரண்மனையையும் துயரம் கவ்வியிருந்தது. எல்லோருக்குமே உண்மையான துயரம்; பேரரசரின் மறைவுக்கு மரியாதை தெரிவிக்க வேண்டுமேயென்று போலியாகப் பூண்ட துயரமல்ல.

என்ன? எல்லோருக்கும் என்றா சொல்லிவிட்டேன்? தவறு. இரண்டு பேர்களுக்கு அவ்வாறில்லை. அவர்களும் அழுதார்கள்; புலம்பினார்கள். ஆனால் அதெல்லாம் வெளிவேடம். அவர்கள் உள்ளத்தின் அந்தரங்கத்தில் மன்னரின் மறைவு மட்டற்ற மகிழ்ச்சியைத்தான் அளித்திருந்தது. அதிலும் அவர்கள் யார், தெரியுமா? குடிமக்களில்லை; வேற்றாட்களில்லை; எட்டிய உறவினர் இல்லை. மன்னருக்கு மிகக்

கிட்டிய உறவினர். ஆம், ஒருத்தி மன்னரின் பட்டத்தரசி அருமொழி நங்கை; மற்றொருவன் சோழ நாட்டின் பட்டத்துரிமை பெற்ற அவருடைய மைந்தன் மதுராந்தகன்!

பட்டத்தரசிக்குப் பலகாலமாகவே மன்னரிடம் அளவற்ற வெறுப்பு இருந்து வந்தது என்று கண்டோம். அது போலவே மதுராந்தகனுக்கும். எங்கே தந்தை தனக்கு அரசுரிமை கிட்டாமற் செய்துவிடுவாரோ என்ற அச்சம் இருந்து கொண்டிருந்தது. அதை அவன் அடிக்கடி தன் அன்னையிடம் கூறுவான். அவர் இதுகாறும் தனக்கு இளவரசுப் பட்டங்கூடக் கட்டாததைச் சுட்டிக் காட்டுவான். “அப்பாவின் உள்ளத்தில் வேறு ஏதோ எண்ணம் வேலை செய்து கொன்டிருக்க வேண்டும், அம்மா. இல்லாவிட்டால், தமது முன்னோர்களைப்போல், தாம் உயிரோடிருக்கையிலேயே எனக்கு இளவரசுப் பட்டம் சூட்டியிருக்க மாட்டாரா? பட்டத்தரசியின் மகனாகப் பிறந்தும், நான் நாடாளும் உரிமையின்றிப் போகவேண்டும் என்பது உன் விருப்பமா?” என்று புலம்புவான். அப்போதெல்லாம் அருமொழி நங்கை மகனுக்கு இப்படித்தான் ஆறுதல் சொல்வாள்: “மகனே! இளவரசுப் பட்டம் கட்டுவது என்பதெல்லம் வெறும் நடைமுறை நிகழ்ச்சிதான், அப்பா. இறுதியில் அரசுரிமை யாருக்குப் போகிறது என்பதுதான் முக்கியமானது. அவர் மனம் விபரீத வழியில்தான் சென்று கொண்டிருக்கிறது என்பதை நான் உணராமல் இல்லை. ஆயினும், முறைப்படி அரசுரிமை பெற்ற உனக்கு நாட்டை இல்லை என்று சொல்லிவிட அவரால் முடியாது. ஆதலால் அவர் கண்களை மூடும் வரையில் நீ பொறுமையாக இரு. பிறகு உன்னை அரசுக்கட்டில் அமர்த்துவது என் பொறுப்பு.”

இப்படி மகனுக்கு ஆறுதல் சொல்லிவிட்ட போதிலும், அரசியின் மனம் மாமன்னர் தமது ஆயுட்காலத்திலேயே, சோழகுல மரபைப் புறக்கணித்துத் தன் சக்களத்தி மக்கள் யாருக்காவது இளவரசுப்பட்டம் கட்டி விடுவாரோ என்ற ஐயம் இருந்துகொண்டே இருந்தது. என்னதான் மரபு என்று ஒன்று இருந்தாலும், அவர் ஆளும் வேந்தன் அல்லவா? அவர் ஒன்று முடிவுறுத்தினால் முடிவுறுத்தியதுதானே? அவர் கட்டளையை மீறி நடக்க யார்தான் துணிவார்கள் என்றும் அவள் அஞ்சினாள். அம்மாதிரி ஏறுமாறாக ஏதேனும் நடந்துவிடலாகாதே என்று பிரார்த்தித்துக் கொண்டும் இருந்தாள்.

இந்நிலையில்தான் மன்னர் நோய்ப்படுக்கையில் விழுந்தார். மருத்துவர்கள் சிறிது சிறிதாக நம்பிக்கை இழக்கத் தொடங்கினர். ‘சரி, இனி அச்சமில்லை. நாம் நினைத்தபடி ஏறுமாறாக ஏதும் இனி நடக்காது. இளவரசுப் பட்டம் கட்டப்படாவிட்டாலும், மதுராந்தகன் சோழமாவலி வாணராயன் அரியணையில் அமருவதை இனி எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. இவர் சாகிறபோது சாகட்டும்’ என்று அவள், தானும் மனம் தேறி,



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மகனின் மனத்தையும் தேற்றிக் கொண்டிருந்தபோதுதான் அந்த எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது. ஆம், மன்னரின் மறைவுக்கு முன், மதுராந்தகிக்கும் அவருக்கும் இடையே நிகழ்ந்ததே, அந்தச் சந்திப்புத்தான்.

மன்னர் நோய்ப் படுக்கையில் விழுந்திருக்கும் செய்தியே சில நாட்கள்வரை முடிகொண்ட சோழன் அரண்மனைக்குத் தெரியாமல் இருந்தது. தெரியவிடவில்லை அருமொழி நங்கை. ஏனென்றால் உடல் நோயோடு தனது பணிவிடைக்குக் கூட அரச குடும்பத்தினர் யாரும் வரவில்லையே என்ற மனநோயும் சேர்ந்து அவர் புழுங்கிப் புழுங்கிச் சாக வேண்டும் என்று அவள் விரும்பினாள். அத்தனைக்கு அவளுக்கு அவர் மீது வெஞ்சினம் ஏற்பட்டிருந்தது. ஆனால், அவருடைய நோய் முற்றத் தொடங்கியதும் அச்செய்தியை ஊர்வாய்க்கு அஞ்சி ஓரளவு வெளிப்பரவ இடமளித்தாள், அவள். ஆனால் அத்தோடு மருத்துவர்கள், அவரை யாரும் போய்ப் பார்த்தோ, அல்லது பேச்சுக் கொடுத்தோ தொல்லை கொடுக்கக்கூடாது என்று அறிவித்திருப்பதாகக் கூறி, மன்னரின் மனநோய் நீங்கிவிடாதபடியும் முன்னணை கட்டிக் கொண்டாள்.

நோயுற்றிருப்பவர்களுக்கு எது தேவையென்று மருத்துவர்கள் கூறுகிறார்களோ, அதைச் செய்யத் தவறுவதில்லை அல்லவா மற்றவர்கள்? பெற்ற தாயேயாயினும், மகவு நோயுற்றிருந்து மருத்துவர் அதை நெருங்க கூடாதென்று கட்டளையிட்டு விட்டால், நெருங்க மாட்டாள் அன்றோ? நோயின் கொடுமையால் வெதும்பியிருக்கும் தான் பெற்ற செல்வத்தை அணைத்து ஆறுதல் தர வேண்டுமென்று உள்ளம் துடித்தாலும், அதன் நலன் பொருட்டு தனது துடிப்பை அடக்கிக் கொள்ளும் அத்தாயின் இயல்பில்தான், முடிகொண்ட சோழன் அரண்மனையிலும், சோழ கேரளன் அரண்மனையிலும் வசித்துவந்த இதர அரசகுலப்பெண்டிர் இருந்தனர்! தவிர, பட்டத்தரசியின் கட்டளையை மீறும் அளவுக்குத் துணிவு பெற்றவர்களாகவும் அவர்கள் இருக்கவில்லை.

நாட்டைப் பற்றிய வரையில் மன்னரின் கட்டளை எப்படிச் சிறிதும் பிழையின்றி நிறைவேற்றப்பட்டு வந்ததோ, அவ்வாறே அரண்மனையைப் பொறுத்தவரையில் பட்டத்தரசியின் கட்டளைதான் அங்கு முடிவானது; அப்படியே நிறைவேற்றப்பட வேண்டியது. இந்த நடைமுறையை அருமொழி நங்கை தனக்கேற்ற வழியில் நன்கு பயன்படுத்தி வந்தாள். மன்னரைக் காண எவரையும் வரவிட வேண்டாமென்று தாங்களே கூறியிருப்பதாக வெளியாரிடம் சொல்ல வேண்டுமென்று அவள் மருத்துவர்களுக்குக் கண்டிப்பாகக் கட்டளையிட்டிருந்தாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இதர அரசகுலப் பெண்டிரைப் போலவே மதுராந்தகியும் மன்னரின் நோய் நிலை பற்றியே தனது சிற்றன்னை இவ்வாறு கட்டளையிட்டிருக்கிறாள் என்று நம்பியிருந்தாள். ஆனால், மாமன்னர் இத்தடவையும் வேங்கியை மீட்டு அதனை விசயாதித்தனுக்கே அளித்தது அவளுக்கு மெத்த ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் அளித்திருந்தமையால், அவர் இவ்வாறு செய்ததற்கு என்ன காரணம் என்றாவது அறிந்து வரவேண்டுமென்று அவள் நெடுநாட்களாக எண்ணியிருந்தாள். போர் மீண்டு திரும்பிய பிறகு ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்கும் சோழவேந்தர்கள் ஏறக்குறைய ஒரு திங்கள் வரையில் அரசாங்க அலுவல்களில் தீவிரமாக ஈடுபட்டிருப்பார்களாதலால், வீரராசேந்திரர் நாடு திரும்பிய உடனே அவளால் இந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள இயலவில்லை. “எப்படியும் வேங்கி இத்தடவை எங்களுக்கு இல்லை என்று ஆகிவிட்டது. சிற்றப்பா அரசியல் பணிகளில் தம்மை மறந்திருக்கும் தருணத்தில் இதைப்பற்றிக் கேள்விகள் கேட்டுத் தொல்லை கொடுத்தால் அவர் சினமடையக்கூடும்; அதன் காரணமாக மீண்டும் எப்போதாவது வேங்கி பிற மன்னர்கள் வசமாகி, சோழர்களால் மீட்கப்படும்போது, அதனை என் கணவருக்கே அளித்து இத்தொல்லைகளிலிருந்து மீள வேண்டும் என்ற எண்ணங்கூட அவருக்கு ஏற்படாமல் போய்விடக்கூடும். ஆதலால் அவர் அரசியல் பணிகள் ஏதுமின்றி ஓய்வாக இருக்கும்போதுதான் போய்ப்பார்க்க வேண்டும்; பக்குவமாகப் பேச்சுக் கொடுத்து, இப்போது அவர் வேங்கியை எங்களுக்கு அளிக்காததன் காரணத்தை அறிந்து கொள்ள வேண்டும், முடிந்தால், அடுத்த தடவையாவது அதை எங்களுக்கு வழங்குமாறு வேண்டிக்கொள்ள வேண்டும்,” என்று அவள் ஒரு திங்கள் வரை காத்திருந்தாள்.

ஆனால் அந்த ஒரு திங்கள் முடிவதற்கு முன்னரே, மன்னர் நோய் வாய்ப்பட்டுவிட்ட செய்தியும், அவரைக்காண எவரும் அநுமதிக்கபடுவதில்லை என்ற செய்தியும் அவளுக்கு எட்டின. எனவே அவள் தனது எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளும் காலத்தை வீரராசேந்திரரின் நோய் தீரும்வரையில் தள்ளிப்போட வேண்டியதாயிற்று. அரண்மனைப் பெண்டிர்கூட அநுமதிக்கப்படாத அளவு மன்னரின் நோய் இருந்ததென்றால் அது மிக முற்றிய நோயாகத்தான் இருக்க வேண்டும் என்று அவள் ஊகித்தாள். அதோடு மற்றப்பெண்டிரைவிட அதிகமாக, மாமன்னர் விரைவில் நோய் நீங்கப் பெற வேண்டுமென்றும் இறைவனை இடைவிடாது வேண்டிக்கொண்டாள். ஆம், மன்னர் நோய் நீங்கப் பெறாமலே இறந்துவிட்டால், அவரை அடுத்து மதுராந்தகன் அரசுக் கட்டில் அமர்ந்துவிடுவான். ஏற்கெனவே தன் மீதும் தன் கணவர் மீதும் வெஞ்சினம்


Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

கொண்டிருக்கும் அவன் அரசனாகி விட்டால் வேங்கி தங்களுக்குக் கிட்டும் வாய்ப்பே இல்லாமற் போய்விடுமல்லவா?

தனது விருப்பத்துக்கு மாறாக, மன்னரின் நோய் நீடித்துக்கொண்டே போகப் போக மதுராந்தகி பெரிதும் கலங்கினாள். அவர் இந்நோய்க்கு இரையாகி விடுவாறோ என்றும் ஏங்கலானாள். இந்தக் கலக்கமும் ஏக்கமும், அவர் உயிரோடிருக்கும் போதே ஒருதடவை போய்ப்பார்த்து வேங்கி தங்களுக்குக் கிடைக்க வகை செய்துகொண்டுவிட வேண்டும் என்று அவளைத் துணியச் செய்தன. ஆனால் பட்டதரசியின் கட்டளை இருக்கிறதே? அதை மீறி மன்னரைப் போய்க் காண்பது எங்கனம்?

இதைப்பற்றி அவள் சிந்தித்துக் கொண்டிருக்கையில் எதிர்பாராத வாய்ப்பு ஒன்று அவளைத் தேடி வந்தது. இதர அரசகுலப் பெண்டிரைப் போலன்றி, மதுராந்த¬கி அரண்மனையில் வேலை செய்யும் பணிப்பெண்களிடம் அன்போடு பழகுவாள்; அவர்கள் நலத்தையும், அவர்கள் குடும்ப நலத்தையும் அடிக்கடி வினவுவாள். அவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளை அவ்வப்போது செய்வாள். இந்த நற்பண்பைப் பெற்றிருந்தமையால் சோழகேரளன் அரண்மனையிலும், முடிகொண்ட சோழன் அரண்மனையிலும் பணிவிடை புரியும் பெண்கள் யாவரும் அவளிடம் மட்டற்ற விசுவாசம் கொண்டிருந்தனர். தங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால் உடனே மதுராந்தகியை நாடி வருவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தனர்.

அவ்வாறுதான் ஒருநாள் பேரழகி என்ற பணிப்பெண் தன் குடும்பத்துக்கு ஏற்பட்டுவிட்ட ஓர் இன்னலைக்கூறிச் சிறிது பொருளுதவி பெறுவதற்காக மதுராந்தகியிடம் வந்தாள். பேரழகி சோழகேரளன் அரண்மனையில் பணியாற்றி வந்தவள். அதிலும் கடந்த இரண்டு திங்களாக நோயுற்றிருக்கும் மன்னருக்கு இரவுப்பொழுதில் பணிவிடை செய்யும் வேலை அவளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பேரழகி கோரி வந்த பொருளை அளித்தபின், “நீ இப்போது அரண்மனையில் என்ன வேலையடி செய்து கொண்டிருக்கிறாய்?” என்று வினவினாள் மதுராந்தகி.

“மாமன்னரின் இரவுப் பணிவிடைகளைச்செய்து வருகிறேன், அம்மா!” என்றாள் பேரழகி.

“மன்னரின் உடல்நிலை எப்படியடி இருக்கிறது இப்போது?”

“தாயே! அதைச் சொல்லவே என் நா கூசுகிறது. அரசர் பிரானின் இறுதிக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அப்படித்தான் மருத்துவர்கள் பேசிக்கொள்கிறார்கள்.”



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இதை அவள் அறிவித்ததும், ‘மன்னர் இறக்குமுன் அவரைச் சந்தித்து நமது எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள இயலுமா என்று பார்த்துவிட வேண்டும்’ என மதுராந்தகியின் உள்ளம் துடித்தது. “மன்னரின் உயிர் பிரியுமுன் நான் அவரை ஒரு தடவை காண விரும்புகிறேனடி, பேரழகி. அதற்கு நீ ஏதாவது ஏற்பாடு செய்ய இயலுமா?” என்று அவள் அப்பணிப்பெண்ணிடம் கேட்டாள்.

“எனக்குப் பேருதவிகள் பல செய்துள்ள தங்களுக்காக நான் எதையும் செய்ய முடியும், அம்மா. இரவுப் பணிவிடைக்காக நான் ஒருத்தியே அமர்த்தப்பட்டிருப்பதால், பெரிய பிராட்டிக்குத் தெரியாதவாறு இரவு இரண்டாம் சாமத்துக்குப் பிறகு நீங்கள் இரகசியமாக அரண்மனைக்கு வாருங்கள்; மாமன்னரைப் பார்க்கலாம்,” என்று கூறி ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றாள் பேரழகி.

இந்த ஏற்பாட்டின்படித்தான் மதுராந்தகி வீரராசேந்திரரைச் சந்தித்தாள். தான் சிறிதும் எதிர்பார்த்தே இராத மகிழ்ச்சி மிக்க செய்தியையும் அவர் கூறக் கேட்டாள். தன் ஆணை நிறைவேறும் காலம் மிக அண்மையில் வந்துவிட்டது என்ற வெற்றிக்களிப்புடன் புறப்பட்டுச் சென்றாள். ஆனல் தனக்குப் பின்னே இரண்டு கண்கள் தன்னைக் கவனித்துக் கொண்டிருந்ததையும், இரண்டு காதுகள் தனக்கும் மன்னருக்கும் இடையே நடந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்ததையும், பாவம், அவள் உணரவில்லை.

மதுராந்தகன் அறிவற்றவன்தான்; கோழைதான்; தகாத பண்புகள் வாய்க்கப் பெற்றவன்தான். ஆயினும் அவன் காரியத்தில் கண்ணானவன். அதை நிறைவேற்றிக் கொள்வதில் அசட்டுத் துணிச்சல் கொள்ளக் கூடியவன். நன்மை-தீமை அறியாமல், அதற்காக எதையும் செய்துவிடக் கூடியவன். என்று பாதாளச் சிறையில் தள்ளப்பட்டானோ அன்றுதொட்டே, ‘அப்பா நமக்கு அரசுரிமை கிட்டாமற் செய்துவிடப் போகிறார்!’ என்ற அச்சம் அவன் உள்ளத்தில் நன்றாகப் பரவிவிட்டது. சிறையிலிருந்து தப்பியோடிய தன்னை அவர் மன்னித்து நாட்டுக்கு அழைத்து வந்த பிறகுங்கூட அவனுடைய இந்தக் கருத்து மாறவில்லை. அவனைக் குந்தள நாட்டிலிருந்து சோழ நாட்டுக்குக் கூட்டி வருமுன் விக்கிரமாதித்தனும் வானவியும் விரைவில் அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட வேண்டுமென்று வீரராசேந்திரரிடம் பலமாகச் சிபாரிசு செய்தனர். அவரும், ‘ஆகட்டும், செய்துவிடுகிறேன்!’ என்று கூறியிருந்தார். கூறியபடி அவர் செய்திருந்தால் மதுராந்தகனின் ஐயம் ஒருகால் நீங்கியிருக்கலாம். ஆனால் நோய்ப் படுக்கையில் விழுந்த பிறகும் அவர் அவ்வாறு செய்யாதது அவனுடைய ஐயத்தை வளர்த்தது. இளவரசுப் பட்டம் கட்டப்பட்டு விட்டால் தான் அரசுக்கட்டில் அமருவதை



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

யாரும் தடுக்க முடியாது; இல்லாவிட்டால் தனது சிறிய தாயார்களின் மக்களோ, அல்லது மதுராந்தகியின் தூண்டுதலால் குலோத்துங்கனோ, நாட்டைத் தங்கள் வசமாக்கிக் கொள்ள முயலக்கூடும் என்று அவன் திடமாக நினைத்தான். அதனால் தான் தாயை அடிக்கடி அணுகி தனக்கு இளவரசுப் பட்டம் கட்டப்பட வேண்டியதைப் பலமாக வலியுறுத்தினான். இளவரசுப் பட்டம் கட்டப்படுவது வெறும் சடங்குதான் என்றும், அச்சடங்கு நிறைவேற்றப்படாத காரணத்தைக்கொண்டு அவனுக்கு அரசுரிமை இல்லையென யாரும் மறுத்துவிட முடியாதென்றும் அருமொழி நங்கை கூறிய ஆறுதல் மொழிகள் அவனுக்கு நிம்மதியை அளிக்கவில்லை. கடைசியிலவன் ஒரு துணிகரமான முடிவுக்கு வந்தான். தானே நேரில் சென்று தந்தையைக்கண்டு தனக்கு இளவரசுப்பட்டம் கட்டுமாறு வலியுறுத்துவது; ஒருகால் அவர் அதற்கு மறுத்து விட்டால் அவரிடமிருக்கும் முத்திரை மோதிரம் போன்ற அரசியல் சின்னங்களைப் பறித்துக்கொண்டு வந்துவிடுவது என்று தான் அவன் முடிவு செய்தான்.

தனது இந்த எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள, மதுராந்தகி மன்னரை இரகசியமாகக் காண வந்தாளே அன்றிரவு நேரத்தையே அவனும் தேர்ந்தெடுத்திருந்தான். இரவு இரண்டாம் சாமப் பொழுதானதும் மன்னர்பிரான் நோயுற்றுப் படுத்திருந்த அரண்மனையின் பகுதிக்கு அவன் வந்தான். தனக்கு முன்னே கறுப்பு நிற அங்கி ஒன்றால் உடலை மூடிக்கொண்டு ஓர் உருவம் சென்று கொண்டிருந்ததைக் கண்டான். ‘யார் இந்நேரத்தில் இப்படி இரகசியமாகச் செல்கிறார்கள்?’ என்பதைக் கண்டறிய வேண்டுமென்ற எண்ணம் எழவே அவன் மறைவாக அவ்வுருவத்தைப் பின்பற்றலானான். அவ்வுருவமும் மன்னர் நோயுற்றுக்கிடந்த அரண்மனைப் பகுதிக்கே சென்றதைக் கண்டு அவனுடைய திகைப்பு அதிகமாயிற்று. அவ்வுருவம் அரசர் படுத்திருந்த அறைவாயிலை அடைந்ததும் மூடிக்கொண்டிருந்த அங்கியை அகற்றியது. மதுராந்தகனின் திகைப்பு இப்போது திகிலாக மாறியது. ‘அட! மதுராந்தகி அல்லவா? இவள் எதற்கு இந்நேரத்தில் இப்படி மறைவாக இங்கே வந்திருக்கிறாள்?’

இந்த திகிலோடு, பணிப்பெண் பேரழகி அவளைச் சந்தித்து இரகசியமாக ஏதோ உரையாடிவிட்டு வேறோர் அறைக்குச் சென்று விட்டதையும் கண்டபோது மதுராந்தகனின் உள்ளத்தில் பற்பல சந்தேகங்கள் முளைத்தெழுந்தன. பேரழகி வேறு அறைக்குச் சென்று மறைந்து கொண்டது அவனுக்கு வசதியாயிற்று. அவன் அரசரின் அறைவாயிலுக்கு வந்து மறைவாக நின்று கொண்டு மதுராந்தகிக்கும் தன் தந்தைக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல் முழுவதையும் செவிமடுத்தான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

முதலில், வேங்கி அரியணையைக் குலோத்துங்கனுக்கு அளிக்குமாறு வேண்டிக்கொள்ளவே மதுராந்தகி வந்திருக்கிறாள் என்று அவர்கள் உரையாடலின் முற்பகுதியை கேட்டபோது அவன் நினைத்தான். தன் தந்தை அந்த வேண்டுகோளுக்கு ஏற்றவாறு ஏற்பாடுகள் செய்துவிட்டு வந்திருப்பதை அறிந்தபோது, “ஓ! அப்படியா செய்தி? இவருடைய ஏற்பாடு நடைபெறாதிருக்க நான் வழி செய்து விடுகிறேன். வெங்கி நாடு அந்தப் பஞ்சைப்பயல் குலோத்துங்கனுக்குக் கிட்டு முன்னே அதனைக் கவர்ந்து கொள்ளுமாறு இன்றே மைத்துனர் விக்கிரமாதித்தனுக்கு ஓலை அனுப்பி விடுகிறேன்,” என்று அவன் உள்ளூரக் கறுவிக்கொண்டான். குலோத்துங்கனுக்கு நாடு என்று ஒன்று கிட்டிவிட்டால், பிறகு அவன், மனைவியின் ஆணையை நிறைவேற்ற இச்சோழ நாட்டின் மீதே படையெடுத்துத் தன்னை அரியணையிலிருந்து விரட்டி விடுவான் என்று அவன் தீவிரமாக எண்ணினான்.

ஆனால் இந்த எண்ணத்தைத் தூக்கி அடித்து விட்டது, மதுராந்தகிக்கும் வீரராசேந்திரருக்கும் இடையே நடந்த உரையாடலின் பிற்பகுதி. இந்நாடு தனக்கு கிடைப்பதைத் தவிர்க்க முடியாது என்று தன் தந்தை மதுராந்தகியிடம் கூறியதைக் கேட்ட போது அவனுக்கு முதலில் பெருத்த மகிழ்ச்சியே ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியில் தன்னை அவர் ‘உதவாக்கரை,’ ‘திறமையற்றவன்’ என்றெல்லாம் குறைவாகக் கூறியதைக்கூட அவன் மறந்துவிட்டான். ஆனால் அதைத் தொடர்ந்து வந்தது அவனுக்கு ஒரு பேரதிர்ச்சி. “என்ன? வேங்கி மன்னனாகப்போகும் குலோத்துங்கனே, சோழநாட்டுக்கும் மன்னன் ஆனாலும் ஆகலாம்; ஆனால் ஒரு குந்தளத்தான் இந்த அரியணையில் அமர இடம் கொடுக்கலாகாதா? அப்படியானால் அப்பா மறைமுகமாக, இந்நாட்டை என்னிடமிருந்து கவர்ந்து கொள்ளுமாறு குலோத்துங்கனுக்கு போதிக்கிறாரா?” என்ற நினைவுதான் சட்டென்று மதுராந்தகனின் உள்ளத்தில் எழுந்தது. “ஏற்கெனவே இந்நாட்டை அடைவதாகச் சபதம் செய்திருக்கும் ஒருத்தியிடம், இப்படிச் சொன்னாள் அதற்கு வேறு என்ன பொருள் இருக்கிறது. சூழ்ச்சிக்காரர் இந்த அப்பா. நாட்டை எனக்கு கொடுப்பதுபோல் கொடுத்துவிட்டு அதை என்னிடமிருந்து பறித்துக் கொள்ளுமாறு வேறொருவனை வேண்டிக்கொள்கிறார். ஐயோ! இன்று நாம் இங்கே வந்து இந்த உரையாடலைக் கேட்டிராவிட்டால் குடிகெட்டுப் போயிருக்குமே? ஆம், இவர்கள் சூழ்ச்சியை நாம் மற்றோர் சூழ்ச்சியால் வெல்ல வேண்டும். குலோத்துங்கன் இச்சோழ நாட்டுக்குத் திரும்பியே வராதபடி வழிசெய்ய வேண்டும். இப்பொழுதே இச்சூழ்ச்சியை அறிவித்து குந்தள நாட்டிலிருக்கும் மைத்துனருக்கு ஓர் ஓலை அனுப்பி, கடல் கடந்து



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சென்றிருக்கும் குலோத்துங்கனை அங்கேயே ஒழித்துவிட ஏதாவது ஏற்பாடு செய்துவிட வேண்டும்," என்று முடிவுறுத்திக்கொண்டு அக்கணமே அங்கிருந்து அகன்றான் மதுராந்தகன். அகன்றது மட்டுமல்ல; உடனே தன் தாயை எழுப்பி இச்சதித் திட்டத்தைக் கற்பனை மெருகேற்றிப் பன்மடங்கு பெருக்கிக் கூறினான். தாயும் மகனும் கலந்து ஆலோசித்து, மதுராந்தகன் போட்ட திட்டப்படியே குந்தள விக்கிரமாதித்தனுக்கு அன்றிரவே ஓர் ஓலையை அனுப்பினர்.

## அத்தியாயம் – 4. சந்தர்ப்பம் செய்த சதி

**ம**னிதர் மனிதரைச் சதி செய்வது ஒருபுறம் இருக்கட்டும்; சிலபோது சந்தப்பங்களே மனிதரைச் சதி செய்து விடுகின்றனவே, அதை என்னவென்று சொல்வது? மதுராந்தகிக்கும் குலோத்துங்கனுக்கும் அப்போது போதாத காலம் என்றுதான் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் அவர்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற ஓலை மதுராந்தகனிடமிருந்து விக்கிரமாதித்தனுக்கு வந்தபோது அதை ஒருவாறு நிறைவேற்றத் தயாராக ஓர் ஆள் கடல் கடந்த நாட்டிலிருந்து கல்யாணபுரத்துக்கு வந்து காத்திருப்பானா?

*கடாரத்தை அந்நாட்டு மன்னனிடமிருந்து பறித்துக் கொண்டவன் மாபப்பாளத்து மன்னனான மகிபாலான் என்பான். குந்தள நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் எவ்வாறு பல தலைமுறைகளாகப் பகை இருந்து வந்ததோ, அவ்வாறே கடாரத்துக்கும் மாபப்பாளத்துக்கும் பகைமை இருந்து வந்தது. அந்தப் பகுதியிலே இருந்த நாடுகளில் இவ்விரண்டும் அதிகப் படைப்பலம் பெற்றவை. கங்கை கொண்ட சோழர் கடாரத்தை அடிமைப் படுத்தி, அதனைச் சோழநாட்டுக்கு உள்ளடங்கியதாகச் செய்யும் வரையில் கடாரத்துக்கும் மாபப்பாளத்துக்கும் இடையே இடைவிடாது போர்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. சில போர்களில் கடாரம் மாபப்பாளத்தை வெல்லும்; வேறு சில போர்களில் மாபப்பாளம் கடாரத்தை வெல்லும். இவ்வாறு அவ்விரு நாடுகளும் சொக்கட்டான் காய்களைப்போல் ஒருவர் கையிலிருந்து மற்றவர் கைக்கு மாறிக்கொண்டே இருந்தன. ஆனால் கடாரம் சோழ நாட்டின் ஒரு பகுதியான பிறகு, அப்போது அந்நாட்டின் அரசனாக விளங்கிய இந்த மகிபாலனின் தந்தையான வேற்கொண்டான் என்பான் இனி கடாரத்தின் மீது படையெடுத்தால் சோழர்கள் பெரும்படையுடன் வந்து நம் நாட்டையும் அடிமைப்படுத்திவிடுவார்கள் என அஞ்சி



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அமைதியாக இருந்து விட்டான். தனக்குப் பின்னர் முடிசூட்டிக்கொள்ள இருந்த மகிபாலனிடமும் அவன் அவ்வாறே அச்சுறுத்தியிருந்தான்.

(*மாபப்பாளத்தைப் பற்றிய இந்நிகழ்ச்சிக்குச் சரித்திர ஆதாரம் ஏதும் இல்லை; அது முற்றிலும் கற்பனையே.)

ஆனால் மகிபாலன் குந்தள விக்கிரமாதித்தனைப் போலவே ஒரு சிறந்த வீரன். போர்த்தினவெடுக்கும் தோள்களைப் படைத்தவன். எனவே தந்தை இறந்து தான் மாபப்பாள அரசை ஏற்றதும் அவன் பெரும் படை ஒன்றுடன் சென்று கடாரத்துடன் போர் நிகழ்த்தி அந்நாட்டைத் தோற்கடித்து அதன் மன்னனையும் நாட்டை விட்டு விரட்டிவிட்டான்.

இதைச் செய்தபோது, கடாரத்தரசன் சோழர்களைச் சரணடைவான்; அவர்கள் பெரும்படை ஒன்றுடன் கடாரத்தை மீட்க வருவார்கள் என்று எதிர்பார்த்தே அவன் செய்தான்; சோழர்களையும் முறியடித்துவிட வேண்டும் என்ற வீறுடனே செய்தான். ஆனால் குலோத்துங்கனின் படை நடத்தும் திறமையின் முன் அவனுடைய வீரம் நிலை நிற்க முடியவில்லை. தன் படையில் பெரும் பகுதியை இழந்து கடாரத்தைவிட்டு மாபப்பாளத்துக்கு ஓடி ஒளிய வேண்டியதாயிற்று. அதோடு குலோத்துங்கன் கடாரத்தை மீட்டு கொடுத்துவிட்டு நாடு திரும்பி விடாமல், கடாரத்துக்கும் மாபப்பாளத்துக்கும் இடைப்பட்ட சிறு நாடுகளான தமாலிங்கம், இலங்காகோசம், மாயிருடிங்கம், தக்கோலம் ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொண்டுவரத் தொடங்கியதும் மகிபாலன் கிலியடைந்தான். தன் நாடு பறிபோகாமல் இருக்க வேண்டுமானால் தானும் கடல் கடந்து படையுதவி தேடிவர வேண்டுமென்று தெளிந்தான். சோழநாட்டுக்கும் குந்தள நாட்டுக்கும் நீடித்த பகை இருப்பதை அவன் அறிவான். குந்தளத்தார் சோழர்களைப்போலவே வீரம் செறிந்தவர்கள்; அவர்களுக்கு இணையான படைப்பலம் பெற்றவர்கள் என்றும் அவன் கேள்வியுற்றிருந்தான். ஆதலால் சோழர்களை முறியடிக்க அவர்கள் உதவியை நாடுவதே நல்லதென்று அவன் உடனே கடல் கடந்து குந்தளநாட்டுக்கு வந்து சேர்ந்தான். அவன் வந்து சேர்ந்த அன்றுதான் விக்கிரமாதித்தனுக்கு மதுராந்தகனின் ஓலையும் வந்து சேர்ந்தது.

விக்கிரமாதித்தன் எப்படி வீரத்தில் வல்லவனோ, அவ்வாறே இராசதந்திரக் கலையிலும் வல்லவன். உளவியல் கலையையும் ஓரளவு தெரிந்தவன். ஆதலால் கடல் கடந்து சென்றிருக்கும் குலோத்துங்கனை அங்கேயே வஞ்சகமாகக் கொன்றுவிட ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற மதுராந்தகனின் வேண்டுகோளை அப்படியே நிறைவேற்ற



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவன் விரும்பவில்லை. அது மிக எளிதானதுதான். குலோத்துங்கன் அழைத்துச் சென்றிருக்கும் படையின் அளவு இப்போது அவனுக்குத் தெரியும். அதில் ஒரு பகுதியேனும் இடையே அவன் நிகழ்த்தியிருக்கும் போர்களில் மடிந்திருக்க வேண்டும் என்பதையும் அவன் அறிவான். அப்போர்களிலே அவன் அடிமைப்படுத்திய நாடுகளின் சிறிய படைகள் அவனுக்கு உதவக்கூடும். அவைகளையும் சேர்த்துக்கொண்டால் கூட அவன் வசம் இருக்கக்கூடிய படையின் அளவு மிக அதிகமாக இருக்க முடியாது. அவனிடம் இருக்கும் மொத்தப் படையின் எண்ணிக்கைக்குச் சிறிது அதிகமான படை ஒன்றை மாபப்பாளத்து மன்னனுடன் அனுப்பிச் சோழப்படையைத் தோற்றோடச் செய்துவிட்டுக் குலோத்துங்கனையும் வஞ்சகமாகக் கொன்றுவிடச் செய்ய விக்கிரமாதித்தனால் முடியும். ஆனால் இப்போதிருக்கும் நிலையில் அவன் சோழர்களுக்கு எதிராகப் போரிட தனது படைகளை அனுப்ப முடியாது. அது சோழ நாட்டு மக்களை அவன்மீதும், அவனுக்கு இதுவரையில் உடந்தையாக இருந்து வந்த காரணத்துக்காக மதுராந்தகனின் மீதும் வெறுப்புக்கொள்ளச் செய்யும்.

சோழ மக்கள் தன்மீது வெறுப்புக் கொள்வதைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. ஆனால் ஏற்கெனவே அவர்களுக்கு மதுராந்தகனின் மீது வெறுப்பு ஏற்பட்டிருக்கையில், இதன் காரணமாக அவ்வெறுப்பு அதிகமானால், அங்கே உள்நாட்டுக் கலகம் நிகழ்ந்து அவன் முடிசூடிக்கொள்ளக்கூட முடியாமல் போய்விடக்கூடும் என்று அவன் அஞ்சினான். ஆதலால், குலோத்துங்கன் உயிரோடும் இருக்க வேண்டும்; அதேபோது அவன் சோழநாட்டுக்குத் திரும்பி வராதிருக்கவும் வழி செய்யவேண்டும் என்று அவன் திட்டமிட்டான். இத்திட்டத்தை வெற்றியுடன் உடனே நிறைவேற்றிக்கொள்ளவும் பாழும் சந்தர்ப்பம் அவனுக்கு அப்போது வழிவகுத்துக் கொடுத்திருந்தது.

மகிபாலன் விக்கிரமாதித்தனிடம் உதவி வேண்டி வந்தபோது வெறுங்கையுடன் வரவில்லை. பல விசேட வெகுமதிப் பொருள்களையும் உடன் கொண்டுதான் வந்திருந்தான். அந்த விசேடமான பரிசில் பொருள்களிலே ஆடவராகப் பிறந்த யாவரையும் கவரக்கூடிய பொருள் ஒன்றும் இருந்தது. அது சடப்பொருளல்ல; உயிர்ப்பொருள். ஆம், ஊனும் உயிருங்கொண்ட ஓர் ஆரணங்கு அப்பொருள். அழகுக் கவர்ச்சி மட்டுமின்றிக் கலைக் கவர்ச்சியும் நிரம்பப்பெற்றவள் அந்த ஆரணங்கு. கனிவாய்மொழி என்ற தன் பெயருக்கு ஏற்ப, வாய் திறந்தால் இன்னிசைக் கனிகளை உதிர்க்கும் அருள் பெற்றவள். ஆடற்கலையிலும் தேர்ச்சி பெற்றவள். கணிகை அல்ல அவள்; ஒரு காவலனின் மகள்-மகிபாலனின் இளைய சகோதரி. அந்தக் கனிவாய்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மொழியை விக்கிரமாதித்தனுக்கு மணம் செய்து கொடுத்தால் அவன் உதவியைப் பெறுவது திண்ணம் என்ற எண்ணத்துடன் வந்திருந்தான் மகிபாலன். வந்ததுமே தன் கருத்தையும் விக்கிரமாதித்தனிடம் வெளியிட்டிருந்தான். தனக்கென வந்த இந்தப் பரிசிலை இக்காரியத்துக்குப் பயன்படுத்த முடிவுறுத்தினான் விக்கிரமாதித்தன்.

குலோத்துங்கனோடு நேரடியான தொடர்போ, பழக்கமோ இல்லையெனினும் அவனுடைய மனப்போக்கைப் பற்றி நிறையக் கேட்டறிந்திருந்தான் விக்கிரமாதித்தன். அவன் போர்ப்பித்தம் மட்டும் கொண்டவனல்லன்; கலைப்பித்தமும், பெண்பித்தமும் கொண்டவன் என்பது விக்கிரமாதித்தனுக்குத் தெரிந்திருந்தது. ஆதலால், கனிவாய் மொழி போன்ற கலையும் அழகும் ஒருங்கே திரண்ட ஒருத்தியினால் அவனை எளிதில் வயப்படுத்திவிட முடியும் என்று அவன் துணிந்தான்.

எனவே அவன் மகிபாலனிடம் சொன்னான்: "மாபப்பாளத்து மன்னவா! உங்களுக்கு உதவி செய்ய நான் பெருமகிழ்ச்சியே கொள்வேன். ஆனால் உங்களுக்கு என் உதவியை அளிக்க இத்தருணம் ஏற்றதன்று. ஏனென்றால் சோழநாட்டுடன் இருந்து வந்த நெடுநாட் பகையை நான் துரதிர்ஷ்ட வசமாக கொள்வினை உறவால் போக்கிக் கொள்ள நேர்ந்துள்ளது. இப்போது சோழநாடு என் மாமன், மைத்துனர்களின் நாடு. ஆதலால் அவர்களுக்கு எதிராகப் போர் செய்யப்போகும் உங்களுக்கு என் படைகளை வெளிப்படையாக உதவிக்கு அனுப்ப முடியாமைக்கு மிக்க வருந்துகிறேன்."

"ஆயின், நீங்கள் என் உதவியை எதற்காக நாடி வந்தீர்களோ, அதை நீங்களே மிக எளிதாக நிறைவேற்றிக் கொள்ள நான் ஒரு வழி வகுத்துத்தருகிறேன். மகிபாலரே! குலோத்துங்கன் மாசற்ற வீரன்தான்; ஆயினும் கலைப்பித்தும் பெண்பித்தும் அவனுக்கு மிகையாக உண்டு. எழிலும், இசைத்திறனும் ஒருங்கே உடைய உங்கள் சகோதரி மட்டும் மனம் வைத்து வலை வீசினால், அதில் உடனே சிக்கிக் கொண்டுவிடுவான். அவனிடம் சாதுரியமாக உரையாடி, என்றும் தன்னைப் பிரிவதில்லை என்ற வாக்குறுதி பெற்றுக்கொண்டு அவனை மணந்துகொள்ளச் செய்யுங்கள். பிறகு அவனை என்றென்றுமே மாபப்பாளத்தை விட்டுப் புறப்படாதபடி அட்டையாகப் பற்றிக்கொள்ளச் செய்யுங்கள். உங்களுக்கு உங்கள் நாடு நிலைப்பதோடு, குலோத்துங்கன் வெற்றி கொண்டுள்ள கடாரமும், இதர நாடுகளுங்கூட அடிமைப்பட்டதாகிவிடும். என் பங்குக்கு நான் இங்கிருந்து மீண்டும் கடாரத்தை மீட்கவோ, குலோத்துங்கனைத் திருப்பிச் சோழாட்டுக்கு அழைத்துக் கொள்ளவோ வீரராசேந்திரர் எவ்வித முயற்சியும் எடுத்துக் கொள்ளாதிருக்க ஏற்பாடு செய்துவிடுகிறேன்," என்றான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

முன்பு, வீரராசேந்திரர் மதுராந்தகியிடம், “வேங்கி மன்னனாகப் போகும் குலோத்துங்கனே சோழ நாட்டுக்கும் மன்னன் ஆனாலும் ஆகலாம்; ஒரு குந்தளத்தானோ, அல்லது வேறு அயல்நாட்டானோ இந்த அரியணையில் அமர நீங்கள் விடக்கூடாது,” என்று கேட்டுக்கொண்டபோது அவள் எப்படிக் கரும்பு தின்னக்கூலியா வேண்டும் என்ற பெரு மகிழ்ச்சியுடன் அதனை ஏற்றுகொண்டாளோ, அவ்வாறே இப்போது மகிபாலனும் விக்கிரமாதித்தனின் ஏற்பாட்டை மட்டற்ற மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டான்; சகோதரியுடன் நாடு திரும்பினான்.

தாய் நாட்டுக்காகத் தன்னைத் தியாகம் செய்துகொள்ளப் போகும் நினைவுடன்தான் கனிவாய்மொழி முதலில் தன் அண்ணனின் கோரிக்கைக்கு இணங்கினாள். நாடோடிப் பெண்ணாக மாறுவேடம் தாங்கி, குலோத்துங்கன் தண்டிறங்கியிருந்த இடத்துக்கு அருகே வந்து தனது ஆடல்-பாடல் நிகழ்ச்சிகளை நடத்தினாள். ஆனால் குலோத்துங்கனை நேரில் பார்த்ததும், அவளுக்கு அந்தத் தியாகம் பெரிய பாக்கியமாக மாறிவிட்டதாகத்தான் தோன்றியது. இப்போது அண்ணனின் நாட்டுக்காக மட்டுமின்றி தனக்காகவும் குலோத்துங்கனை இந்த ஸ்ரீவிசயராச்சியத்தின் எல்லையைவிட்டு அப்பாற் செல்லவிடக்கூடாது என்ற உறுதி அவளுக்கு ஏற்பட்டுவிட்டது. ஆம், இவரை நாடு திரும்பவிட்டால், அங்கிருக்கும் இவரது ஆசைக்கிழத்தியான முதல் மனைவி இங்கே திரும்பி வரவிடமாட்டாள் என்று உறுதியாக நினைத்தாள், கனிவாய் மொழியாக இருந்து ஏழிசைவல்லபியான அப்பெண்.

## அத்தியாயம் – 5. நினைத்தது ஒன்று; நடந்தது ஒன்று

**சோ**ழவள நாட்டிலே அக்காலத்தில் ஒவ்வொருவர் உதிரத்திலும் நாட்டுப்பற்று நன்கு ஊறிப்போயிருந்தது. தங்கள் நலனைவிட நாட்டின் நலனே பெரிதெனக் கருதிய மக்களே அன்று நாட்டில் நிறைந்திருந்தனர். சோழப் பேரரசை நிறுவிய விசயாலயச் சோழர் காலந்தொட்டு, அவரைத் தொடர்ந்து நாட்டை ஆண்டு வந்த மன்னர்கள் எல்லோரும் தங்கள் நலத்தைவிட நாட்டின் நலத்தையும் கௌரவத்தையும் பெரிதாகக் கருதும் இயல்புடையவர்களாக இருந்து வந்ததால் மக்களின் நாட்டுப்பற்று, அதன் எல்லைகளைப் பாதுகாப்பதிலும், பரப்புவதிலும் மட்டுமே காட்டப்பட்டு வந்தது. ஆனால் வீரராசேந்திரரின் மறைவுக்குப் பின்னர் மக்கள் தங்கள் நாட்டுப்பற்றை வேறுவிதமாகக்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

காட்டவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதாவது, அடுதாற்போல் தங்களை ஆளும் வேந்தர் யாராக இருக்க வேண்டும் என்பதை அவர்களே முடிவுறுத்த வேண்டியதாயிற்று.

வீரராசேந்திரரின் மறைவுக்கு முன்னர் அவருக்கும் மதுராந்தகிக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலிலிருந்து, தமக்குப் பின்னர் மதுராந்தகன் சோழ அரியணை ஏறுவதை மன்னர் எவ்வளவு வெறுத்தார் என்பதை வாசகர்கள் ஒருவாறு ஊகித்திருப்பார்கள். ஏன், ஆளும் மன்னருக்குப் பிறகு அவருடைய பட்டதரசியின் மூத்த மைந்தன்தான் அரசுக்கட்டில் அமர வேண்டும் என்ற நடைமுறை மட்டும் இருந்திராவிட்டால், வீரராசேந்திரர் தேவர் சிறிதும் தயக்கமின்றி மதுராந்தகனுக்குப் பதிலாக குலோத்துங்கனுக்கோ, அல்லது திறமை வாய்ந்த வேறு யாருக்கோ தமது ஆயுட் காலத்திலே இளவரசுப்பட்டம் கட்டியிருப்பார். பரம்பரை பரம்பரையாக நடைமுறையில் இருந்து வந்த ஒரு பழக்கத்தைத் தமது ஆட்சிக் காலத்தில் மாற்றாது, அது எத்தகைய கட்டாயத்தினால் ஆனாலும், அரச பரம்பரைக்கு இழுக்கு இழைப்பதாகும் என்று கருதியதால்தான் அவர் அவ்வாறு செய்யாதிருந்தார். அதேபோது, கையாலாகாத தமது மைந்தன் அரசனாகி நாட்டைப் பகைவர்கள் கைக்குப் போக விட்டுவிடக்கூடாது என்றுதான் அவ்வாறு நடந்து விடாமல் நாட்டைக் காக்க வேண்டும் என்று மதுராந்தகியின் வழியே வீர திலகமாக விளங்கி வந்த குலோத்துங்கனுக்குச் செய்தி விடுக்கவும் செய்தார்.

மன்னர் மட்டுந்தான் இவ்வாறு நாட்டின் நிலையை முன்னறிந்து இருந்தார் என்றில்லை. சோழ நாட்டின் அமைச்சர் குழாம், படைத்தலைவர்கள், அரசியல் அதிகாரிகள், ஏன், மக்கள் ஒவ்வொருவருமே, மதுராந்தகன் அரசுக்கட்டில் அமர்ந்தால் அத்தகையதொரு பயங்கர நிலை நாட்டுக்கு ஏற்படும் என்று ஊகித்துத்தான் இருந்தார்கள். இந்தச் சிக்கல் நீங்க மன்னர் தமது ஆயுட்காலத்திலே ஏதாவது வகை செய்துவிட்டுப் போகிறாரா பார்க்கலாம் என்று அவர்கள் காத்திருந்தனர். ஆனால் வீரராசேந்திரர் தமது ஏற்பாட்டை மிக இரகசியமாக மதுராந்தகிக்கு மட்டும் அறிவித்துச் சென்றமையால் அதனை ஒட்டுக் கேட்ட மதுராந்தகன் போன்ற ஒருசில அரச குடும்பத்தினரையன்றி பிறிதெவருக்கும் அது தெரியாமற் போயிற்று. எனவே அவர்கள் தங்கள் நாடு ஒரு கோழையின் கைக்குப் போகாதிருக்கத் தாங்களே நடவடிக்கை எடுக்கத் துணிந்தனர்.

வீரராசேந்திரர் மறைந்து பதினைந்து நாட்கள் வரையில் தலைநகரில் அரசாங்க அலுவல்கள் எல்லாமே நின்று போயிருந்தன. அரண்மனையில் நிலவிய துயரம் அதற்குள் மாலை வெயிலாக மங்கி மறைந்தது. எல்லோரும் மீண்டும் தங்கள் அன்றாட



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அலுவல்களில் கவனம் செலுத்தலாயினர். ஆனால் எல்லோருக்கும் முன்னால் செயல்பட்டவள் மதுராந்தகிதான். ஆம், மாமன்னர் தமது இறுதி கோரிக்கை என்ற பெயரில் ஒரு மகத்தான பொறுப்பை அவள் மீதும் அவள் கணவன் மீதும் சுமத்தைவிட்டுப் போயிருந்தாரல்லவா? நாட்டு மக்கள் நினைத்தது போலவே அவளும் நினைத்தாள். மதுராந்தகன் முடிசூட்டப்பட்டால், அவன் குந்தள விக்கிரமாதித்தனைச் சார்ந்துள்ள காரணத்தால் நாடு விரைவில் குந்தளத்தாருக்கு அடிமைப்பட்டதாகிவிடும். ஒருகால் விக்கிரமாதித்தன் தன் மைத்துனன் என்றும் பாராமல் மதுராந்தகன் அரியணையில் அமர்ந்ததுமே அவனைத் தூக்கி எறிந்துவிட்டு அங்கே தான் அமர முயற்சி செய்யக்கூடும்.

அவனுக்கு அந்த நினைவு இல்லாவிட்டால்கூட வானவி அவனைத் தூண்டிவிடுவாளென்று அவள் திடமாக நம்பினாள். 'தன் தம்பி திறமையற்றவன் என்பது அவளுக்குத் தெரியும். ஆதலால் அவன் அரியணையில் இருந்தால் நான் என் ஆணையை நிறைவேற்றிக்கொள்ள என் கணவரைத் தூண்டி நாட்டை அபகரித்துக்கொள்ளச் செய்துவிடுவேன் என்று அவள் ஊகிக்காமல் இருக்கமாட்டாள். எங்களுக்கு அரசியல் அதிகாரிகளிடமும், நாட்டு மக்களிடமும் உள்ள செல்வாக்கும், அவர்களுக்குத் தன் தம்பிமீது இருந்து வரும் வெறுப்பும் அவள் அறியாதவை அல்ல. ஆதலால் நாங்கள் இரகசிய ஏற்பாட்டின் மூலம் திடீரென்று ஒருநாள் தன் தம்பியை முடிதாழ்த்திவிடுவோம்; தன் கணவர் வெகு தொலைவிலுள்ள கல்யாணபுரத்தில் இருந்தால் இதைத் தடுக்க முடியாமற் போய்விடும் என்றெல்லாம் அவள் முன்னோட்டம் கொள்ளத்தான் செய்வாள். அதையெல்லாம் விக்கிரமாதித்தனுக்கு விவரித்து, "இப்படி நடக்காதிருக்க நாம் முன்னணை கட்டிக்கொள்ள வேண்டும்; அவர்களை முந்திக்கொண்டு அவர்கள் செய்யப்போவதை நீங்களே செய்துவிடுங்கள்" என்று போதித்து அனுப்புவாள். எனவே அவளுடைய அந்த எண்ணம் நிறைவேறாமல் இருக்க நாம் வழி செய்ய வேண்டும். விஷயத்தை மரமாக வளரவிட்டுப் பிறகு வெட்ட முடியாமல் திண்டாடுவதைவிட முளையிலேயே அதைக் கிள்ளி எறிந்துவிட வேண்டும். மதுராந்தகன் அரியணை ஏறுவதையே தடை செய்யதுவிட வேண்டும்' என்று அவள் முடிவுறுத்தினாள்.

தன் முடிவைச் செயல்படுத்த அவள் சிறிதும் தாமதிக்கவில்லை. முக்கியமான அமைச்சர்களுக்கும், அரசியல் அதிகாரிகளுக்கும் அவள் இரகசியமாகச் செய்தி அனுப்பி, முடிகொண்ட சோழன் அரண்மனையில் தான் வசித்து வந்த பகுதிக்கு வரச்செய்தாள். மாமன்னரை மரணப் படுக்கையில் தான் சந்தித்த விவரத்தையும் அப்போது அவர் விடுத்த வேண்டுகோளையும், அதன் சூசக அறிவிப்பையும் அவர்களுக்கு விளக்கினாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

‘மாமன்னர் சோழ அரசின் பிற்கால நலனைக் கவனத்தில் கொள்ளாது, ஒன்றுக்கும் உதவாத தமது மைந்தனையே அரசாளும் நிலையை ஏற்படுத்திவிட்டுப் போய் விட்டாரே; நாட்டு மக்கள் அனைவரும் கொதித்துக் கொண்டிருக்கிறார்களே; இதனால் என்ன என்ன குழப்பம் ஏற்படப் போகிறதோ? அதை நாம் எப்படிச் சமாளிக்கப் போகிறோமோ?’ என்றெல்லாம் கலங்கிக் கொண்டிருந்த அமைச்சர்களுக்கும் அரசியல் அதிகாரிகளுக்கும் இச்செய்தி மகிழ்ச்சி அளிப்பதாக இருந்தது. எனவே அவர்கள் அனைவரும் மதுராந்தகன் முடிசூட்டிக் கொள்வதைத் தவிர்ப்பதே இந்நிலையில் உகந்த செயலாகும் என்ற மதுராந்தகியின் முடிவை அப்படியே ஏற்றுக்கொண்டனர்.

ஆனால் அரசாங்கத்தில் பணியாற்றும் அவர்களும், ஆளும் மன்னரைப் போல் நாட்டின் நடைமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியார்கள் ஆவார்கள்; அந்த நடைமுறைகள் சரிவரச் செயல்பட உதவ வேண்டியவர்கள் ஆவார்கள். ஆதலால் சூழ்நிலை காரணமாக இப்போது அந்த நடைமுறைக்கு எதிராக நடைபெற வேண்டியிருந்த இந்தச் செயலை வெளிப்படையாக ஆதரிக்க இயலாத நிலையில் இருந்தார்கள். அதற்காக நாடு பகைவன் கைக்குப் போவதை அவர்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? இறுதியாக, நாட்டின் நலத்துக்காகத் தொட்டிலை ஆட்டிக்கொண்டே குழந்தையைக் கிள்ளி விடும் ராஜதந்திரத்தைக் கையாளுவதென்று அவர்கள் முடிவுறுத்தினார்கள். அதாவது நாட்டு மக்களைத் தூண்டிவிட்டு மதுராந்தகன் அரியணை ஏறக்கூடாதென்று கிளர்ச்சி செய்யச் சொல்வதோடு, பரம்பரை நடைமுறையை மீறக் கூடாதென்று மக்களுக்கு அறிவுரை வழங்கி அக்கிளர்ச்சியை அடக்கிவிட முயலுவது போல் பாசாங்கு செய்வதென்று தீர்மானித்தார்கள். அதற்கிடையே, உடனடியாக தூதன் ஒருவனை இரகசியமாக ஸ்ரீவிசய ராச்சியத்துக்கு அனுப்பி, குலோத்துங்கனுக்கு நாட்டின் நிலையை விளக்கி, அவனை இங்கே வரச்செய்து, தருணம் பார்த்துச் சோழ அரியணையில் உட்கார்த்தி விடுவது என்றும் அவர்கள் திட்டமிட்டார்கள். இத்திட்டப்படி அன்றிரவே நம்பகமான சோழவீரன் ஒருவன் அமைச்சர்களும், அரசியல் அதிகாரிகளும் கையப்பமிட்ட ஓலை ஒன்றுடனும், மதுராந்தகியின் அன்பு அழைப்பைத் தாங்கிய ஓலை ஒன்றுடனும் கடாரத்துக்குப் புறப்பட்டான். அங்கே குலோத்துங்கன் மிகச் சிக்கலான சூழ்ச்சி வலை ஒன்றில் வீழ்த்தப்பட்டிருக்கிறான் என்பதை இவர்கள் எங்கனம் அறிவார்கள்?

இது இவ்வாறாக, சோழகேரளன் அரண்மனையில் மதுராந்தகனின் முடியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகள் முறைப்படி தொடங்கின. எந்த அமைச்சர்களும் அதிகாரிகளும்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அது நடைபெறாதிருக்க வழிகளை வகுத்திருந்தார்களோ, அவர்களே முன்னின்று அந்த ஏற்பாடுகளைத் துவக்கி வைத்தனர். அரசாங்கப் புரோகிதர் வந்து முடிசூட்டு விழாவுக்கான நன்னாளும், நல்ல பொழுதும் கணித்தார். அச்செய்தி நாடெங்கும் பறையறிவிக்கப்பட்டது. குறுநில மன்னர்களுக்கெல்லாம் ஓலைகள் அனுப்பப்பட்டன. நகரலங்காரமும், விருந்தினர் உபசரிப்பு, நாட்டு மக்களுக்கு அவரவர்கள் செய்த நற்செயல்களையொட்டிப் பரிசில்கள் வழங்குவது போன்ற இவ்விழாவை ஒட்டிய நிகழ்ச்சிகளெல்லாம் பட்டத்தரசி அருமொழி நங்கையைக் கலந்தாலோசித்து முடிவுறுத்தப்பட்டன. ஒவ்வொரு பொறுப்பும் ஒவ்வோர் அரசியல் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தக் கண் துடைப்பு நிகழ்ச்சிகளில் உள்ளூரக் கேலி நகைப்புடன் கலந்து கொண்ட அமைச்சர்களும் அதிகாரிகளும் அடுத்த எதிர் நடவடிக்கையை ஆவலுடன் எதிர் பார்த்துத்தான் இருந்தனர் என்று சொல்லவும் வேண்டுமா?

அவர்கள் எதிர்பார்த்தபடியே அதுவும் நடந்தது. முடிசூட்டு விழா பற்றிப் பறையறிவிக்கப்பட்ட மறுநாள் சோழகேரளன் அரண்மனை முன் கங்கைகொண்ட சோழபுரத்து மக்களில் பெரும்பாலோர் கொண்ட பெருந்திரள் ஒன்று பலவித கோஷச்சொற்களைப் பெருங்குரலில் கூவிக்கொண்டே வந்து நின்றது. “திறமையற்றவர்களுக்கு இந்நாட்டின் அரசுரிமை இல்லை! பாதாளச் சிறைவாசிக்குப் பட்டத்துரிமையா? வீரமற்ற கோழையா வீரராசேந்திரரைப் பின்பற்றுவது? பகைநாட்டானைச் சரணடைந்தவன் எங்கள் பகைவன்; அவனை அரியணை ஏற விடோம்!” என்ற கூக்குரல்கள் வானைப் பிளந்தன. இத்தனை மக்கள் திரண்டு வந்து நிற்பதையும், அவர்களது முகத்தில் கொதித்த சினத்தையும் வெறுப்பையும், அரண்மனை உப்பரிகையிலிருந்து பார்த்த மதுராந்தகன் கதிகலங்கிப் போனான். செருக்கோடு வந்த அவன் சிறு பூனையாகக் குறுகி அரண்மனைக்குள்ளே திரும்பினான். நேரே தன் அன்னையின் அந்தப்புரத்துக்குச் சென்று “ஐயோ அம்மா! மக்கள் கலகம் செய்கிறார்கள்; நான் அரியணை ஏறக்கூடாதாம்!” என்று முறையிட்டான்.

“என்ன? உண்மையாகவா?” என்று வியப்புடன் கேட்டவாறு உப்பரிகைப் பலகணி வழியே பார்வையைச் செலுத்திய அருமொழி நங்கையும் அக்காட்சியைக் கண்டதும் திகிலடைந்தாள். “எங்கே அமைச்சர்கள்? எங்கே அரசியல் அதிகாரிகள்? கூட்டிக்கொண்டு வாருங்கள் அவர்களை. இதெல்லாம் என்ன கேலிக்கூத்து!” என்று குமுறினாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சேடியர் சென்று, தங்கள் தங்கள் அலுவலகங்களில் அமைதியாகப் பணியில் ஈடுபட்டிருந்த அரசாங்கத் தலைவர்களை அழைத்து வந்ததும், அவள் பெருஞ்சினத்துடன் குழப்பம் செய்யும் மக்களை அமைதிப்படுத்தி வீடுதிரும்பச் செய்யுமாறு பணித்தாள்.

அரசியல் அரங்கத்தில் தங்கள் நாடகத்தின் முற்பகுதியை அவர்கள் செவ்வனே நிறைவேற்றி விட்டுத்திரும்பி வந்து, "சோழப் பிராட்டியாரே! அரசே பரம்பரையின் நடைமுறைகளில் குறுக்கிட நாட்டு மக்களுக்கு உரிமை இல்லை என்று நாங்கள் அவர்களுக்கு எவ்வளவோ எடுத்துச் சொன்னோம். அவர்கள் அமைதிகொள்ள மறுக்கிறார்கள். அவர்களது விருப்பத்துக்கு மாறாக இளையதேவரை அரசுக்கட்டில் அமர்த்த முயன்றால் அது நடைபெறாதவாறு பெரிய உள்நாட்டுக் குழப்பத்தை ஏற்படுத்துவதாகப் பயமுறுத்துகிறார்கள். எங்களைக் கேட்டால் முடிசூட்டுவிழாவை இன்னும் சிலகாலம் தள்ளிப்போட்டு மக்களின் கொதிப்பு ஓரளவு அடங்கிய பிறகு செய்வதே நல்லது!" என்று உரைத்தார்கள்.

இக்காலத்து அரசாங்கங்களைப்போல் அன்றைய நாடுகள் நிரந்தரமாகப் படை ஒன்றைக் கூலிக்கு அமர்த்திக் கொண்டிருக்கவில்லை. அரண்மனைக் காவல், நகரக் காவல் போன்ற பணிகளுக்கு மட்டுமே அன்று வீரர்கள் நிரந்தர மானியம் அளிக்கப்பட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். போர் மூளும் காலத்தில்தான் வீட்டுக்கு ஓரிரு ஆண்கள் வீதம் பெரும்படை திரட்டப்படும் அப்படையினர் ஊதியம் பெறக்கூடமாட்டார்கள். அதை நாட்டுக்குத் தாங்கள் ஆற்ற வேண்டிய கடமையாகத்தான் அவர்கள் கருதுவார்கள். போர் முடிந்து நாடு திரும்பியதும் அப்படை கலைக்கப்பட்டுவிடும். இந்நிலை இருந்து வந்ததால் படைப்பலங்கொண்டு கிளர்ச்சி செய்யும் மக்களை அடக்கிவிடும் வாய்ப்பு அன்றைய மன்னர்களுக்கு இல்லாமல் இருந்தது. அதுமட்டும் இருந்திருந்தால் அமைச்சர்களின் சொற்களுக்குச் செவி சாய்க்காமல் தன் மகனுக்குக் குறிப்பிட்ட நாளில் எப்படியும் முடிசூட்டியே இருப்பாள் அருமொழி நங்கை. அந்த வாய்ப்பு இல்லாதது ஒன்று; இக்கலகத்தை அடக்கவென்று ஒரு படை திரட்டச் செய்யலாம் என்றால், அதற்கு வழியில்லாதவாறு நாட்டு மக்கள் அனைவருமே இக்கிளர்ச்சியில் பங்கு கொண்டிருந்தது மற்றொன்று; இவ்விரண்டும் சேர்ந்து அருமொழிநங்கையை அமைச்சர்களின் வேண்டுகோளுக்கு இணங்க வைத்தன.

ஆனால் இக்கிளர்ச்சி அவளை விழிப்படையச் செய்துவிட்டது. நாட்டு மக்களுக்குத் தன் மைந்தன் மீது ஓரளவு வெறுப்பு உண்டு என்பதை அவள் அறிவாள். ஆனால் அது இந்த அளவுக்கு முற்றியிருக்கும் என்று அவள் கருதவில்லை. பட்டத்துரிமை பெற்ற


Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஒருவனைப் பட்டம் ஏற விடமாட்டோம் என்று எதிர்க்கும் வண்ணம் அவர்கள் துணிவடைந்துவிட்டதைக் கண்கூடாகக் கண்டுவிட்டபோது, இவர்களுடைய மனப்புண் அத்தனை எளிதாக ஆறிவிடக் கூடியதல்ல என்று அவள் உணர்ந்தாள். அது ஆறட்டும்; ஆறாமற் போகட்டும்; அதைப்பற்றி அருமொழிநங்கை கவலைப்படவில்லை. ஆனால் அதற்காகத் தன் மகன் அரியணை ஏறாமல் நின்றுவிடக் கூடாதே என்று அவள் கவலையுற்றாள். அதற்கு என்ன செய்யலாமென்று தீவிரமாகச் சிந்தித்தாள். மக்களிடையே அமைதி ஏற்படும்; ஏற்படும் என்று நாட்களைத் தள்ளிக்கொண்டுபோக அவள் விரும்பவில்லை. அமைதி ஏற்படாமலே போய்விடும் என்று வைத்துக்கொண்டுதான் அவள் ஆராய்ச்சி செய்தாள்.

அமைதி ஏற்படாமலே போய்விடுமென்றால் மக்கள் கலகம் செய்வதை அடக்க ஒரே ஒரு வழிதான் இருந்தது. அதாவது, படைப்பலத்தால் கலகத்தை அடக்குவது. இதற்காகப் படைதிரட்ட வேண்டுமென்றால், அது சோழ நாட்டில் சாத்தியமில்லை. வேற்று நாட்டுப் படைகள் வருவதாக இருந்தால்கூட மிக இரகசியமாகத்தான் வரவேண்டும். எதிர்பாராதபடி கலகக்காரர்கள் மீது பாய்ந்து அவர்களை ஒழிக்க வேண்டும். அப்படி இரகசியமாகத் தங்கள் உதவிக்குப் படை அனுப்பக் கூடியவர்கள் யார் என்று அவள் ஆலோசித்தபோது தனது மருமகன் விக்கிரமாதித்தனின் நினைவுதான் அவளுக்கு முதலில் வந்தது. உடனேயே அவள் உட்கார்ந்து, மருமகனை விரைவில் பெரும்படை ஒன்றுடன் வந்து தனது மகனின் முடிசூட்டு விழாவை நடத்திவிட்டுச் செல்ல வேண்டுமென்று ஓர் ஓலை எழுதி அனுப்பினாள்.

## அத்தியாயம் – 6. மையல் திரை

**உ**லகத்திலே மனிதனின் அழிவுக்கு வித்தாக இருப்பவை பெண், பொன், மற்றும் மண் என்று நமது ஆன்றோர் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவர்கள் கூற்று முற்றிலும் உண்மையே. ஆயின் எத்தகைய நிலையில் அவை மனிதருக்கு அழிவைக் கொடுக்கின்றன எனபதை நாம் ஆய்ந்து அறிய வேண்டும். முதலில் பொன்னாசையை எடுத்துக்கொள்வோம். பொன் என்பது இங்கே பொருளைக் குறிப்பிடுகிறது. பொருட்செல்வம் மனிதருக்கு மிகத் தேவையானதுதான். ஆனால் அச்செல்வத்தை அடைய மனிதர் நேர்வழியில் பாடுபட வேண்டும். தொழில்களைக் கற்று, கலைகளைக் கற்று, அல்லது ஊதியம் பெற்றுப் பொருளுயர்வு பெறவேண்டும். அதைவிட்டு, ஏமாற்று



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

வித்தைகள் மூலம் மனிதர் பொருளீட்ட முயன்றால் அவர்கள் மற்றவர்களையும் அழிக்கிறார்கள்; இறுதியில் தாங்களும் அழிகிறார்கள்.

மண்ணாசையும் இவ்வாறேதான். கற்காலந்தொட்டு, இடைப்பட்ட பொற்காலம், மற்றும் இன்றைய நற்காலம் வரையில் அலசிப் பார்த்தோமானால் மாபெரும் மன்னர்கள், மகிமைமிக்க பேரரசுகள் எல்லாமே நாடு பிடிக்கும் ஆசையால் நாசமாகியிருப்பதை, நாசமாகி வருவதைக் கண்கூடாகக் காண்போம். மண்ணாசை, அதாவது இந்த நாடு பிடிக்கும் ஆசை ஏற்பட்டால் உடனே போர் மூளுகிறது. போர் என்றால் இருதரப்பிலும் ஆயிரமாயிரம் மக்கள் மாய்கிறார்கள். "உலகில் மனிதப் பூண்டே இல்லாமல் அழிவதற்கு இன்னும் ஒரே உலகப் போர்தான் தேவை!" என்று இன்றைய அறிவாளிகள் கூறி வருகிறார்களே, அது நமது ஆன்றோர் சொற்களுக்குச் சான்று தருகிறது.

அடுத்ததாக பெண்ணாசை. இயற்கையாலும் செயற்கையாலும் மனித உலகம் சிறுகச் சிறுக மடிந்து வருவதால் உலகம் சூனியமாவதைத் தவிர்க்க, மக்கள் தொகை பெருக வேண்டியது இன்றியமையாதது. அதற்காகவே இறைவன் ஆண்-பெண் உறவை ஏற்படுத்தியிருக்கிறான். அந்த உறவுக்கு ஒரு நியதி, ஒரு கட்டுப்பாடு போன்றவற்றையும் நமது முன்னோர்கள் வகுத்திருக்கிறார்கள். இந்தக் கட்டுப்பாட்டை மீறி ஆண்கள் நடந்து கொள்ளும்போது அவர்கள் தாங்களும் அழிகிறார்கள்; தங்களைச் சார்ந்தோர்களையும் அழிக்கிறார்கள். அன்றைய மன்னர்கள் பல பெண்களை மணந்தனர். அவர்களோடு இன்பம் துய்த்தனர். பெண்டு-பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். ஆனால் அவர்களில் யார் பெண்ணின்பத்தை அளவோடு வைத்துக் கொண்டிருந்தார்களோ அவர்களே உயர்ந்தார்கள்; மோகக்கிறக்கத்தைல் ஆழ்ந்து கடமையை மறந்தவர்கள் அனைவரும் அழிந்தார்கள். அறிவிற் சிறந்தவன், வீரத்தில் உயர்ந்தவன், பண்பில் மேம்பட்டவன், இப்படி எவ்விதச் சிறப்புக்கு உரியவர்களாக இருந்தாலும் சரி, கடமையை மறந்து காதலில் ஈடுபட்டவன் தன் அழிவுக்குத் தானே அடிகோலிக் கொள்கிறான் என்றுதான் சொல்லவேண்டும். வீர திலகமாக விளங்கி, சோழநாட்டின் பெருமையைக் கடல் கடந்து முழங்கச் செய்து நமது குலோத்துங்கனும் அவ்வாறு தான் மோகக்கிறக்கத்தில் தனது அழிவுக்கு அடிகோலிக் கொண்டிருந்தான். ஆம், விக்கிரமாதித்தன் விரித்துக் கொடுத்து மாபப்பாளத்து மன்னன் மகிபாலனால் பரப்பப்பட்ட சூழ்ச்சி வலையில் அவன் தெரிந்தே விழுந்து அழிந்து கொண்டிருந்தான்.

நாடோடி ஆரணங்கு ஒருத்தியுடன் நட்புக்கொள்கிறோம்; அவளைப் பிரியேன் என்று மட்டுமே வாக்குறுதி அளித்திருப்பதால், போர்ப்படை செல்லும் இடத்துக்கெல்லாம்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவளை உடன் அழைத்துச் சென்று நமது வாக்குறுதிக்கு மாறு நேராதவாறு செய்து கொள்ளலாம்; திக்கு விசயத்தை முடித்துக்கொண்டு திரும்புங்காலில் அவளையும் சோழநாட்டுக்கே அழைத்துச் சென்று விடலாம் என்றெல்லாம் மனத்தைத் திடம் செய்துகொண்டுதான் அவன் ஏழிசை வல்லபியோடு வாழ்க்கையில் இறங்கினான். புது மோகம் என்று சொல்லுவார்களே, அந்தத் துவக்க கால மையலில் மெய்ம்மறந்து சில நாட்களைத் தள்ளினான். சோழப்படை தண்டிறங்கியிருந்த தக்கோல் நாட்டு எல்லைப் பகுதியில் குலோத்துங்கனுக்காக அமைக்கப்பட்டிருந்த பாசறையிலேயே அவர்கள் பாசம் வளர்ந்தது; காதல் மலர்ந்து விகசித்தது.

குலோத்துங்கன் தன் மையலில் நன்றாகச் சிக்கி விட்டான் என்பதை உணர்ந்ததும் ஏழிசைவல்லபி என்று சிறப்புப் பெயர் சூட்டப்பட்டிருந்த மகிபாலனின் சகோதரி கனிவாய் மொழி இனித் தன்னைக் காட்டிக்கொள்ளலாம் என்று துணிந்தாள். அவள் வகுத்த திட்டப்படி ஒருநாள் குலோத்துங்கனின் பகை மன்னனான மகிபாலன் அரசாங்க வரிசைகளுடன் அவனுடைய பாசறைக்கு வந்து சேர்ந்தான். பகை மன்னர் வரிசைகளுடன் தன்னைக் காண வந்தபோது அவன் தன்னைச் சரணடைய வந்திருக்கிறான்; ஸ்ரீவிசய ராச்சியத்தின் கடைசி நாடும் நமது அடி பணிந்துவிட்டது: இனிச் சோழநாட்டுக்குத் திரும்பலாம் என்றுதான் குலோத்துங்கன் எண்ணினான். அந்த எண்ணத்தோடுதான் அவனை வர விடுமாறு காவலர்களுக்குக் கட்டளை பிறப்பித்தான். ஆனால் உள்ளே வந்த மகிபாலன், “மருகரே!” என்று தன்னைத் தாவி அணைத்துக்கொண்டபோது அவன் திகைத்தான்; திடுக்கிட்டான்.

அருகில் நின்றிருந்த ஏழிசைவல்லபி, “அண்ணா!” என்று மகிபாலனை அழைத்தது அவனைப் பின்னும் திகைப்படையச் செய்தது. ‘என்ன இதெல்லாம்? இந்தத் தக்கோலத்து நாடோடி ஆடணங்கு மகிபாலனின் சோதரியா?’ என்று அவன் குழம்பினான்.

அவன் குழப்பத்தை அவர்கள் நீடிக்க விடவில்லை. குழப்பம் விழுப்பம் தரும் என்பதை உணர்ந்து உடனே தங்கள் நாடகத்தின் பிற்பகுதியை நடிக்கத் தொடங்கினர். “என்னை மன்னித்துவிடு சகோதரி. உன் பெருமை அறியாமல் உன்னை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டேன்,” என்று ஏழிசைவல்லபியின் கரங்களைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினான் மகிபாலன். பின்னர் அவன் குலோத்துங்கனை நோக்கி, “சோழ சேனாதிபதி, நீங்களும் என்னைப் பொறுத்தருள வேண்டும். ஆடல்-பாடல் எல்லாம் அரசகுலப் பெண்டிருக்கு ஏற்றதல்லவென்று என் சகோதரிக்கு எவ்வளவோ எடுத்துச்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

சொன்னேன். அவள் என் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்காமல் அக்கலைகளில் தொடர்ந்து ஈடுபடவே, 'போ! போய், கூத்தாடியாகவே உன் காலத்தைத் தள்ளு!' என்று அரண்மனையிலிருந்து விரட்டி விட்டேன். ஆனால் அந்தக் கலைகள் வீரத்தின் சிகரமான தங்களைக் கவரும்; என் கனிவாய் மொழியைத் தாங்கள் மனைவியாக்கிக் கொள்ளுவீர்கள் என்பதை அப்போது அறிந்தேனில்லை. சோழச் சேனாதிபதி, இனி மாபப்பாளம் உங்கள் பகை நாடல்ல; உங்கள் மனைவியின் பிறந்த வீடு. தாங்களும் கனிவாய்மொழியும் என்னுடன் இப்பொழுதே வந்து உங்கள் இல்லற வாழ்வை அங்கே இன்பமாகக் கழிக்க வேண்டும்," என்று குழைந்தான்.

குலோத்துங்கனுக்கு ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. வியப்பாலும் திகைப்பாலும் அவனுடைய வாய் அடைத்துப் போயிற்று. அவன் தயக்கம் ஏழிசைவல்லபியைக் கலங்க வைத்தது. எங்கே இந்த உண்மை வெளியானதன் காரணமாக அவன் தன்னைப் பிரிந்துவிடுவானோ என்று அவள் அஞ்சினாள். ஏனென்றால் அண்ணனின் சூழ்ச்சி இதனால் தவிடு பொடியாவது ஒருபுறம் இருக்கட்டும்; அப்பொழுது அவளே குலோத்துங்கனைப் பிரிய முடியாத ஓர் இணைப்பு நிலையை நோக்கி விரைந்து கொண்டிருந்தாள். எனவே அவள் சொன்னாள்: "என் ஆருயிரே! பகைநாட்டுப் பெண் என்பதற்காக என்னைத் தயைசெய்து ஒதுக்கி விடாதீர்கள். நான் அந்நாட்டைத் துறந்து உங்களையே சதமென்று வந்தடைந்திருப்பவள். உங்களுக்கு மாபப்பாளத்துக்குப் போகப் பிரியமில்லையென்றால் நாம் இங்கேயே இருப்போம். நான் மாபப்பாளத்து இளவரசி என்பதையே நீங்கள் மறந்துவிடுங்கள். அது உங்களுக்குத் தெரிந்து உங்கள் உள்ளத்தில் சந்தேகங்கள் முளைக்கலாகாது என்றே நான் இன்றுவரை அதை உங்களுக்கு மறைத்து வந்தேன். உங்கள் மீது கொண்ட மாறா மையலால் செய்த அப்பிழையைப் பொறுத்து எப்போதும்போல் என்னை ஆட்கொள்ளுங்கள்!" - அவள் அவன் கால்களில் விழுந்து கதறத் தொடங்கினாள்.

பெண்ணின் கண்ணீருக்குத்தான் என்ன வல்லமை! குலோத்துங்கனின் திட்டத்தையெல்லம் அது அந்தக் கணத்திலே கரைந்துவிட்டது. மோகத்தின் கிறக்கம் அவனைப் பித்தனாக்கிவிட்டது. அவன் தன் வீரத்தை மறந்தான்; நாட்டை மறந்தான்; நாட்டிலே இருந்த ஆசை மனைவியை மறந்தான்; மைந்தர்களை மறந்தான். எல்லாவற்றையும் மறந்து மாபப்பாளத்துக்குப் புறப்படத் தயாராகிவிட்டான். ஆனால்...?

உடனிருந்த சோழநாட்டுப் படைத்தலைவர்கள் அவனைத் தடுக்க முயன்றனர். இதில் ஏதேனும் சூழ்ச்சி இருக்கலாமென்று எடுத்துரைத்தனர். ஏழிசைவல்லபி

இன்றுவரைத் தன்னை யாரென்று காட்டிக் கொள்ளாதிருந்தது: தன்னைப் பிரியேனென்று வாக்குறுதி பெற்றிருப்பது இரண்டையும் தொகுத்துக் காட்டித் தங்கள் ஐயத்துக்குச் சான்று தந்தனர். மாபப்பாளத்தை அடிமைப்படுத்திவிட்டுத் தாங்கள் நாடு திரும்ப வேண்டியிருப்பதைக்கூட அவனுக்கு நினைவூட்டினர். ஆனால் மோகத்திரைதான் அப்போது குலோத்துங்கனின் வீரம், அறிவு, மதிநுட்பம், எல்லாவற்றையுமே குடத்தினுள் தீபமாக மங்கிப் போகச் செய்திருந்ததே. அவன் தன் படைத்தலைவர்களின் சொற்களைச் சிறிதும் சட்டை செய்யவில்லை. மாபப்பாளத்துக்குத் தான் கிளம்பியதோடு நில்லாமல், தனது படையும் அங்கே வந்து தங்கிவிட வேண்டுமென்று கட்டளையிட்டு விட்டான். பொருது கொண்டு வந்திருக்கையில் சேனாதிபதியின் கட்டளையை மீறுவது ராசத்துரோகமாகும்; எனவே சோழப் படையினர் மறு பேச்சின்றி மாபப்பாளத்துக்குப் பயணப்பட வேண்டியதாயிற்று.

மாபப்பாளத்தில் தன் படைகளை அந்நாட்டின் பாதுகாப்புப் படைகளாக நிறுத்திவிட்டு ஏழிசை வல்லபியின் எழிலுருவுக்கு முற்றிலும் அடிமையாகிக் கிடந்தான் குலோத்துங்கன். நாட்கள் பறந்து கொண்டிருந்தன. தான் மேற்கொண்டு வந்த பணியின் நினைவோ, நாட்டின் நினைவோ, மனைவி-மக்களின் நினைவோ, ஒன்றுமே ஏற்படவில்லை அவனுக்கு. இன்பம், இன்பம், இன்பம் இது ஒன்றுதான் அப்போது அவன் விருப்பாக இருந்தது; விடாயாக நிலைத்தது.

இந்தச் சிக்கலான போதில்தான் சோழநாட்டின் கொந்தளிப்பான நிலையை விளக்கி அவனை உடனே அங்கே புறப்பட்டு வரச்சொல்லி அங்குள்ள அரசியல் தலைவர்களின் ஓலையும், வீரராசேந்திரரின் இறுதி விருப்பத்தைத் தெரிவித்து மதுராந்தகி விடுத்திருந்த அன்பும் காதலும் கலந்த அழைப்போலையும் குலோத்துங்கனுக்கு வந்தன. அவ்வோலைகள் அவனது மோகத்திரையைச் சிறிது விலக்கின; மனச்சான்றைத் தட்டி எழுப்பின. தன்னை வளர்த்த நாடு, தான் பணிபுரியும் நாடு, தலைமுறை தலைமுறையாக இல்லாத பேராபத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறது என்ற செய்தி அவனை உலுக்கியது. வயதிலும், அறிவிலும், அனுபவத்திலும், ஆற்றலிலும் மிகுந்த எத்தனையோ தலைவர்கள் இருக்க, தனது மாமன் நாட்டைக் காக்கும் பணியைத் தனக்கு இட்டுவிட்டுப் போயிருப்பது அவனை இறும்பூறு கொள்ளச் செய்தது.

உடனே அவன் ஏழிசைவல்லபியிடம் சென்றான். கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து வந்திருந்த ஓலைகளைக் காட்டினான். நாட்டைக் காக்கத் தான் அங்கு செல்ல வேண்டியிருப்பதை எடுத்துரைத்தான். அவன் செய்ததெல்லாம் சரிதான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஆனால் அந்த அறிவற்றவன் மதுராந்தகியின் ஓலையை ஏன் அவளிடம் காட்டினான்? உலகிலே பல தாரங்களைக்கொண்ட மனிதனின் எந்த இரு மனைவியரும் ஒத்துப் போனதில்லை என்ற உண்மை ஏன் அவனுக்குத் தோன்றாமல் போயிற்று?

ஆம், தவறு இங்கேதான் பிறந்தது. தன் அண்ணனின் அரசியல் சூழ்ச்சிக்காக குலோத்துங்கனை இங்கேயே நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையை ஏழிசைவல்லபி எப்போதோ காற்றோடு விட்டுவிட்டாள். தன் வரையில் அவன் எப்போதும் இணைபிரியாது இருக்க வேண்டும் என்பதுதான் இப்போது அவளுடைய வேட்கையாக இருந்தது. ஆதலால் குலோத்துங்கன் அவளையும் தன்னுடன் சோழநாட்டுக்குக் கூட்டிச் செல்லப் போவதாகச் சொன்னபோது அவள் மறுதலிபின்றி அதற்கு இணங்கியே இருப்பாள். அங்கே அவன் சோழகுல மங்கையான மதுராந்தகியை மணந்திருப்பதும், அவர்களுக்கு மைந்தர்கள் இருப்பதும் அவளுக்குத் தெரியாதவை அல்ல. இருப்பினும் குலோத்துங்கன் தன்மீது காட்டி வந்த அன்பிலிருந்து மதுராந்தகியைவிடத் தன்மீதுதான் அவனுக்குக் காதல் அதிகமாக இருக்கிறது என்று அவள் நம்பியிருந்தாள். சோழநாடு சென்ற பிறகும் அந்த அன்பு குன்றாது என்ற திடமும் அவளுக்கு இருந்தது. ஆனால் இப்போது மதுராந்தகியின் ஓலையைப் படித்தபோது அவளுடைய அந்த நம்பிக்கைகள் மலையிலிருந்து உருண்ட மட்பாண்டமாகச் சிதறிப்போய்விட்டன.

ஆம், மதுராந்தகி கணவனுக்குக் காதல் நினைவை எழுப்பி அவனை விரைந்து வரச் செய்ய வேண்டுமென்ற கருத்துடன் திருமண காலந்தொட்டுத் தாங்கள் நிகழ்த்திய காதல் களியாட்டங்களையெல்லாம் விவரித்திருந்தாள். அவை ஒவ்வொன்றும் குலோத்துங்கன் அவள்பால் எத்தனை வற்றாத அன்பு கொண்டிருந்தான் என்பதை ஏழிசைவல்லபிக்குத் தெளிவாக எடுத்துக்காட்டின. அது மட்டுமின்றி, இப்போது மதுராந்தகியின் முயற்சியால் சோழ அரியணையே அவனுக்குக் கிட்டப்போகிறது. இத்தகைய நிலையில் அவனை அங்கே போக விட்டாலோ, அல்லது தான் உடன் சென்றாலோ கூட மதுராந்தகியின் அன்புக்கடலில் அவன் மீள முடியாமல் சிக்குவதைத் தவிர்க்க இயலாது என்று அவள் தெளிந்தாள்.

எனவே, குலோத்துங்கனோடு சிரித்துப் பேசிக்கொண்டிருந்த அவள் இந்த ஓலைகளைப் படித்ததும் ஓவென அழத் தொடங்கினாள். அவனை இறுக்கி அணைத்துக்கொண்டு “உங்களை எங்கும் போகவிட மாட்டேன். நானும் சோழ நாட்டுக்கு வர மாட்டேன். அங்கே போனால் நீங்கள் மீண்டும் மதுராந்தகியின் பொருளாகி விடுவீர்கள்!” என்று பிரலாபித்தாள்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவள் மீதுள்ள அன்பு தன்னிடமிருந்து ஒருபோதும் மாறாது என்று குலோத்துங்கன் எவ்வளவோ எடுத்துச் சொன்னான். "அந்த அன்பு மாறாதென்றால் நீங்கள் எனக்கு அளித்த வாக்குறுதியை மீறி, என் அநுமதியின்றி எங்கும் போகக்கூடாது. அப்படிப் போவதாக இருந்தால், நீங்கள் புறப்படுமுன் என் பிணம் உங்கள் காலடியில் உருளும்," என்று தீவிரமாக உரைத்தால் அவள்.

'பிணம்' என்ற அச்சொல் குலோத்துங்கனைச் சட்டென்று பின்னடிக்கச் செய்துவிட்டது. பல திங்கள்களாக அவனுக்கு இன்பச் சுரங்கமாக விளங்கி வந்தவள் அவனுடைய பிரிவைத் தாளாமல் பிணமாவாள் என்பதை எண்ணியபோது மீண்டும் அவன் உணர்ச்சிகளையெல்லாம் மையல் திரை மூடிவிட்டது. இனி எந்நாளும் தான் சோழ நாட்டுக்குத் திரும்பப்போவதில்லை என்றும், இந்த மாபப்பாள நாடும் ஏழிசைவல்லபியுந்தாம் இனித் தன் உயிர் என்றும் தன்னை மறந்து விடுமாறும் மதுராந்தகிக்குப் பதில் ஓலை ஒன்று எழுதி கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து வந்திருந்த வீரனிடம் கொடுத்துவிட்டு, மாபப்பாளத்தில் தங்கியிருந்த சோழப்படையினரையும் அவனுடன் மரக்கலமேற்றி நாட்டுக்குத் திருப்பி அனுப்பிவிட்டான்.

## அத்தியாயம் – 7. அதிராசேந்திரன்

**சோ**ழ நாட்டின் சரித்திரத்திலே அந்த ஆண்டு மிகவும் குழப்பமான ஆண்டு. அரச மாளிகையில் வதிந்தவர்கள் முதல் சாதாரணக் குடிமக்கள் வரையில் அப்போது மிகவும் மனக் குழப்பமான நிலையில் இருந்தனர். அடுத்து என்ன நடக்கப்போகிறதோ? அது நமக்கு இயைந்ததாக அமையுமா, அல்லது எதிராக அமையுமா என்பதை எல்லைக்கட்டிச் சொல்ல முடியாத நிலையில் ஒவ்வொருவரும் இருந்தனர்.

சோழகேரளன், முடிகொண்ட சோழன் ஆகிய இரு அரச மாளிகையிலும் வாழ்ந்தவர்கள் இரு வெவ்வேறான மனப்போக்குடன் இருந்தனர். சோழகேரளன் அரண்மனை வாசிகள் மதுராந்தகனை அரியணையில் அமர்த்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். முடிகொண்ட சோழன் அரண்மனை வாசிகளோ அரியணையில் குலோத்துங்கன் அமர வேண்டும் என்று விரும்பினர். முன்னவர்களுக்குச் சளுக்கிய விக்கிரமாதித்தனின் ஆதரவும் பக்கபலமும் இருந்தன. பின்னவர்களுக்கோ, சோழ



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

மக்களின் சொல்லில் அடங்காத கொதிப்புப் பக்க பலமாக அமைந்திருந்தது. அரசியல் அதிகாரிகளும் பின்னவர் பங்கிலேயே இருந்தனர் - ஆனால், மறைமுகமாக!

முன்னவர்கள் விக்கிரமாதித்தனுக்கு ஓலை அனுப்பிவிட்டு, அவன் வருகையை எதிர்பார்த்து மதுராந்தகனின் முடிசூட்டு விழாவைத் தள்ளிப் போட்டுக் கொண்டிருந்தனர். முடிகொண்ட சோழன் மாளிகை வாசிகளும், அரசியல் அதிகாரிகளும், குடிமக்களும் ஸ்ரீவிசய நாட்டிலிருந்த குலோத்துங்கனுக்கு ஓலை அனுப்பிவிட்டு அவனுடைய முடிசூட்டுதலுக்கு அவன் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்தனர்.

ஒவ்வொருவரும் அடுத்து என்ன நிகழும் என்பதை அறுதியிட்டுச் சொல்ல இயலாதவர்களாக இருந்தனர். சோழகேரளன் அரண்மனைவாசிகளான அருமொழி நங்கைக்கும் மதுராந்தகனுக்கும், மக்கள் மறுபடியும் வீறுகொண்டு எழுமுன், விக்கிரமாதித்தன் போதிய படைப்பலத்துடன் வந்து முடிசூட்டு விழாவை நடத்தி வைக்க வேண்டுமே என்ற கவலை பெரிதாக இருந்தது. அதுபோலவே பின்னவர்கட்கு, எங்கோ நெடுந்தொலைவில் கடல் கடந்த நாடான மாபப்பாளத்தில் இருக்கும் குலோத்துங்கன், அரசியும் இளவரசன் மதுராந்தகனும் மீண்டும் முடிசூட்டு விழா முயற்சியில் ஈடுபடுமுன் வந்துசேர வேண்டுமே எனற மனப்பயம் உள்ளூர உதைத்துக்கொன்டிருந்தது.

இப்படி இரு தரப்பாரும் தங்கள் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள எங்கோ இருக்கும் இருவரை எதிர்பார்த்து, அவர்கள் வந்து சேருமுன் என்ன நிகழ்ந்து விடுமோ என்று அஞ்சிக் கொண்டிருந்த நிலையிலேயே, இரண்டு திங்கள் ஓடிவிட்டன. அதன் பிறகு முதன் முதலாக அயல்நாட்டிலிருந்து செய்தி பெற்றவர்கள் மதுராந்தகியின் கட்சியைச் சார்ந்தவர்கள்தாம். ஆம், மாபப்பாள நாட்டுக்குச் சென்றிருந்த தூதன் அங்கே குலோத்துங்கனோடு தங்கியிருந்த படைகளோடு கங்கைகொண்ட சோழபுரத்துக்குத் திரும்பி வந்தான். புலிக்கொடி தாங்கிய படை வந்து கொண்டிருப்பதைக் கண்டதும் நகரத்து மக்களும், அரசியல் அதிகாரிகளும், முடிகொண்ட சோழன் அரண்மனை வாசிகளும் குலோத்துங்கன்தான் வருகிறான் என்றும், இனி அவனை அரியணையில் அமர்த்திச் சோழநாட்டின் வீர பாரம்பரியத்தை நிலைநிறுத்திக் கொள்வது அத்தனை கஷ்ட்டமில்லையெனவும் மகிழ்ந்தனர். அதேபோது, அருமொழி நங்கையும் மதுராந்தகனும் “ஐயோ! இந்தச் சிக்கலான போதில் குலோத்துங்கன் வந்து விட்டானே? இனி வெறி கொண்டிருக்கும் மக்கள் நம்மை நாட்டைவிட்டே துரத்திவிட்டு அவனை வலுக்கட்டாயமாக அரியணையில் அமரச் செய்துவிடுவார்களே?” என்று உள்ளம் நடுங்கினர். பாவம், அவ்விரு கட்சியினருக்கும், ‘வரும் படையில் குலோத்துங்கன்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இல்லை, இனி எந்நாளும் அவன் இச்சோழ மண்ணில் அடியெடுத்து வைக்க மாட்டான்' என்பது எங்ஙனம் தெரியும்?

அது தெரிந்தபோது முன்னவர் துடித்தனர்; பின்னவர் களித்தனர். மாபப்பாளத்துக்குச் சென்றிருந்த தூதன் கங்கைகொண்ட சோழபுரத்துக்குத் திரும்பிய அன்றிரவு முடிகொண்ட சோழன் அரண்மனையில் அரசியல் தலைவர்களும், நாட்டுப் பிரமுகர்களும் கொண்ட இரகசியக் கூட்டம் ஒன்று கூடியது. மேலே என்ன நடவடிக்கை எடுப்பது என்பதை ஆலோசித்து முடிவுறுத்தவே அவர்கள் கூடியிருந்தனர். அக்கூட்டத்துக்கு மதுராந்தகி வரமாட்டாள்; கணவனின் ஓலையால் அவள் மனமுடைந்து போயிருப்பாள் என்றே எல்லோரும் கருதியிருந்தனர். ஆனால் அவர்கள் எண்ணத்துக்கு மாறாக அவள் வந்தாள். முகத்தாமரையில் சிறிதாவது வாட்டமோ, உள்ளக்குமறலின் எதிரொலியோ ஏதுமின்றி அவள் அக்கூட்டத்துக்கு வந்தாள்.

இருந்தாலும் ஒருவருக்காவது அவளுடைய முகத்தை ஏறிட்டு நோக்கவோ, அல்லது அவள் முன் தங்கள் மேல் நடவடிக்கைகளைப் பற்றி விவாதிக்கவோ துணிவு வரவில்லை. அது வெளியிட முடியாமல் குமுறிக்கொண்டிருக்கும் அவளுடைய துயரைக் கிளறிவிடும் என்று அவர்கள் அஞ்சினார்கள். இவ்வாறு சிறிது பொழுது அமைதியாகக் கழிந்தது. பின்னர் மதுராந்தகியே பேசத் துவங்கினாள்: "குழந்தையின் முன் தின்பண்டத்தைக் காட்டி, அது அதைத் தருமாறு கைநீட்டும்போது தன் வாயில் போட்டுக்கொண்டு விடுவது போல், உங்களுக்கெல்லாம் ஆசைகாட்டி மோசம் செய்துவிட்டேன், பெரியோர்களே! அதற்காக என்னைப் பொறுத்தருள்க. இப்போது நீங்கள் மேலே செய்ய வேண்டியதைப்பற்றி ஆலோசிக்கக் கூடியிருப்பதாக அறிந்தேன். இம்மாதிரி நாட்டுப்பற்றுக் கொண்டவர்கள் அடங்கிய கூட்டத்தில் கலந்து கொள்ள எனக்கு இனித்தகுதியில்லை என்றாலும், மேல் நடவடிக்கைகளைப் பற்றி என் உள்ளத்தில் தோன்றிய ஒரு கருத்தைத் தெரிவித்துவிட்டுப் போகலாமென்று வந்தேன். நீங்கள் அனுமதி வழங்கினால் அதைக் கூறுகிறேன்."

இவ்வாறு அவள் பேசியபோது அவளுடைய குரலில்கூடச் சிறிதளவும் துயரத்தின் சின்னம் இல்லாதது கூடியிருந்தோரை வியப்பில் ஆழ்த்தியது. அவள் ஏதோ அரியதொரு கருத்துடன், தங்கள் விருப்பம் நிறைவேறுவதற்கான எளிய வழி ஒன்றுடன் வந்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் நினைத்திருந்தனர். எனவே தலைமை அமைச்சர் தனபராக்கிரம வேளாண் எழுந்து, "சொல்லுங்கள் இளவரசி. நாட்டின் மீது எங்களைவிட



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அதிகமான பற்றுக்கொண்ட உங்கள் சொற்களுக்கு எந்நிலையிலும் நாங்கள் உரிய மதிப்பளித்து நடப்போம்," என்றார்.

மதுராந்தகி முறுவலித்தாள்: "இந்நாடு பிறநாட்டான் கைக்குப் போகக்கூடாது என்ற எண்ணம் உங்களுக்கு இன்னும் இருக்கிறதா?" என்று அவள் வினவினாள்.

"இது என்ன கேள்வி குழந்தாய்? அதற்காகத்தானே நாங்கள் மீண்டும் இப்போது இங்கே கூடியிருக்கிறோம்?" என்றார் அரசவைப் புலவர் வேணகோ வாணவராயர்.

மதுராந்தகியின் இதழ்க் கடையில் மறுபடியும் ஒரு முறுவல் நெளிந்தது. "அவ்வாறாயின், பெரியோர்களே, என் கருத்து இதுதான்; இனி மதுராந்தகனே இந்நாட்டை ஆளட்டும்."

"தேவி!"

"இளவரசி!"

"குழந்தாய்!"

"வேங்கிப் பிராட்டி!"

இவ்வாறு கூட்டத்தின் பல மூலைகளிலிருந்து பலவித அதிர்ச்சிக் குரல்கள் ஒரே சமத்தில் எழுந்தன.

மதுராந்தகி அவர்களை அமைதியாக இருக்குமாறு கை காட்டினாள். பிறகு சொன்னாள்: "'சீ! சீ! இந்தப் பழம் புளிக்கும்,' என்ற நரியின் நிலையில் நான் இப்படிக் கூறவில்லை, பெரியோர்களே! உண்மையான அக்கறையோடுதான் சொன்னேன். சற்றே சிந்தித்துப் பாருங்கள். இப்போது நீங்கள் மதுராந்தகன் முடிசூடிக்கொள்வதைத் தடை செய்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், அதன் பிறகு இந்நாட்டை யார் தகுதியுடன் ஆளப்போகிறார்கள்? அரசுரிமையற்ற, ஆனால் அரசகுலத்தில் பிறந்த முடிகொண்ட சோழன் போன்ற யாரையாவது அரியணையில் அமர்த்தி விடுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். பிறகு என்ன நடக்கும் தெரியுமா? மதுராந்தகன் குந்தள விக்கிரமாதித்தனிடம் போய் முறையிட்டுக் கொள்வான். அல்லது அவன் முறையிடு முன்பே விக்கிரமாதித்தன் இந்நாட்டை அபகரித்துக்கொள்ள இதுதான் தருணம் என்று படையெடுத்து வருவான். அரண்மனைக்குள்ளேயே இரண்டு கட்சிகள் இருப்பதால் நமது படைப்பலம், நமது குறைபாடுகள் எல்லாம் அவனுக்கு மிக எளிதாக எட்டிவிடும். என்னதான் நீங்கள் வீரத்தில் குன்றியவர்களாக இல்லாத போதிலும் நமது குறைபாடுகளை உணர்ந்த அவன் நம்மை எளிதில் தோற்கடித்துவிடுவான். நேர் மாறாக, நான் சொல்லுகிறபடி மதுராந்தகனையே அரசாள விட்டீர்களானால், விக்கிரமாதித்தன்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

என்னதான் இந்நாட்டை வஞ்சகமாகக் கைப்பற்றிவிட முயன்றாலும், ஆளும் மன்னனின் பக்கபலம் நம் பங்கிலேயே இருக்கும். நமது படைநிலை, அதிலே உள்ள நெளிவு-சுளிவுகள் போன்ற, போரின் வெற்றிக்கு இன்றி அமையாத இரகசியங்கள் அவன் வரையில் எட்டாமல் நாம் பார்த்துக் கொள்ளலாம். அவையின்றி, அவன் போருக்கு வந்தால், உங்கள் வீரம் அவனைக் கணத்தில் வீழ்த்தி விரட்டிவிடும். நான் கூறியதன் பொருள் இப்போது உங்களுக்கு விளங்கிற்றா?"

"அது விளங்கிற்று, இளவரசி. இருந்தாலும் கோழையிலும் கோழையான மதுராந்தகனிடம் நாட்டை ஒப்படைப்பது, கனிந்தெரியும் கட்டையால் தலையை சொறிந்து கொள்வதுபோல் ஆகாதா?" என்று மூவேந்த வேளார் என்ற அரசியல் அதிகாரி கேட்டார்.

"ஆம்; அதை நானும் அறிவேன். ஆனால் நான் கூறுவது மதுராந்தகனை என்றென்றுமே இந்நாட்டு அரியணையில் இருக்கச் செய்ய வேண்டும் என்பதல்ல. நாம் யாரை இந்நாட்டின் காவலனாக்கக் கருதி, இவ்வரியணையில் அமர்த்தத் திட்டமிட்டோமோ அவர் இங்கே வந்து அவர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் வரையில், எவ்வித கிளர்ச்சியும் செய்து நாடு அயலானிடம் போய்விட வாய்பளிக்கதீர்கள் என்று தான் கேட்டுக்கொள்கிறேன். பெரியோர்களே, சில ஆண்டுகளுக்கு முன், இன்று விக்கிரமாதித்தனின் மனைவியாக இருக்கும் வானவியின் முன் நான் ஓர் ஆணையிட்டேன். என் கணவருடன் ஒரு நாளேனும் இந்தச் சோழ நாட்டின் அரியணையில் அமர்ந்து காட்டுவதாகச் சபதம் செய்தேன். அந்த ஆணையையே என் காதலாக, என் வாழ்வாகக் கொண்டு, அதை நிறைவேற்ற வாய்ப்புக்களைத் தேடியவாறு இன்றுவரை இருந்து வருகிறேன். எத்தனையோ வாய்ப்புக்கள் வந்தன; ஆனால் அவை கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாமல் போய்விட்டன. இனி என் ஆணையை நிறைவேற்ற வாய்ப்பே இல்லை என்ற நிலைகூட இன்று ஏற்பட்டு விட்டது. இத்தகைய தீவிரமான நிலையில் நான் ஒரு துணிகரமான முடிவுக்கு வந்திருக்கிறேன். அது தன்னல நினைவு என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்; அல்லது நாட்டின் நலத்துக்கானது என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். நாளைப் பொழுது புலரும்போது நான் இங்கே இருக்கமாட்டேன். இதுவரை எந்தப் பெண்ணும் செய்திராத நெடும்பயணத்தை மேற்கொண்டு என் கணவரை இந்நாட்டுக்கு அழைத்து வருவதற்காக மாபப்பாளத்துக்குப் போகப் போகிறேன். நான் செல்லும் முயற்சியில் ஒன்று வெற்றி காண்பேன்; அல்லது என் உயிரை அதற்கு ஈடு கொடுப்பேன். அந்த இரண்டிலொன்று



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

நடந்தே தீரும். ஆதலால் தயவு செய்து என்னைப்பற்றிய, என் முயற்சியைப் பற்றிய முடிவு தெரியும் வரையில், நீங்கள் ஊடே புகுந்து, நாடு பிறனிடம் சிக்கிவிடும் நிலையை ஏற்படுத்தாதிருக்கக் கேட்டுக் கொள்கிறேன். அதற்காகத்தான், மதுராந்தகனே அதுவரையில் இந்நாட்டை ஆளட்டும் என்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்."

மதுராந்தகி தந்த இந்த நீண்ட விளக்கம், அவளுடைய உருக்கமான வேண்டுகோள், அதிலே பொதிந்திருந்த மாசற்ற நாட்டுப்பற்று, எமனின் பின் சென்று வாதாடிக் கணவனின் உயிரை மீட்ட சாவித்திரியைப் போல் கடல் கடந்து சென்று கணவனை மீட்டுவர அவள் கொண்டிருந்த துணிச்சல், அதிலிருந்த தீவிரம், அவளுடைய திறமையில் தங்களுக்கு இருந்த நம்பிக்கை-இவையெல்லம் சேர்ந்து, அன்று அங்கு கூடியிருந்தோரை அவளுடைய கோரிக்கைக்கு இணங்க வைத்தன. சொன்னபடி மறுநாள் பொழுது புலருமுன்னரே தன் மைந்தர்களுடன் அவள் ஸ்ரீவிசய நாட்டுப் பயணத்தை மேற்கொண்டு, மரக்கலம் ஏறும் பொருட்டு, பல்லக்கில் அருகிலிருந்த கடற்கரை நகரை நோக்கிச் சென்றாள்.

மதுராந்தகி மாபப்பாளத்துக்குச் சென்ற இரண்டொரு நாட்களுக்கெல்லாம் கல்யாணபுரத்திலிருந்து குந்தள விக்கிரமாதித்தன் பெரும் படை ஒன்றுடன் கங்கைகொண்ட சோழபுரத்துக்கு வந்து சேர்ந்தான். எவ்வித இடையூறும் இன்றி மதுராந்தகன் *அதிராசேந்திரன் என்ற அபிடேகப் பெயருடன் சோழநாட்டின் மகிபனாக முடிசூட்டப்பட்டான். வாய்ப்புக்கள் எல்லாம் தங்களுக்கு ஏற்றவாறு அமைந்து விட்டதாகவும், இனி அதிராசேந்திரனும் அவனுடைய பரம்பரையும் சோழ நாட்டின் அரசுரிமை பெற்றவர்கள் ஆகிவிடுவார்கள் என்றும் பெரிய பிராட்டி அருமொழிநங்கையும், அவளுடைய மருமகன் குந்தள விக்கிரமாதித்தனும் பெருமையும், மன அமைதியும் அடைந்தனர். அந்த அமைதியுடன் விக்கிரமாதித்தன் குந்தள நாட்டுக்குப் புறப்பட்டான். ஆனால் இவர்களது பெருமை, நிறைவு எல்லாவற்றுக்கும் எதிராக இருந்ததே விதி!

(*வீரராசேந்திரரின் மக்களில் ஒருவன் அதிராசேந்திரன் என்ற அபிடேகப் பெயருடன் சோழ நாட்டின் மன்னன் ஆனதாகச் சரித்திர ஏடுகள் கூறுகின்றன. அந்த அதிராசேந்திரன் மதுராந்தகனே என்று நான் இக்கதையின் பொருட்டு எடுத்துக்கொண்டுள்ளேன்.)

மணிமுடி தரித்துச் சில நாட்கள் ஆகுமுன்னரே, இதுவரை புரிந்து வந்த திருவிளையாடல்கள் காரணமாக அதிராசேந்திரன் கொடிய சரும நோயால்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

அவதிப்படலானான். எத்தனையோ மருத்துவங்கள் செய்தும் அவன் நோய் நீங்கப் பெறவில்லை. மாறாக, படிப்படியாக அதிகரித்து, அவனை அரசியல் அலுவல்கள் எதிலும் ஈடுபட முடியாதவனாய்ப் படுக்கையில் கிடத்திவிட்டன. பின்னும் சில திங்கள்கள் வரையில் நோயுடன் போராடிவிட்டு அவனது உயிர் உடற்கூண்டிடம் விடை பெற்றுக்கொண்டது. மீண்டும் ஒரு தடவை சோழப் பேரரசு தலைவனை இழந்து தத்தளித்தது. மனிதர்கள் திட்டமிடுகிறார்கள்; பல இன்னல்களைத் தாங்கி, பல முயற்சிகள் செய்து அவற்றை நிறைவேற்றுகிறார்கள். ஆனால் நிறைவேற்றிக் கொண்ட திட்டத்தை, இருந்து அநுபவிக்கச் செய்வது இறைவன் கையில் அல்லவா இருக்கிறது!

## அத்தியாயம் – 8. ஆணை நிறைவேறியது!

**மா**பப்பாளத்தை வந்தடைந்தாள் மதுராந்தகி. அவள் வருகையைக் குலோத்துங்கன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. மகிபாலனின் மாளிகையிலே தன் ஆசைக்கிழத்தி ஏழிசைவல்லபியுடன் அவன் சல்லாபித்துக் கொண்டிருக்கையில் தன் மக்களுடன் அங்கு நுழைந்தாள் மதுராந்தகி. "அப்பா!" என்று தாவி வந்து அவன் கால்களைக் கட்டிக்கொண்ட சிறுவர்களை வியப்புடன் நோக்கிய ஏழிசைவல்லபி, மறுகணமே வந்திருப்பவள் யாரெனத் தெரிந்து கொண்டு விட்டாள். உடனே அவளுடைய உள்ளமும் அலையிடைத் துரும்பாகத் துடிக்கத்தான் செய்தது. 'என் சக்களத்தி - குலோத்துங்கனின் பேரன்புக்குப் பெரிதும் பாத்திரமாக இருந்தவள்-அவர் இருக்குமிடம் தேடிக் கடல் கடந்து வந்துவிட்டாளே? தன்னோடு நில்லாமல் அவர்களுடைய வேரோடிய காதலின் சின்னங்களையும் அல்லவா உடன் அழைத்து வந்திருக்கிறாள்? பெரிய விபரீதம் ஏதோ நிகழப்போகிறது. இவள் தன் கணவரை நாட்டுக்கு அழைத்துப்போகத்தான் வந்திருக்க வேண்டும். நாம் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்; சிறிதும் விட்டுக்கொடுத்துவிடக் கூடாது...!

குலோத்துங்கனோ எனில், பெரும் பிழை ஒன்றைச் செய்தவன் கையும் களவுமாகப் பிடிபடும்போது எத்தகைய அதிர்ச்சியான மனநிலையில் இருப்பானோ, அவ்வாறுதான் இருந்தான். கைகள், ரத்தபாசம் காரணமாகத் தன் கால்களைக் கட்டிக்கொண்ட மைந்தர்களை அணைத்துக் கொண்டாலும், அவன் வாய் மூடிக்கொண்டது. மனைவியையோ மைந்தர்களையோ நோக்கி ஒரு சொல் பேசக்கூட அவனால் முடியவில்லை.

ஆனால் மதுராந்தகி பேசினாள். கணவனின் பாதங்களைத் தொட்டு வணங்கிய அவள், ஓர் உத்தம மனைவி பன்னெடுநாள் பிரிந்திருந்த கணவனைக் காணும்போது முதல் முதலாகக் கேட்கும் கேள்வியைக் கேட்டாள்: "என் அன்பே, நீங்கள் உடல் நலத்தோடு இருக்கிறீர்களா?"

இந்த நடைமுறை விசாரிப்புக்கு, மிகச் சாதாரணமான 'ஆம்' என்ற விடை பகரக்கூட குலோத்துங்கனால் முடியவில்லை. ஆனால் அருகே நின்ற ஏழிசைவல்லபி ஒரு கேள்வியை வெடித்தாள்: "யார் இவள்? உங்களை-என் அன்புக்கு மட்டுமே உரிய உங்களை- என் முன்னே 'அன்பே!' என்று அழைக்கும் ஆணவம் கொண்ட இவள் யார்?"

அவள் இக்கேள்வியைக் குலோத்துங்கனை நோக்கியே கேட்டாள். வந்திருப்பவள் யாரென்று தெரிந்துவிட்ட போதிலும், வேண்டுமென்றே தன் வெறுப்பை அவளுக்கும் குலோத்துங்கனுக்கும் உணர்த்துவதற்காகவே இப்படிக் கேட்டாள். ஆனால் இதற்கும் அவன் பதில் உரைக்காமல் கற்சுவராக நின்று கொண்டிருந்ததைக் கண்டபோது மதுராந்தகிக்குப் பொறுக்கவில்லை.

"இவர் இன்றுதான் உன் அன்புக்கு உரியவராகி இருக்கிறார், சகோதரி. ஆனால் அதற்கு முன்பு என் அன்புக்கு உரியவராக இருந்தவர்தாம். உனக்கு ஐயமாக இருந்தால் இதோ இருக்கிறார்களே, இச்சிறுவர்கள், இவர்களுடைய முகச்சாயலைப் பார். எங்கள் அன்பின் பிணைப்புக்கு அது சான்றுதரும். சகோதரி, இன்னுங்கூட நான் யாரென்று உனக்கு விளங்காவிட்டால், நான் கூறிவிடுகிறேன். அம்மி மிதித்து, அருந்ததி காட்டி, எனக்கு மணமாலை சூட்டியவர் இவர். என் பெயர் மதுராந்தகி. நான் சோழ மன்னர்களின் வழித்தோன்றல்."

"ஓ! என் சக்களத்தித் தேவியாரா? வாருங்கள் தேவியாரே. எங்கு வந்தீர்கள், கடல் கடந்து இத்தனை தூரம்?"

"சோழ நாடு ஒரு கோழையின் கையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. எந்நேரமும் பகைவர்கள் அதைக் கைப்பற்றிக் கொள்ளலாம். அவ்வாறு நேரிடாதிருக்க, அந்நாட்டின் அரசுரிமையை ஏற்பதற்காக என் கணவரை அங்கே அழைத்துப்போக வந்துள்ளேன், சகோதரி."

"எங்கே அழைத்துப்போக வந்திருக்கிறாய்? சோழ நாட்டுக்கா?" என்று கேட்டுவிட்டு இடி இடியென்று நகைத்தாள் ஏழிசைவல்லபி. தொடர்ந்து மரமாக நின்றிருந்த குலோத்துங்கனின் விலாவில் குத்தி, "கேட்டீர்களா கதையை?" என்று தீவிரத்துடன் சொன்னாள்.

அடைத்திருந்த குலோத்துங்கனின் வாய் இப்போது திறந்தது. “நான்தான் எனக்குச் சோழ அரியணையும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம் என்று ஓலை அனுப்பியிருந்தேனே? வீணில் ஏன் இத்தனை தூரம் வந்து என்னைத் தொல்லைப்படுத்துகிறாய்?” என்று முணுமுணுத்தான் அவன்.

“ஆமாம் அம்மா; அத்தோடு இதையும் தெரிந்துகொள். இப்போது இவர் என் கணவர். என் அனுமதியின்றி இந்த ஸ்ரீவிசய நாட்டின் எல்லையைத் தாண்டி அப்பால் செல்வதில்லை என்று ஆணையிட்டு என்னை மணந்து கொண்டிருப்பவர்.”

“அதை நானும் அறிவேன், சகோதரி. எனவே, குறிப்பாக உன் அநுமதியைப் பெற்று இவரை அழைத்துச் செல்லும் நோக்கத்தோடுதான் வந்திருக்கிறேன்,” என்றாள் மதுராந்தகி.

“ஓ! இப்படி ஏதாவது பசப்பி அவரை அழைத்துச் சென்று அங்கே நிரந்தரமாக இருத்திக் கொள்ளலாம் என்று பார்க்கிறாயா? அது நடக்காது அம்மா; இந்த ஏழிசைவல்லபியின் உடலில் உயிர் இருக்கும்வரையில் நான் அவரை என்னைப் பிரிய விடமாட்டேன்.”

“உங்களைப் பிரிக்கும் நோக்கமும் எனக்குக் கிடையாது சகோதரி. என்னை முழுவதும் நம்பு. இவர் இங்கேயிருந்து புறப்படுவதானால், கூடவே நீயும் வருவாய்.”

“வந்து, முன்பின் தெரியாத அந்நாட்டில் உன்னால் வஞ்சிக்கப்பட்டு, புகலற்றவளாய்ச் செத்து மடியவா? எனக்குத் தெரியும் அம்மா உன் சூழ்ச்சி. அதெற்கெல்லாம் நான் இடமளித்துவிட மாட்டேன்.”

“சகோதரி, இறைவன் மீது ஆணையாகச் சொல்கிறேன். எனக்கு அம்மாதிரியான துரோக நினைவுகள் ஒன்றும் கிடையாது. மாறாக, என் கணவர் சோழநாட்டின் மகிபரானால் உன்னை அந்நாட்டின் பட்டத்தரசியாக்கிவிட வேண்டும் என்றுகூட நான் எண்ணியிருக்கிறேன்.”

“ஏதேது, பசப்பல் எல்லை மீறிப்போகிறதே!” என்று எள்ளி நகைத்தாள் ஏழிசைவல்லபி. “நீ அவருடைய முதல் மனைவி. எனவே பட்டதரசியாகும் உரிமை உனக்குத்தான் உண்டு என்பதைக்கூட அறியாத அறிவிலியல்லள் அம்மா, நான். போதும், போதும்; இந்த நாடகமெல்லாம் இந்த ஏழிசைவல்லபியிடம் செல்லாது. போய்வா, வந்த வழியைப் பார்த்துக்கொண்டு.”

மதுராந்தகி சிறிது நேரம் ஒன்றும் பேச வாய் வராமல் கணவன் முகத்தையும், ஏழிசைவல்லபியின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டு நின்றாள். பிறகு ஏதோ



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

முடிவு செய்துவிட்டவள் போல், "இது தான் உனது இறுதி முடிவு என்றால் போய்விடுகிறேன், சகோதரி. ஆனால் போவதற்கு முன் சிறிதுநேரம் உன்னுடன் தனிமையில் பேச எனக்கு ஒரு வாய்ப்பாவது அளிப்பாயா?" என்று கேட்டாள்.

'இவள் தனிமையில் வேறு என்ன சொல்லிவிடப் போகிறாள்? இன்னும் ஏதேனும் பசப்பிப் பார்ப்பாள். அவ்வளவுதான். ஆனால் அதற்கு நாம் மசிந்துவிடப் போகிறோமா? இவளுக்கு இந்த வாய்ப்பை அளித்தால் திரும்பிப் போய்விடுவதாகச் சொல்கிறாள். அதை அளிக்க மறுத்தால் அவள் இங்கேயே தங்கிவிடுவாள். என்னைப் பசப்புவதை விடுத்துக் கணவனைப் பசப்பத் தொடங்குவாள். இவரோ மன உறுதி அற்றவர். அடிமேல் அடி விழுந்தால் அம்மியும் நகரும் என்றவாறு இவர் தமது வாக்குறுதியை உதறிவிட்டு இவளோடு கிளம்பிவிட்டால்...?' இப்படிப்பட்ட சிந்தனை ஒன்று எழவே, ஏழிசைவல்லபி அன்று மதுராந்தகியைத் தனிமையில் சந்திக்க இணங்கினாள். அது வீண் சந்திப்பு; மதுராந்தகி நினைப்பது நடக்காது என்ற எண்ணத்துடன்தான் அவளை அழைத்துக்கொண்டு அரண்மனை அந்தப்புரத்துக்குச் சென்றாள். ஆனால் அந்த அந்தப்புரத்திலே மதுராந்தகி அவளுக்கு என்ன சொக்குப்பொடி போட்டாளோ, தெரியாது; சற்றைக்கெல்லாம் இருவரும் திரும்பி வந்தபோது ஏழிசைவல்லபி சொன்ன சொற்கள் இவைதாம்: "அன்பே; மன்னர் வீரராசேந்திரர் சோழநாட்டைக் காக்கும் பொறுப்பை உங்கள் மீது சுமத்திவிட்டுப் போயிருக்கிறாராம். காதல் காரணமாகக் கடமையை மறப்பது உங்கள் வீரத்துக்கு இழுக்கு. புறப்படுங்கள்; நாம், அக்காளுடனும் குழந்தைகளுடனும் இன்றே சோழ நாட்டுக்கு மரக்கலம் ஏறவேண்டும்!"

அவர்கள் மரக்கலம் ஏறிச் சில கிழமைகளுக்குப் பின்னர் சோழநாட்டுத் துறைமுக நகரை வந்தடைந்தனர். அங்கே, சிறிதும் எதிர்பார்த்திராத மகிழ்ச்சி நிரம்பிய செய்தி ஒன்று அவர்களை எதிர்கொண்டது. ஆம், இரண்டு நாட்களுக்கு முன் சோழ மன்னன் அதிராசேந்திரன் சரும நோய்க்கு இரையாகிவிட்டான் என்ற செய்திதான். பழம் நழுவிப் பாலில் விழுந்ததென மகிழ்ந்த மதுராந்தகியும் ஏழிசைவல்லபியும், குலோத்துங்கனோடும் குழந்தைகளோடும் கங்கைகொண்ட சோழபுரத்துக்கு விரைந்தனர்.

நல்லவேளையாக விக்கிரமாதித்தனுக்கு அதிராசேந்திரனின் மறைவு பற்றிய செய்தி இன்னும் எட்டியிருக்க முடியாது. தம்பியின் முடிசூட்டு விழாவுக்காகக் கணவனுடன் வந்திருந்த வானவி அவனுடைய மரண விழாவையும் கண்டு போகத்தானோ என்னவோ, கணவனுடன் கல்யாணபுரத்துக்குத் திரும்பாமல் கங்கைகொண்ட சோழபுரத்திலேயே தங்கியிருந்தாள். அவள் இதுகாறும் விக்கிரமாதித்தனுக்குச் செய்தி அனுப்பித்தான்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

இருப்பாளென்று சோழநாட்டு அரசியல் அதிகாரிகள் கருதினர். ஆயினும் தொலைவில் இருக்கும் அவனுக்குச் செய்தி போய்ச்சேரக் குறைந்தது ஒரு திங்களாவது ஆகும். அதன் பிறகு அவன் படைதிரட்டிக்கொண்டு புறப்பட வேண்டும்; சோழநாட்டைத் தான் கைப்பற்றிக்கொள்ளலாம் என்ற பேராசையுடன் அவன் மிக வேகமாகத்தான் வருவான். இருந்தாலும் அதற்கும் குறைந்தது இருபது நாட்களாவது ஆகும். அதற்குள் மதுராந்தகி குலோத்துங்கனை அழைத்து வந்துவிட வேண்டுமே என்று சோழ நாட்டின்மீது பற்றுக் கொண்ட ஒவ்வொருவரும் இறைவனை இடைவிடாது வேண்டிக்கொண்டிருந்தனர்.

எனவே, தாங்கள் எதிர்பார்த்ததற்கு மிகவும் முன்னதாகவே குலோத்துங்கனுடன் அவள் திரும்பியது அவர்களுக்கு மெத்த மகிழ்ச்சியை அளித்தது. நாடு முழுவதும் மக்கள் குலோத்துங்கனின் முடிசூட்டு விழாவை மிகச் சிறப்பாக நடத்த ஏற்பாடுகளைத் துவக்கினர். அருமொழிநங்கையும் வானவியும் கொதித்தார்கள். ஆனால் அவர்கள் கொதித்து என்ன பயன்? நாட்டு மக்கள் அனைவரையும் எதிர்த்து நின்று இந்த முடிசூட்டு விழாவை அவர்கள் தடுத்துவிட முடியுமா?

அன்று குலோத்துங்கன் அரசுக்கட்டிலில் அமரும் நாள். கங்கைகொண்ட சோழபுரம் உம்பர்கோன் நாடான அமராவதியாகக் காட்சி தந்தது. மக்கள் அனைவரும் மகிழ்ச்சிக்கடலில் மிதந்தனர். எங்கும் ஒரே குதூகலம்; ஒரே கோலாகலம். அதிகாலையில் ஏழரை நாழிகைப் போதில் முடிசூட்டல் நடைபெற நற்பொழுது கணிக்கப்பட்டிருந்தது. குலோத்துங்கன் இரவு பிரியுமுன்னரே எழுந்து நீராடி, புதுப்பட்டாடைகள் உடுத்து முடிசூட்டு விழா நடைபெறும் மண்டபத்துக்குப் புறப்படத் தயாராக இருந்தான்.

சோழகேரளன் அரண்மனை அந்தப்புரத்திலே மதுராந்தகியும் மங்கள நீராடி, புத்தாடைகள் புனைந்து கொண்டிருந்தாள். ஆம், மதுராந்தகிதான்! அதிலும் அவளுக்கு ஆடை அலங்காரங்களைச் செய்து கொண்டிருந்த சேடி யார் தெரியுமா? ஏழிசைவல்லபிதான்!

அலங்கரிப்பு முடிந்தது. அவர்கள் விழா மண்டபத்துக்குப் புறப்பட வேண்டிய வேளையும் நெருங்கியது. அப்போது அரண்மனைப் பாங்கியர் அனைவரையும் அப்பால் போகச் சொல்லிவிட்டு ஏழிசைவல்லபியோடு தனித்திருந்த மதுராந்தகி, “கொண்டு வா சகோதரி,” என்று அவளை நோக்கிக் கையை நீட்டினாள்.

“வேண்டாம் அக்கா; என் மனம் உங்கள் நேர்மையைக் கண்டு அடியோடு மாறிவிட்டது. இனி நீங்கள்தான் நிரந்தரமாக இச்சோழ நாட்டின் பட்டத்தரசியாக இருக்க வேண்டும்,” என்றாள் ஏழிசைவல்லபி.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

"என்ன சொன்னாய்? அப்படியானால் என் ஆணை என்னாவது?" என்று கோபத்துடன் கேட்டாள் மதுராந்தகி.

"அது மண்ணோடு மண்ணாகப் போகட்டும்."

"நான் யார் மீது ஆணையிட்டிருக்கிறேன் என்பதை மறந்து பேசுகிறாயா, ஏழிசைவல்லபி? நம் இருவர் வாழ்வுக்கும் ஒரே ஆதாரமாக இருந்துவரும் அவர் உயிரை, நான் ஆணையை மீறுவதன் மூலம் போக்கடித்துக்கொள்ளச் சொல்கிறாயா? அது முடியாது. கொடு என் அமுதத்தை இப்படி," என்று வேகத்தோடு பேசிய மதுராந்தகி, ஏழிசைவல்லபியின் கையிலிருந்த தந்தப் பேழை ஒன்றை வலுவந்தமாகப் பிடுங்கினாள். அதைத் திறந்து, உள்ளேயிருந்த பொற்சிமிழ் ஒன்றை எடுத்து, அதனுள்ளே அடக்கமாகியிருந்த ஏதோ ஒரு பொடியை அப்படியே வாயில் கவிழ்த்து விழுங்கிவிட்டு முடிசூட்டு விழா மண்டபத்தை நோக்கி விரைந்தாள்.

விழா சிறப்பாக நடந்து முடிந்தது. நிகழ்ச்சிகள் முடிவுற்றதும், இப்போது முடிகொண்ட சோழன் அரண்மனையில் வசித்து வந்த வானவியிடம் மதுராந்தகி சென்றாள். "என் ஆணையை நிறைவேற்றிக் காட்டிவிட்டேன், வானவி. இனி நீ என்னை ஏளனமாக நோக்கி நகைக்க முடியாது," என்று கூறிவிட்டுச் சோழ கேரளன் அரண்மனைக்கு விரைந்து வந்தாள். அந்தப்புரத்தை எட்டும் வரையில்தான் அவளுடைய வாழ்வுக்குப் பொழுது அளித்திருந்தது - காலையில் அவள் உட்கொண்ட, நின்று கொல்லும் விஷப்பொடி. ஆம், அதன் பிறகு அது தன் வேலையைத் தொடங்கிவிட்டது.

விவரம் அறிந்த குலோத்துங்கன் ஓடி வந்தான். "கண்ணே, என்ன காரியம் செய்துவிட்டாய்?" என்று கதறினான்.

மதுராந்தகி மிக அமைதியாக ஏழிசைவல்லபியின் கையை எடுத்து அவன் கையில் வைத்தாள். "என் ஆணை நிறைவேற நீங்கள் துணை செய்யவில்லை; இவள் செய்தாள், ஆதலால் இவள்தான் இனி என் இடத்தில் பட்டத்தரசியாக இருக்கத் தகுதி பெற்றவள். என் ஆணையை என் காதலுடன் இணைத்திருப்பதாக நமது திருமணத்தின் முன் சொன்னேன். அதன் பின்னர் நாம் கணவன்-மனைவியராக வாழ்ந்தோம்; மக்களைப் பெற்றெடுத்தோம். ஆனால் அவையெல்லாம் என் காதல் நிறைவேறியதன் சின்னமாக அமையவில்லை. அன்று வானவியின் முன் நான் இட்ட ஆணை நிறைவேறிய இன்றுதான் என் காதலும் நிறைவேறியது. எனது வாழ்வே அக்காதலைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தபோது, அது நிறைவேறிய பிறகு என் வாழ்வும் நிறைவு பெறுவதுதான் முறையாகும். அதிலும், எனக்கு இந்தப் பேருதவியைச் செய்த சகோதரி



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in

ஏழிசைவல்லபிக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற இம்மரணம் எனக்குத் தேவையாக இருந்தபோது, நான் அதை ஏற்காதிருப்பது பெரும் துரோகமாகும். ஆம், நான் உயிரோடிருக்கும் வரையில் அவள் இந்நாட்டின் பட்டதரசியாகச் சோழ மாவலி வாணவராயன் அரியணையில் தங்கள் பக்கலில் அமர முடியாதல்லவா...?”

மதுராந்தகியால் இதற்கு மேலே ஒன்றும் பேசமுடியவில்லை. அவளுக்கு நா குழறியது. கண்கள் பஞ்சடைந்தன. நிறைந்த நெஞ்சத்தின் எதிரொலி போல் சட்டென்று ஒரு விக்கல். அவ்வளவுதான்; அவள் கதை முடிந்துவிட்டது...!

முற்றும்

*****



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in